

செ. கணேசலிங்கன்
செவ்வானம்

# செவ்வானம்

செ. கணேசலிங்கன்

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

184, பிராட்வே :: சென்னை-600 108.

குமரன் பப்ளிசர்ஸ்
முதற்பதிப்பு : டிசம்பர் 1967
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 1994
மூன்றாம் பதிப்பு : அக்டோபர் 1997
(C)

**விலை ரூ. 56-00**

| | | |
|---|---|---|
| Title | : | SEVVANAM |
| Author | : | Se. GANESALINGAN (C) |
| Subject | : | A Social Novel in Tamil |
| Size | : | 18 cm. × 12.5 cm. |
| No. of Pages | : | 304 |
| Paper | : | Creamwoye 10.5 Kg |
| Types | : | 10 Point |
| Binding | : | Duplex Board |
| Price | : | Rs. 56-00 |
| Publisher | : | KUMARAN PUBLISHERS<br>79, 1st Street, Kumaran Colony,<br>Vadapalani Chennai-600026 |

Printers : Chitra Printo Graphic Chennai-600 014

## சில குறிப்புகள்

காதல் என்பது மயக்கம் தரும் ஒரு வார்த்தையாகவே இன்றும் இருந்து வருகிறது. உயர்தர மத்தியதர வகுப்பினரே காதலைப் பற்றிப் பெரும்பாலும் பேசிக்கொள்கின்றனர். கவிஞர்களும் நாவலாசிரியர்களும் நாடகம்; சினிமா படைப்போரும் காதலுக்கு மிக்க மதிப்பும் பிரசாரமும் தந்து கள் போன்று மயக்கம் தரும் விற்பனைப் பொருளாக்கி வெற்றி பெற்று வருகின்றனர்.

காதல் மிக மென்மையான உணர்ச்சி; வயது வந்த ஆண் பெண் இருவரிடை ஏற்படும் இனக் கவர்ச்சி; செவ்வானம் போல் அழகுணர்ச்சி காட்டி மறைவது. அது பால் உணர்வின் அடிப்படையில் எழுவது; என்றும் தணியாத திருப்தியற்ற கெடுவைத் தர வல்லது. இதனாலேயே திருமணத்தின் மூலம் காதலை நிரந்தரமாக்க முடியும் என நம்புவோரும் இறுதியில் ஆண் பெண் இருவரும் ஒரே வீட்டில் நெருங்கிப் பழகி ஒருவருக்கொருவர் சமூக உறவிலும் பொருளுறவிலும் ஒன்றி நிற்கும் உறவே நிலைத்திருப்பதை அனுபவ வாயிலாகக் கண்டுணர்கின்றனர்.

காதல் வேறு, பாலுணர்வு வேறு எனக் கூறுவோரும் காதல் திருமணத்தில் சங்கமமாக வேண்டும் என்பதை ஒப்புவர். திருமணம் பாலுறவிற்கு அங்கீகாரம் வழங்குகிறது; குடும்பம் என்ற சமூக உறவை ஏற்படுத்துகிறது. குடும்பம் பொருளுறவின் மேல் அமையும் கூட்டு வாழ்வு. அங்கு காதல் அல்லது அதனால் ஏற்படும் பாலுறவு குடும்பத்தைப் பெருக்கி பொருளுறவின் அடிப்படையில் அதை மேலும் வலுப்படுத்துகிறது. இதனாலேயே குடும்பக் கட்டுப்பாடு, திட்டமிடப்பட்ட குடும்பம் என்ற குரல்கள் எழுகின்றன.

காதலுணர்விலும் வர்க்க உணர்வு பரந்தது; நிலையானது. இனம், மொழி, மதம், தேசம் யாவையும் கடந்தது. இவ்வுணர்வு மனித இனத்தையே நேசிக்கச் செய்வது; மனித இனத்தின் வேற்றுமைகளைக் களைந்து, ஏற்றத் தாழ்வுகளை நீக்கிச் சமன்படுத்த வல்லது. இப்புது உலகை நோக்கியே சமுதாயம் இன்று வளர்ந்து வருகின்றது. இன்றைய சமுதாய அமைப்பைப் புரட்டி விடும் பெருமுயற்சியில் தொழிலாளி வர்க்கம் ஏறுநடை போடுகிறது. தொழிலாளி வர்க்க வளர்ச்சியின் தாக்கத்தையும் சோஷியலிச ஆட்சியின் சிறப்புகளையும் பெரும்பாலான உலக நாடுகள் இன்று உணரத் தொடங்கி விட்டன

சோஷியலிசம் என்பதே இன்று ஒரு நாகரீகமான வார்த்தையாகி விட்டது. ஆனால் அதே வார்த்தை சில சமயங்களில் தொழிலாளர்களையும் அவர்களின் தலைவர்களையுங்கூட மயக்கிவிடுகிறது. தொழிலான வர்க்கத்திற்கு உண்மை



யில் இச்சொல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் வழிவந்த சொல்லாகும்.

ஒரு நாட்டின் ஆட்சிபுரிவோரின் கருத்தையோ எண்ணங்களையோ பார்த்து அது சோஷியலிச ஆட்சி என்று தொழிலாளி வர்க்கம் ஒருபோதும் மயங்கிவிடப்படாது அந்நாட்டின் சமுதாய அமைப்பின் குணாம்சங்களையும் ஆட்சி செலுத்துவதில் முழுப் பொறுப்பையும் வகிக்கும் வர்க்கத்தின் தனித்தன்மையையும் கொண்டே தீர்மானிக்க வேண்டும்.

இலங்கையில் 1964-ல் தேசிய முதலாளித்துவத்தைப் பிரதிபலித்த சுதந்திரக் கட்சியினர் இடதுசாரிப் பாராளுமன்றப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் ஏற்படுத்தினர். சோஷிலிச ஆட்சி ஏற்பட்டு விட்டதாக இக்கட்சிகளின் தலைவர்கள் மேடைகளில் முழக்கினர். ஏராளமான தொழிலாளர்கள் தமது சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டுவிட்டதாக நம்பினர். செக்கர் வானத்தின் கவர்ச்சியை நிலையானது என மயங்கி ஆர்ப்பரித்தனர். ஆறுமாத காலத்துள் அக்கூட்டாட்சி பாராளுமன்றத்தில் வீழ்த்தப்பட்டது.

இதே போன்ற நிகழ்ச்சிகள் இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளில் அண்மையில் நடைபெற்றதையும் யாவரும் அறிவர்

எவ்வாறாயினும் இக்கூட்டாட்சிக் காலம் இலங்கை வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒரு கால கட்டமாகும் இக்காலத்தில் இலங்கையில் பல்வேறு வர்க்கத்தினரிடையேயும் ஏற்பட்ட வேறுபட்ட உணர்ச்சிகள், முரண்பாடுகள்.

அச்சம், பரபரப்பு, கொந்தளிப்பு, வெற்றி தோல்வி உணர்வுகளை நேரில் கண்டுணரும் வாய்ப்பு எனக்கும் ஏற்பட்டது. மென்மையானது, உயர்ந்தது என்று கூறப்படும் காதல், குரூரமானது, இழிந்தது என எண்ணப்படும் அரசியல் இரண்டையும் எம் அன்றாட வாழ்வின் கூட்டுத் தொகுப்பாக ஓடிக்கொண்டிருக்கும் வரலாற்றையும் இவற்றோடு இணைத்து நாவலொன்று எழுத வேண்டும் என்ற என் விருப்பே இக்கதை நூலாகக் கனிந்தது.

இந்நாவலை கையெழுத்துப் பிரதியிலேயே படித்து விளக்கமான நீண்ட முன்னுரையை எழுதி உதவிய கலாநிதி க. கைலாசபதி அவர்களுக்கு என் நன்றி. அன்னாரோடு, இலங்கையின் அரசியல் பொருளாதார வரலாற்றைக் கற்றுத் தெளிவதில் துணைபுரிந்த திரு. கா. சிவத்தம்பி எம். ஏ. அவர்களின் அன்பையும் நான் மறந்துவிட முடியாது. இந்நாவலை சில நாளில் அச்சேற்றித் தந்த நண்பர் திரு சீதாராமனுக்கு என் அன்பு

**செ. கணேசலிங்கன்**

உரும்பிராய்,
யாழ்ப்பாணம்.
28—12—67.

# இரண்டாவது பதிப்பின் முகவுரை

கால் நூற்றாண்டு கழிந்த பின்னர் இந்நாவலை இரண்டாவது பதிப்பாக வெளியிடும் வாய்ப்பு ஏற்பட்டதில் மகிழ்ச்சியடைகிறேன். பல நண்பர்களும் என் புதிய வாசகர்களான இளைஞர்களும் எப்பொழுது நாவல் வெளிவரும் என அடிக்கடி வினவிக்கொண்டே இருந்தனர்,

1967ல் இந்நாவல் வெளிவந்த வேளை தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் ஏற்பட்ட தாக்கத்தை இன்று எண்ணிப் பார்க்கிறேன்.

செவ்வானம் வெளிவர முன்னரே நீண்ட பயணம், சடங்கு என்ற என் இரு நாவல்களும் மூன்று சிறுகதைத் தொகுதிகளும் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டன. ஆயினும் இந்நாவலே தமிழ்நாட்டில் என் எழுத்துக்களை நன்கு பரவலாக அறிமுகப்படுத்தியது என்றே கூறவேண்டும்.

கோவையிலிருந்து அன்று வெளிவந்த புதிய தலைமுறை என்ற புரட்சிகர சஞ்சிகை தனிச்சிறப்பிதழாக திரு. ஆனந்தரங்கன் எழுதிய இந்நாவலின் மதிப்புரையை வெளியிட்டு தமிழ்நாட்டில் நன்கு அறிமுகப்படுத்தியது.

அக்கினி புத்திரன் நீண்ட விமரிசனம் ஒன்றை மற்றொரு சஞ்சிகையில் எழுதியிருந்தார். 1968-70களில் மார்க்சிய ஆர்வலர், இடதுசாரி அரசியலார், கல்லூரிப் பேராசிரியர், விரிவுரையாளர் மாணவரிடை பரவலாகப் பேசப்பட்டு இந்நாவல் விமர்சிக்கப்பட்டது. கலாநிதி கைலாசபதியின் நீண்ட முன்னுரையும் ''சமகாலவரலாற்று நாவல், யதார்த்த நாவலி'ன் வகை மாதிரியான படைப்பு என்ற பாராட்டும் நாவல் மேல் ஆர்வமூட்டின என்றும் கூறலாம்

அரசியலுக்கும் இலக்கியத்திற்கும் தொடர்பில்லை என்ற தமிழ்நாட்டவர் பலரின் எண்ணத்தை இந்நாவல் பொய்மையாக்கியதும் மற்றொரு காரணமாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம்.ஏ.க்கு இலக்கியப் பாட நூலாகப் பல ஆண்டுகள் விதிக்கப்பட்டிருந்தது.

இந்நாவலை முதன்மையாக வைத்து முனைவர் அரண முறுவல் தமது எம்.பில் (M. Phil) ஆய்வுக் கட்டுரையை சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பித்திருந்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக முதுகலை மாணிப் பட்டத்திற்கான பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நா.சுப்பிரமணியம் அவர்களின் ஆய்வுக் கட்டுரை 'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்' என்ற தலைப்பில் நூலாக வெளி வந்தது. 'ஈழத்தில் வெளிவந்த நாவல்களிலே தரமான பத்து நாவல்களைத் தெரிவு செய்யின் கணேசலிங்கனது ஐந்து அத்தெரிவில் இடம் பெறும்... இவற்றிலே நீண்ட பயணமும் செவ்வானமும் .. தலையாய படைப்புகள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் எனக்கு அரசியல், கலை இலக்கிய நண்பர் பலரைத் தேடித்தந்ததும் இந்நாவலே.

இப்புதிய பதிப்பு வெளிவரும் இவ்வேளை, இடைக் காலத்தில் நான் இழந்த மூன்று நண்பர்களை இன்று நினைவு கூர்கிறேன். டாக்டர் மு. வ. வீட்டில் அவரது விருந்தினராகத் தங்கியிருந்தே அன்னாரின் ஆதரவுடன் இந்நாவலைப் 'புரூப்' பார்த்து அச்சேற்றினேன். நண்பர் கைலாசபதி ஆழமான, அகலமான முன்னுரை எழுதி நாவலின் இலக்கணத்தையும் 'வகுத்தளித்தார்: மூன்றாமவர் நாவலை முதலில் அச்சிடுவதில் உதவிய ராமன் அச்சக உரிமையாளர் சீதாராமன்.

இன்று மீண்டும் ஒரு கூட்டரசாங்கம் ஏற்பட்டிருக்கும் வேளையில் இந்நாவல் வெளி வருகிறது: இடையில் பல் வேறுபட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் ஏற்பட்ட சூழல். பண வீக்கம் வேறு. நாவலில் வரும் எண், விலைகளை 15, 20 மடங்காக இன்று பெருக்கிப் பார்க்க வேண்டும்.

இப்புதிய பதிப்புக்கு அட்டையை அழகுபடுத்த உதவிய நண்பர் மணியம் செல்வனுக்கு என் அன்பு. அச்சக உரிமையாளர், தொழிலாளர்களுக்கும் என் நன்றி.

சென்னை **செ. கணேசலிங்கன்**

5-10-94

**கலாநிதி க. கைலாசபதி** எம். ஏ, பிஎச். டி.

அவர்கள் எழுதிய

# முன்னுரை

தனது நாவலுக்கு முன்னுரையொன்று எழுதுமாறு நண்பர் கணேசலிங்கன் வேண்டியபொழுது சற்றுத் தயங்கினேன். இலக்கியத்தின் உட்பிரிவுகள் யாவற்றுள்ளும் இன்று மக்கள் பெரிதும் விரும்புவது நாவல் என்ற நெடுங்கதையாம். கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டாததுபோல நாவல் படிக்க நல்லுபதேசந் தேவையில்லை என்றெண்ணினேன். அது மட்டுமன்று, கணேசலிங்கனது முந்திய நாவல்களைப் படித்தபொழுது தட்டுத தடங்கலின்றிச் சுவை நயத்துடன் கதை சொல்லுந்திறன் அவருக்கிருப்பதைக் கண்டேன். நாவலைப்பற்றி விமரிசகர் எவ்வளவுதான் அரிய கோட்பாடுகளை வகுத்துக் கூறினும், இறுதியில் அதன் வெற்றிக்கும் பொது மக்களால் விரும்பப்படும் நிலைக்கும் அடிப்படை கதையம்சமே யாகும். அதுவும் நன்கமைந்த நாவலொன்றிற்குப் புறத் தூண்டுதலெதுவும் தேவையில்லை.

இத்தகைய எண்ணங்களுடன் நாவலைப் படிக்கத் தொடங்கினேன். நான் எதிர் பார்த்தது போலவே அலுப்பின்றிப் படிக்கும் வகையில் நாவலமைந்திருந்தது. ஆனால் என்னை அதிகம் கவர்ந்தது நாவலிற் காணப்படும் புதிய பண்பு. "புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்" என்று கம்பன் பாடியதற்கேற்ப நாவலிற் கண்ட புத்தம்சம் குறித்துச் சிந்திக்கலானேன்.

கடந்த பத்தாண்டுக்கால இலங்கை வரலாறு நாவலின் பொருள். நல்லதொரு வரலாற்று நாவலைப் படிக்கிறோம் என்னுமுணர்வு அடிக்கடி எனக்கேற்பட்டது. நிகழ்கால நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்ட நாவலொன்றை வரலாற்று நாவல் என்றழைப்பது பலருக்கு விசித்திரமாகத் தோன்றக் கூடும். அந்தளவிற்கு வரலாற்று நாவலைப்பற்றி அரைகுறையான அல்லது சார்புடைய கருத்தே மிகு செல்வாக்குடையதாய் விளங்குகிறது; பழங்காலத்து உடையணி தாங்கிய விசித்திர மாந்தரே வரலாற்று நாவலுக்குரியவர் என்ற தவறான எண்ணம் எமது இலக்கிய உலகிற் பரவியுள்ளது. இது வரலாற்றைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தின் விளைவாகும்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவேனும் கதை நிகழ்ந்தாலன்றி அது வரலாறு சார்ந்ததாகாது என்றும், மன்னர் அமைச்சர் முதலியோரே வரலாற்று நிகழ்ச்சிகளுக்குரியவர் என்றும் பொதுவாக நம்பப்படுகிறது. சுருங்கக் கூறின் வீரதீர புருஷரே வரலாற்று நாயகராகவும் மதிக்கப்படுகின்றனர். வரலாறு சார்ந்த இப்பொதுக் கருத்திற்கு இலக்கியத் துறையில் வழக்காறுடைமை தந்தவர் கல்கி எனலாம். வரலாற்று நாவல் என்றதும் பல்லவர் காலத்துக் கதைகளும் சோழர் காலத்துக் கதைகளுமே பெரும்பாலோருக்கு நினைவிலெழுவன. இம்மனப்போக்கு வரலாறுபற்றிய முழுமையான கருத்தோட்டம் வளர்வதற்குத் தடையாக உள்ளது. வரலாறு என்பது 'சென்ற காலத்தின் சிறப்பு, என்று குறுகிய, தவறான, கருத்துப் பாங்கு செல்வாக்குப் பெற்றுள்ளது.

இதன் விளைவாக வரலாற்று நாவல் எனப்பெயர்தாங்கி வெளிவரும் அநேக படைப்புகளிலே சென்ற காலங்களைக் குறிக்கவல்ல விந்தையான சில மனிதரும் பொருட்களுமே அவாவைத் தூண்டும் வகையில் அமைவதைக் காணலாம். இது வரலாற்றின் போலிமாதிரிப் படிவத்தையே எமக்குக் காட்டுகிறது. பழங்காலத்தைப் பற்றி ஒருவர் எவ்வளவு



ஆர்வத்துடன் எழுதினாலும் நிகழ்காலத்தைப் பற்றிய ஆய்வும் தெளிவும் அவருக்கில்லாதுவிடின் வரலாற்றைச் செம்மையாகச் சித்திரித்தல் இயலாது.

அதாவது சென்ற காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றிடையேயுள்ள தொடர்ச்சியை நன்குணர்ந்தாலன்றி வரலாற்றைப் பயனுள்ள முறையிற் தெரிந்துகொள்வது முடியாத காரியம். சென்ற காலவரலாறானது இன்றைய வரலாற்றின் பூர்வாங்கம் என்றும், காரண காரியத் தொடர்புடன் காலங்கள் பிணைக்கப்பட்டுள்ளன என்றும் உணர்பவருக்கு வரலாறு கேவலம் வீரதீர புருஷரின் விவகாரமாகவன்றிச் சமுதாய இயக்கத்தின் கூட்டு மொத்தமாகவிருக்கும். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியின் முழுமையான சமுதாயச் சூழமைவிற்கேற்பவே பாத்திரங்களின்குணவியல்பு அமையும். பாத்திரங்களின் குணவியல்புகள் முறைபிறழாது அமைவதற்குக் குறிப்பிட்ட அக்காலப் பகுதியின் சமுதாயச் சக்திகளும் அவற்றின் பரஸ்பர உறவும் கூர்மையாக ஆய்ந்தறியப்படல் அவசியமாகும்

வரலாற்று நாவல் என்ற சொற்றொடரில் இது உட்கிடை. ஆனால் அதனைப் பிரக்ஞையோடு கையாண்டு உண்மையைக் கலையழகுடன் கண்டு காட்டுபவனே சிறந்த வரலாற்று நாவலாசிரியன். இவ்வாறு நோக்கும்பொழுது, மிகப் பழங்காலத்து விந்தைப் பொருட்களும் வியப்பான நிகழ்ச்சிகளுமே வரலாற்று நாவலுக்குரியன என்ற எண்ணம் மறைந்து, எந்தக் காலப் பகுதியாயினும் அதனை அதற்கு முன்னும் பின்னுமுள்ள காலப் பகுதியோடு இணைத்துத் தொடர்புகளை விளக்கும் நிகழ்ச்சிகளே முதன்மையானவை என்ற கருத்துத் தோன்றுவதைக் காணலாம்.

வரலாறு என்பது தொடர்ந்து நடந்துகொண்டிருப்பது. இதனாலேயே சமகாலச் சம்பவங்களின் தொகுதியை சமகால வரலாறு — Contemporary history—என்பர். பண்டைக் காலத்திலிருந்தவரைவிடத் தற்கால ஆய்வாளருக்குப்

பண்டைக் காலம் பற்றி அதிகம் விளக்கமிருப்பதற்குக் காரணம் வரலாற்றியலின் முன்னேற்றமாகும். அறிவியலின் முன்னேற்றத்தையொட்டி வரலாற்றியலும் சமுதாயங்களின் வளர்ச்சி தேய்வு, தேக்கம், மாற்றம் ஆகியவற்றைச் சிற்சில நியதிகளுக்கமைய விளக்குகிறது. ஆற்றல் மிக்க இலக்கிய கர்த்தாக்கள் ஏதாவதொரு வகையில் காலத் தத்துவத்தை உணர்ந்தே செயற்பட்டிருக்கின்றனர்.

மத்திய காலத் தமிழகத்தில் வாழ்ந்தசேக்கிழார் ஆழ்ந்த வரலாற்றுணர்வு பெற்றிருந்தார். தனக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து போன அரனடியாரின் சரிதங்களைத் தொகுத்துத் தொண்டர் புராணம் பாடும்பொழுது சரித்திர உணர்வையும் நோக்கையும் வெளிப்படுத்துகிறார். பெருமன்னனும் நிலக்கிழாரும் தலைமை தாங்கிய சமுதாய அமைப்பின் சரித்திர இயல்பிற்கியையத் தலைவன் தாள் தலைப்பட்ட மக்களைப் பாடினார் அவர்.

பல்லவர் காலத்தில் நடந்தேறிய பக்தியியக்கம் சமயத் துறையில் மட்டுமின்றி அரசியற்றுறையிலும் பூரணத்துவம் பெறுகிறது சேக்கிழார் காலத்தில். அக்காரண காரியச் சங்கிலித் தொடர்பைக் கூர்ந்து கவனித்து வரலாற்றுணர்வுடன் நூல் செய்தார் சேக்கிழார். தலைமையாளர் புகழ்பரவ வந்த அவர் வரலாற்றுணர்வு கைவரப் பெற்றமையாலேயே ''ஆவுரித்துத் தின்றுழலும் புலையரையும்'' கொல், குத்து, வெட்டு என்று பேசும் வேடரையும் பிறரையும் உயிர்த் துடிப்புள்ள பாத்திரங்களாக்கினார். சேக்கிழாரின் சார்பு 'உடையார்' பக்கமிருந்தது.

ஆனால் தேச முழுவதையுஞ் சமுதாய உணர்வுடன் சித்திரித்ததால் அன்றைய நிலையில் அவரது காப்பியம் ''தேசிய இலக்கியம்'' என்னும் பெருமைக்குரியதாயிற்று. பறையர் சேரியைச் சேக்கிழார் தீட்டுந் திறனில் ஆயிரத்திலோர் பகுதியைக்கூடக் கல்கி போன்ற வரலாற்று நாவலாசிரியரிடத்துக் காண முடியுமோ? காரணம் சிந்திக்கற்பாலது.



சேக்கிழாரிடத்துக் காணப்படும் வரலாற்றுணர்வு போன்றதே பாரதி பாடல்களிற் காணப்படும்காலத்தத்துவம். அவன் பாடினான்;

''அன்ன யாவும் அறித்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுந
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல்:பித்தர்கள்''

கவிஞனது உணர்வு நாட்டையுஞ் சமுதாயத்தையுந் தழுவுவதைக் காணலாம்.

இச்சமுதாய உணர்வே பாரதியை அவன் காலத்துப் புலவரினின்றும் வேறுபடுத்தியது. தனது காலத்துச் சமுதாயச் சக்திகளையும் வரலாற்றுப்போக்கையும் தெளிந்து கொள்ளாத ஒருவன், 'மற்கால வரலாற்றைச் சரிவர அறிந்துள்ளான்' என்று எவ்வாறு கூற முடியும்? இதன் தொடர் முடிபாக, முற்காலத்தை ஒரு சார்பாக நோக்குபவன் நிகழ் காலத்தை நேராகப் பார்க்கிறான் என்றுதுணிதல் முடியுமா? உதாரணமாகச் சோழர் காலச் சமுதாயம் ஆண்டான்—அடிமை என்ற அடிப்படையில் இருபெரும் வர்க்கங்களாய்ப் பிளவுண்டு கிடந்த தென்னும் உண்மையை மறந்தோ மறைத்தோ, செல்வம் செழித்த அக்காலத்தில், ''எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி'' இருந்தனர் என்று கூறுபவன் தனது கண்முன் சமுதாயம் வர்க்கங்களினடிப்படையிற் பிரிந்திருப்பதைக் காணமாட்டான். நிகழ்காலக் கருத்துச் சாய்வுகளை முற்கால வரலாற்றுடன் தொடர்பு படுத்துவதும் பொதுவாக வரலாற்றறிஞர் பலரிடத்துக் காணப்படும் குறைபாடு.

இதனையே மார்க்ஸ் 'வரலாற்றுக் குருட்டுத்தன்மை' என்றனர். மனித வரலாறு முழுவதையும் இயக்கவியல் என்ற ஒரு பெரும் நியதிக்குட்படுத்தி அதன் ஆய்வை விஞ்

ஞான பூர்வமாக்கியவர் அவர். பழங்கால ரோமப் பேரரசின் அமைப்பை ஆராய்ந்த அதே ஆய்வுமுறைகளைக் கையாண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஃபிரான்ஸ் தேசத்தில் நிகழ்ந்த உக்கிரமான வர்க்கப் போராட்டங்களை நுணுக்கமாக ஆராய்ந்தார்.

அதே முறையிலேயே அக்காலப் பகுதியில் இந்தியாவில் வெடித்த ஆங்கிலேயர் எதிர்ப்பையும், அதனை யொட்டி ஆங்கில ஏகாதிபத்தியத்தின் தன்மையையும் ஆராய்ந்தார். இத்தகைய சிறப்பான ஆய்வுகளால் தான் வகுத்த பொது நியதிகளினது நேர்மைத்தகவினைப் பரிசோதித்தார். இதன் விளைவாக முக்காலங்களை வேறாக்கும் இறுக்கம் தளர்ந்து வரலாற்றாயவில் நெகிழ்ச்சி ஏற்பட்டது. மார்க்ஸின் சித்தாந்தத்தை ஏற்காதவரும், அவரின் சமூகவியற் கோட்பாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பின்னணியிலேயே வரலாற்று நாவலை நாம் அணுகுதல் வேண்டும்.

ஒவ்வொரு காலப் பகுதியிலும் நிகழும் வரலாற்றுப் போராட்டங்கள்—அவை அரசியல், சமயம், தத்துவம், கலை இலக்கியம் முதலாய கருத்துலகைச் சார்ந்திருப்பினும்-சமூக வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாட்டாலும். போராட்டத்தாலுமே இயக்கப்படுகின்றன என்ற உண்மையை உணர்பவனுக்கு முக்காலப் பாகுபாடு பெயரளவிலேயே பயன்படுகின்றது. நிகழ்காலத்தை ஆராய்தல் பயனற்றது என்றொரு எண்ணம் பல கல்விமான்களைப் பற்றியிருப்பதைக் காணலாம். 'காலம் நிச்சயிக்கும்' என அவர்கள் கூறுவர்.

சமகால நிகழ்ச்சிகள் சம்பந்தமான செய்திகளும் நுணுக்க விவரங்களும் சில சமயங்களில் அரசாங்க 'இரகசியம்' என்று மறைக்கப்படுவதாலும், ஆய்வாளரின் உணர்ச்சி நிலை பாதிக்கப்படுவதனாலும் பூரணமான மதிப்பீடு செய்வதிற் சில தடங்கல்கள் ஏற்படலாம். ஆனால் அதற்காக மதிப்பீடு செய்ய முடியாது என்றோ, செய்வதிற் பயனில்லையென்றோ கருதுவது பொருந்தாது. உண்மையில்



நிகழ்கால ஆய்வு பயனற்றது என்ற பிரசாரத்திற்கு அடிப்படையாகவுள்ளது. அத்தகைய ஆய்வு செயலிற்கு ஆதாரமாக அமைந்துவிடும் என்ற அச்சமேயாகும். ஆய்வுஇல்லாது போயின் தயக்கமும் மயக்கமும் நிலவும். அவை இதுகாறும் உள்ள நிலைமையை நீடிக்கச் செய்வதற்கு உகந்தவை. பல எழுத்தாளர் தமது சுற்றாடலைக் கண்ணெடுத்தும் பாராதவராய் சென்ற காலம் என்ற மாயமானைப் பின் தொடர்ந்து செல்பவராயுள்ளனர்.

ஆனால் வரலாற்றின் இயக்க நியதியைச் சிறிதளவு அறிந்தவன்கூட சமகாலத்தையும் வரலாற்றுணர்வுடன் நுணுக்கமாகப் பார்க்கலாம். ஏங்கெல்ஸ் இதனை நிகழ்கால வாழும் வரலாறு, Living history of the day, என்று நயம்படக் கூறினார்.

'சமூக நாவல்' என்று நாம் மேலெழுந்த வாரியாகக் கூறும் நாவல் வகையானது உண்மையில் சமகாலவரலாற்று நாவலாகத்தான் இருத்தல் வேண்டும். ஏனெனில் வரலாறு என்பது சமூக ஆய்வை ஆதாரமாகக் கொண்டது. ஒரு குறிப்பிட்ட காலத்துச் சமூக நிலைமையின் பிரத்தியேகமான பண்புகளுக்கமையப் பாத்திரங்களைக் கண்டறிந்து படைப்பவனே 'சமூக நாவல்' ஆக்குகின்றான்; அதாவது சமகால வரலாற்றின் தன்மைகள் சிலவற்றிற்கு இலக்கிய வடிவங் கொடுக்கிறான். இலக்கிய கர்த்தாவிற்கும் வரலாற்றாசிரியனுக்கும் நெருங்கிய தொடர்பும் பொதுப் பண்புகளும் உள்ளன. பல மனிதரின் சரிதங்களை உள்ளடக்கி அவற்றின் பொதுப் பண்புகளும் உள்ளன. பல மனிதரின் சரிதங்களை உள்ளடக்கி அவற்றின் பொதுப்பண்புகளைப் பிழிந்தெடுத்து அவை அவ்வாறு அமைந்து காணப்படுவதற்கான சமூகச் சூழமைவை ஒழுங்குபடுத்திக் காட்டுகிறான் வரலாற்றாசிரியன் இவ்வரலாற்றுப் போக்கும் இயக்கமும் சிக்கல்நிறைந்த உள் முரண்பாடுகளுடன் தனி மனிதர் வாழ்க்கையிலே துலங்குவதைச் சித்திரிக்கிறான் இலக்கிய ஆசிரியன்

இவ்விடத்திலே காவியத்திற்கும் அல்லது காவிய அச்சில் வார்க்கப்படும் 'வசன காவியத்திற்கும்' நாவலுக்குமுள்ள வேறுபாடு மனங்கொள்ளத்தக்கது. காவிய மரபிலே பாத்திரங்களின் வாழ்க்கையைப் படிப்படியாகத் தொடர்ந்து செல்கிறோம். வரலாற்று நாவலிலோ பாத்திரங்களைத் தனிச் சிறப்பு வாய்ந்த சில கணங்களில் மாத்திரம் காண்கிறோம். நாவலில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் காலத்தின் போக்கையும் கோலத்தையும் செறிவாகக் காட்டுவன. சிறப்பு மிக்க வரலாற்று நாவல்களிலே குறிப்பிட்ட கால வரலாற்று அரங்கில் பிரதிநிதிகளாக விளங்க வல்லவரே கதாநாயகராக விளங்குவர்; விளங்குதல் வேண்டும். மற்றையோர் தேவைக்கேற்ற அளவிற் பின்னணி மாந்தராகவே இயைந்து செல்லல் வேண்டும்.

மேற்கூறிய பீடிகையுடன் கணேசலிங்கனின் நாவலை நோக்குவோம். 1956-ஆம் ஆண்டு திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலிற் பெரு வெற்றியீட்டி ஆட்சிப் பீடத்திலமர்ந்தது. புதியதொரு சகாப்தத்தின் தொடக்கத்தை அது குறிப்பதாகச் சிலர் கருதுவர். அம்மாற்றத்தைப் 'புரட்சி' என்றுகூடச் சிலர் கூறுவர். 1956-ல் ஏற்பட்ட மாற்றம் எவ்வாறழைக்கப்படல் வேண்டுமென்பது இங்கு ஆய்விற்குரியதன்று ஆனால், அது முக்கியமானது என்பதில் ஐயமில்லை. இலங்கை வரலாற்றரங்கிலே தேசிய முதலாளி என்ற நபர் அரசியலாதிக்கப் பெற்றதை அம்மாற்றம் குறிக்கின்றது. அதற்கு முந்திய தசாப்தத்தில் நாடு அரசியல் சுதந்திரம் பெற்றது.

ஆனால், பாரதூரமான மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. பயன்தராத படாடோபமான விவசாயத்திட்டங்கள் சில துவங்கப்பட்டதைத் தவிர்த்து கைத்தொழில் துறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை சுதந்திர மாயையின் புதுமோகத்திலும், குடியேற்றமுறை அரசியலின் பாதிப்பிலும் மூழ்கியிருந்த தேசம் மெல்ல மெல்ல விழித்துக் கொண்டது.



கைத்தொழில் வளர்ச்சிக்கும் வர்த்தக விருத்திக்கும் இருந்த வாய்ப்புக்கள் பயன்படுத்தப்படலாயின. அந்நிலையில் வெளிநாட்டுப் பொருளாதாரத்தின் பிடிப்பும் தாக்கமும் தமக்குப் பாதகமாகவிருப்பதை அரும்பிக்கொண்டிருந்த உள்ளூர் முதலாளிகள் அவதானித்தனர். இந்நாட்டிலும், உலகெங்கினும் வெவ்வேறு அளவிலும் வடிவிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் நெஞ்சில் பொங்கிக்கொண்டிருந்ததையும் அவர்கள் கண்டனர். நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில் வெள்ளையரிடமிருந்து ஆட்சிப் பொறுப்பைக் கையேற்ற அந்நிய மோகங்கொண்ட 'பரம்பரை'த் தலைவர்பால் மக்களுக்கு வெறுப்பு மிகுந்து காணப்பட்டது

இத்தகைய நிலையிலே உள்ளூர்ப் பணக்காரரில் ஒரு பகுதியினர் கைத்தொழில் வர்த்தகத் துறையில் முன்னேற்றம் அதாவது இலாபம் காணும் வாய்ப்பைக் கண்டு அதனை நடைமுறை சாத்தியமாக்க முனைந்தனர். புதுப் பணக்காரர் முன்வர வேண்டுமாயின் பழைய (பரம்பரைப்) பணக்காரர் அரசியல் ஆதிக்கத்தினின்றும் அகற்றப்படுதல் அத்தியாவசியமாயிற்று. தேர்தல்மூலம் இதனைச் சாதிப்பதற்கு மக்களை அணி திரட்டினர். தேசிய முதலாளிகளும் அவரின் பிரதிநிதிகளும் இம்மக்கள் அணிக்குத் தலைமை தாங்கினார் திரு. பண்டாரநாயக்கா. அதற்கான பல சிறப்புத் தகுதிகள் அவரிடங் காணப்பட்டன.

தேசிய முதலாளித்துவ வர்க்கம் தன்னைத் தானே இனங்கண்டு வரலாற்றரங்கிற் பிரவேசிக்கும்பொழுது தனது தனித்துவத்தைத் தேசீய உணர்விலும் சிந்தனையிலும் வெளிக்காட்டிக் கொள்கிறது. உலக வரலாற்றிலே இதனைப் பல சந்தர்ப்பங்களிற் காணலாம். இந்நியதிக்குச் சான்றாக அமைந்து கிடக்கின்றன. தேசிய முதலாளித்துவ வர்க்கத்கத்தின் எழுச்சியின்போது தோன்றும் இன, மொழி, மத, கலாசார இயக்கங்கள். தேசிய முதலாளித்துவத்தின் உடனிகழ்ச்சிகளான இத்தேசிய உணர்வு, பொதுப்படையாகச் சமுதாயத்திற்கீழ் மட்டத்திலுள்ளோரையும் "மேல்"

மட்டத்திலுள்ளோரையும் ஒன்றாகச் சேர்த்திணைக்க உதவு கிறது. அதே சமயத்தில் புதிய வர்க்க எழுச்சிக்கும் அதன் உலகியல் விஷயங்களுக்கும், தேசியம் இலட்சியவாதம் முலாம் பூசுகிறது.

1956-ம் ஆண்டைத் தொடர்ந்து குறிப்பாகச் சிங்கள மக்கள் மத்தியிலும் ஓரளவு தமிழ் மக்கள் மத்தியிலும் கலை இலக்கியத் துறையிற் காணப்படும் மறுமலர்ச்சியை இங்கு நினைவு கூரலாம். இன்று சிங்கள மத்திய தர வர்க்கத்தினரிடையே நாடகம், திரைப்படம் முதலிய துறைகளில் ஊக்கமும் ஆக்கமும் காணப்படுகிறதெனின் அதன் சிறப்பான வரலாறு இக்காலப் பகுதியைச் சார்ந்தது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. முதலாளித்துவத்தைப் பொறுத்தளவில் தேசியம் இரண்டாந்தரமான, உடன் இணைவான விளைவுப் பொருளேயன்றி முதன்மைப் பொருள் அன்று. தேசிய வெளிப்பாடானது உள்ளியல்பாகாது, புறச் சின்னங்களைச் சார்ந்ததாக அமைந்துவிடுகிறது. தனி மனிதரின் ஒழுகலாற்றைக் கூர்ந்து நோக்கின் எத்தனையோ விசித்திரங்களையும், முரண்பாடுகளையும், கேலிக் கூத்துக்களையும், தன்னேய்ப்புக்களையும் காணலாம். இலக்கிய ஆசிரியனுக்கு இவை குறிப்பிடத்தக்க காட்சிகளாகின்றன. திரு. பண்டாரநாயக்காவும் அவர் போன்ற பலரும், கிறித்தவ மதத்திலிருந்து விலகிப் பௌத்த சமயத்தைத் தழுவிக் கொண்டதும், மேனாட்டு உடையை விடுத்துத் தேசிய உடையாம் வேட்டி சால்வை அணியத் தொடங்கியதும், கூடியளவு தாய் மொழியிலே உரை நிகழ்த்த முனைந்ததும் அவை போன்ற பிறவும் சின்னங்களுக்குரிய அபரிமிதமான செல்வாக்கைக் காட்டுகின்றன.

இந்தியாவிலேயே விடுதலை இயக்கம் காந்தியின் தலைமையில் நடந்தபோது, கதர் உடுத்துக்கொண்டு கைத் தொழிலபிவிருத்தியில் ஈடுபட்ட தேசிய முதலாளிகள் கணக்கற்றோர். அங்கும் கதர் ஒரு சின்னமாகவே அமைந்துவிடுவதைக் காண்கிறோம். உற்பத்தி அட்டவணையையும்,



விற்பனை விளக்கக் குறிவரைவினையும் எண்ணி வாழும் முதலாளித்துவத்திற்கு இத்தகைய சின்னங்கள் 'ஆன்மீகத் தோற்றத்தைக் கொடுக்கின்றன', இலக்கிய ஆசிரியனது பார்வையில் இவை முதலாளித்துவ வர்க்கத்தின் பாசாங்கையும் முரண்பாட்டையும் வலியுறுத்திக் காட்டுவனவாய் உள்ளன.

தேசிய முதலாளித்துவம் வரலாற்று அரங்கிற் பிரவேசிக்கும்பொழுது தனிமையில் இருப்பதில்லை. தனது போட்டியாளருக்கெதிராகப் பரந்துபட்ட மக்கள் கூட்டத்தை முன்னிறுத்தியே தனது வெற்றியை ஈட்டுகிறது. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அனுபவ உரையின் அடிப்படையில், ''கீழ்'' மட்டத்திலுள்ள பெரும்பகுதி மக்களையும், இடை நடுவே அகப்பட்டுத் தவிக்கும் பலரையும் வரையறுக்கப்படாத, பொதுப்படையான நோக்கங்களைக் கொண்டு ஒன்று திரட்டித் தனது 'ஆபத்துதவி'களாகக் கொள்கிறது. இவர்களில் விவசாயிகளும் தொழிலாளிகளும் குறிப்பிடத்தக்கவர். திரு. பண்டாரநாயக்கரின் கைச்சரக்கான தீவிர தேசியவாதமும், மனிதாபிமானமுமட்டுமின்றி, ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடதுசாரிகள் வளர்த்து வந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு மரபும், சமுதாய மாற்ற வேட்கையும் மக்கள் முன்னணிக்கு வலுவூட்டின என்பது வற்புறுத்த வேண்டியதொன்று. இவற்றையெல்லாம் உற்றுநோக்கும் போது தேசிய முதலாளித்துவம்முனைப்புடன் வரலாற்றரங்கில் திடீர்ப் பிரவேசஞ்செய்த அக்கணத்திலே, தொழிலாளி வர்க்கமும் அரங்கிற்றோன்றி விடுவது புலனாகும். இங்கு தான் இக்காலப் பகுதிக்குரிய மிக முக்கியமான, சுவையான போட்டி தொடங்குகிறது.

முதலாளித்துவ வர்க்கத்தின் எழுச்சிக்கும் பக்கபலத்திற்கும் தொழிலாளி வர்க்கம் இன்றியமையாதது. தொடக்கத்தில் இருபகுதியினருக்குமுள்ள சில பொதுவான அபிலாஷைகள் ஒற்றுமைக்கு வலுவளிக்கின்றன. இதன் விளைவாகச் சிற்சில சனநாயக உரிமைகள், ''கீழ்'' மட்டத்திலுள்ள

மக்களுக்கு வழங்கப்படுகின்றன. கருத்துலகிலேயே கூடிய சலுகைகள் வழங்கப்பட்டன; மொழி, சமயம், கலாச்சாரம் ஆகியன இவற்றுளடங்கும். ஆயினும் இரு தரப்பினருக்கு மிடையே பரஸ்பரம் ஐயங்கள் அதிகரிக்கின்றன. தனக்கு உதவியாக, ''கையாளாக''க் கொண்ட வர்க்கம் தனக்கு நேரெதிராகப் போகும் சக்தி பெற்றிருட்பதைத் தேசிய முதலாளித்துவ வர்க்கம் விரைவிலே கண்டுகொள்கிறது; நிரந்தர அமைதியற்ற ஓர் உறவு நிலவுகிறது. முதலாளித்துவ வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்குமுள்ள உறவு பற்றி மார்க்ஸ் ஒரு சந்தர்ப்பத்திற் கூறியது இவ்விடத்திற் பொருத்தமாகத் தோன்றுகிறது.

> ''வெகு ஜனங்கள் மாறுதல் விரும்பாது இருக்கும்பொழுது அவர்களின் மூடத்தனத்தைக் கண்டு முதலாளித்துவ வர்க்கம் கவலை கொள்கிறது; அவர்கள் புரட்சிகர உணர்வு பெறுங்காலத்தில் அவர்களது நுண்ணறிவுத் திறனைக் கண்டு பேரச்சங் கொள்கிறது.''

தொழிலாளி வர்க்கம் தனது நலன்களின் அடிப்படையில் கோரிக்கைகளை முன்வைத்து அணி திரளத் தொடங்கியதும் தேசிய முதலாளித்துவ வர்க்கம் தான் காட்டிய அற்பசொற்பமான சனநாயக மனோபாவத்தைக் கைவிட்டது. திரு. பண்டநாயக்காவினது மரணத்திற்குப் பின் பதவிக்கு வந்த திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியில் வலதுசாரிப் போக்கு வலுத்துக் காணப்பட்டது இதற்கு சான்றாகும். அந்நிய எதிர்ப்பு என்ற சாதகமான சூழ்நிலையில் வேகமாக முன்னேற்றங்கண்ட தேசிய முதலாளிகள், காலப்போக்கில், தமது 'தேசியப்' பண்பிலும், முதலாளித்துவப் பண்பே மேலோங்கவிழைந்தனர். இதன் விளைவாக மக்கள் முன்னணி தொடங்கப் பெற்ற காலத்தில் அறைகுறையாக வேனும் உச்சரிக்கப் பெற்ற சோஷியலிசக் கொள்கைகள் மெல்ல மெல்லக் கை நழுவவிடப்பட்டன. தொடக்கத்திற் காணப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பும் மழுங்கவிடப்பட்டது.



தொழிலாளர் அணியிலிருந்த சில பிரிவுகள் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தை தவறாக விளங்கிக் கொண்டு தமது தனித்துவத்தைக் கைவிட்டதும் இப்போக்குகள் துரிதமடைய ஏதுவாயிருந்தது. ஒரு கால எல்லையில் தேசிய முதலாளிகள் பலருக்குத் தொழிலாளர் அணியானது கொடுங்கனவாக அமையத் தொடங்கியது. மக்கள் முன்னணி பெயரளவில் முற்போக்கான கொள்கைகள் சிலவற்றைக் குறிப்பிட்டாலும் காலப் போக்கிலே, உருமாற்றம் பெற்றுக் 'கூட்டரசாங்கம்' ஆட்சி புரிந்த குறுகிய காலத்தில் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் அப்பட்டமான அதிகாரமே நிலவியது. ஒரு சந்தர்ப்பத்தில் மார்க்ஸ் சொன்னார்:

> 'மூலதனத்தின் எசமானர்கள் பொருளாதாரக் குத்தகையை நிலை நிறுத்தவும், அதனைப் பேணிப்பாதுகாக்கவும் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்வர். தொழிலாளி வர்க்கத்தின் விமோசனத்திற்காக அவர்கள் பாடுபட மாட்டார்கள் என்பது மட்டுமன்றி, உண்மையில் அவர்கள் அதற்குக் குறுக்கே நிற்பார்கள்.''

திரு. பண்டாரநாயக்காவினும், அவரது மனைவி தொழிற் சங்கத் தகராறுகளில், கடுமையாகவும அநுதாபமற்ற முறையிலும் நடந்துகொண்டமை முதலாளித்துவ வர்க்கத்தினரின் கையோங்கியிருந்ததைத் தெளிவாக்குகிறது இத்தகைய தேசிய முதலாளிகள் அரசியல் வடிவத்திற் காணப்பட்ட சிற்சில முற்போக்கான நடவடிக்கைகளை வெறுத்தனர்; அதே நேரத்தில் முன்னர் தாம் தள்ளி வீழ்த்திய பழைய' பணக்காரருக்கும் தமக்கும் பொதுவான அம்சங்கள் பல உள்ளன என்றுங் கருதினர். இந்நிலை தோன்றியதும், திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சி தொடர்ந்து நீடிப்பது இயலாத காரியமாகியது. முதலாளித்துவ வர்க்கம் தனது நலனைக் காப்பாற்றிக் கொள்ளத் தேசியத்தை மட்டுமன்றி அதைவிடப் புனிதமானவற்றைக் கூடக் கைவிட்டேகத் தயங்காது.

ஆயினும் தேசிய முதலாளித்துவம் ஊன்றிய விதைகள் எளிதில் மறைவன அல்ல. தொடக்கத்தில் மக்கள் முன்னணி உருவாகியபொழுது, சிறப்பாகத் திரு பண்டாரநாயக்காவின் தலைமையில், அவ்வியக்கம் எல்லோருக்கும் எல்லாவற்றையும் அளிக்கவல்ல கற்பகதருவாகக் கருதப்பட்டது. லூயி பொனப்பாட் என்ற பிரெஞ்சு சர்வாதிகாரியின் இராணுவப் புரட்சியை விளக்கும்பொழுது மார்க்ஸ் சொன்னார்: "பொனப்பாட் என்பது ஒரு (கவர்ச்சியான) பெயராக மட்டுமன்றி ஒரு கொள்கைத் திட்டமாகவும் காணப்பட்டது" என்று பலதரப்பட்ட பொது மக்களையும் உள்ளடக்கி, உடனிழுத்துச் செல்லும் இயக்கமொன்றின் கொள்கைத் திட்டம் எபபொழுதுமே தெளிவற்று, 'வேண்டுவார்க்கு வேண்டியது காட்டும் வர்ண ஜாலமாக இருக்கும்', அப்பே ஆண்டுவ" என்ற கோஷமானது, சாதாரண மக்களின் அபிலாஷைகள் யாவும் மக்கள் முன்னணியைப் பற்றியிருந்ததை காட்டும். இவ்வபிலாஷைகள் முதலாளித்துவ வர்க்கத்திற்கு பெரும்பாரமாக அமையும்போது முரண்பாடு கூர்மையடைகின்றது.

அதே சமயத்தில் தேசிய முதலாளித்துவம் தனது பிறப்பின் சூழ்நிலை காரணமாகத் தொழிலாளி வர்க்கத்தை முற்றாக உதறித் தள்ளவும் முடியாத வில்லங்கத்தில் அகப்பட்டுக் கொள்கிறது, இதனால் அவ்வர்க்கத்தின் செயல்களில் உறுதிப்பாடின்மையும் ஊசலாட்டமும் தடுமாற்றமும் பெருமளவிற்குக் காணப்படுகின்றன தனி மனிதரொருவரிடத்து இப்பலவீனத்தைக் காணவேண்டுமாயின், திரு. பண்டாரநாயக்கா சிறந்த உதாரண புருஷராவார். அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்பைத் தருக்கரீதியான முடிவிற்குக் கொண்டு செல்வதிலும், தேசிய சிறுபான்மையினரின் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதிலும் இத்தடுமாற்றத்தை தெள்ளத் தெளியக் கண்டு கொள்ளலாம்.

தேசிய முதலாளித்துவ வர்க்கப் பாத்திரத்தைப் படைக்கும் நாவலாசிரியன் ஒருவனுக்கு இத்தடுமாறும் உள்ளத்



தவர் சிறந்த மாதிரி மனிதராகவிருப்பர். தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினரின் ஊசலாட்டம், அவர்களுக்கு ஒரு சோக நாடகத்தன்மையையும் இயல்பானதாக்கி விடுகிறது. இதற்கும் திரு.பண்டாரநாயக்கா சிறந்த எடுத்துக்காட்டு. திரு. பண்டாரநாயக்காவைப் பொறுத்தளவில், அவர் ஐயத்துக்கிடமின்றித் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினருக்குத் தலைவராக விளங்கினார். எனினும், அரசாங்கம் என்ற நிறுவனத்தின் தலையாய இயக்குநராகவும் இருந்த காரணத்தால் சில சந்தர்ப்பங்களில் வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டவராகக் காட்சியளிக்கவும் விரும்பினார்; முயன்றார். ஊருக்கு நல்லது செய்யும் உத்தமராக வாழ விரும்பியுமிருக்கலாம். பண்டைக் காலத்து மன்னரைப் பற்றி இலட்சிய வடிவிற் கூறப்படுவது போன்று, காட்சிக்கெளியவனாகவும் வாழ விரும்பினார்.

ஆனால் எல்லோரையுந் திருப்திப்படுத்த முனைந்து எவரையுந் திருப்திபடுத்தாத நிலையிலே தனது சோக முடிவை எய்தினார் சில சமயங்களில் தேசிய முதலாளித்துவ அமைப்பிற்குக்கூடக் குந்தகம் விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளில் இறங்கினார். காலக்கிரமத்தில் தொழிலாளி வர்க்கத்திற்கும், முதலாளித்துவ வர்க்கத்திற்குமுள்ள முரண்பாட்டைக் கூர்மையாக்குவதைத் தவிர்த்து வேறெதுவும் அவராற் செய்யமுடியவில்லை. இவ்விடத்தில் மார்க்ஸ் கூறிய வார்த்தைகள் சில பொருத்தமாயுள்ளன. திரு. பண்டாரநாயக்கா மனத்திற் சில விருப்பங்களைக் கொண்டிருந்தாலும், இறுதியில், அவர் பேச்சுக்கள் இனித்த அளவிற்குச் செயல்கள் பயன்தரவில்லை. என்னதான் முயன்றும் அவரது வர்க்கச் சார்பைத் தாண்டிச் செல்ல இயலாதிருந்தமையே காரணமேயாகும். மார்க்ஸ் ஒரு சந்தர்ப்பத்தில் எழுதினார் :

மனிதரது தனி வாழ்வில் ஒருவர் தன்னைப் பற்றி எண்ணுவ்தற்கும், கூறுவதற்கும் அவரின் உண்மையான

வாழ்க்கை முறைக்கும் செயல்களுக்கும் நாம் வேறுபாடு காண்பதுபோல அரசியற் கட்சிகளின் பாவனைகளுக்கும் இன்சொற்றொடர்களுக்கும் அவற்றின் உண்மையான நிறுவனவியக்கத்திற்கும் அக்கறைகளுக்கும் உள்ள வேறுபாட்டையும், அவற்றின் தற்புனைவிற்கும் உண்மை நிலைமைக்குமுள்ள வேறுபாட்டையும் மிகவும் கூர்மையாக வேறுபடுத்தி உணருதல் வேண்டும்.''

மேலே கூறிய அரசியற் பொருளாதார சமூகப் பின்னணியிலேயே கணேசலிங்கனது நாவல் விரிகின்றது. இப்பின்னணியினை வரலாற்று நூல்களிலன்றி நாவலிலிருந்து நான் பெற முடிந்தமை ஒன்றே நூலின் வளத்திற்குப் போதிய சான்றாகும். ஆசிரியரது முந்திய நாவல்களைப் படித்தபோது அவற்றிற் பாத்திரங்களின் வாழ்க்கையோடு அரசியல் போதியளவு இணைந்து முழுமையாகாது, விட்டிசைத்து நிற்கக் கண்டேன். இந்நாவல் அக்குறைபாடின்றி அரசியல் விஷயத்தைக் கலையுண்மையாக்கியுள்ளது. வரலாற்று உணர்வே யதார்த்தத்தின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. மேற்கூறிய பத்தாண்டுக்கால வரலாறு நாவலிற் கூறப்படவில்லை. நாவலாசிரியர், அதன் இறுதிப் பகுதியை விதந்தாய்கிறார். காலத்தின் உயிர்த்துடிப்பு உச்ச நிலையையடையும் அந்தக் கணத்தைப் பொருளாகக் கொள்வதனால், பாத்திரங்களைக் ''குறிப்பிடத்தக்க கணங்களிற்'' காட்டுகிறார்.

இவ்வுத்தி, நாவலுக்குக் கூர்மையையும், நாடகப் பண்பையும், செறிவையும அளிக்கிறது. தேசிய முதலாளித்துவ வர்க்கப் பிரதிநிதியை ஊசலாட்டத்தின்போது காண்கிறோம்; தொழிலாளர் வர்க்கப் பிரதிநிதியைத் தனது தனித்துவப்பாதையின் தன்மையையும் இன்றியமையாமையையும் உணரும் நிலையிற் காண்கின்றோம். இவர்களும் இவர்களைச் சார்ந்தோரும் முற்று முழுமையான அரசியல் மாந்தர். ஆனால் இவர்களுக்கிடையே பல்வேறு பக்குவ



நிலைகளிலும், உணர்ச்சி நிலைகளிலுமுள்ளவர்கள், காணப்படுகின்றனர் இவர்களும் தமக்குத் தெரியாமற் காலத்தின் பிரதான இயக்கத்தினாற் பாதிக்கப்படுவதைக் காட்டுவதே சிறப்பியல்புகளில் ஒன்று ஒரு சிறு உதாரணம் கூறுவேன்.

கதாநாயகன் நாகரத்தினத்தின் மனைவி அரசியல் அக்கறையற்ற சுகவாழ்வு விரும்பும் சாதாரண உயர்குடும்பப் பெண். பிறர் கண்ணிற் படத்தக்க பாவனைப் பொருட்களை வாங்குவதிலும் அவைபற்றி உரையாடுவதிலும் ஒரு விருப்புடையவள். விதவிதமான பாவனைப் பொருட்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் அவற்றை எவ்விலை கொடுத்தேனும் எந்நாட்டிலிருந்தேனும் பெற விரும்புகிறாள்.

இப்போக்கு அவளை விதேசப் பிரேமியாக்குகிறது. ஆகவும் அவள் உள்ளத்தில் அரசியல் தொனிக்கிறது. வர்க்க ஆய்வுப் பரிபாஷையிற் கூறுவதாயின் இந்திராவின் மனப்போக்கு குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரின் கருத்தோட்டத்தைச் சித்தரிக்கிறது. அன்றாட வாழ்க்கையிற் றோன்றும் சிறுசிறு சம்பவங்களினூடாக இம்மனோபாவம் வெளிப்படுகையில், பாத்திரம் சிக்கல் நிறைந்ததாகவும் பலமுகப்பட்டதாயும் காட்சியளிக்கிறது. இது நாவலாசிரியரின் பாத்திர வார்ப்புத் திறமைக்கு உதாரணம். அதைப் போலவே நாகரத்தினம்—இந்திரா ஆகிய இருவரது தாம்பத்திய உறவுகூட இறுதியில் உடைமை உறவுகளில் தங்கியுள்ளது என்ற உண்மை வாழ்க்கை அனுபவத்தினடிப்படையிலே புலப்படுத்தப்படுவதும், பாத்திரங்களின் வர்க்க இயல்பிற்கு இயைந்தே காணப்படுகிறது. பொருள், உடமை பற்றிய சிந்தனைகள் அவர்களின் உணர்வை (Consciousness) வெகுவாக ஊடுருவியுள்ளன என்பதும் நுண்ணிய முறையிற் காட்டப்பட்டுள்ளது. டானியல் டிஃபோ (Daniel Defoe, (1657-1731) படைத்த உலகப் புகழ்பெற்ற

பாத்திரமாகிய ரொபின்ஸன் குருஸோ, பொருளாதார மனிதனுக்கு-Homoeconomics- தலையாய எடுத்துக்காட்டு என்று பொருளியல் வரலாற்றாசிரியர் பலர் கூறியுள்ளனர். டிஃபோவின் பாத்திரங்கள் யாவுமே அவரது கூற்றுப்படி ''உலகின் மிகப் பொதுவான பெயர் கொண்ட பொருளாகிய'' பணத்தைத் தேடிச் செல்வன.

இந்நாவலின் கதாநாயகனான நாகரத்தினத்தையும் அவரது வர்க்க சகாக்களான எட்மன், அப்புசாமி ஆகியோரையும் காணும்போதெல்லாம் எனக்கு மேற்கூறிய பொருளாதார மனிதன் என்ற சொற்றொடர் நினைவுக்கு வந்தது. ஆசிரியர் பொருளியலைப்பற்றிக் கருத்து வடிவில் எதுவுங் கூறவில்லை. அதனைப்பற்றிய சர்ச்சையும் நாவலில் இடம் பெறவில்லை. (க. நா. சுப்ரமண்யத்தின் சில நாவல்களில் அத்தகைய விசாரம் காணப்படுகிறது.) பாத்திரங்களின் ஒவ்வொரு சிறிய செயலுக்கும் வங்கிக் கணக்குக்கும் தொடர்பிருக்கிறது என்றோ, தொடர்பு காட்ட முடியுமென்றோ நான் கூறவில்லை.

ஆனால் சமகால வரலாற்று நாவலிலே பொருளாதாரப் பிரச்சினைகள் (சில சமயங்களில்இவை அரசியல் வடிவத்திற் காணப்படுகின்றன.) முற்றாகத் தவிர்க்கப்படலாம் என்றும் எனக்குத் தோன்றவில்லை. வரலாற்று நாவலாசிரியன் தனது காலத்துத் தத்துவப் பிரச்சினைகளுக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் உள்ள பிரிக்க முடியாத பிணைப்பை மனங்கொண்டபின், பல்வேறு வகைகளில் மறைமுகமாகவேனும், இப்பிணைப்பின் திரிபுகளைக் காட்டுகிறான். ஜோர்ஜ் லுகாக்ஸ் (Gerog Lukacs, 1885-1971) கூறுவதுபோல, ''உயிர் வாழும் மக்களின் புலனீடான பிரச்சினைகளைப் பொருளாதாரப் பிரச்சினைகளிற் காணும் ஓர் எழுத்தாளனே'' மேற்கூறிய பிணைப்பைத் திறந்து காட்டல் இயலும். கணேசலிங்கனது நாவலில் இது குறிப்பிடத்தக்களவு இடம் பெற்றிருக்கிறது. இதுவே நான் கண்ட புதுப் பண்பாகும்.



தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதி நிதியொருவனைக் கதாநாயகனாகக் கொண்டுள்ள இந்நாவல், அதே காரணத்தால் மற்றுமொரு சிறப்புக்குரியதாகிறது. ஒருநாட்டின் வரலாற்றரங்கிலேமுதலாளித்துவவர்க்கமும்அதன்எதிரிடையான தொழிலாளி வர்க்கமும் தோன்றிய அந்தக் கணத்திலேயே சமுதாயம் அடுக்குகளாக அல்லது படுகைகளாகப் பேதப்படுகின்றது. இந்நிலையில் எழுத்தாளருக்கு மூன்று பாதைகள் முன் விரிகின்றன. ''மேல்'' தட்டு வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு இலக்கியம் படைத்தல்; ''கீழ்'' தட்டு உலகைச் சித்திரித்தல்; இவ்விரண்டையுமே சேர்த்துத் தொடர்புபடுத்தி எழுதுதல். முதலாம், பிரிவைச் சேர்ந்த பெரும்பாலான எழுத்தாளர் ''மேல்'' தட்டு இயற்கையானது என்று கொண்டு, அதன் பளபளப்பையும் மினுமினுப்பையும் இயன்றளவு மெய்மையுடன் தீட்ட முயல்வர்.

அவ்வாழ்க்கை முறை ''விமரிசனம்'' செய்யப்படும் பொழுதும் அதன் இயல்பான அழகிற்கும் நன்மைக்கும் ஏற்காதனவாகக் கருதப்படும் அமிசங்களே ஆங்காங்கு குறிப்பிடப்படுவன. அவ்வாழ்க்கை முறை நிலை பேறுடையது என்ற நம்பிக்கையே எழுத்தாளனுக்கிருக்கிறது. இலங்கைத் தமிழ் எழுத்தாளரைப் பொறுத்தவரை, கடந்த தசாப்தத்திற்கு முன், உண்மையான—வர்க்க அடிப்படையிலமைந்த—முதலாளிகள் அருகில் காணப்பட்டமையால், உயர் மத்திய தர வகுப்பினரின் வாழ்க்கையே ''மேல்'' தட்டு விகாரமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. முதலாளித்துவத்தின் வளர்ச்சி இந்தியாவில் சற்றுமுன்னதாகவே ஏற்பட்டமையால், அதன் சித்திரங்களை நாவல்களிற் காணலாம். ஆனால் தனி மனிதரின் மகிழ்ச்சி, சோகம் முதலியன பெரிய இடத்து வாழ்க்கையிற் காட்டப்பட்டனவேயன்றி, வாழ்க்கைப் பிரச்சினைக்கும் கருத்துணர்வுக்குமுள்ள பிணைப்பு ஆராயப்படவில்லை. கூட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து ''மேல்'' தட்டு வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாவல்கள் (உண்மையில் அவை தொடர் கதைகள்) துன்பமும் விரக்தியும் நிறைந்த

உலகிலிருந்து எம்மை இன்பமான மானசீக வாழ்க்கை நிலைக்கு எடுத்துச் செல்வனவே

இதன் மறுகோடியாக அமைந்துள்ளன. 'கீழ்' தட்டு வாழ்க்கையைச் சித்திரிப்பதாக மார்தட்டும் பல கதைகள், 'முற்போக்கு' 'யதார்த்தம்' முதலிய அடைகளைத் தமக்குத் தாமே சூட்டிக்கொள்ளும் இப்படைப்புக்கள், சமுதாயத்தின் மிகத் தாழ்ந்த (வர்க்க அடிப்படையிலன்று) சில உதிரியான மக்களை (உதாரணமாக, விபசாரிகள், பிச்சைக்காரர், மிகு நோயாளர்) பாத்திரமாகக் கொண்டு அவர் தம் இன்னலையும் இடுக்கணையும் படம்பிடித்துக் காட்டுவன. தி. மு. க. எழுத்தாளர் பலரும், புதுமைப்பித்தன், விந்தன் போன்ற புகழ்பெற்ற எழுத்தாளர் சிலரும், வெவ்வேறு வகையிலும், அளவிலும் இப்பிரிவைச் சார்வர். சென்னை மவுண்ட் ரோட்டில், யாருமற்ற தன்னந்தனியனாய் 'பட்டணத்து 'மகாமசான'த்தில் துலுக்கப் பிச்சைக்காரன் சாவதைப் புதுமைப்பித்தன் சித்திரித்துள்ளாரே, அதுபோன்ற நுணுக்க விவரங்கள் படம் பார்ப்பது போன்ற தத்ரூபமாக விருப்பினும் யதார்த்த இலக்கியத்தின் பாற்படா. உள்ளதை உள்ளவாறே காட்ட முயலும் இவ்வுத்தி அல்லது நோக்கு naturalism எனப்படும் இயற்பண்பு வாதமாகும். ''மேல்'' தட்டு வாழ்க்கையை வருணிக்கும் 'சொகுசு' எழுத்திற்கு நேரெதிராக இருப்பினும், சுற்றுமுற்றுமுள்ள சின்னஞ் சிறு விஷயங்களில் அமிழ்ந்துவிடும் தன்மையினால் கலைப்படைப்பிற்கு வேண்டிய குறைந்தபட்சப் புறநோக்கு செயற்படாது போகிறது.

இவ்வெழுத்தாளர் பலரது நெஞ்சில் சமூகத்தின் தாழ்நிலையிலுள்ள மக்கள் படும்பாடு தர்மாவேசத்தைத் தோற்றுவிக்கிறது என்பது உண்மை. ஆயினும் இது தெளிவுகாணாத வெறுப்பு மனோநிலையில் தோன்றுவதாகும். அது மட்டுமன்று. ''கீழ்'' உலகமும், 'மேல்'' உலகமும் இயற்கை நியதி என்று ஏற்றுக்கொள்ளும் மனப்போக்கும் இதனால் தொடர்ந்து நிலவுகிறது. இதனால் கலை முழுமையடைய



முடியாது இயற்பண்புவாதம் பலவழிகளில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. ஆனால் இவ்வழிகள் எவற்றிலும் வரலாற்றுணர்வு தென்படுவதில்லை.

மூன்றாவது பிரிவே கலையுண்மையும் கலைவடிவமும் சிறந்து பொலிவுறுவதற்கேற்றது. சமுதாயத்தில் வர்க்கங்களின் அடிப்படையிலும் சமூக வேறுபாடுகளினடிப்படையிலும் பிளவு இருப்பதை எழுத்தாளன் பொது நியதியாக ஏற்றுக்கொள்கிறான். ஆனால் எதிரெதிர் வர்க்கங்கள் ஒன்றுக்கொன்று முரணானவையாக விருப்பினும் மனிதரது வாழ்க்கையில் இவை யிரண்டின் தொழிற்பாடும் பங்குகொள்கின்றன இயக்கவியல் நியதிக்கிணங்க எதிர் சக்திகளாக இவை காணப்படினும், ஒன்றையொன்று சதா ஊடுருவிப் பாதிக்கின்றன. வர்க்க பேதமுள்ள சமுதாயத்தில் இது தவிர்க்க முடியாதது. முரண்பட்டு நிற்கும் வர்க்கங்கள் ஓயாது போராடிக் கொண்டிருக்கின்றன. போராட்டத்தின் வேகமும் உக்கிரமும் காலத்திற்குக் காலம் வேறுபடுந் தன்மையன.

ஆனால் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கிறது. இலக்கிய கர்த்தா ஒருவன் தனது அநுபவத்திற்கும் உணர்விற்கு மேற்ப இரண்டில் ஒரு வர்க்கத்தைக் கூடியளவு நுணுக்கமாகச் சித்திரிக்கலாம். ஆனால் மற்றதை முற்றாக ஒதுக்கினாற் சமுதாயப் பார்வை ஒரு சார்புயையதாகி விடும். உதாரணமாக தொழிலாளி வர்க்கத்தின் முனைப்பான பகுதியினர், தமது விமோசனத்தையும் நலனையும் தாமே தமது பலங்கொண்டு பெறல் வேண்டும் என்று ஒரு கால கட்டத்தில் உணர்ந்தனர்; இவ்வெண்ணம் தெளிவாகுவதற்குத் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் பலவீனமும், ஊசலாட்டமும், ஒரு காரணமாயமைந்தது

மனித வாழ்க்கையில் இந்நிலையைச் சித்திரிக்கும் பொழுது இருதரப்பிலிருந்தும் பாத்திரங்கள் அவசியமன்றோ. சரித்திர நாவல் ஆற்றல் கொண்டதாய் அமைய வேண்டு

மாயின், விதந்துகாட்ட எடுத்துக் கொண்ட வர்க்கத்திற்கு எதிராகவுள்ள வர்க்கத்தைச் சேர்ந்த பாத்திரங்களும் இன்றியமையாதன. இந்நாவலில் நாகரத்தினத்தின் எதிர் பாத்திரமாகப் பொன்னையா காணப்படுகின்றான். தொழிற்சங்கவாதி அவன். கதாநாயகன் நாகரத்தினம் என்ற முறையில் பொன்னையா, பிரதம பாத்திரத்தின் தோற்றத்தை எடுப்பாகக் காட்டக்கூடிய துணைப் பாத்திரமே. ஆயினும் பொன்னையா இன்றேல் நாகரத்தினம் இல்லை எனலாம். பொன்னையா போன்ற வர்க்க பேதமும் உறுதிப்பாடுங் கொண்ட மனிதனை எதிர் நோக்குஞ் சந்தர்ப்பங்களிலேயே நாகரத்தினத்தின் வர்க்க இயல்பும் குண விசேஷங்களும் துலாம்பரமாகின்றன.

அதே சமயத்தில் நாகரத்தினம் — பொன்னையா மோதலை இலகு படுத்தித் தனிமனித மனப் போராட்டமாகவும் ஆசிரியர் ஆக்கிவிடவில்லை. பொன்னையாபால் நாகரத்தினத்திற்கு வெறுப்பும் கோபமும் மட்டுமன்றிச் சில சமயங்களில் உள்ளூர மதிப்பும் மரியாதையும் அச்சமும் ஏற்படுகிறது. பொன்னையபவும் தனது எதிரியை, நிதானத்துடனேயே கவனிக்கின்றான். இருவருக்கும் நடுவில் அகப்படும் மாலினி அவரின் மோதலை அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பு படுத்தப் பெரிதும் உதவுகிறான்.

இவ்வாறு ஒரு பக்கத்தை மாத்திரம் அக நிலைப்பட்டுச் சித்திரிக்காது இருதரப்பையும் நோக்கி அவற்றின் பரஸ்பர தாகத்தின் மத்தியில் நிகழ்ச்சிகளை வகுத்துச் செல்வதே வரலாற்று நாவலின் இலட்சணம். குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி ஏன், எவ்வாறு நடைபெறுகிறது என்ற கேள்விக்கு விடையளிக்க ஒரு சார்பு "அறிவு" மட்டும் எழுத்தாளனுக்குப் போதாது. அதுமட்டுமன்று. தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இப்பரந்த பார்வை இன்றியமையாதது. தாம் தொழில் செய்யுமிடத்திலே, சக தொழிலாளருடன் உழைக்கும் உழைப்பாளிகள் இயல்பாகவே எளிதில் ஒன்றுபடும் வாய்ப்பையும் தன்மையையும் பெற்றுள்ளனர். அந்த



வகையில் இதுகாறும் வரலாறு கண்ட சுரண்டப்பட்ட மக்கள் கூட்டம் யாவற்றுள்ளும் வர்க்க உணர்வு அதிகமாகப் பெற்றவர்கள் நவீன தொழிலாளரே. ஆயினும் அவ்வுணர்வு போதாது. அது தீட்டப்படல்வேண்டும். இதுபற்றி லெனின் கூறியது மனங்கொளத்தக்கது.

"அரசியல் தோய்ந்த வர்க்க உணர்வைத் தொழிலாளர் புறத்திருந்தே பெற்றுக்கொள்ள முடியும். அதாவது பொருளாதார [தொழிற்சங்க] போராட்டத்திற்கும் அப்பால், தொழிலாளி... முதலாளி உறவு நிலைக்கும் அப்பால் உள்ள களங்களிற் பெற்றுக்கொள்ளலாம். இவ்வுணர்வைச் சிறப்பாகப் பெறக்கூடிய ஒரேயொரு செயற்களம் எதுவெனில், எல்லா வர்க்கங்களினதும் உறவு சந்திக்கும் களமாகும். நாட்டின், அரசாங்கத் துறைகளில் இது சாத்தியமாகும். சகல வர்க்கங்களும் ஒன்றையொன்று ஊடுருவிப் பாதிக்கும் களத்திலேயே இவ்வுணர்வைப் பூரணமாகப் பெறுதல் இயலும்"

பொருளாதார பிரச்சினைகளையொட்டிய போராட்டங்களில் மாத்திரம் தொழிலாளர் பங்கு கொண்டால் அதுவே போதும் என்று சீர்திருத்தவாதம் பேசிய தனது காலத்துத் திரிபுவாதிகளை நோக்கி லெனின் கூறிய வார்த்தைகள் இவை. அரசியல் போதத்தின் இன்றியமையாமையை வற்புறுத்தினார் லெனின். திரு. பண்டாரநாயக்கா பதவியிலிருந்தபொழுது அவரது அணியிற் காணப்பட்ட முற்போக்கு சனநாயக அரசியற் பண்புகளை அலட்சியஞ் செய்து கேவலம் பொருளாதாரப் பிரச்சினைகளின் அடிப்படையில் அவ்வரசாங்கத்தை தாக்கினர் இடதுசாரிகளில் ஒரு பகுதியினர்; பின்னர் திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் நேரடியான பொருளாதாரப் பிரச்சனைகளைத் துச்சமாக கருதி அரசியல் தேவையின் அடிப்படையில் அவ்வரசாங்கத்திற் பதவி வகித்தனர். இரண்டுமே ஒரு சார்புச் செயல்கள்.

இந்நாவல் திருமதி பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் இறுதியாண்டில் (1963-64) நடைபெறுவதால் அரசியல் பிரச்சனைகளையே அதிகமாக பிரதிபலிக்கிறது. ஏனெனில் இக்காலப் பகுதியில் வர்க்கப் போராட்டமானது, உக்கிரமான அரசியற் போராட்ட வடிவத்திலே நடந்தேறியது உள்ளாந்தரத்தில் மூலதனமும் இலாபமும் கணக்கிடும் நாகரத்தினம் போன்றவர்கள் தமது பேச்சில் அரசியல் பரிபாஷையையே கையாள்கின்றனர். வரலாற்று நாவலிலே ''குறிப்பிடத்தக்க மாந்தர் குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களில் தமது குணவிசேஷந் தோன்ற எமக்குக்காட்சி தருகின்றனர்'' என்று கூறினேன் இந்நாவலின் பிரதான பாத்திரமான நாகரத்தினமும் அவரது சகாக்களும் திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கம் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தித் 'தேசியமயமாக்க முனைந்த ''குறிப்பிடத்தக்க சந்தர்ப்பத்தில்'', தமது வர்க்கச் சார்பும் அதினின்று தோன்றும் குணவியல்புகளும் துல்லியமாகத் தெரியும் வகையில் நடமாடுகின்றனர்.

அதைப் போலவே தொழிலாளர் வர்க்கமும் அம்முயற்சியில் அரசியல் முக்கியத்துவத்தை உணரக் காண்கிறோம். நாகரத்தினம் போன்றோர் வாழ்வில் அது ஒரு திருப்புமையமாக அமைகிறது. மனதில் மண்டிக்கிடந்த ஐயங்கள் வெளிக்காட்டுகின்றன. உடைமை, ஒழுங்கு, அமைதி, சனநாயகம் முதலியவற்றைக் காப்பாற்றுவதன் அவசியம்பற்றி முதலாளி வர்க்கம் உரத்துக் கூவுகிறது ஆயினும் இத்தகைய சொற்றொடர்களுக்குப் பொருள் வர்க்கத்திற்கு வர்க்கம் சமூகப்பிரிவிற்கு சமூகப் பிரிவு வேறுபடுகிறது. பழைய காவிய மரபிலே கருத்துகளுக்குப் பொதுவான உடன்பாடு உண்டு நாவலிலே அவ்வாறில்லை. 'பொது உண்மை' Public truth, என்ற ஒன்றைத் தணிய மாட்டாத முரண்பாட்டு நிலையிலேயே. நாவலியக்கியம் பிறக்கிறது. ஒருவர் தனது உண்மையான ஒழுக்கத்தை மறைத்தும் அதற்கு நேரெதிராயும் பாசாங்காக அறிவார்ந்த விளக்கம்



கொடுப்பதே 'பொது உண்மை'யாகும். உளவியலும் உறுதிப்படுத்துஞ் செய்தி இது. உதாரணமாக ஒருவரைப் பெரிய மனிதன் என்று 'பொது உண்மை' கூறுகிறது.

ஆனால் க. நா. சுப்ரமண்யம் பெரிய மனிதன் என்ற குறுநாவலிற் கூறுவதுபோல அப்பெரிய மனிதர், ''இரண்டு கொலையாவது பண்ணியிருக்கிறார்; இரண்டு கற்பழித்தல் விவகாரங்களிலாவது ஈடுபட்டிருக்கிறார்; இரண்டு பொய்ச் சாஷிகளாவது தயார் செய்திருக்கிறார்; இரண்டு களவாணி விஷயங்களில் கலந்திருக்கிறார் அல்லது குறைந்த பக்ஷம் இரண்டு லஞ்ச ஊழல்களிலாவது ஈடுபட்டிருக்கிறார்.'' பெரிய மனிதர் நடமாடும் சமுதாயப் படியிலுள்ளவருக்கு அதுவே 'யுகதர்மம்'. எனவே அவர்களுக்குப் பிரச்சினையில்லை கீழ்ப்படியிலுள்ள பலர் ''நல்லதுக்குக் காலமில்லை என்று மனமுடைந்து 'பொது உண்மை'யின் பொய்மையையறிந்தும் செயலற்றிருப்பர். ஆக ஒன்று தெளிவாகி விடுகிறது.

'பொது உண்மை' என்று ஒன்று இல்லை. வர்க்கங்களுக்கேற்பவே உண்மையும் தத்துவ விளக்கமும் ஏன், பலசந்தர்ப்பங்களில் விஞ்ஞானமுங்கூட அமைகின்றன. உதாரணமாக மேற்கு நாட்டு வர்த்தகரும் கைத்தொழிலதிபரும் மூலதனக்காரரும் ஒளிவு மறைவற்ற ஆயுத பலத்தினால் நாடு பிடித்து பல கோடிக்கணக்கான மக்களை அடிமைப்படுத்திய காலத்தில் பரிணாம வளர்ச்சி என்ற டார்வினது விஞ்ஞானக் கோட்பாட்டைத் 'தகுதியுடையோருக்கே தரணியில் இடமுண்டு' என்ற வாழ்க்கைத் தத்துவமாக மாற்றினர். அங்கே விஞ்ஞானம் வர்க்கச் சாயல் பெறுவதைக் காண்கிறோம். அரசியல் பொருளாதாரம் சார்ந்த கோஷங்கள் பல அத்தகையனவே. ஒரு சந்தர்ப்பத்திலே சனநாயகம் பேசிய சீர்திருத்தவாதிகளை நோக்கி லெனின் கூறினார்:

''சுதந்திரம்'' என்பது மகோன்னதமான பதந்தான். ஆனால் கைத்தொழில் வளர்ச்சிக்குச் சுதந்திரம் என்ற

கொடியின் கீழ் ஈவிரக்கமற்றுக் கொள்ளையடிக்கும் போர்கள் நடந்துள்ளன; உழைப்புச் சுதந்திரம் என்ற பதாகையின்கீழ் தொழிலாளர் கொள்ளையடிக்கப்பட்டுள்ளனர். புதிய பிரயோகமான 'விமர்சன சுதந்திரம்' என்பதும் அதற்கியல்பான பொய்ம்மையை உள்ளடக்கியுள்ளது.''

ஆனால், சுதந்திரம், நீதி, அமைதி முதலிய கோட்பாடுகள் ஒவ்வொன்றும் 'பொது உண்மைகள்' என்று கருதப்படுவன. பெரும்பாலும் அதிகார வர்க்கத்தினது விளக்கமே 'பொது உண்மை' என்று சமுதாயத்திற் பரப்பப்படுகிறது. ஒவ்வொரு பிரச்சினையையும் வர்க்கங்கள் நோக்கும் முறையும் பெறும் முடிவுகளும் மாறுபட்டவை. சகல வர்க்கங்களினதும் வாழ்வியலை நுணுகிக் கவனிக்கும் ஓர் எழுத்தாளனே இம்மாறுபட்ட நோக்குகளையும் செயற்பாடுகளையும் முழுமையாக உணர்ந்து, தனது பாத்திரங்களுக்கு ஏற்ற மனோபாவங்களை வகுக்கலாம். இந்நாவலில் 'பத்திரிகைச் சுதந்திரம்' என்ற பொருள் பற்றிப் பாத்திரங்கள் கூறுவன, வர்க்க உண்மைக்கும் 'பொது உண்மை'க்குமுள்ள முரண்பாட்டையும் பொருந்தாமையையும் சிறப்பாகக் காட்டுகின்றன.

திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கம் பெரும் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த முயன்றபொழுது அம் முயற்சியை நாகரத்தினம் போன்றோர் நோக்கிய விதமும் பொன்னையா போன்றோர் கணித்த விதமும் மாறுபட்டவை. பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்ட நகலை நாடாளுமன்றத்திலே கூட்டரசாங்கம் சமர்ப்பிப்பதைத் தொடர்ந்தே அதன் வீழ்ச்சியும் ஏற்பட்டது. அந்த வகையில் அம்மசோதா வரலாற்று முக்கியத்துவம் பெற்றது மட்டுமன்றி, அரசியற் சமூகச் சக்திகள் அக்கால கட்டத்தில் எவ்வாறு வரிசைப்பட்டு நின்றன என்பதையும் ஐயத்திற் கிடமின்றிக் காட்டவல்லதாயுள்ளது.



அதாவது அன்றைய அரசியலின் குவிமைய முனையாக அமைந்தது. பாத்திரங்களைக் 'குறிப்பிட்ட கணங்களிற்' காட்டும் நாவலாசிரியர் இம்மசோதாவிற்கும் அது குறிக்கும் பிரச்சினைக்கும் உரிய இடத்தை நாவலில் ஒதுக்கியுள்ளார். நாவலின் முக்கிய பாத்திரங்களிலொன்றான மாலினி பத்திரிகை நிறுவனம் ஒன்றிற் பணிபுரிபவள். நாகரத்தினம் பொன்னையா ஆகிய இருவருடனும் நெருங்கிப் பழகும் அவள் அப்பிரச்சனையின் சகல அம்சங்களும் தெளிவு பெறுவதற்குப் பெரிதும் உதவுகிறாள். தனது தொழிற்றுறையில் ஏற்படும் சில வில்லங்களினால் கூட்டரசாங்கத்தை வெறுக்க தொடங்கும் நாகரத்தினம், பத்திரிகைச் சுதந்திரம், சன நாயகம் முதலிய 'உயர்' கோட்பாடுகளை உச்சரித்துக் கொண்டு மேலும் மேலும் இலாபகரமான தொழில் முறைகளைத் தேடுவதைக் காணலாம். 'பொது உண்மை' என்ற கருத்துப்படிவத்தின் அறமோசமான போலித் தன்மையைப் பாத்திரங்களின் ஒழுகலாற்றிலிருந்து உணர்த்துவது நாவலாசிரியரது கலைத்திறனுக்குச் சான்றாக விளங்குகிறது.

இவ்வாறு புற உலக நிகழ்ச்சிகளைத் தெரிந்தெடுத்து விவரித்து அவற்றினூடாகப் பாத்திரங்களின் உணர்வுப் படிவங்களைப் புலப்படுத்துவது யதார்த்த இலக்கிய நெறியாகும். மேலேகூறிய இயற்பண்பு வாதத்திலும் இது மாறுபட்டது. யதார்த்தத்தைப் பற்றியும் இயற்பண்புவாதத்தையும் ஒன்றாகக் கொள்ளும் மயக்க நிலை எமது இலக்கிய உலகிற் பரவலாகக் காணப்படுகிறது.

யதார்த்தம் என்பது உண்மையைத் தேடிக் காணும் நெறி. உள்ளதை உள்ளவாறே படம் பிடித்துவிடின் உண்மை துலங்கும் என்பதில்லை. இயற்கையில் முக்கியமானதும் உயிருள்ளதும் கலந்து விரவிக் கிடக்கின்றன. இவற்றை நுணுக்கமாக வருணித்துவிடுவதால் ஒரு பொருளின் உள்ளியல்பு அல்லது சிறப்பியல்பு தெளிவாகாது. தள்ள வேண்டியதைத் தள்ளிக் கொள்ள வேண்டியதைக் கொள்ள வேண்டும். மேலோட்டமான நுணுக்க விவரங்களை

யும் ஊடுருவி உள்ளியல்பினைக் கண்டறிதல் வேண்டும். இது யதார்த்த இலக்கிய நெறியாகும்.

இவ்வாறு பார்க்குமிடத்து, யதார்த்தம் என்பது எடுத்துக் கொண்ட பொருளில் மட்டும் தங்கியிருக்கவில்லை. பொருளைக் கையாளும் உணர்விலே தங்கியுள்ளது. தாழ்ந்த நிலையில் சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஒரு மனிதனையோ, சிலரையோ தத்ரூபமாக அதாவது இயற்பண்பு குன்றாதவகையில் வருணிப்பது யதார்த்தமன்று. அத்துன்பத்தின் காரணமும் அக்காரணிக்குரிய வரலாற்றுச் சூழலையும் துன்பத்தாற் பாதிக்கப்பட்டுள்ள மனிதரின் உணர்வுக் கோலங்களுமே பிரச்சினையின் உள்ளியல்பைத் தெளிவுறுத்துவன. யதார்த்த நெறி இதனையே செய்கிறது. வரலாற்றுக்கும் இந்நெறிக்குமுள்ள பிணைப்பு இதனாற் பெறப்படுகிறதல்லவா? இயற்பண்பு வாதம் வரலாற்றுணர்வு சாராதமையாலேயே எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளாது போகிறது. போகவும், முன்னேற்றம், வளர்ச்சி, விமோசனம் முதலியவற்றிற்கு அர்த்தமும் அவசியமும் அற்றுவிடுகிறது. புதுமைப்பித்தன் போன்றோருக்குத் 'துன்பம், நம்பிக்கை வரட்சி முடிவற்ற சோகம்'' ஆகியனவே வாழ்க்கையின் நியதியாகத் தோன்றுகின்றன

உலகம் இருந்தது போலவே என்றுமிருக்கும் என்ற துன்ப இயற்கைக் கோட்பாட்டிற்கு இவர்கள் இரையாகிறார்கள். இயற்பண்பு வாத இலக்கிய நெறியின் பிரதான குறைபாடு இதுதான். லுகாஸ் கூறுவது போல, 'இயற்பண்பு நெறியானது கட்டாய விளைவாக வெகுசன இயக்கங்களையும் பொதுமக்கள் சார்ந்த மனப்பான்மையையும் மழுக்குகிறது. இயக்கத்திற்கு இன்றியமையாத வரலாற்று நோக்கையும், கருத்து பயனளிக்கும் வகையிற் செயற்படுவதற்கு இன்றியமையாத உணர்வையும் அது இழக்கச் செய்கிறது. இதன் விளைவாகச் சுற்றாடலைப்



பற்றிய நுணுகிய புலக்காட்சியும் வருணனையும் கேவலம் மனக்கண் தோற்றமாகவும் கருத்துப் பொருளாகவும் நிலையிழந்துவிடுகின்றன.'

இலக்கிய உலகில் யதார்த்த நெறி உதயமாகிய காலந்தொட்டு அது இயற்பண்பு நெறியினின்றும் வேறுபட்டே இருந்துளது. ஆயினும் அவை இரண்டும் ஒன்றெனக் கொண்டு மயங்குவார் பலர். இரு நெறிகளுக்குஞ் சில மிகப் பொதுவான பண்புகள தொடக்கத்திற் காணப்பட்டன என்பது உண்மையே. உயர்குடி மாந்தரையும் தேவரையும் பொருளாகக் கொண்டு பெரும்பாலும் இயற்கை முறைக்கு ளடங்காத வகையிற் படைக்கப்பெற்ற காப்பிய இலக்கிய மரபிற்கு எதிராக, சாதாரணமாந்தரைப் பொருளாகக் கொண்டு இயற்கை நியதிகளுக்கடங்கும் வகையில் நிகழ்வுகளை விவரிக்கும் இலக்கியங்கள் தோன்றின.

மேற்கு நாடுகளிலே முதலாளித்துவ வர்க்கத்தின் பிறப்பைத் தொடர்ந்தும். இயற்கை யாய்வான விஞ்ஞானத்தின் துரித வளர்ச்சியைத் தொடர்ந்தும் இவ்விலக்கியங்கள் தோன்றின. இக்காலப் பகுதியில் யதார்த்த நெறியும், இயற்பண்பு வாதமும் அதிகம் வேறுபாடின்றியே காணப்பட்டன. ஆயினும் தொடக்கத்திலிருந்தே இயற்பண்பு வாதம் தனது பெயருக்கியைய இயற்கை என்ற பொருளைப் பிரதானமாகக் கருதி வந்துள்ளது; பிரபஞ்ச இயற்கை. மனித இயற்கை அல்லது இயல்பு ஆகிய இரண்டும் இதன்பாற்படும். இதன் தருக்க முறையிலான முடிவாக இயற்பண்பு நெறி இலக்கியங்களில் பாத்திரங்களின் சுற்றாடலைப்பற்றிய அதி நுணுக்கமான வருணனைகளும். பாத்திரங்களின் குறையியல்புகளும் அதாவது உணர்ச்சிகளும் சிறப்பிடம் பெற்றன. மனிதனது குணவியல்புகள் தலைமுறையாகத் தொடர்ந்து வருவன என்று நம்பிய பல எழுத்தாளர் மனித இயற்கையில் அதனையும் அடக்கினர்.

மேற்குலகில் இயற்பண்பு நெறிக்குத் தத்துவ மதிப்பும் இலக்கிய விளக்கமும் கூறியவருள் பிரெஞ்சு நாவலாசிரியர் எமிலி ஜோலாவிற்குத் தனியிடமுண்டு ஜோலா (Emile Zola 1840-1902) எழுதிய பரீசார்த்த நாவல் The Experimental Novel (1880) இந்நெறிக்கு விளக்கமாயமைந்தது. நவீன விஞ்ஞானத்தின் புதுமையாற் கவரப்பட்ட ஜோலா போன்றோர் நாவல் எழுதுவதும் விஞ்ஞான ஆய்வு போன்றதே என வாதிட்டனர். இயற்கையிலுள்ள ஒரு பொருளை அதற்குரிய சூழ்நிலையில் வைத்துப்பற்றற்ற முறையில் விஞ்ஞானி ஆராய்வது போலவே, இலக்கிய கர்த்தாவும் மனிதனை அவனது சுற்றாடலில் நிறுத்திப் பற்றற்ற வகையில் அவனது உடற்பண்புகள், உளப்பண்பு கள், சமூகப்பண்புகள் முதலியவற்றை விவரித்தல் வேண்டும் எனக்கூறினர். இவ்வுத்தி யதார்த்த நெறியிலும் யதார்த்த மானது என்று உரிமை பாராட்டினர்; அதாவது நுணுக்க விவரங்கள் நிறைந்தது என்றனர். இங்குதான் இயற்பண்பு நெறியின் குறைபாட்டையும் அக்குறைபாட்டின் அடிப்படைக் காரணத்தையுந் தெளித்து கொள்ளலாம்.

சுற்றாடலும் பரம்பரையுமே heredity மனிதரது வாழ்க்கையை இயக்கி வழி நடத்துகின்றன என்ற முடிவிற்கு இது எழுத்தாளரை இழுத்துச் சென்றுவிடுகிறது. தத்துவ துறையினர் இதனை நியதிவாதம் என்பர். இதிலென்ன வேடிக்கையென்றால், வெளிப்படையாக இயற் பண்புவாதிகள் தெய்விக அருநிகழ்வுகளையும் இயற்கை கடந்த நிலையையும் மறுத்துரைப்பர். உதாரணமாக ஸ்வீடிஸ் நாடகாசிரியர், ஸ்டிரின்பர்க், (August Strindberg, 1849-1912) இயற்பண்பு நெறிக்கு வரைவிலக்கணங் கூறுகையில் அது இறைவனை விலக்கியது என்பர்.

ஆயினும் சுற்றாடலும் வழிவழி வரும் பரம்பரைக் குணங்களும் மனிதனைக் கட்டுப்படுத்தி அவன் வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன என்று கருதுவதன் தவிர்க்க முடியாத



விளைவாகச் சுதந்திர ஊக்குச் சக்தி அல்லது துணிபாற்றல் என்பது பொருளற்றுப் போகிறது. போகவும் யந்திரீயமயமான சடப்பொருள் வாதமும் விதிவாதமும் உடன் தோன்றுகின்றன இவை நிலைமாறாக் கொள்கையின் உருத் திரிபுகளேயாம் "சுற்றாடலின் பாரத்தாலும் உணர்ச்சிகளின் அழுக்கத்தாலும் மாறாத்துன்பத்தில் அமிழ்ந்து கிடக்கிறான் மனிதன்; அவனுக்கு விமோசனமேயில்லை" என்ற துன்ப இயற்கைக் கோட்பாடு முன்னேற்றத்திற்குத் தடையானது. அது மனிதனில் நம்பிக்கை யிழந்து விடுகிறது. ஒரு கதையிலே புதுமைப்பித்தன் எழுதுகிறார்.

> "மனிதன் தெய்வ சிருஷ்டியின் சிகரம் என்பது சாஸ்திரக்காரரும் விஞ்ஞானிகளும் ஏகோபித்துப் பாடும் முடிவு.
>
> நான் கவனித்தவரை அந்த மீதிரிக் கேவலமான சிருஷ்டியைப் படைத்த பிறகு, கடவுளுக்கு உணர்ச்சி 'ஏதாவது இருந்தால் வெட்கத்தினால் தூக்குப் போட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று தான் கூறுவேன்.........
> என்ன மனிதன் சீ!"

இயற்பண்பு வாதத்தின் குரல் இதுதான். புதுமைப் பித்தன், விந்தன், தமிழ் ஒளி போன்ற திறமைமிக்க எழுத்தாளர் தமது சுற்றாடலைத் தத்ரூபமாக வருணித்தும், சமூகப் பாசாங்குகளைச் சாடியும், மனிதயந்திரங்களை ஏக்கத்துடன் நோக்கியும் இலக்கியம் படைத்தனர் என்பதுண்மையே. சம்பிரதாய விக்கிரகங்களை உடைத்தெறிந்தனர்.

ஆனால் அவற்றிற்குப் பதில் என்ன வைக்கலாம் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. இயற்பண்பு நெறியின் நலிவை நோக்கும் பொழுதே யதார்த்த நெறியின் சிறப்பும் இன்றியமையாமையும் துலக்கமாகின்றன. மார்கரட் ஹாக்

னெஸ் என்ற எழுத்தாளருக்கு 1888-ல் ஏங்கெல்ஸ் எழுதிய கடிதமொன்றில் யதார்த்த நெறியைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார். "Realism, to my mind, implies besides truth of detail, the truthful reproduction of typical characters under typical circumstances." யதார்த்த நெறி என்பது நுணுக்க விவரங்களின் உண்மையுடைமை தவிர, வகை மாதிரிக்குப் பொருத்தமான பாத்திரங்களை வகை மாதிரிக்குப் பொருத்தமான நிலைமைகளுக்கு இணங்கமெய்ம்மை குன்றாத வகையிற் சித்திரித்தலாகும் என்பது அவரது மணிமொழி. இரத்தினச்சுருக்கமான இவ்வரை விலக்கணம் மார்க்ஸீய சிந்தனைகளை உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது. 'வகை மாதிரிக்குப் பொருத்தமான' பாத்திரங்களும் நிலைமைகளும் என்ற ஏங்கெல்ஸ் 'கண்டதையும் கடியதையும்' கருதினாரல்லர்.

உதாரணமாக 'வகை மாதிரிக்குப் பொருத்தமான' விபசாரி ஒருத்தியை (சிலருக்கு ஜோலாவின் நாநா நினைவிற்கு வரலாம்) சூழ்நிலைமைக் கிணங்க மெய்ம்மையுடன் சித்திரிக்கும் முறையை அவரது வரைவிலக்கணம் விலக்கிவிடுகிறது. சமுதாய இயக்க விதிகளையும் எதிர்காலச் சமுதாய வளர்ச்சியையும் நன்கு விளங்கிக்கொண்டு அவ்வுணர்வுடன் குறிப்பிடத்தக்க பாத்திரங்களை மெய்ம்மை குன்றாதவகையிற் சித்திரிப்பவனே யதார்த்தவாதியாவான். சுருங்கக் கூறின், யதார்த்தவாதி சமுதாயத்தின் இயக்கத்தையும் வளர்ச்சி முறையையும் விளக்கவல்ல 'வகை மாதிரிக்குப் பொருத்தமான' பாத்திரங்களை முழு உணர்வுடன் திட்டப்படி தேர்ந்தெடுக்கிறான்.

பொதுப்படையாகக் கூறுமிடத்து இயற்பண்பு நெறியும் யதார்த்த வாதமும் முதலாளித்துவ சமுதாயத்திற் பிறப்பனவே. முன்னது "வாழ்க்கை முட்களில் விழுந்து இரத்தம் கக்கும் சோக உள்ளங்களின்" துன்ப இயற்கைக் கோட்பாடு. பின்னது சமுதாய முரண்பாடுகளும் அவற்றிற்குக் காரண



மான பௌதீகநிலைமைகளுமே வாழ்க்கையின் தன்மைக்குக் காரணமெனக் கண்டு, "துன்பமே இயற்கையென்னும் சொல்லை மாற்ற முயலும் உள்ளங்களின் நம்பிக்கைக் குரல். இவ்வடிப்படைக் காரணத்தாலேயே, றேமண் வில்லியம்ஸ் கூறுவது போன்று, "யதார்த்தவாதம், முற்போக்குஇயக்கங்களினதும், புரட்சிகர இயக்கங்களினதும் கொள்கைக் குரலாக நிலைகொண்டுள்ளது."

இத்தகைய சிறப்புமிக்க யதார்த்த இலக்கிய நெறி தமிழ் நாவலுலகிற் பெருவழக்குப் பெற்றுள்ளதெனக் கூறமுடியாது. உணர்ச்சி முனைப்புடைய புனைவியற் பாணியிலமைந்த (Romantic) நெடுங்கதைகளும், இயற்பண்பு பொருந்திய தொடர்கதைகளுமே நாவல் என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலே யதார்த்தப் போக்கின் தொடக்கத்தைக் குறித்து நிற்கிறது. அன்று தொட்டு அம்மரபு உயிர் வாழ்ந்து வருகிறதாயினும் மேற்கூறிய இரு நெறிகளே செல்வாக்குடையனவாய் இருந்திருக்கின்றன. கல்கி ஓர் எழுத்தாளருக்குச் சொன்னாராம், "இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்காவது தமிழ் நாட்டிற் காதல் கதைகள் எழுதிக் கொண்டிருக்கலாம்" என்று. இது கட்டுக்கூற்றாக இருப்பினும், நிலைமையைத் தொகுத்துக் கூறுகிறதென்பதில் ஐயமில்லை.

தமிழ் கூறு நல்லுலகத்திற்குப் பொதுவான இப்போக்கிற்கு விதிவிலக்காக அமைந்துள்ளது, ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி. "இன்றைய ஈழத்துத் தமிழ்க் கதைகளில் காணப்படும் நவீன போக்குகளைப் பின்வருமாறு பகுத்துக் கூறலாம். ஒன்று, அவை கனவுலகக் கதைகளாயில்லாமல் யதார்த்தக் கதைகளாய் அமைந்திருத்தல். இரண்டு, நமது தேசத்தின் சொந்த மண் வாசனையைக் காட்டும் தேசிய இலக்கியங்களாய் உருப்பெற்றிருத்தல். மூன்று. ஏதாவது

ஒரு பிரச்சினையை எடுத்து அப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயலுதல்'' தமிழ்ப்புனை கதைகள் பற்றிய கருத்தரங்கு ஒன்றில் அ.ந. கந்தசாமி மேற்கண்டவாறு கூறியுள்ளார். இம்மூன்று பண்புகளையும் உள்ளடக்கிய இரு இலக்கிய இயக்கங்கள் கடந்த பத்தாண்டுக் காலத்திற்கு மேலாக ஈழத்தில் செயல்பட்டு வந்துள்ளன; முற்போக்குஇலக்கியம். தேசிய இலக்கியம் ஆகியன இவ்வியக்கங்களின் கோட்பாட்டுக் குரல்கள்.

தொடக்கத்தில் நான் குறிப்பிட்டிருப்பது போல, இப்பத்தாண்டுக் காலப்பகுதியிலே, தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் துரித வளர்ச்சியை நாம்காண்கிறோம். இவ்விரு நிகழ்வுகளும் தற்செயலானவையல்ல; ஒன்றுக் கொன்று தொடர்பானவை. பிறக்கும் நிலையிலுள்ள அல்லது முழு வளர்ச்சி எய்தாத முதலாளித்துவம் தன்னுடன் பிறப்பாகத் தேசிய உணர்வைக் கொள்கிறது. தேசிய முதலாளித்துவத்தின் இப்பண்பை மேலே சுட்டிக் காட்டினேன்.

அதைப் போலவே சிற்சில சனநாயக நடவடிக்கைகளையும் ஆரம்ப கால முதலாளித்துவம் மேற்கொள்கிறது என்று கண்டோம். பரந்த மக்கட் கூட்டத்திற்குப் பொது வான இவ்வுணர்வுகளை ஆதாரமாகக் கொண்டு யதார்த்த இலக்கிய நெறியிற் செல்லமுயல்வதே முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் நோக்கமாகும். இதனாலேதான், தனிப்பட்ட சிலர் முற்போக்கு இலக்கிய நோக்குடையவராக முன்னர் இருந்திருப்பினும், தேசியஇலக்கிய கோஷமும், முற்போக்கு இலக்கியக் குரலும் ஓங்கிஒலித்தது இக்காலப்பகுதியிலாகும்.

இன்னொரு வகையாகச் சொன்னால் கடந்த பத்தாண்டுக் காலத்தில் ஈழத்திலக்கியம், தன் நிலையுணர்ந்ததாயிற்று. தன் நிலையுணர்வானது வரலாற்று நோக்கின் பாற்பட்டது. இதுவே சமகால வரலாற்று நிகழ்வுகளை இலக்கியப் பொருளாகக் கொள்ளும் முனைப்பைக் கொடுக்கிறது. இம்முனைப்பினால் உந்தப்பட்ட நாவலாசிரியரில்



இளங்கீரன், கணேசலிங்கன், நந்தி ஆகிய மூவரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவருள் வயதால் மூத்த இளங்கீரன் வழி வகுத்தவருமாவர்.

அவரது 'நீதியே நீ கேள்' யதார்த்த நாவலுக்கு நல்ல எடுத்துக்காட்டு. அந்த வகையில் தென்னகத்தில் ரகுநாதனுடைய பஞ்சும் பசியும் ஒன்றுதான் விதந்து கூறத்தக்கது. 'மாதிரி வகைக்குப் பொருத்தமான' பாத்திர சிருஷ்டி இளங்கீரனது நாவலில் சிறப்புடன் காணப்படுவது.

இத்தகைய சூழலில் வெளிவந்த நாவல்கள் சிலவேயாயினும் கனமும் காத்திரமும் நிறைந்தன என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். திரு. கந்தசாமி முற்கூறிய உரையிற் கூறினார்: ''இலங்கையில் வெளியாகும் நாவல்கள் தமிழகத்திற் சென்று பரவாததால் அங்கு அவற்றைப் பற்றிய அறிவு போதிய அளவில் காணப்படவில்லை.''

ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிய ''அறியாமை'' தென்னிந்தியாவிற் காணப்படினும், ஈழத்தில் இரு நாட்டு நாவல்களும் நுணுக்கமாக அலசியாராயப்படுகின்றன. இது ஈழத்து நாவல்கள் துரித வளர்ச்சியடைவதற்கும், யதார்த்த நெறியை அவாவி நிற்றலுக்கும் முக்கிய காரணம்.

கணேசலிங்கனது நாவல்கள் கடந்த பத்தாண்டுக் கால ஈழத்து வரலாற்றைச் சித்திரிக்கின்றன; அதே நேரத்தில் அவ்வரலாற்றின் விளைபொருளாகவும் அமைந்துகாணப்படுகின்றன. திட்டத் தெளிவான வரலாற்று வளர்ச்சிக் கிராமத்தைக் காட்டாது விடினும், நீண்டபயணம், சடங்கு, செவ்வானம் ஆகிய மூன்றும் நிலமானிய அமைப்பிலிருந்து முதலாளித்துவ அமைப்பிற்கு மாறும் சமுதாயத்தைச் சித்திரிக்கின்றன; கிராமப்புற உழைப்பாளிகளிலே துவங்கி, நகர்ப்புற கைத்தொழிலாளரின் விழிப்புடன் முடிவடைகின்றன அந்த வகையில் இவற்றை மூன்று நாவல்களின் தொகுதி - Triolgy - எனலாம், குறிப்பிட்ட காலப்பகுதி

யொன்றினைச் சித்திரித்த பிறமொழி நாவலாசிரியர் பலர் நாவல்வரிசை படைத்தனர். அதனாலும் சரித்திர நாவல் என்ற பெயர் இவற்றிற்குப் பொருந்தும். முதலாளித்துவ வர்க்கத்தின் சுய ரூபத்தைத் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னிலையாளர் உணர்வதுடன் நாவல் முடிவடைகிறது. தேசிய முதலாளித்துவத்தின் சித்திரம் அவ்வாறுதான் அமைதல் கூடும். தொழிலாளர் வர்க்கத்தின் நீண்ட பயணம் எதிர்கால வரலாற்றுடன் சங்கமமாக விருப்பது. அச்சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெருமாற்றத்தை யதார்த்தமாகச் சித்திரிக்க நூற்றுக்கணக்கான நாவலாசிரியர் தேவைப் படுவர். அவர்கள் புடிக்கும் நாவல்களில் நிச்சயமாகச் செவ்வானம் ஒன்றாகவிருக்கும்.

க. கைலாசபதி.

''தமிழகம்''
29, 42வது வீதி
வெள்ளவத்தை
கொழும்பு.

# செவ்வானம்

செல்வியின் பிறந்த நாள். உறவினர்களையும் நண்பர்களையும் நாகரத்தினம் வரவேற்று உபசரித்துக் கொண்டு நின்றார். ஆயினும் அவரின் நினைவலைகள் இடையிடையே பொங்கி மாலினி மேலேயே மோதி நெஞ்சில் சலனத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தன; அடிக்கடி 'கேட்' பக்கமாகப் பார்வையை வீசிக் கொண்டிருந்தார். ஏமாற்றம், நம்பிக்கை—இவற்றிடையே அமைதியற்ற பரபரப்பு.

நாலே முக்காலுக்கு அவள் வந்திருக்க வேண்டும். ஐந்தரையாகியும் இன்னும் வரவில்லை; இரண்டு ரூபா மிச்சம் பிடிப்பதற்காக பஸ்ஸிற்காகத் தூங்கிக் கொண்டிருப்பாள். கார் அனுப்புவதாக தான் காலையில் சொல்லியிருக்கலாம். அதிலேயும் வீண் சிக்கல் ஏற்படலாம் கட்டாயம் வருவதாக எத்தனை உறுதியாகச் சொன்னாள். மாதக் கடைசியாகிறது. கையிலே பரிசு வாங்கப் பணமிருக்காது. பேதைப் பெண், என் அந்தஸ்துக்குத் தக்கபடி பரிசு வாங்கி வர வேண்டும்; அதற்குக் கையிலே போதிய பணமில்லை. வீண் செலவு என்று நின்றுவிட்டாளோ. நாளைக்கு 'மாலையில் சுகயீனமாகப் போய்விட்டது; அவசர அலுவல் ஒன்று தடை செய்துவிட்டது; மற்றொரு தடவை தவறாது வருவேன், மன்னிக்கவும்'' என்று சாட்டுச் சொல்லுவாள் ''பரிசு ஒன்றும் வேண்டாம்' என்று நானே சொல்லியிருக்க வேண்டும்

''என்ன நாகா யோசினை?''

நாகரத்தினத்தின் வியாபார நண்பர் அப்புகாமி கேட்டுக் கொண்டே வந்தார். ஆடம்பரமான புல்சூட். அரை வழுக்கை விழுந்த தலை. கண்ணாடியைக் கையிலே எடுத்து துடைத்துக் கொண்டார்.

''பிஸ்னெஸ் எண்டால் உங்களுக்குத் தெரியாததா? இருபத்து நாலு மணி நேரமும் யோசினை தானே'

வெள்ளிக் கம்பி ஓடிய சுருண்ட கேசத்தை மேற்புறமாகத் தடவிக்கொண்டே சொன்னார்.

''அப்ப தூக்கம்கூட இல்லைப்போலை கிடக்கு! என்ன நாகா, இப்படியெல்லாம் பேசுகிறாய். உனக்கு என்ன குறை? உன் முகத்தைப் பார்த்தாலே வயதே தோற்றாத செல்லப்பிள்ளைபோலை தெரியுது. உழைச்சது போதாதா?''

''உழைச்சதைக் காப்பாற்ற வேணுமே''

''அதுக்குத்தான் வழியில்லையா? உனக்குத் தெரியாத வழியா நான் சொல்லித் தரப்போறேன்.''

அப்புகாமி அந்தப் புது வீட்டையும் சுற்றி வர அமைந்த தோட்டத்தையும் ஒரு தடவை நோட்டமிட்டார்.

நாகரத்தினத்தின் கவனம் இன்னும் மாலினியின் வருகை பற்றியே இருந்தது. அப்புகாமியோடு பேசுவதில் அதிக ஆர்வமில்லை. யந்திரம்போல, வழமையாக அவரோடொத்த வியாபார நண்பர்களைக் காணும்போது பேசுவதையே உதடுகள் ஒலித்துக் கொண்டிருந்தன.

''உங்களைத்தானே, பேசிக்கொண்டே நிக்கிறியள். கேக்கை வெட்டுவமா?''

நாகரத்தினத்தின் மனைவி இந்திரா வந்து அப்புகாமிக்கு ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டுக் கேட்டாள்.



நாகரத்தினம் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். மாலினியின் நினைவே மீண்டும் இதயத்தைக் குடைந்து கொண்டிருந்தது. மேலும் தாமதிப்பதையும் அவர் விரும்பவில்லை.

''நான் என்ன தடுத்து வைத்திருக்கிறேனா?'' ஏதோ ஏமாற்றம் அவரின் வார்த்தைகளில் வந்துவிட்டது. இந்திரா எதிர்த்துப் பேசாது திரும்பினாள்.

சிறுவர், சிறுமியர் யாவரும் கேக் வைக்கப்பட்டிருந்த மேசையைச் சுற்றிவர நின்று 'ஹேப்பி பத்டே'' பாடினார். எரிந்து கொண்டிருந்த எட்டு மெழுகு வர்த்திகளையும் செல்வி வாயினால் ஊதி அணைத்தாள். தாயார் கொடுத்த கத்தியை கேக்கின்மேல் வைத்து அழுத்தினாள். எல்லோரும் கைதட்டி ஆரவாரித்தனர்.

''உங்க வீடே தங்கத்தால் கட்டிய வீடு போலை ஜொலிக்குது...''

மற்றோர் நண்பர் எட்மன் சுற்றிவரப் பார்த்தபடி சொல்லிக்கொண்டே வந்தார்.

நாகரத்தினமும் அப்புகாமியும் மேலே பார்த்தனர். மாலைச் சூரியனின் செங்கதிர்கள் வீட்டின் மாடிப் பகுதிக்குத் தங்கமுலாம் பூசிக் கொண்டிருந்தன

''இந்த லோனைப் பார்த்தாலும் புதுமையாகத்தான் இருக்கு நம்ம மூத்த மகளுக்கு இதிலையெல்லாம் கொஞ்சம் விருப்பம். ஒரு நாளைக்கு அழைத்து வர வேணும்.''

எட்மன் கூறி முடித்தனர்.

செல்வி கேக்கைக் கொண்டு வந்து நீட்டினாள்.

''ஹப்பி பேத்டே''

கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு ஒவ்வொரு துண்டு எடுத்துக் கொண்டனர்.

''எத்தனையாம் பேத்டே.''

''எட்டாவது''

''இவள் தானே உங்கள் லக்கி கேள்''

எட்மன் கேட்டார்.

''என்ரை செல்வமெல்லாம் இவள்தானே அதுதான் செல்வி எண்டே கூப்பிடுறம். தமிழிலே செல்வி எண்டால் பணத்தை உடையவள் என்று அர்த்தம் நான் உழைச்சதெல்லாம் இந்த எட்டு வருஷத்திலைதான்.''

''பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்த பிறகு எண்டு சொல்லுங்கோவன்.''

அப்புகாமி அரசியலைக் கொண்டு வந்தார். நாகரத்தினம் அதைப் பொருட்படுத்தாதவராகத் தமது வீடுபற்றிய கதையைச் சொன்னார்.

''நல்ல வீடில்லை, வீடில்லை என்று வீட்டிலை ஒரே குறை. போன பேத்டேயிலை, தீர்மானிச்சன், செல்வியின் அடுத்த பேத்டே புது வீட்டிலை கொண்டாடிறதென்று. அதையும் நினைச்சபடி சாதித்துப் போட்டன்.''

''இந்த அதிர்ஷ்டக்காரியின் வீட்டை ஒருக்காப்பார்க்க வேணும்.''

எட்மன் சொன்னார்.

அப்புகாமியும் தொடர்ந்தார்.

நாகரத்தினம் பெண்கள் பக்கமாகத் துருவித் துருவிப் பார்த்தார். மாலினி வந்து பெண்கள் பகுதியில் ஒதுக்கமாக உட்கார்ந்துவிட்டாளா என்று கண்ணோட்டமிட்டார்.

''வன் மினிட்''



## 2

நாகரத்தினம் நோட்டமிட்டபடி ஒரு தடவை சுற்றி வந்தார். குழந்தைகளின் ஆரவாரமும் பெண்களின் கலகலப்பும் ஒலித்துக் கொண்டிருந்தன. சிற்றுண்டிகளை வேலையாட்களும் வீட்டாரும் நெருங்கிய உறவினர்களும் பரிமாறிக் கொண்டிருந்தனர். அந்தச் சலசலப்பிடையே செல்வியின் தோழி ஒருத்தி பியானோவை மீட்டிக்கொண்டிருந்தாள் அதைச் சுற்றி ஒரு சிறு கூட்டம். எதிரே கண்டவர் யாவருக்கும் ஒரு புன்னகையை உதிர்த்து குசலம் விசாரித்துக் கொண்டார். தம்மைக் காணாததில் சில பெரிய மனிதர்களிடம் தாமே சென்று வருகைக்கு நன்றி தெரிவித்துப் பேசிக் கொண்டார். எல்லாச் சிறப்புகளும் அவருக்குப் பூரண திருப்தியளிக்கவில்லை. மாலினி வராதது ஏமாற்றமாகவே எதிரொலித்தது.

ஒருவேளை அலுவலகத்திலேயே நிற்பாளோ? டெலிபோன் செய்து பார்க்கலாமா? மனதில் ஒரு எண்ணம் முளைவிட்டது டெலிபோன் செய்யும்போது திடீரென இந்திரா வந்துவிட்டால்...! முளையைக் கிள்ளிவிட்டார். நம்பிக்கையும் ஆர்வமும் மேலெழுந்தன படலைவரையில் சென்று தெருவின் இருபுறமும் பார்த்தார். வந்தவர்களின் கார்கள் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கப்பட்டிருந்தன. டிரைவர்கள் ஆங்காங்கே கூடிவிட்டனர்.

மாலினியின் வரவையே காணவில்லை. மீண்டும் பூந்தோட்டக் கலகலப்பிடை நுழைந்தார். கார்களையும் கூட்டத்தையும் நினைத்தபோது பெருமையாக இருந்தது. சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர்—எல்லோரும் வந்திருந்தனர். ஆங்கிலப் பேச்சுவார்த்தைகளே பெரும்பாலும் ஒலித்தது.

இத்தனை பெரிய மனிதரின் வருகையிடையே என் சிறப்பே தெரியாத இந்தப் பெண்ணுக்கு மதிப்பு கொடுக்கப் பார்க்கிறேன்! தம் மனதைக் கடிந்து கொண்டார்.

''யாரை மாத்தையா தேடுறியள்? நான் இங்கிட்டு நிக்கிறன்.''

டிரைவர் சில்வா எதிரே வந்து நின்றான். வீட்டுக்கு இவனை அனுப்பிப் பார்க்கலாமா? எல்லாம் வீண் தொல்லை.

''ஒண்டுமில்லை. நீ எனக்குச் சொல்லாமல் போயிடாதை.''

நண்பர்களை நோக்கி திரும்பினார். எதிரே றோசி இடைமறித்தாள்.

''இந்த பேத்டேக்கு நீங்க அறிவிக்கவேயில்லை. எண்டாலும் நான் நினைவு வைச்சு வந்திட்டன். வீடு கார்டன் எல்லாமே பிரமாதம். எங்களை மறந்திடாதையுங்கோ.''

'மறக்கிறதா றோசி. உங்களுக்கெல்லாம் சொல்லியா அழைக்க வேணும் நீ கொழும்பிலை இல்லை எண்டெல்லோ நினைச்சேன். ஒவ்விஸ் பக்கம் டெலிபோன் பண்ணப்படாதா? அடுத்த கிழமை மட்டிலை, மறக்காமல் டெலிபோன் செய்''

நாகரத்தினம் மெதுவாகச் சொன்னார்.

றோசி ஒரு புன்னகையை உதிர்த்தாள். மேலும் அவருடன் பேச அவள் விரும்பினாள்.

நாகரத்தினம் சுற்றி வரப் பார்த்துக்கொண்டே நழுவிக் கொண்டார்.

செல்வி ஓடிவந்து தந்தையின் விரல்களைப் பிடித்து அழைத்துச் சென்று வகுப்பாசிரியரையும் தன் பள்ளித் தோழியரையும் அறிமுகப்படுத்தினாள்.

மூத்த மகள் பத்மினி அவரை அழைத்துச் சென்று தன் தோழியரை அறிமுகம் செய்தாள்.



## 3

அப்புகாமியும் எட்மனுடன் நின்ற இடத்திற்கு நாகரத்தினம் திரும்பியபோது அவர்கள் குளிர்ந்த பழரசம் சுவைத்துக் கொண்டிருந்தனர்.

''அதை வைச்சிட்டு வாருங்கோ. சூடேற வேறை டிரிங்ஸ் தாறன்.''

அவர்களை அழைத்துக்கொண்டு வீட்டுப் பக்கமாகத் திரும்பினார்.

''மன்னிக்க வேணும். வேறை அப்போயின்மெண்ட் இருக்கு. வொண்டபுல் பார்ட்டி அன் வொண்டபுல் கேள்.''

முன்னே வந்து பாராட்டி விடைபெற்றனர், சிலர்.

பெண்கள் பக்கமாகவும் வாயில் புறமாகவும் கடைசியாகப் பார்வையைப் பரப்பினார். மாலினி வரவேயில்லை.

வீட்டுக்குள் மூவரும் நுழைந்தனர். விசாலமான பெரிய ஹால். தூண்களே இல்லாதபடி புதுமையாக அமைக்கப் பட்டிருந்தது நடுவே கம்பளம் ஒரு புறத்தில் உட்கார்ந்து உரையாடுவதற்கு வேண்டிய ஆடம்பரமான டிராயிங் செட். நடுவே கருநீல நிறத்தில் வட்டமான மேசை. வாயிலின் எதிர்ப்புறத்தில் முகம்பார்க்கத் தக்கதாக பொலிஷ் செய்யப் பட்ட டைனிங் டேபிளும் குசன் தைத்த நாற்காலிகளும். அடுத்த மூலையில் குளிரூட்டும் பெட்டி மெல்லிய மோட்டார் ஒலியுடன் அனுங்கிக்கொண்டிருந்தது. நாகரத்தினம் அதைத் திறந்து சோடாவும் விஸ்கியும் எடுத்தார். அருகே இருந்த மேசையிலிருந்து மூன்று கிளாஸ்களை எடுத்து அவற்றில் ஊற்றி, இருவரிடமும் கொடுத்தார். தாமும் ஒரு கிளாசைக் கையில் எடுத்துச் சுவைத்துக் கொண்டே அலுவலக அறை, விருந்தாளிகள் பகுதி ஆகியவற்றைக் கீழ்ப்பகுதியில் காட்டினார்.

டெலிபோன் மணி ஒலித்தது. உடனே மாலினியின் நினைவு வந்தது. வராததுக்குச் சாட்டுச் சொல்ல போன் செய்கிறாள் போலும்!

தமது ஆவலைக் காட்டாத விதமாகச் சென்று டெலி போனை எடுத்தார்.

''கே. பி. யா? நினைத்து டெலிபோன் செய்தீர்களே, அதுவே போதும்... வந்தால் பெருமைதான். புது வீடு கட்டி றதாகச் சொன்னேனல்லவா. எப்ப எண்டாலும் இந்தத் தெருவாலை போகேக்கை ரைம் இருந்தா எட்டிப் பாருங்கோ அப்பு எட்மன்கூட வந்திருக்கிறாங்கள். வீட்டைச் சுத்திக் காட்டிறன்.''

அவர்களிருவரையும் பார்த்துச் சிரித்தபடியே டெலி போனை வைத்துவிட்டு வந்தார்.

''அது கே. பி. சும்மா ஒரு அழைப்பு அனுப்பினேன். அந்த மனுஷன் நினைச்சு டெலிபோன் பண்ணிப்போட்டுது. நீங்க இங்கே நிக்கிறீங்களெண்டு கூடச் சொன்னன். ஏதோ நம்ம பிள்ளையின்ரை நல்ல காலம். அந்த மனுஷன்ரை தயவும் இருந்தது.''

''அரசாங்கத்தின்ரை தயவே இருந்ததெண்டு சொல் லுங்கோவன். எங்களுக்கும் வேறை ஆர் ஏதோ சுதந்திரக் கட்சி வந்தது. நாங்களும் எங்கடை நாடு எண்டு சொல்லி கொஞ்சம் முன்னுக்கு வர முடிஞ்சுது.''

அப்புகாமி சொல்லிக்கொண்டே ஹாலின் நடுவிலிருந்து மேல்மாடிக்கு ஏறும் படி வழியே ஏறினார்.

''நாங்களும் சேர்ந்து போராடி, பணம் செலவழிச்சுத் தானே அவங்களையும் முன்னுக்குக் கொண்டுவந்தம். வெள் ளைக்காரனும் வெளிநாட்டு முதலாளிகளும் சுரண்டிக் கொண்டு போனதில் ஒரு சின்னப் பங்குதானே இப்ப எங்க ளுக்குக் கிடைக்குது. என்ன இருந்தாலும் இப்ப இவங்கள் போற பாதை அவ்வளவு நல்லாய் தெரியேல்லை.''



எட்மன் முதல் தடவையாக அவ்வேளை அரசியல்பேச்சு வார்த்தையில் ஈடுபட்டார்.

''எதை நினைத்துச் சொல்லுறியள்?''

நாகரத்தினம் கேட்டார்.

''எங்கை பார்த்தாலும் ஒன்றுமாறி ஒன்றாக வேலை நிறுத்தம். இப்ப எல்லா யூனியன்களும் இடதுசாரிக் கட்சி களும் ஒன்று சேர்ந்து இருபத்தொரு கோரிக்கைகளாம். அவங்கள் இந்த நாட்டையே உருப்பட விடமாட்டாங்கள். எல்லாம் அளவுக்கு மிஞ்சித் தொழிற்சங்கங்களை வளரவிட்ட தாலை வந்தது.''

மாடியிலுள்ள படுக்கை அறைகள், பாத்ரூம்களை யெல் லாம் நாகரததினம் காட்டினார். முன்புறமாக இருந்த மாடி யில் உட்கார்ந்து பேசுவதற்கு பிளாஸ்டிக் பின்னல் கொண்ட வட்ட வடிவமான நாற்காலிகள் இருந்தன. அங்கிருந்து கீழே பூங்காப்புறமாக நின்றவர்களை மீண்டும் ஒரு தடவை நாகரத்தினம் நோட்டம் போட்டார். மாலினிக்கு எவருமே பழக்கமில்லை. நானில்லாவிட்டால் அந்தரித்து விடுவாள் என எண்ணிக்கொண்டார். ஆனால் அவளைக் காணவே யில்லை

இந்திராவிடமும் செல்வியிடமும் சொல்லிவிட்டுச் சென்று கொண்டிருந்தனர் சிலர். செல்விக்கு வந்த பரிசுகள் யாவும் மேசை ஒன்றில் குவிந்து கிடந்தன,

''நல்ல மொடேன் ஹவுஸ் கட்டிவிட்டீர். இந்தத் தெரு விலை இவ்வளவு நிலம் கிடைச்சதே அதிர்ஷ்டம்தான். எல்லாமாய் என்ன முடிஞ்சுது?''

அப்புகாமி கேட்டார்.

''நிலத்துக்கு ஒண்டரை, வீட்டுக்கு இரண்டு ரூபா முடிஞ்சுது.''

''இரண்டு ருபாவா, வீட்டுக்கா?''

"அறுபத்திரண்டிலை இறக்குமதியெல்லாம் தடை செய்து போட்டாங்கள். இன்னும் சரியாய் கோட்டாவே கொடுக்கேல்லை. இரும்பு, சனிட்டரி சாமான் எல்லாம் ரண்டு மூண்டு மடங்கு விலை"

"அதாலை உங்களுக்கும் வேறு வழியாலை லாபம் இருக்குத்தானே?"

"இல்லாமலா, முந்தி ஒரு சயிக்கிள் டயரிலை பத்துச் சதம் கிடைக்காது. இப்ப ஐந்து ரூபா லாபம் மட்டும் கிடைக்குது. கார் டயரிலை ஒரு ரூபா ரண்டு ரூபாகூடக் கிடைக்காது. இப்ப எழுபத்தைந்து ரூபா தொடக்கம். நூறு ரூபா வரையிலை லாபம் மட்டும் கிடைக்கும் முந்தி என்னத்துக்கும் வெள்ளைக்காரனோடும், இந்திய பாகிஸ்தான் முதலாளிகளோடையும் போட்டி போடவேணும். பாங்குகளெல்லாம் அவங்களுக்குச் சாதகமாயிருந்தன. எங்களாலை அவ்ங்களோடை போட்டி போட முடியுமா?"

நாகரத்தினம் தன் நண்பர்களிடம் ஒளிவு மறைவு இன்றி யாவையும் சொன்னார்,

"ஏதோ எட்மனுக்குப் பழைய அரசாங்கத்தின் ஆதரவும் இருந்தது. எங்களுக்கெல்லாம் சுதந்திரக் கட்சி வந்த பிறகு தானே நாலு பேருக்கு முன்னாலை வர முடிந்தது."

அப்புகாமி சொன்னார்.

"என்னதான் பழைய அரசாங்கம் இருந்தபோதும் இந்த அரசாங்கத்திலைதான் உழைக்க முடிஞ்சுது ஆனால் உழைச்சதைக் காப்பாற்றிறதுதான் கஷ்டமாயிருக்கு."

எட்மன் சொன்னார்.

"அதுக்குத்தான் எத்தினை வழியிருக்கு. ஒன்றரை லட்சம் ரூபா கொடுத்த நிலத்தை பாதி விலை காட்டி எழுதினன். வீடு கட்டின செலவில் நாலில் ஒன்றைக்காட்டினாலே போதும். இப்படி எத்தனை செய்யலாம். பிளாக் மனியைச்



சமாளிக்கிறது அத்தனை கஷ்டமில்லை, யூகம் வேண்டும். அவ்வளவுதான்!"

நாகரத்தினம் தமது திறமையைச் சொன்னார் என்ன தான் வெளியே நடித்துப் பேசியபோதும் அவரின் நினைவின் பெரும் பகுதி மாலினியைப் பற்றியே வட்டமிட்டது. வர முடியாதபோது அவள் டெலிபோன் பண்ணியாவது சொல்லியிருக்க வேண்டும். இந்திராவிற்குப் பயந்து விட்டிருக்கலாம்.

"என்ன இருந்தாலும் இந்த அரசாங்கத்திலை பணத்தை வைத்துக் கொண்டு பயப்பட வேண்டியிருக்கு. யு.என்.பி.யில் அப்படியில்லை."

எட்மன் தம் கருத்தை அழுத்திக் கூறியபடியே கீழே இறங்கி வந்தார்.

"அப்படியெல்லாம் பயப்பிடாதையுங்கோ. இதெல்லாம் நியூஸ் பேப்பர்களை அரசாங்கம் எடுக்கப் போகிறதென்ற பயத்தாலை அவங்கள் கட்டிவிடும் கதைகள். அவங்கள்தான் இந்த நாட்டைப் போட்டுப் பயப்படுத்திறாங்கள். பத்திரிகைகளை அரசாங்கம் எடுத்துப் போட்டால் அங்கை விலை ஏறுது, இங்கை கள்ள மார்க்கெட் அடிக்கிறாங்கள் என்ற கூச்சலெல்லாம் நிண்டு போய்விடும்."

அப்புகாமி பதில் கூறிக்கொண்டே 'கேட்'வரை வந்தார்.

## 4

இருவரும் விடை பெற்றுக் கொண்டனர் பொழுது கருகிவிட்டது. பூந்தோட்டத்தில் தற்காலிகமாகப் போடப்பட்ட மின் விளக்குகள் எரிந்தன. அயலவரும் வேறு சில உறவினர்களும் உட்கார்ந்து உரையாடிக்கொண்டிருந்தனர் செல்வி தன் பரிசுகளை ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்துக்

கொண்டிருந்தாள். இந்திரா ஓடியாடி வேலைசெய்து களைத்துப் போயிருந்தாள். கணவனைக் கண்டதும் ஓடி வந்தாள்.

''கேட்டீங்களா, றோசி எண்டு முந்தி வருவாளே அவள் கேட்டாள் இந்த சோட்டீற்ஸ் எல்லாம் எங்கே ஓடர் பண்ணினனெதன்று. நாங்கள் வீட்டிலை செய்த தெண்டு சொல்லவும் அவளாலை நம்ப முடியேல்லை.''

இந்திரா தன் பெருமையைப் பறை தட்டினாள்.

''அவள் ஏன் இங்கை வந்தாள், நான் பார்க்கவேயில்லை நீயா அழைத்தாய்?''

''நான் ஏன் அழைக்கிறன்? பழைய நினைவிலை வந்திருப்பாள் அவளின்ரை முகத்திலையும் எரிச்சலும் பொறாமையும் பொங்கிக்கொண்டே இருந்தது. வந்தவங்களெல்லாரும் அப்பிடித்தான் உதட்டிலைதான் பாராட்டும் வாழ்த்தும் நெஞ்சிலை எல்லாம் எரிச்சலும் பொறாமையுந்தான். நாங்கள் இவ்வளவு கெதியாய் வளந்திட்டம் என்பதை ஒருத்தராலும் தாங்க முடியேல்லை. செல்விக்கு நான் தைச்ச சட்டையைக்கூட நல்லதெண்டு சிலதுகளுக்குச் சொல்ல மனம் வரேல்லை.''

''உனக்கெண்டால் மட்டும் மற்றவங்களைப் பாராட்ட மனம் வருமோ ''

''ஏன் எனக்கு நல்லதைக் கண்டால் பாராட்டத் தெரியாதா? இந்தியாவிலை வாங்கின இந்த அசல் மணிப்புரிப் பட்டுச் சேலையைப் பார்த்து ஒருத்தி இது மாலா மணிப்புரியா இல்லாட்டி ஆர்ட் சில்க்கா என்று கேட்டாள். இவ்வளவுதான் அதுகளுக்கிருக்கிற அறிவு''

இந்திரா பதில் சொன்னபோது குரலில் ஆத்திரம் தொனித்தது. தன் பட்டுச்சேலையைக் குறை சொன்னவளை அவளால் மன்னிக்கவே முடியவில்லை நாகரத்தினம் மனதிற் சிரித்துக்கொண்டே கேட்பக்கமாகப் பார்த்தார். ஒரு டாக்சி நின்றசத்தம். மீட்டர் திருப்பிய மணிஒலி. மாலினியா?



மாலினி டாக்சியால் இறங்கிச் சுறுசுறுப்பாக வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவளது அசைவிலும் நடையிலும் பதட்டம் இருந்ததைப் பார்த்தார். சோர்ந்து போயிருந்த அவரது இதயத்தில் புத்துணர்ச்சி ஏற்பட்டது. எழுந்து சென்று வரவேற்று அழைத்து வந்தார்.

''லேட்டாகி விட்டது. மன்னிக்கவும்.''

பணிவாகக் கூறியபடியே புன்னகையை வரவழைத்துக் கொண்டே வந்தாள். வியர்வை படிந்திருந்த முகத்தில் பவுடரை மெதுமையாகத் தடவியிருந்தாள்.

''இவ மிஸ்மாலினி டேவிட். சுதேசி பத்திரிகைக் கம்பெனியில் வேலை செய்கிறார். மானேஜிங் டிரெக்டரின் செக்கிட்டரி. பெரிகை, பத்திரிகை நிலையத்தில் என்ன உதவி வேண்டுமாயினும் செய்வார். மீற் மை வைஃப் இந்திரா.''

நாகரத்தினம் மனைவியாருக்கு அறிமுகப்படுத்தினார். இந்திரா மாலினியை ஏறிட்டுப் பார்த்தாள்; அவளது எடுப்பான தோற்றமும் கவர்ச்சியான முகமும் பொறாமையையே தூண்டியது. சேலையும் ஆபரணங்களும் செல்வச் சிறப்பைக் காட்டவில்லை, அந்தளவில் ஓரளவு திருப்தி மனதில் ஏற்பட்டது.

''காலையில் மானேஜிங் டிரெக்டரை ஒரு அவசர அலுவலால் காணப் போனேன். அப்போதுதான் மாலையிலை டைம் கிடைச்சால் வீட்டுப் பக்கமாய் வந்து போகலாம் என்று சொன்னேன். மறக்காமல் வந்திட்டாங்கள்.!'

நாகரத்தினம் தான் தயாரித்து வைத்திருந்த காரணத்தைச் சாவதானமாகச் சொன்னார்.

''வந்ததுக்கு ரொம்ப தாங்ஸ்.''

இந்திரா மரியாதை காட்டி நடித்தாள்.

''மகள் செல்வி எங்கே?''

செல்வி என்ற பெயர் அவள் எதிர்பாராமலே வாயில் வந்துவிட்டது. நாவைக் கடிந்து கொண்டாள். இந்திரா மகளை அழைத்தாள். மாலினி தான் கொண்டுவந்த பரிசைக் கொடுத்து, கன்னத்தில் தன் கன்னத்தை வைத்து ''ஹப்பி பேத்டே'' சொன்னாள்.

''தாங் யூ சொல்லு,''

இந்திரா நினைவூட்டினாள்.

'தாங் யூ''

செல்வி கேக் எடுத்து வந்தாள். அதைச் சுவைத்த படியே மாலினி சுற்றிவரப் பார்த்துவிட்டுச் சொன்னாள்:

''பெரிய பார்ட்டியே வைத்திருக்கிறியன் போலை கிடக்கு. நான்தான் பிந்திப்போனன்.''

'பரவாயில்லை. பிந்தி வந்தபடியால்தான் இப்படி ஓய் வாகப் பேச முடியுது.''

''நீங்கள் உடுத்திருப்பது மணிப்புரியா? வொண்ட்புல் சாறி. எங்கே வாங்கினீங்கள்; நல்ல கலர். உங்கள் நிறத் துக்கு நல்லாய் மாச் பண்ணுது...''

மாலினியும் இந்திராவும் உரையாடத் தொடங்கினர். நாகரத்தினம் எழுந்து வந்து சிற்றுண்டி, பழரசம் பரிமாறும் படி பத்மினியிடம் நினைவூட்டினார். அவரின் தனிமையைப் பார்த்துக்கொண்டிருந்த டிரைவர் சில்வா ஓடி வந்தான்.

''அம்மைக்குச் சுகமில்லையாம். ஒருக்காபோய் பார்த் திட்டு வரவேணும் மாத்தையா..'

'சரி போ''

வீட்டைச் சுற்றிக் காண்பிப்பதற்காக இந்திரா மாலினியை அழைத்துச் சென்றாள். மின் விளக்குகள் யாவையும் போட்டு ஒவ்வொரு பகுதியாகக் காட்டினாள்,



''இந்த ஹோல்லையிட்டைப் பாருங்க. இது ஜெர்மனி யிலிருந்து நாற்பது ஸ்ரேலிங் பவுண் கொடுத்து வாங்கி வந்தார். அந்த பிரிட்ஜ் லேட்டஸ்ட் மொடல். அமெரிக்கா விலிருந்து வந்த என் கசின் ஒருவர் மூலம் வரவழைத்தோம்''

''ஓ, றியல்லீ''

இந்திராவின் பெருமை யாவற்றையும் மாலினி ரசித்துக் கேட்டாள்.

''இப்ப காசிருந்து என்ன பயன். என்ன நல்லசாமானை இங்கே வாங்க முடியுது. எல்லாவற்றையும் இறக்குமதி செய்ய முடியாது என்று தடை செய்துவிட்டாங்கள், ஓடிக் கொலோன் என்றால் ஸ்பிரிட்டுக்கை சென்ரைக் கலந்து போட்டு புட்டிக்கை அடைத்து விக்கிறாங்கள். யாட்லி பவுடர் இப்ப எங்கை கிடைக்குது. லோக்கல் பவுடரின் நாற்றத்தையே என்னால் சகிக்க முடியாது. லண்டனி லிருந்து இவருடைய தம்பியார் வரேக்கை அரைடஜன் யாட்லி பவுடர் டின் எடுப்பித்தேன். சேலை வேணுமெண் டால் இந்தியாவிற்குப் போகவேண்டிக் கிடக்கு. எனக்கு நல்ல சாமான் வேணுமென்டாலும் வெளி நாட்டுக்குத்தான் போக,வேணும். இந்த நாடு குட்டிச் சுவராகி வருகுது. நான் இவருக்கு அடிக்கடி சொல்லுவன், 'பிஸினெஸ் எல்லாத்தையும் விட்டிட்டு லண்டனிலை அல்லது அமெரிக்காவிலை சென்று குடியேறுவோம்' என்று.''

இந்திரா சிரித்துக்கொண்டே சொன்னாள். யாவையும் மாலினி பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். பொறுமையிழந்த நிலையில் மாலினி சொன்னாள்:

''பாராளுமன்றத்திலை ஒரு லெப்ற் எம்.பி. சைக்கிள் டயர் உள்நாட்டில் உற்பத்தி செய்வதாகச் சொல்லிக் கொண்டு சிலர் கொள்ளையடிக்கிறார்கள். இறக்குமதி செய்த டயர் மூன்று நாலு வருடம் பாவித்தோம். இப்ப லோக்கல் டயருக்கு இரண்டு மடங்காக விலை கொடுத்தும் ஆறு மாதமும் பாலிக்குதில்லை என்று பேசிவிட்டான்: அதை

எங்களுடைய பத்திரிகைகளிலெல்லாம் போட்டுவிட்டோம். தங்களுடைய விளம்பரங்களை வாங்கிக்கொண்டே தங்களுக்கு எதிராகச் செய்தி போடுவதா என்பதைக் கேட்கவே முதலில் மிஸ்டர் நாகரட்னம் எங்க மானேஜிங் டிரெக்டரைப் பார்க்க வந்தார், அவர் எழுதித் தந்த செய்தியைப் பின்னர் பேப்பரில் வெளியிட்டு ஒருவகையாகச் சமாளித்தோம்.''

தன் மறைமுகப் பதிலை இந்திரா புரிந்துகொண்டாளா என்று மாலினி கூர்ந்து கவனித்தாள். ஏமாற்றமே தெரிந்தது

''உள்நாட்டுக் கைத்தொழில்கள் பெருகவேணுமெண்டு இந்தக் கம்யூனிஸ்டுகள் சொல்லுவாங்கள். முதலைப் போட்டு றிஸ்க் எடுத்து தொழிலைச் செய்தால் இம்பிடிக் குறை சொல்லுவாங்கள்.''

இந்திராவின் பேச்சுகளில் இருந்த முரண்பாட்டை மாலினி உணர்ந்துகொண்டாள். ஆயினும் சுட்டிக் காட்டி இந்திராவின் வெறுப்பைப் பெற அவள் விரும்பவில்லை.

கடிகாரத்தின் இசை ஒலியைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள், மாலினி.

''ஜப்பானிலிருந்து கொண்டுவந்து பிறசென்டாக இவரின் நண்பர் ஒருவர் கொடுத்த கடிகாரம்.''

மணி ஏழரை மெல்லிசையாக ஒலித்தது. பார்ட்டிக்கு வந்த யாவரும் திரும்பிவிட்டனர். திருவிழா முடிந்த அமைதி.

''சுவீட்அன் லக்ஷரி ஹவுஸ்.''

மாலினி தன் கருத்தைக் கூறிக்கொண்டே ஹாலைத் தாண்டி வாயிற் கதவண்டை வந்தாள். நாகரத்தினம் மாலினி புறப்படப்போகிறாள் என்பதை உணர்ந்து கொண்டார்.



இந்திராவிடமும் செல்வியிடமும் சொல்லிக்கொண்டே புறப்பட்டாள்.

''எப்பிடி வந்தியள்?''

இந்திரா கேட்டாள்.

''கம்பனியிலிருந்து நேரே டாக்சியில் வந்தேன்.''

''இப்ப எப்பிடிப் போவியள்?''

''நான் டாக்சியிலேயே போய்விடுவன்.''

''தனிய இரவிலை டாக்சியிலை போவியளா?''

''ஏன் டாக்சி? எங்க கார் ரண்டும் நிக்குது. காரிலேயே போய் விடலாம், சில்வா எங்கை.''

நாகரத்தினம் சொன்னார்.

''வீண் சிரமம் எதுக்கு.''

''இது என்ன சிரமம், சில்வா?''

இந்திரா குரல் கொடுத்தாள்.

' சில்வா வீட்டுக்குப் போய்விட்டான்.''

வேலைக்காரப் பையன் பியசேனா ஒடி வந்து சொன்னான்.

''ஆர் அவனைப் போகச் சொன்னது.''

இந்திராவின் அதட்டல் குரல்.

''பரவாயில்லை. நானே வீட்டிலைவிட்டு விடுறனே. பம்பலப்பிட்டி தானே. நான் கொள்ளுப்பிட்டியிலை ஒரு நண்பரையும் பார்க்க வேணும். நீங்க அந்த பென்ஸ்ஸிலை ஏறுங்க.''

மாலினி பின்புறத்தில் ஏறிக்கொண்டாள்.

' குட் நைட்''

''குட் நைட்''

கார் கேட்டை தாண்டித் தெருவில் இறங்கியது,

## 5

சிறிது தூரம் சென்றதும் நாகரத்தினம் காரை நிறுத்தினார்.

''மாலினி முன் சீட்டுக்கு வாருங்களேன்.''

அவள் வந்து உட்கார்ந்தாள். நாகரத்தினம் காரை மெதுவாக ஓட்டினார்.

''எங்கை வராமல் ஏமாற்றி விடுவியளோ எண்டு நினைச்சன்.''

''சொல்லிப் போட்டு ஏமாற்றமாட்டன். ஏன் என் வருகை அத்தனை முக்கியமா?.'

''நான் அத்தனை ஆர்வத்தோடு பார்த்துக்கொண் டிருந்தேன்.''

''ஆராவது ஒரு மினிஸ்டரை அழைத்து அவர் வந் தாலும் உங்களுக்குப் பெருமையாயிருக்கும். ஏதாவது பய னாகவும் இருக்கும். இரண்டு வரி உங்கள் தொழில் திறமை பற்றிப் பேசச் சொல்லி, எங்கள் பத்திரிகைகளிலெல்லாம் படத்தோடு செய்தியும் போடச் செய்திருக்கலாம், உங்கள் மனைவியாரும் பெருமைப்பட்டிருப்பார். நான் ஆர் பெருமைப்பட.''

''ஏன் மாலினி அப்படியெல்லாம் சொல்றீங்கள். கே, பி. வர முடியேல்லை எண்டு டெலிபோன் பண்ணினார். அவர் வராததைப் பற்றியல்ல. நீங்கள் வராது விட்டிருந் தாலேயே இன்று கவலைப்பட்டிருப்பேன்.''

''நான் அத்தனை பெரியவளா?''

''ஓம்''

''நான் வீட்டுக்குப்போய் சேஞ் பண்ணியிட்டு வர எண்டு இருந்தேன். காலையில் ஒவ்விசுக்கு உடுத்த



சேலையோடேயே நேரே வர வேண்டி வந்துவிட்டது. மாலையில் முகம் கழுவி தலைகூட வாரவில்லை. உங்க இந்திரா என்னைப்பற்றி என்ன நினைச்சாங்களோ தெரி யாது,''

''தன்னிலும் பார்க்க நீங்கள் அழகாகவும் இளமையாக வும் இருப்பதைப் பார்த்து மனம் எரிந்திருப்பாள். தன் னளவு ஆடம்பரமும் பணமும் இல்லை என்பதைப் பார்த்து மகிழ்ந்திருப்பாள்.''

''சரியாகச் சொன்னீங்களே ''

''என்ரை மனைவியைப்பற்றி எனக்குத் தெரியாதா? தன்னளவு ஆடம்பரத்தை உங்களிடம் பார்த்தால் பேசியே இருக்கமாட்டாள். வீட்டைக்கூடச் சுற்றிக் காட்டியிருக்க மாட்டாள். இது வழமையாகப் பெண்களிடமுள்ள குணம்.''

''எனனிடமுமிருக்கென்று சொல்லுறியளா?''

'இப்ப இல்லாவிட்டாலும் நாட் செல்ல வரக்கூடிய குணம். அது கிடக்கட்டும். மானேஜிங் டிரக்டரோடை ஆறரை மணி வரை என்ன வேலை இருந்தது?''

''அந்தக் கேள்வி ஆண்களின் குணத்தைக் காட்டுது''

''ஏன் பெண்களின் ஆராய்ச்சித் திறமையைக் காட்டுது என்று சொல்லுங்கோவன்.''

''சரி அப்படியே என் கேள்வியைத் திருத்திக் கேட் கிறேன்.''

'அது பெரிய அரசியல் இரகசியம்''

''எனக்கும் தெரியப்படாத இரகசியமா?''

''ஓம், நீங்கள் அந்த இரகசியத்தைக் காப்பாற்ற மாட் டீர்கள் ஒன்று. மற்றது நீங்கள் அதிர்ந்து விடுவீர்கள்;''

''இரண்டும் நடைபெறாது. நீங்கள் சொல்லுங்கள்.

''வீட்டு வாசலில் இறங்கும்போது சொல்கிறேன்.''

''இல்லை, இப்ப சொல்லுங்கள்.''

நாகரத்தினம் ஆவல் மிக்கவராகி மாலினியின் கையை இடது கரத்தால் பிடித்தார்; ரோசா இதலின் மென்மையை உணர்ச்சிகளில் அளந்தார்,

''ஏன் மாலினி சொல்லுங்கள்.''

மன்றாட்டமாகக் கேட்டார்.

''எதிரே வரும் கார் போகட்டும்''

''ஏன்''

''அதிச்சியில் காரோடு மோதிவிட்டால்''

''அத்தனை நிதானமிழந்தவனல்ல, நான்''

''இப்பொழுது கொஞ்சம் இழந்து வருகிறீர்கள்''

''எல்லாம் உன்னாலதான்''

''நான் என்ன மதுவா?''

''அல்ல மாது''

''இரண்டையும் ஒன்றாக்கிப் போடுவியள்போலை கிடக்கு''

''இல்லை. மாலினி சொல்லுங்க''

மீண்டும் நயமாகக் கேட்டார். அதன் மேலும் அவள் அவரது ஆவலைக்கிளற விரும்பவில்லை.

''சுதந்திரக் கட்சியினர் இடதுசாரிகளோடு கூட்டாட்சி ஏற்படுத்தப்போகின்றனர்!''

நாகரத்தினம் பிரேக்கை அமுத்தினர். கிறீச், என்ற சத்தத்துடன் கார் நின்றது;

''உண்மையாகவா!''

''உண்மையாகவேதான். மாலையில்தான் செய்தி கிடைத்தது. அதை ஒட்டி சில வேலைகள் செய்ய வேண்டும் என மானேஜிங் டிரெக்டர் என்னைத் தாமதப்படுத்தினார் அல்லது நான் நேரத்தோடு உடைமாற்றிக் கொண்டே வந்திருப்பேன். உங்கமனைவிக்குப் பொறாமை ஏற்படுத்தும் படி உடுக்க என்னிடம் எதுவுமில்லை. மில்லியனரின் மனைவியோடு மாதம் நானூறு ரூபா சம்பளம் பெறும் ஒரு செக்கிட்டரி போட்டி போட முடியுமா?''



''செய்தி, நாளைப் பத்திரிகையில் வந்துவிடுமா?''

''இல்லை இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் செல்லலாம். முளையிலேயே இந்த எண்ணத்தைக் கிள்ள எல்லோரும் நடவடிக்கை எடுக்க இன்றே தொடங்கிவிட்டார்கள். அது சரிவராமல் போனால் கூட்டாட்சியை ஒழிக்கப் பார்ப்பார்கள்.''

நாகரத்தினத்திற்குச் செய்தி அதிர்ச்சியாகவே இருந்தது. பல்வேறு சிந்தனைகள் மனதில் நிழலாடின. காரை மீண்டும் மெதுவாக ஓட்டிச் சென்று அடுத்த சந்தியில் வலது புறமாகத் திருப்பினார். அவர் எதுவுமே பேசவில்லை.

''என்ன, அதிர்ச்சி இன்னும் நீங்கவில்லைவா? எங்கே திருப்பிறீங்கள்?''

''அதிர்ச்சி யென்றாலும் நிதானமிழக்க மாட்டேன். கோட்டைப் பக்கமாக எங்காவது ஒரு ஓட்டலில் உங்களுக்கு டின்னர் கொடுக்கப் போகிறேன்.''

''ஏது திடீரழைப்பு. இந்தச் செய்திக்காகவா?''

''இல்லை. செய்தி தந்த அதிர்ச்சிக்கு வைத்தியம் செய்ய.''

''நான் அப்படியான அதிர்ச்சி வைத்தியரல்ல.''

''சில டொக்டர்களுக்குத் தம் திறமையே தெரிவதில்லை.''

''இப்ப நான் டொக்டர், நீங்கள் பேஷன்ரோ.''

''அப்படியே வைத்துக் கொள்ளுங்கோவன். மனிதனுக்கு நோயென்பது உடலில் மட்டுமல்ல, சிந்தனையிலும் ஏற்படலாம் மனக் கவலையே ஒரு நோய்தானே, அது மனிதனது சிந்தனையையே அரித்து விடுகிறது. பிஸ்னெஸில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இக்கவலை நோய் ஏற்படுவது சகஜம். அதைத் தற்காலிகமாக நீக்க இரு வழிகளே உண்டு ஒன்று மது...''

''மற்றது மாது, அப்படித்தானே.''

''ஏன் மாலினி இப்படி அவசரப்படுகிறீங்க. அறிவுள்ள மங்கையின் ஆறுதல் மொழிகள் கவலையைப் போக்கலாம்.''

''நீங்கள் பெண்களை ஒரு மயக்கம் தரும் போதைப் பொருளாக எண்ணுகிறீர்கள்.''

''அப்படியல்ல அறிவுள்ள பெண் என்றல்லவா சொன்னேன். கவலைகளின் காரணங்களை உணர்ந்தறிந்து அவற்றிலிருந்து விடுபடத்தக்க வழிகளை, ஆறுதல் மொழிகளைக் கூறவல்ல அறிவுள்ள பெண் என்றே கூறுகிறேன்.''

''ஏன் உங்கள் மனைவியாரே அறிவுள்ள படிச்ச பெண்ணாகவே தெரிகிறது,''

## 6

**கோ**ட்டையிலுள்ள ஒரு ஓட்டலருகே காரை நிறுத்தினார். உள்ளே மாலினியையும் அழைத்துச் சென்று ஒரு தனி அறையில் உட்கார்ந்தார். 'மேனு கார்டை' புன்னகையோடு ஒரு வெயிட்டர் கொண்டு வந்து வைத்தான்.

''உங்களுக்குப் பிடிச்சதை நீங்களே தேர்ந்து கொள்ளுங்கள்.''

''நூடுல்ஸ் விந் பிறோன்ஸ்!''



''எனக்கும் அதிலேயே ஒன்று.''

''டிஸ் மேடம்!''

''சிக்கன் கறி ரு.''

வெயிட்டர் போய்விட்டான். நாகரத்தினம் விட்ட இடத்திலிருந்து தன் கதையைத் தொடர்ந்தார்:

'இந்திராவின் கவலையெல்லாம் மற்றவர்களுக்கு வீம்பு காட்ட, லேட்டஸ் மொடல் கார் இல்லை அமெரிக்காவிலும் லண்டனிலுமிருந்து வரும் ஆடம்பரப் பொருட்களில்லை என்பதே என் பிஸ்னெஸ் கவலைகளையெல்லாம் அவளால் உணர முடியாது. அப்போது எப்படி ஆறுதல் தர முடியும்? பிஸ்னெஸ் என்பது புலி முதுகில் ஏறியவன் கதை போலத் தான். இப்படியான அரசியல் மாற்றங்களேற்படும்போது என்ன நடக்குமோ என்ற பயம் இருக்கவே செய்யும்.''

''கவலை என்பது பணக்காரர் சொத்து என்று நீங்கள் கருதிப் போதைப் பொருட்களால் ஓரளவு ஆற்றிக் கொள்ளுகிறீர்கள். ஏழைகள், தொழிலாளர்களது கவலைகள், துன்பங்கள் உங்கள் கவலைகளிலும் எத்தனை மடங்கு பெரியது என்று நீங்கள் எண்ணிப் பார்ப்பதேயில்லை. ஆடம்பரப் பொருட்கள் இல்லை என்று உங்கள் மனைவி கவலைப்படுகிறா; நாளை உணவிற்கும், இருக்க வீட்டிற்கும், உடுக்க உடைக்கும் கஷ்டப்படும் லட்சக்கணக்கான மக்களின் கவலைப் பற்றி நீங்கள் எங்கே சிந்தித்துப் பார்க்கப் போகிறீர்கள்? அவர்களுக்கு ஆறுதல் கூறுபவர் யார்?!'

''அடே, இப்படியெல்லாம் அடுக்கு மொழியில் ஏழைகள் துன்பம் பற்றிப் பேச உங்களுக்கு யார் கற்றுத் தந்தார்கள்?''

பொன்னையாவின் நினைவு உடனே அவள் இதயத்தைக்குடைந்து பழைய புண்ணிலிருந்து சீழ் வடியத் தொடங்கியது. அவள் முகத்திலே கவலையின் நிழல் படர்ந்தது.

என் கவலையை ஆற்ற வல்லவர் யார் இந்த உலகத்தில் இருக்கிறார்கள்? இதற்கு மேலாய் இவரின் கவலை பெரிதா?' என் கவலை என் நெஞ்சையே நினைவு தோன்றும் வேளை யெல்லாம் அரித்துக் கொண்டிருக்கிறது. அதை இவரிடம் சொல்லுவதால் என்ன பயன் கிட்டப் போகிறது? இதயமும் சிந்தனையும் பேசிக்கொண்டன.

''என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் என்ன யோசனையோ.''

''ஒரு தோழர்!''

அவளையறியாமலே பதில் வந்துவிட்டது.

''யார் அந்தத் தோழரோ?''

''எங்கள் பத்திரிகைக் கம்பனியிலேயே உதவி ஆசிரியராக வேலை செய்தார். முதலாளித்துவப் பத்திரிகையால் அவரின் கருத்துகளையும் செயல்களையும் தாங்க முடியவில்லை. சீட்டுக் கிழித்து அனுப்பிவிட்டார்கள்.''

''அங்கே இருக்கும்போது நல்ல பிரசாரம் செய்திருக்கிறான் போலிருக்கு. உங்களைப் போல ஒரு பெண்ணையே இப்படியெல்லாம் புரட்சியாகப் பேசப் பண்ணிப் போட்டானே. எங்கள் கம்பனியிலும் பெரிய புரட்சி ஆட்களெல்லாம் இருக்கிறாங்கள்.''

''எப்படி நீங்கள் வேலையில் வைத்திருக்கிறீர்கள்!''

''அவங்களை வெளியேற்றினால் பெரிய ஸ்டிரைக் ஏற்பட்டுவிடும். இப்பெல்லாம் அவங்கடை காலந்தானே வந்து கொண்டிருக்குது.''

ஆவி பறக்க உணவு வந்து சேர்ந்தது. மாலினி நாகரத்தினத்தின் பிளேட்டில் கரண்டியையும் முள்ளுக் கரண்டியையும் ஒன்று சேர்த்து தூடில்ஸை அள்ளிப் போட்டாள்.

''சீன உணவுகள் உங்களுக்கு நல்லாய்ப் பிடிக்குமோ?''



''அமெரிக்காவில்கூட சீன உணவுக்கு மதிப்பாம். கருத்துக்களுக்குத்தான் மதிப்பில்லை.''

''போர்மோசாவிலும் சீனர்கள் வாழுகிறவர்கள்தானே. அவர்களது உணவு என்றால் என்ன?''

''இலங்கையிலும் தமிழர்கள் வாழுகிறார்கள். அவர்களது மொழிதான் தமிழ் என்று சொன்னால் என்ன?'

''இப்படித் தர்க்கவாதம் செய்யவும் அந்தத் தோழர் தான் சொல்லிக் கொடுத்தாரோ!''

''அவர் நீங்கள் தற்போது பயப்படும் இடதுசாரிகளிலும் பார்க்கப் பெரிய புரட்சிவாதி. தேர்தலிலேயே நம்பிக்கையில்லாத புரட்சிவாதி,''

''ஆபத்தான தோழராயிருக்காரே உங்கள் ஆசான்',

''ஆனால், அவரின் கருத்தின்படி இந்த இடதுசாரிகளுக்கோ அல்லது இடதுசாரிக் கூட்டரசாங்கம்தான் அமைத்தாலோ நீங்கள் அதிகப்? பயப்பட வேண்டியதில்லை.''

''உங்கள் பேச்சு நம்பிக்கையும் ஆறுதலும் தருகிறது.''

பொன்னையாவின் நினைவு மாலினியின் இதயத்தை அசைத்துக் கொண்டிருந்தது. நெஞ்சப் புண்ணின் நோவு முகத்தில் ஆழ்ந்து பரவத்தொடங்கியது. அதன்மேல் உணவு கூட ருசிக்கவில்லை; உள்ளே இறங்கவில்லை.

## 7

பில் கொண்டு வந்த வெயிட்டரிடம் ரூபா நோட்டு ஒன்றை வைத்துவிட்டு நாகரத்தினம் எழுந்தார் இருவரும் சென்று காரில் ஏறிகொண்டனர், மழைத்துமி விழுந்து கொண்டிருந்தது.

கோல்பேசு அருகே வந்ததும் காரை புல் தரைமேல் நிறுத்தினார். மழை தூறியதால் கோல்பேஸ் திடல் சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தது.

சில கார்கள் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நின்றன. 'சில்'லென்று குளிர் காற்று வீசியது, கார்க் கதவின் சட்டர்களை மேலே இழுத்து விட்டனர். கடலின் அலையோசை மோதிக்கொள்ளும் ஒலி மட்டும் பயங்கரமாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

''மாலினி என்ன சைலென்ஸ்? உங்களுக்கும் ஏதாவது கவலையா?''

நாகரத்தினம் சொல்லிக்கொண்டே அவளது வலது கரத்தை இடக்கத்தால் பற்றினார். பனி மலரை தொடுவதுபோலக் குளிர்ந்தது,

''உலக மக்களிடையே உள்ள பெரிய அறியாமை தாம் மட்டுந்தான் கவலைப்படுவதாக ஒவ்வொருவரும் எண்ணிக் கொள்வதுதான்.''

''ஏன் ஹனி, உங்கள் கவலையை எனக்குச் சொல்லி ஆறப்படாதா?''

''நான் உங்களுக்கு மருந்தாகும் தேனல்ல. மயக்கந் தரும் மதுவாக மாறுகிறேன்போலத் தெரிகிறது. நேரமாகிறது. வீட்டுக்குப் போகவேணும்.''

''மாலினி''

மாலினியின் குரலில் சிறிது அழுத்தம் தொனித்தது.

காரைப் பின்புறமாக எடுத்து காலி ரோட்டு வழியே ஓட்டினார். ஒரே மௌனம்,

''மாலினி, என்மேல் கோபமா?''



''இல்லையே, உங்கள் டின்னருக்கும் லிப்டுக்கும் நான் நன்றி செலுத்த வேண்டும்.''

''இதற்கெல்லாம் என்ன நன்றி? நான் உங்களை கோல்பேஸ் ஓட்டலுக்குத்தான் அழைத்துப்போக இருந்தேன். அறிந்தவர்கள் பலர் இருக்கலாம் என்றுதான் கோட்டைக்கு அழைத்துச் சென்றேன்.''

''என்போன்றவர்களுக்கு இதுவே பெரிய ஆடம்பரம்.''

''மாலினி, நான் இருக்கும் வரையும் இனிமேல் இப்படிக் குறைவு மனப்பான்மையோடு பேசவேண்டாம். என்ன வேண்டுமானாலும். என்னிடமே கேட்டுப் பெறலாம். பெறவேண்டும்.''

''இத்தனை உதவி செய்ய நீங்கள் வருவதற்கு நான்முற் பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.''

மாலினி வசிக்கும் வீட்டெதிரே காரை நிறுத்தினார்.

''நாளைக்கு டெலிபோன் பண்ணுங்கோ. மறக்க வேண்டாம். குட்நைட்.''

''குட்நைட்''

மாலினி இறங்கித் தன் அறையை நோக்கி அவ்வீட்டின் மாடிப்படிகளில் ஏறினாள், அவள் மேலே நின்று அறையைத் திறந்து, மின்விளக்கைப் போட்டுவிட்டுக் கையை உயர்த்தும் வரை அவர் காத்திருந்து புறப்பட்டார். நேரம் பத்து மணிக்குமேல் ஆகிவிட்டது

பல்வேறு மன உளைச்சல்களுடனும் சோர்வுடனும் காரை ஓட்டினார் மக்காதி ரோட்டிலுள்ள தமது வீட்டை அடைந்தபோது டிரைவர் சில்வா ஓடிவந்து கேட்டைத் திறந்தான்.

# 8

பியசேனாவும் மேரியும் அவருக்கு உணவு பரிமாறுவதற்காகக் காத்து நின்றனர்.

''நான் சாப்பிட்டுவிட்டேன்,''

மேரிக்கு ஏமாற்றமாக இருந்தது.

''சனட்டயினைக் குடிச்சிட்டுப் போங்கோ துரை''

மேரி சொன்னாள்.

''றாமுக்கு அனுப்பிவிடு.''

பத்மினியின் அறையில் வெளிச்சம் எரிந்து கொண்டிருந்தது அவள் படித்துக்கொணடிருப்பாள் என எண்ணிக்கொண்டார். செல்வி தூங்கிவிட்டாள். பெட்றூம் லையிட் மங்கலாகத் தெரிந்தது.

தமது அறைக்குள் நுழைந்து மின் விளக்கை அழுத்தினார். உடுப்புகளைக் களைந்து, முகத்தைக்கழுவி, பியாமா அணிந்துகொண்டார். பியதாசா கொடுத்த சனட்டயினைப் பருகிக்கொண்டிருந்தார். அவ்வேளை இந்திரா இருவரது அறைகளையும்இணைக்கும் தனிக்கதவைத்திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள்

''பம்பலப்பிட்டிக்கு போய்வர இவ்வளவு நேரமா?''

இந்திரா கேட்டாள். முகத்தில்அமைதியின்மை தோன்றியது கண்களில் கடுமை தெரிந்தது. பிங் கலரில் மெல்லிய துணியாலான நைட் டிரெஸ் அணிந்திருந்தாள்.

''நான் கொள்ளுப்பிட்டியில் நண்பரைப் பார்க்கவேண்டுமென்று போகும்போது சொல்லேல்லையா?''

' எந்த நண்பர்?''

''அதெல்லாம் சொல்ல வேண்டுமா? '



''சொல்லத்தான் வேண்டும்.''

' இப்ப சண்டை பிடிக்க எண்டுதான் எழும்பி வாறாய் போலை கிடக்கு.''

''எல்லாம் பொய்யும் ஏமாத்தும். டிரைவரை வீட்டுக்குப் போகச் சொல்லிப்போட்டு அந்த ஆட்டக்காரியை ஏத்திக் கொண்டு போற ஆசையிலே 'சில்வா' என்று கூப்பிட்டு நடிக்கிறியள்,''

''மேனஸ் தெரியாத கழுதை. சில்வாவைப் போகச் சொன்னதை நான் மறந்து போனேன். பெரிய இடத்திலை வேலை செய்யிற மரியாதையான பெண்ணை ஆட்டக்காரி எண்டு கண்டபடியெல்லாம் பேசாதை.''

''அவளைப் பார்த்த உடனேயே ஆட்டக்காரி எண்டு தான் நினைச்சேன்,''

''ஏனெண்டால் உன்னிலையும் பார்க்க அவள் அழகெல்லே. அந்த எரிச்சலிலை வேகிறாய்.''

''இரவிலே டாக்சியிலை தனியாப் போவன் எண்டு சொல்லுகிறவள் ஆட்டக்காரியில்லாமல் எப்படியிருப்பாள். அவளைப் போக விடுறதுதானே. காரிலை ஏத்தி எங்கையெல்லாம் கொண்டு போய்ச் சுத்தினீங்களோ ஆருக்குத் தெரியும்?''

''உனக்கு மேனஸ் தெரியாது. ஆருக்கு எப்படியெல்லாம் மரியாதை காட்டவேணுமெண்டு தெரியாது; நாங்கள் பிஸ்னெஸ் செய்யிற ஆட்கள். எல்லாரோடும் சோஷியலாய்ப் பழகவேணும். அவள் பெரிய இடத்திலை வேலை செய்கிறாள். எத்தனையோ உதவிகளைப் பெறத்தக்க இடம். அவள் எங்கள் வீட்டை வந்ததுக்கே பெருமைப்படவேண்டிய நீ அவளைக் கேவலமாய் பேசிறாய்.''

"அவளின்ரை உடுப்பைப் பார்த்த உடனேயே தெரிஞ்சுது பிச்சைக்காரி உங்களோடை பழகி ஏதாவது தட்டிச் சுத்த வந்திருக்கிறாள் எண்டு."

"உன்ரை சந்தேகமும் கீழ்புத்தியும் என்றைக்கும் போகாது. எத்தனை யோசனையோடும் கவலையோடும் வீட்டை வந்தால் நீ காளிரூபம் எடுத்து நாய்போலப் பாயிறாய். அவள் இப்ப சொல்லித்தந்த ஒரு செய்தியாலை நாளைக்கு நான் எத்தனையாயிரம் ரூப உழைக்கப் போறேன் தெரியுமா? அப்பிடியான ஒரு பெண்ணுக்கு ஒரு லிப்ட் கொடுக்கிறது தவறா. இங்கை வந்த பெண்டுகள் எல்லாரையும் நான் ஏத்தித் திரிஞ்சனா?"

"என்ன செய்தி சொல்லித் தந்தாள்?"

இந்திராவின் குரலிலிருந்த கடுமை குறைந்திருந்தது.

"உனக்குச் சொன்னால்தான் எங்கை புரியப் போகுது. சுதந்திரக்கட்சி இடதுசாரிகளோடை கூட்டரசாங்கம் அமைக்கப் போகுது. இந்தச் செய்தி இன்னும் ஒருத்தருக்குமே தெரியாது. நீ கூட பறை தட்டிவிடாதை, நாளைக்கு ஸெயர் மார்க்கெட்டிலை நான் எத்தனை ஆயிரம் உழைத்து விடுவன் தெரியுமா?" இந்தச் செய்தி வெளியனதும் மார்க்கெட் சரிந்திடும். நான் காலையிலேயே விற்க வேண்டியதையெல்லாவற்றையும் விற்றுவிடுவேன். உனக்கு இதெல்லாம் எங்கை விளங்கப் போகுது."

"கூட்டரசாங்கம் வந்தால் எங்கடை பிஸ்னெஸ் எல்லாம் என்னாகும்,"

"ஒண்டும் சொல்ல முடியாது அதுதான் என்னென்ன செய்யவேணுமெண்டு யோசித்து யோசித்துத் தலையை உடைக்கிறேன். நீ பிசாசு மாதிரி வந்து நிற்கிறாய்."

"என்னைப் பார்த்தால் பிசாசு மாதிரியா கிடக்குது. இப்பிடியெல்லாம் ஏன் ஏசிறீங்கள். எனக்கு ஏன் இதுகளையெல்லாம் விபரமாய் சொல்லப்படாது."



இந்திராவின் பேச்சில் தோல்வியும் வாஞ்சையும் ஒலித்தது. அவர் அருகே சென்று தோளைப் பற்றினாள். நாகரத்தினம் அசையாது நின்றார்.

"பேசுங்களேன். கோபமா!"

இந்திரா தோளைக் குலுக்கினாள்.

"அமைதியாக விஷயத்தைக் கேட்டாலெல்லோ எல்லாத்தையும் விபரமாய் சொல்லலாம்."

"உன்ரை கோபம் ஆறிய பின் இப்ப பார்த்தால் ரம்பை மாதிரி கிடக்குது."

குற்ற நெஞ்சை மறைக்க வார்த்தைகளை இதமாக்கிக் கொண்டே கட்டிலில் உட்கார்ந்தார்.

இந்திரா அவர் அருகே வந்து உட்கார்ந்து மார்புறத் தழுவி அணைத்துக் கொண்டாள்.

## 9

நாகரத்தினம் அதிகாலையில் எழுந்ததும் பத்திரிகைகள் யாவற்றையும் பிரித்துப் பார்த்தார். மாலினி சொன்னபடி கூட்டரசாங்கம் பற்றிய செய்தி எதுவும் வெளிவரவில்லை. தமக்கே அந்தச் செய்தி முதலில் தெரிந்ததையிட்டு மகிழ்ச்சியடைந்தார். மாலைவரை பங்கு மார்க்கெட் பெருச்சாளிகள் எவருக்கும் இச்செய்தி எட்டாமல் இருக்க வேண்டும் என முருகனை வேண்டிக் கொண்டார்,

காலைக் கடன்களை முடித்து பூசை அறையில் சென்று அரைமணிநேரம் பிரார்த்தனை செய்தார்.

முதல் வேலையாகத் தமது பங்குகளைக் குறித்து வைத்திருந்த புத்தகத்தை எடுத்துஎவ்வளவு பங்குகளை எவற்றில் விற்பது, எந்தக்கம்பெனியில் எவ்வளவு வாங்குவது ஆகியவை பற்றி ஆராய்ந்தார்.

முதல் நாள் பங்குமார்க்கெட் மூடும்போது இருந்த விலைகளை காலைப் பத்திரிகையில் பார்த்து ஒரு மதிப்பீடும் போட்டுக்கொண்டார். தேயிலை, ரப்பர் பங்குகளையும் வெளிநாட்டுக் கம்பெனிகளிலிருந்த பங்குகளையும் விற்பதெனவும் அதில் முக்கால் வாசிப் பணத்திற்கு உள்நாட்டுக் கம்பனிகளில் பங்குகள் வாங்குவதாகவும் தீர்மானித்தார். அதன்படி பங்குமார்க்கெட் செய்திகளையெல்லாம் படித்து, தெரிந்த ஓரிரு புரோக்கர் நண்பர்களுடன் டெலிபோனில் பேசி யாவையும் தன் டைரியில் குறித்துக் கொண்டார்.

இந்திரா தூக்கம்விட்டு எழவில்லை.செல்விபாடசாலைக்குச் செல்வதற்கு உடுப்பணிந்து சொண்டு தந்தையின் அறையுள் நுழைந்தாள்.

''வாடா குஞ்சு.''

நாகரத்தினம் வாஞ்சையோடு வரவேற்றார். அவள் அவரது கன்னத்திலே முத்தமிட்டாள். அவர் வழமையாகக் கொடுக்கும் பொக்கெட் மனியான ஐந்து ரூபாவையும் எடுத்துக் கொடுத்தார்.

''அப்பா நான் 'செவஒலெட்'டிலை போறன்.''

''அக்கா வரேல்லையா?''

''மெடிக்கல் கொலிஜ் விடுதலை யெல்லா. அக்கா பத்து மணிக்கு லைப்ரரிக்குப் போகவேணுமெண்டு சொன்னவ. நீங்க போகேக்கை இறக்கி விடுங்கோவன்.''

''நான் சீக்கிரமே போய்விடுவேன். டிரைவரையே பத்மினியையும் அழைத்துப் போகச் சொல்லு.''

''அம்மா ஷொப்பிங் போகவேணுமெண்டு சில்வா விட்டை ராத்திரிச் சொன்னாவாம்.''

'நான் இண்டைக்கு ரொம்ப பிஸியாயிருப்பன் பென்ஸ் நாள் முழுதும் என்னோடையே இருக்கும். மேரியிட்



டையும் சில்வாவிட்டையும் சொல்லி அம்மாவோடை பேசி எல்லாத்தையும் அட்ஜெஸ்ட் பண்ணச் சொல்லு டாலிங்.''

''டட்டா''

''டட்டா''

நாகரத்தினம் அவசர அவசரமாகப் புறப்பட்டார். மேரியும் பியசேனாவும் சுறுசுறுப்பாக ஓடி அவரது காலை உணவைப்பரிமாறினர். அவருக்கு எதுவுமே இறங்கவில்லை. சிந்தனை பூராவும் தெளிவில்லாத பதட்டத்துடன் சுழன்று கொண்டிருந்தது.

கம்பனியில் சேர்ந்ததும் முதல் வேலையாக மாலினிக்கு டெலிபோன் செய்தார்.

''ஓ. நீங்களா? நல்லாய்த் தூங்கினீங்களா?''

மாலினி விசாரித்தாள்.

''வழமையாகவே எங்களைப் போன்றவர்களுக்குத் தூக்கம் குறைவு. அதுவும் இப்படிச் செய்தியைக் கேள்விப் பட்டால்...''

''எப்படியானாலும் உடம்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.'

''என் உடம்பைப் பற்றிக் கவலைப்பட இந்த உலகிலை ஒரு நபராதல் இருக்கே. அந்தளவில் நான் சந்தோஷப்பட வேண்டும்.''

''ஏன் அப்படிச் சொல்லுறியள்? உங்களுக்காக எத்தனை பேர் இருக்கிறாங்க? எங்களுக்குத்தான் ஆர் இருக்கிறார்கள்?''

''அப்படி இனிமேல் நினைக்கவேண்டாம் மாலினி. நான் இருக்கிறேன். ராத்திரிச் சொன்ன அந்தச் செய்தியில் மாற்றமொன்றுமில்லையே.''

''அது உறுதியான செய்தியே.''

மாலையில் எங்கே சந்திக்கலாம்?''

''அத்தனை அவசியமா?''

''கட்டாயம் பார்க்கவேணும் போலையிருக்கு. மன நிலை அமைதியில்லை நாலேமுக்காலுக்கு ரெடியாய் நில்லுங்க. நான் அங்கேயே வந்துவிடுகிறேன்.''

''இங்கே அடிக்கடி வரவேண்டாம். நீகல் ஸ்ராண்டில் நிற்கிறேன். ஐந்து மணிக்குக் சரியாய் டெலிபோன் செய்திட்டு வாங்கோ.''

ரிசிவரை வைத்தபோதும் அவர் நினைவு யாவும் மாலினியைச் சுற்றியே வட்டமிட்டது. அவளுக்கு எல்லா வழியிலும் உதவ வேண்டுமெனத் தீர்மானித்தார், இந்தச் செய்தியால் இன்று கிடைக்கப் போகும் லாபத்தில் ஒருபங்கை அவளுக்கு செலவு செய்தால்தான் என்ன? அவளின் சுபாவமும் புதுமையான பேச்சும் ஸ்பரிசம் தரும் இன்பமும் அமைதியும் எனக்கு வீட்டிலேயே கிடைப்பதில்லை. இவற்றைத் தருபவளுக்காக என் உழைப்பின் ஒரு சிறு பங்கை ஏன் செலவு செய்யப்படாது? தாலி கட்டிவிட்டேன் என்பதற்காக என் உழைப்பெல்லாம் இந்திராவுக்கு மட்டும் சொந்தமா? தன் உல்லாச வாழ்விற்கு உழைத்துப்போடும் அடிமையாக வல்லவா அவள் என்னை எண்ணிக் கொள்ளுகிறாள்.

மாலினியின் நினைவு நாகரத்தினத்தின் இதயத்தைப் பொருமச் செய்தது. மாலையில் பார்க்கலாம் என்ற நப்பாசை ஓரளவு இதமும் ஆறுதலுமளித்தது,

டெலிபோன் மணி சிந்தனையைக் குலைத்தது.

''இன்றைத்குத் தருவதாகச் சொன்ன இருபத்தஞ்சு ரூபாவையும் இப்ப எடுக்கலாமா?''

''அக்கவுண்டன் வரட்டும். பார்த்து டெலிபோன் செய்யச் சொல்லுறன்.''



ரிசீவரை வைத்துவிட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். பங்கு மார்க்கெட் ஆரம்பிக்கப் பதினைந்து நிமிடங்களே இருந்தன. அதிர்ச்சி எதுவும் ஏற்படாத வகையில் கடைசி வேளையில் தன் புரோக்கருக்குச் சொல்லுவதற்காக அது வரை காத்திருந்தார்.

புரோக்கரை டெலிபோனில் அழைத்து விற்கவேண்டிய வாங்கவேண்டிய பங்கு விபரம் யாவையும் அவருக்குப் பரபரப்பு ஏற்படாத வகையில் சாவதானமாகச் சொன்னார்.

''ஏன் நாகா இந்தத் திடீர் முடிவு. இரண்டு வாரமாய் அசையாமல் இருந்த மார்க்கெட்டை இது ஸ்பிக்குலேட் பண்ணச் செய்யப் போகுதே. இந்த முடிவை நான் ஆதரிக்கேல்லை. ஏன் இபபடிச் செய்ய யோசித்தீர்கள்?''

''பாங்கிலே கொஞ்சம் புல்,பணம் அவசியம் தேவையாயிருக்கு.''

''கே பி. தானே உங்கடை பொக்கெட்டாச்சே? உங்களுக்கும் பாங்குக்கும் எப்படிக் கொழுவல் வரமுடியும். நம்ப முடியாமல் இருக்கு.''

''எப்படி யிருந்தாலும் எல்லாத்துக்கும் ஒரு லிமிட் இருக்கெல்லே. நீங்க பயப்பிடாமல் நான் சொல்லுறபடி செய்யுங்கோவன் நான் ஒரு மணி வரையும் எங்கும் போக மாட்டேன். இங்கைதான் இருப்பன் ஏதாவது கொன்சல்ட் பண்ண வேணுமெண்டால் உடனே டெலிபோன் செய்யுங்கோ.''

''அப்பிடியே செய்யிறன்.''

ரிசீவரை வைத்தபோது எதிரே அக்கவுண்டன் சுந்தரம் பிள்ளை கையில் பைல்களோடு நின்றார். அவரை உட்காரும்படி கையைக் காட்டினார் நாகரத்தினம்,

'ஆர்.டிக்கு ஒரு இருபத்தைஞ்சு ரூபா இண்டைக்குத் தாறதாக நேற்றுச் சொன்னமல்லே. இப்ப டெலிபோன் பண்ணினாங்கள். ஒருமாதிரிப் பார்த்து அனுப்பிவிடுங்க.''

"ஏசியாட்டிக் கம்பெனிக்கு றப்பர் வாங்கின கணக்காலை கொடுத்த 155,000 ரூபாச் செக்கை பாங்கிலை எங்களைக் கேட்காமலே திருப்பிப் போட்டாங்கள். ஏசியாட்டிக் கம்பனியிலையிருந்து இப்ப டெலிபோன் செய்தாங்கள்."

"செக்கை எமக்குச் சொல்லாமல் திருப்பிப் போட்டாங்களா? ஏன் என்று மனேச்சரைக் கேட்டியளா?"

"லெஜர் ஒவ்விசரைக் கேட்டன். ஓவர்றாப்டை எக்ஸ்ஸீட் பண்ணுதாம். மானேஜர்தான் திருப்பச் சொன்னாராம்."

"அவனுக்கு ஏன்ன துணிச்சல். தரம் தெரியாதவங்களையெல்லாம் மனேஜராக்கினால் என்னதான் செய்ய மாட்டாங்கள். மனேஜர் என்ன சொன்னான்."

"எல்லாத்துக்கும் ஒரு லிமிட் இருக்கு. பிளாக் மணி எவ்வளவுதான் இருந்தாலும் ஏன்ன? செக்கூரிட்டிக்குத் தக்கபடிதானே கடன் கொடுப்பம். ஓ.டி.யைக் கூட்டும்படி எழுதச் சொன்னார். நான் ஜெனரல் மனேஜக்கு எழுதிக் கூட்டப் பார்க்கிறாராம்."

"அது வேறை கதை. எங்களுக்குச் சொல்லாமல் எப்பிடிச் செக்கைத் திருப்பினான். வெள்ளைக்காரன் பாங்கிலை, வெளிநாட்டார் பாங்குகளிலை இப்படிச் செய்வாங்களா? எல்லாம் சுதேசி பாங்கு என்று பேரளவில்தான். சரி நீங்கள் போயிருங்கோ, நான் கூப்பிடுறன்."

சுந்தரம்பிள்ளை வேறு விஷயங்கள் பேச வந்திருந்தார். சந்தர்ப்பம் சரியில்லை என்ற எண்ணத்தோடு திரும்பினார்.

நாகரத்தினம் ஆத்திரத்தோடு டெலிபோனை எடுத்து டயல் பண்ணினார்.

"கே.பி.யா., குட்மோனிங்"

"சிறிது நேரம் சுகம் விசாரித்துவிட்டு விஷயத்தில் திடீரென இறங்கினார், "எங்கடை பாங்குகள் எங்களுக்காகத் தானே தொடங்கினீங்கள், இங்கே ஏன்னெண்டால் எல்லாத்துக்கும் சட்டமும் ஒழுங்கும் பேசும் றெட்ரேப்பாயே இருக்கு வெளிநாட்டு பாங்குகளெல்லாம் தங்கடை நாட்டவங்களுக்கு எவ்வளவு கண்ணியமாக நடந்து ஆபத்து வேளையெல்லாம் றிஸ்க் எடுத்து உதவுறாங்கள். எங்கடை பாங்குகள்? இதெல்லாம் இருந்துதான் என்ன பயன்?"



பேச்சில் ஆத்திரம் தொனித்தது.

'ஏன் நாகா என்ன நடந்தது? சொல்லுங்கோ, நான் பார்த்துக் கொள்ளுறன்.'

நாகரத்தினம் நடந்ததைப் பத்தாகப் பெரிது படுத்திச் சொன்னார்.

"பயப்படாதையுங்கோ. நான் பார்த்துக் கொள்ளுறன்."

ரிசீவரை வைத்துப் பத்து திமிடமில்லை. டெலிபோன் மணியடித்தது, பாங்கு மனேஜரே மன்னிப்புக் கோரிக் கொண்டே சொன்னார்:

"அந்த செக்கைத் திரும்பப் போடச் சொல்லுங்கோ, நாங்க மீட் பண்ணுறம். அதோடை உங்க எக்கவுண்டனை மேலும் ஐந்து லட்சத்துக்கு ஓ. டி. லிமிட்டைக் கூட்டும்படி ஒரு கடிதம் அனுப்பச் சொல்லுங்க. அப்புருவ் பண்ணி வைச்சா நானில்லாத வேளை நேற்றையைப்போலை ஒண்டும் நடக்காமல் பார்த்துக் கொள்ளலாமல்லோ.'

மனேஜர் தன் தவறை மறைத்துச் சமாளித்துப் பேசினார். நாகரத்தினம் உடனே அக்கவுண்டனை அழைத்துச் செக்கைப் போடும்படி ஏசியாட்டிக் கம்பெனிக்கு டெலிபோன் செய்யும்படி, ஓ.டி. பற்றி வங்கிக்குக் கடிதம் அனுப்பும்படி சொன்னார்.

"ஆர், டிக்கு"

"இருபத்தையாயிரத்துக்கு ஒரு காஷ் செக்கை எழுதி அனுப்பி விடுங்க"

''சரிங்க...''

''வேறை யென்ன, தயங்காமல் சொல்லும்.''

''அண்டைக்கு ஓல் சிலோன் யூனியன் பெடரேசன் ஊர்வலம், கூட்டம் போட்டாங்களே. அதுக்கு அரை நாள் லீவு எடுக்காமல் போனதற்காக அரை நாள் சம்பளம் வெட்டினோம். அது பற்றி யூனியன் காரங்கள் பேச வந்திருக்கிறாங்கள்.''

''ஆரார்''

''விக்கிரம, பிரேமதாசா, சண்முகம்...''

''அவங்களோடை பேச எனக்கு நேரமில்லை. சரி போகுது. அந்த அரைநாட் சம்பளத்தை எல்லாருக்கும் கொடுத்து விடுங்கோ. அவங்களிடமும் சொல்லி அனுப்பி விடும்''

## 10

நாகரத்தினம் அத்தனை விரைவில் இளகுவார் எனச் சுத்தரம்பிள்ளை எதிர்பார்க்கவில்லை.

நாகரத்தினத்தை இடதுசாரிக் கூட்டாட்சியின் நினைவு பயமுறுத்தியது. பல்வேறு பிரிவாகக் கிடந்த தொழிற் சங்கங்களின் ஒருமுக ஒற்றுமையும் இருபத்தொரு கோரிக்கை களும் ஒன்று மாறி ஒன்றாக ஏற்படும் வேலை நிறுத்தங் களும் அரசியலையே மாற்றி விடுமோ என அஞ்சினார். அப்படி மாற நேர்ந்தாலும் அதற்குச் செய்யவேண்டிய மாற்று வழிகளையும் ஆராய்ந்து பார்த்தார். சுதந்திரக் கட்சியோடு ஒட்டி என்னைப் போன்ற எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கைவிட்டு விட்டு இடது சாரிகளுடன் சேர்ந்து விடுவார்களா? இடது சாரி களின் மூர்க்க குணத்தை அடக்க இது ஒரு தந்திரோபாய



மாயும் இருக்கலாம். இந்த நாட்டில் புரட்சி நீண்ட பயணம் என்று சொன்ன அந்த மாலினியின் தோழன் யார்? அவன் பேச்சிலும் உண்மை இருக்கலாம். மாலினிக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு? இவள் அவனைப் பற்றி மதிப்போடு பேசுகிறாள். யார் அவன்?

பல்வேறு எண்ணங்களெல்லாம் அவர் மனதில் வினை யாடின.

ஒருமணிக்கு மேல் நண்பகல் உணவிற்காக வீட்டுக்குச் சென்றார் இந்திரா ஷொப்பிங்கால் திரும்பவில்லை, யாரோ தோழியோடு சென்றதாகவும் ஓட்டலிலேயே சாப் பிட்டுவிட்டு மெட்னி ஷோ பார்த்து வரலாம் எனவும் மேரி சொன்னாள்.

அன்று வெள்ளிக்கிழமை. நாகரத்தினம் மாமிசம் உண்ப தில்லை. மேரி சைவ உணவே சமைத்து வைத்திருந்தாள். சாப்பிட்டதும் வழமையாகப் போடும் பூனைத் தூக்கத்தைத் துறந்து உடனேயே கம்பனிக்குப் புறப்பட்டுவிட்டார். சிந்த னையின் அமைதியின்மையில் படுத்தாலும் தூக்கம் வர மாட்டாது என எண்ணிக் கொண்டார்.

மாலையில் டெலிபோன் செய்துவிட்டு ரீகல் ஸ்ராண்டு அருகே வந்து காரை நிறுத்தி மாலினியை முன் சீட்டிலேயே ஏற்றிக் கொண்டார்.

''ஏதாவது நியூஸ்''

முன்னும் பின்னும் வரிசையாகக் கார்கள் ஊர்ந்து கொண்டிருந்தன.

''புதிதாய் ஒன்றுமில்லை. உங்க மனைவியார் ராத்திரி என்னைப்பற்றி என்ன சொன்னாங்கள்?''

''சிம்பிள், சிமாட், சிமைலிங் கேள்.''

''நம்ப முடியாமல் இருக்கிறது. இது உங்கள் கற்பனை.''

''என் கற்பனையல்ல, கருத்தும் அதுதான்.''

''உப்பிடியான பாராட்டுகள் பலவற்றைப் பலரிடம் கேட்டிருக்கிறேன். அவற்றின் அடிப்படையான கருத்துகளை என்னால் உணர்ந்துகொள்ள முடியும். நான் வெறும் மந்தையல்ல. இன்ரெலியன்ட் கேள் என்றும் சேர்த்துக் கொள்ளுங்கோ,''

''டீ குடிக்க கோல்பேஸ் ஓட்டலுக்குப் போவோமா?''

''பணம் மெத்திவிட்டால் சிலருக்குச் செலவழிக்கத் தெரிவதில்லை வீம்புக்காக அள்ளி வீசுவார்கள். ஐநூறு ரூபாவுக்குப் பெறாத குதிரையை போட்டா போட்டியில் வீம்பிற்காக ஐயாயிரம் ரூபாவுக்கு விலை பேசுவார்கள், குதிரைக்குத் தீனியிட்டு வளர்ப்பவனுக்கு ஐந்து ரூபா சம்பளம் உயர்த்த மாட்டார்கள். இதனால்தான் சோஷியலிசம் வரவேண்டுமென்று சொல்லுகிறேன்.''

காரை ஓட்டலின் முன்னே நிறுத்திவிட்டு உள்ளே அழைத்துச் சென்றார். அந்த ஆடம்பரமான ஓட்டலை மாலினி சுற்றிவரப் பார்த்தாள். ஆண்களும் பெண்களுமாக ஆங்காங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டும் டீ அருந்திக் கொண்டும் இருந்தனர். உட்புற ஹோலில் திருமண விருந்து ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது மேற்குப் புற ஜன்னலினூடாகக் குளிர்ந்த கடற்காற்று வீசிக்கொண்டிருந்தது. கடலைப் பார்த்ததும் முதல் நாளிரவின் நினைவுகள் அலைமோதின. கண்ணுக்கெட்டிய வானவிளிம்பில் ஒரு கப்பல் அலைகளிடையே மறைந்து கொண்டிருந்தது.

ஒதுக்குப்புறமாக இருவரும் இருந்தனர். கேக், கட்லெட், டீ ஆகியவற்றிற்கு வெயிட்டரிடம் சொன்னார்.

''உங்களுக்கு இப்படியான புரட்சியெல்லாம் போதித்த அந்தத் தோழன் என்ன செய்கிறான்?''



நாகரத்தினம் கேட்டார். மாலினியின் நெஞ்சு உடனே புரையோடத் தொடங்கியது. முகத்திலே குதூகலம் குறைந்தது

''ஒரு சிறு கம்பெனியில் வேலை செய்கிறார். முன்னர் நானூறுக்குமேல் சம்பளம் பெற்றார். இப்ப பாதி கூடக் கிடைக்குதோ தெரியாது.''

''புரட்சி வேகம் ஆறியிருக்குமே?''

''அதிகரித்துவிட்டது.''

''ஆச்சரியமாயிருக்கிறது. அப்படியென்றால் அவனைக் கண்டால் என்னிடம் அனுப்பிவிடுங்கள். பழைய சம்பளத்தில் வேலை கொடுக்கிறேன்.''

''உங்களுக்குத்தான் ஆபத்தாக முடியும்.''

''இப்படி எத்தனை புரட்சிகளையெல்லாம் நான் அடக்கிப் பழகியிருக்கிறேன். அந்தஸ்தை உயர்த்திவிட்டு தொழிலாளரிடம் இவர்களையே வேலைவாங்க விடவேண்டும.''

''அப்படியான முதலாளித்துவ தந்திரோபாயங்களையெல்லாம் உணர்ந்தறியத்தக்க விவேகம் அவரிடமிருக்குது.''

''அதை ஒருக்கால் பரீட்சித்துப் பார்ப்பமே, அவர், அவர் என்று மிக மதிப்பாகப் பேசுறீங்கள். அவருக்கு என்ன பெயர்? எங்கே வேலை செய்கிறார்?''

''அதையெல்லாம் இப்பொழுது எதற்கு? நான் காண நேரும்போது நீங்கள் கொடுக்கும் வேலைபற்றிக் கேட்டுச் சொல்லுகிறேனே ''

நாகரத்தினம் கேக்கை எடுத்துப் பிளேட்டில் வைத்து கத்தியால் வெட்டி முள்ளுக் கரண்டியால் குத்தி நாவில் சுவைத்தார். மாலினி ஒரு கட்லெட்டை எடுத்துச் சுவைத்துச் சாப்பிட்டாள்.

''நீங்கள் கட்லெட் சாப்பிடவில்லையா?''

''இன்று வெள்ளிக்கிழமை. நான் மாமிசம் சாப்பிடுவதில்லை.''

''இப்படியான பயபக்திகளும் உங்களிடம் இருப்பதே ஆச்சரியந்தான்.''

''சில எக்ஸ்றீம் பழக்கவழங்கங்களையே என்னிடம் காணலாம். நான் இந்த ஓட்டலில் நடைபெறும் போல்ரூம் டான்சுக்கெல்லாம் அதிகமாக வருவேன். செல்விக்குப் பரத நாட்டியம் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். பத்மினி கர்நாடக சங்கீதம் படித்தாள். எனக்கு மேல் நாட்டு இசையிலே ஒரே மோகம்.''

''போல் றோப்ஸனைப் பிடிக்குமா?''

''எல்விஸ்தான் என் பேவரிட்.''

''றோப்ஸ்னின் பாட்டைக் கேட்டுப்பாருங்கோ நீகிரோ உலகமே ஒன்று சேர்ந்து ஒலிப்பது போலிருக்கும். உங்களுக்குக் காதல் பாட்டுத்தான் பிடிக்கும் போலிருக்கு.''

'காதலை வேண்டாம் என்பவர்களும் இந்த உலகத்தில் இருக்கிறார்களா?''

''ஓம்''

'ஆரது?''

''பொன்னையா?''

''அந்தத் தோழரின் பெயரா அது. நினைவில் வைத்திருப்பேன். இப்போதுதான் என்னால் உண்மையை ஊகிக்க முடிகிறது.''

''ஊகங்கள் எல்லா வேளையும் சரியாக இருப்பதில்லை.'

இருவரும் எழுந்து வந்து காரில் ஏறிக்கொண்டனர். காலி வீதிவழியே கார் ஓடியது.



''புது வருஷத்திற்கு உங்களுக்கு ஏதாவது பரிசு தர எண்ணியிருக்கிறேன், உங்களுக்கு விரும்பியதைக் கேட்கலாம்; பயன்படத்தக்கதாக வாங்கித் தருவேன்.''

''முதலாளிகள் எப்பொழுதும் லாபத்தைக் கருதித்தான் செய்வார்களாம். பரிசு கேட்கவே பயமாயிருக்கு.''

'உன் மூளையை அந்தப் பொன்னையா என்பவன், மன்னிக்கவும்...பொன்னையா என்பவர் பழுதாக்கிப் போட்டார்.''

## 11

மாலினியை பம்பலப்பிட்டியில் இறக்கிவிட்டு நாகரத்தினம் வீடு திரும்பினார்.

முதல் நாள் பிறந்த நாளுக்கு வரத் தவறிய ஒரு சிலர் வீட்டிற்கு வந்திருந்தனர். இந்திரா அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தாள்.

நாகரத்தினம் உடைகளைக் களைந்து வேட்டி, நாஷனல் அணிந்துகொண்டு கோவிலுக்குப் புறப்பட்டார். வெள்ளிக்கிழமைகளில் இவ்வழக்கத்தை அவர் விட்டுவிடுவதில்லை. கதிர்காமக் கந்தனிடத்திலும் அவருக்குப் பக்தி அதிகம். மூன்று மாதத்திற்கு ஒரு தடவையாவது கதிர்காமத்திற்குச் சென்று ஒரு நாளாவது ராமகிருஷ்ண மடத்தில் தங்கி இரண்டு மூன்று வேளை பூசை பார்த்து வழிபட்டு வருவார் புதிய முயற்சிகளில் ஈடுபடும்போதும் கதிர்காமத்தானிடம் உத்தரவு பெற்றுவிட்டே தொடங்குவார். ஒவ்வொரு தடவையும் கதிர்காமம் சென்று திரும்பியதும் கே.பி.க்கும் பிரசாதம் அனுப்பத் தவறமாட்டார்.

விடுமுறை கழிக்க மறுவாரம் மலைநாடு செல்வதுபற்றி மீண்டும் அன்றிரவு இந்திராவுடன் பேச்சு எழுந்தது.

''பத்மினி, செல்வியுடன் அடுத்த கிழமையே நீங்கள் போய்விடுங்கள். நான் வார முடிவில் வந்து பார்த்துக் கொள்ளுகிறேன். நான் தொடர்ந்து அங்கே நிற்கமுடியாது. இங்கே அரசியல் நிலைமைகளும் சரியாயில்லை. சந்தர்ப்பத் திற்குத் தக்கபடி காரியங்கள் பார்க்க வேண்டும்.''

''நீங்கள் எப்பதான் வந்து ஆறுதலாய் எங்களோடை நிக்கப் போகிறியள். வேலை வேலை என்று ஒரே சாட்டு. நாங்கள் போன பிறகு இங்கை என்ன ஆட்டம் ஆடுவியளோ ஆருக்குத் தெரியும்.''

''நீ வீணாய் வாய் கொடுத்து என்னோடை கொழுவ வேண்டாம் இராத்திரி நடந்தது தெரியாதா? உன்னைப் பிள்ளைகளோடை நுவரேலியாவிற்கு அனுப்பிறன் பாரு. அது போதாதா? மூன்று கிழமைக்கும் என்ரை பணமல்லோ இரண்டாயிரம் செலவாகப் போகுது.''

''எத்தனை விதமாய் பணமெல்லாம் கரையுது. பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் செலவழிக்கிறதைத்தான் சொல்லிக் காட்ட வேணும்''

''இண்டைக்குப் பகல்முழுவதும் ஷொப்பிங் செய்தியே, எவ்வளவு செலவழிச்சாய்? அது ஆற்றை வியர்வை.''

''விடுமுறைக்குப் போவதற்குவேண்டிய சாமான்கள் வாங்கவேண்டாமா? வில்சன் குடும்பத்தாரெல்லாம் புதன் கிழமை போயினம். நாங்களும் அவர்களோடு போகிறோம்.''

'இன்றைக்கு அவர்களோடைதான் ஷொப்பிங் செய் தாயோ?''

''ஓம்''

''வில்சனின் மூத்த பையன்களும் வருவாங்களோ?''

''தெரியாது.''

''உனக்குத் தெரியாமல் இருக்குமா? அவங்களும் வரு வாருங்கள். நீ வேணுமெண்டால் எப்படியும் அவங்களோடை



சுற்றித் திரி. பத்மினியை மட்டும் கவனமாய்ப் பார்த்துக் கொள்.''

''என்ன ஒரு மாதிரிப் பேசிறியள்?''

''இல்லை. பத்மினியைக் கவனமாய்ப் பார்த்துக் கொள் ளச் சொல்லுறன்.''

'என்ரை பிள்ளையைப் பார்க்க எனக்குத் தெரியாதா.',

'நீ வளர்க்கிற அழகு தெரியாதா? நீ நித்திரையாலை எழும்ப முந்தி செல்வி தானாகவே புறப்பட்டு ஸ்கூலுக்குப் போறாள்.''

''நான்தானே தன் கடமைகளைத் தானே செய்யப் பழக்கி வைச்சன். நீங்களா!''

''வாய் மட்டும்தான் ஒன்றிருக்கு. அது மட்டும் இல்லை என்றால் நாய் கொண்டு போயிடும்.''

'நீங்கதானே கட்டி வைச்சிருக்கிறியள்.''

அல்சேஷன் நாய் பின்தொடர அப்போது செல்விவந்து சேர்ந்தாள். பேச்சு வார்த்தை அத்துடன் நின்றது. செல்வி தந்தையின் மடியில் உட்கார்ந்தாள்.

''அப்பா நுவரெலியாவுக்குப் போகேக்கை பப்பியையும் கொண்டு போவோமா?''

உயர்ந்து வளர்ந்து கொழுத்துப் போயிருந்த அல்சே ஷன் நாயின் உச்சியைத் தடவிவிட்டபடியே செல்வி கேட்டாள்.

''இங்கே வீட்டைக் காக்கத்தானே நாய் வேண்டும். ஒட்டலில் பப்பியை வைத்திருப்பதற்கு விடுவாங்களா?',

''இங்கை ஆர் அதைப் பாக்கிறது; சாப்பாடு.''

''பியசேனாவிட்டைச் சொல்லுங்கோ, வாற இறைச் சியைக் காய்ச்சி பப்பிக்கு வைக்கச் சொல்லி. நானும் இங்கை நிற்பேன்தானே.''

"சரியப்பா?"

"பத்மினிக்கு என்ன நடந்தது. இப்ப முன்போல என்னோடு வந்து பேசுவதேயில்லை. ஒதுங்கித் திரிகிறாள். மெடிக்கல் கொலிஜ் ஆபத்தான இடம். அவளுக்குப் புத்தி சொல்லிக் கவனமாகப் பார்த்துக்கொள்."

இந்திராவைப் பார்த்துக் கண்டிப்பாகச் சொன்னார் நாகரத்தினம்.

இந்திரா பதில்கூறத் தொடங்குமுன் டெலிபோன் மணி யடித்தது. நாகரத்தினம் சென்று ரிசீவரை எடுத்துக் காதில் வைத்தார். அப்போது கீழேயுள்ள போனை எடுத்து "ஹலோ" என்று அழைக்கும் பத்மினியின் குரலும் கேட்டது.

## 12

இந்திரா, பத்மினி, செல்வி மூவரும் வேனிற்கால விடுமுறை கழிக்க டிரைவர் சில்வாவுடன் நுவரெலியா சென்று விட்டனர். நாகரத்தினம் கொழும்பில் நின்ற போதும் வீட்டில் தங்கியிருக்கும் நேரம் மிகக் குறை வாகவே இருந்தது. அவருக்குப் பூரண சுதந்திரம். இரவில் பன்னிரண்டு ஒரு மணி வரையில் வருவார். காலையில் தூக்கத்தால் எழுந்ததும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே புறப்பட்டு விடுவார்.

மேரி பியசேனா, பப்பி ஆகிய மூவரது ஆட்சியிலேயே வீடு இருந்தது. மேரி நாகரத்தினத்தின் நம்பிக்கைக்குரிய வள். அவர் என்ன அமர்க்களம் நடத்தினாலும் இந்திரா முதற்கொண்டு எவருக்குமே சொல்லமாட்டாள். பிய சேனா விபரம் ஒன்றும் அறியாத பையன் என்பது அவள் கணிப்பு.



அன்றிரவு டின்னருக்கு மற்றும் ஒருவரை அழைத்து வருவதாக நாகரத்தினம் மேரியிடம் சொல்லியிருந்தார். மேரியின் சுறுசுறுப்புப் பற்றியும் சமையல் திறமையைபற்றி யும் அந்த வீட்டிற்கு வருவோர் எல்லோரும் பேசிக் கொள்வதுண்டு. அவளாகவே மார்க்கெட்டுக்குச் சென்று பொருட்கள் யாவையும் வாங்கி வருவாள். மேலும் இரண்டு மூன்று வேலையாள் வைத்திருக்கத் தக்க வசதி அவட்டமுண்டு. வளர்ந்த வேறு எந்த வேலையாளையும் அங்கு வைத்திருப்பதை மேரி விரும்பமாட்டாள். கை உதவிக்கு பத்து வயதுக்குமேல் பதினாறு வயதுக்குள்ளாகவே ஒரு பையனை மட்டும் வைத்திருக்க அனுமதிப்பாள். பிய சேனா கடைசியாக மேரிக்கு கிடைத்த கையாள். அவன் மேரி சொல்லும் வேலைகளையெல்லாம் செய்து வந்தான்,

இந்திராவின் சோம்பலுக்கும் வெளி உலாவல்களுக்கும் வீட்டைச் சீராகப் பார்க்க மேரி கிடைத்தாள். அவளே வீட்டின் சர்வாதிகாரியாக மாறினாள்.

அன்றிரவு ஒன்பது மணியளவில் மாலினியை அழைத் துக் கொண்டு நாகரத்தினம் வீட்டிற்கு வந்தார். வந்ததும் சாப்பிட உட்கார்ந்போது மேரிக்கு மாலினியை அறிமுகப் படுத்தினார்.

"உன்னைப் பற்றி துரை ரொம்பச் சொன்னார்."

"சரியம்மா. என்ரை சமையலையும் சாப்பிட்டுப் பாருங்க."

நாகரத்தினம் சாப்பிடத் தொடங்குமுன் விஸ்கியையும் சோடாவையும் கொண்டு வந்து மேரி வைத்தாள்.

"சாப்பிட முன்னர் நான் இது அருந்துவது வழக்கம். நீங்களும் கொஞ்சமாய்..."

"இல்லை வேண்டாம்."

"அப்ப சூப் சாப்பிடுங்க."

மேரி பரிமாறினாள்.

சூப் அருந்தியதும் மேரியே உணவையும் பரிமாறினாள். இறைச்சிக் கறி, மீன் பொரியல் ஆகியவற்றைப் பாராட்டிக் கொண்டே மாலினி சாப்பிட்டாள்.

கடைசியாக புருட்சலட் பரிமாறப்பட்டது.

''இதைக்கூட நீயா செய்தாய்?''

''இல்லையம்மா, இது டின்னில் வருவது,''

''இத்தனை நல்ல வெரைட்டி டின்னிலை எப்படிக் கிடைச்சுது,''

''லோக்கலாக இத்தரத்திலே எங்கே கிடைக்கும். ஒஸ்ரேலியன் ஹைகமிசன் செக்கிரட்டரி ஒருவர் நல்ல பழக்கம். அவர் ஒரு டசின் டின் அனுப்பி வைச்சார் ''

நாகரத்தினம் பதில் கூறினார்.

''உங்க வீட்டைப் பார்த்தால் அமெரிக்க சினிமாப் படங்களிலிலை வரும் ஓர் அமெரிக்க வீட்டைப் பார்ப்பது போலை இருக்கிறது.''

''இந்திராவுக்கு ஒரே அமெரிக்க, பைத்தியம். அந்த மேசை யெல்லாம் அமெரிக்க, ஆங்கில மகஸீன்கள். வுமன் வுமன் அன்ஹோம், ரைம், லைப் எல்லாம் பார்க்கலாம்.''

''எல்லாம் ஒழுங்காக படிப்பாவா?''

''படிக்கிறதா? படம் பார்க்கிறது மட்டுந்தான். மற்றதெல்லாம் ஷோவுக்குத்தான். இவற்றையெல்லாம் வாங்கி வைப்பது பெரிய குடும்பங்களில் ஒரு பாஷனாகிவிட்டது'.

''இந்தப் போலி அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழியத்தான் வேணும். அமெரிக்க எண்ணெய் கொம்பனிகளை எடுத்தது போல அரசாங்கம் இந்தப் பத்திரிகைகளையும் நிறுத்தியிருக்கலாம்போல் தெரியுது''



''இந்த அரசாங்கம் நிறுத்தினாலும் நிறுத்திவிடலாம். இடதுசாரி கூட்டரசாங்கம் வந்தால் நிட்சயமாய் நிறுத்தி விடலாம்.''

''நாங்கள் நினைப்பதுபோல் எல்லாம் நடந்து விடுவதில்லை.''

''நீங்கள் சொன்னது போலை செய்திகள் வந்து விட்டன. நாட்டிலே எத்தனை பரபரப்பு என்பதை உங்கள் பத்திரிகைகளைப் பார்த்தாலேயே தெரியுமே. அரசியல்கட்சிகளெல்லாம் குழப்பமடைந்து கூட்டாட்சிக்குச் சார்பாகவும் எதிர்ப்பாகவும் பிரியத் தொடங்கிவிட்டன. இடதுசாரிகளே பிரியத் தொடங்கிவிட்டனர்.''

நாகரத்தினம் மனதில் மகிழ்வும் பயமும் நிழலாடின.

''பரபரப்பெல்லாம் பணக்காரரிடைதானே. அந்தப் பரபரப்பை மக்களின் பரபரப்பாகக் காட்டுவதுதானே பத்திரிகைத் தந்திரம். இதெல்லாம் உங்களுக்கு நாங்கள் சொல்லப்படாது.''

வேடிக்கையாகச் சிரித்துக் கொண்டே மாலினி சொன்னாள்.

''எனக்குக் கூடவா சொல்ல மாட்டீர்கள். எப்படியானாலும் பத்திரிகைகளெல்லாம் இவ்வேளை ஒன்று சேர்ந்து நிற்பது நன்மைக்குதான். இன்றைய தலைப்புச் செய்திகளும் தலையங்கமும்கூட அம்மாவை நிட்சயம் அசைத்தேவிடும். மதம், சுதந்திரம், பண்பாடு, கலாச்சாரம் எல்லாம் அழியப்போகிறது என்ற பீதி நாட்டிலேயே ஏற்படத் தொடங்கிவிட்டது. பத்திரிகைகளைப் பாராட்டாமலிருக்க முடியாது.''

''இந்தப் பீதி யெல்லாம் பத்திரிகை நிலையத்தில்தான் நடமாடுகிறது.

சாப்பாடு முடிந்து இருவரும் எழுந்தனர்.

# 13

மீண்டும் ஒரு தடவை வீட்டைப் பார்க்க விரும்புவதாக மாலினி தெரிவித்தாள். மேரி கீழேயுள்ளவற்றை யெல்லாம் ஒவ்வொன்றாகக் காட்டினாள்.

ரேடியோகிராம், வாஷிங் மெஷின், இலெடிக்பொலிஷர் பியானோ, புதிய நிக்கி ஒட்டாமற்றிக் தையல் மெஷின். இலெக்டிக் ஒவன், இலெக்டிக் குக்கர் எல்லாமே அண்மையில் வாங்கியவையாக இருத்தன. அவற்றைப் பார்த்துக் கெபண்டே மாலினி நாகரத்தினத்தைப் பின் தொடர்ந்து மேலே ஏறினாள்.

''எல்லாமே லேற்றஸ் மொடலாக இருக்கிறது; வீடு கூட.''

''லேற்றஸ் மொடல் கார் ஒன்றும் வரவழைக்க முடியவில்லை என்று இந்திராவுக்கு ஒரே குறை. அதுக்காக இந்த அரசாங்கம் ஒழிந்து யு. என்.பி. வரவேணும் என்று சொல்லுவாள். யு.என்.பி வந்தால் எல்லாப் பொருட்களும் இறக்குமதி செய்யலாமாம்.''

''ரையர்கூட இறக்குமதி செய்யலாம், உங்கள் பாக்டரியையே மூடிவிடலாம்.''

''அதையெல்லாம் உணரத்தக்க அறிவு அவளுக்குக் கிடையாது.''

''துரை கோப்பி அனுப்பிறதா?''

மேரி மேலே பார்த்தபடி குரல் கொடுத்தாள்.

''வேண்டாம்.''

நாகரத்தினம் முன்புற மாடியில் மங்கல் ஒளியில் மாலினியின் கரத்தைப் பிடித்தபடி நின்றார்.



''நகரத்தவர்கள் வானத்தை பார்ப்பதில்லை, இயற்கை அழகை மறந்துவிடுகிறார்கள் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இந்த லையிட்டையும் அணைக்கிறேன் வானத்தைப் பாருங்கள்.''

மங்கிய மின்விளக்கும் அணைந்தது. இருவரும் வானத்தைப் பார்த்தனர்! பிறை நிலாவின் மெல்லிய கதிர் வீச்சும் கோடை வானத்தின் நட்சத்திரப் பூ அலங்காரமும் மென்மையான கலை உணர்வுகளைத் தூண்டின. மதுவின் மெல்லிய மயக்கமும் மாலினியின் எடுப்பான உருவமும் இயற்கையின் அழகும் அவரைச் சொர்க்க லோகத்தில் மிதப்பதாக உணர்த்தின.

''அந்தப் பிறை நிலாவைப் பார்த்தால் உங்க நெற்றியைப் பார்ப்பது போலத் தெரியுது. உங்க நாடியும், மூக்கும்...''

அவளின் நாடியையும் மூக்கையும் கிள்ளினார்.

''நீங்கள் திறமை வாய்ந்த பிஸ்னெஸ்மன் என்றுதான் இதுவரை நாளும் எண்ணியிருந்தன். சிலவேளை கவிஞராகக்கூட மாறிவிடுவீர்கள் என்பதை இன்றுதான் கண்டேன்.'

''மாலினி, நீங்கள்தான் என்னைக் கவிஞனாகக்கூட ஆக்கிவாறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது.''

''அத்தனை சக்தி என்னிடம் இருக்கா?''

''டாலிங், என் இதயம், சிந்தனை எல்லாமே இப்ப உங்கள் கையில்தான் இருக்கு இந்த வீடு வாசல் பொருட்கள் என் உழைப்பு எல்லாவற்றிலுமே உங்களுக்கும் பங்கிருக்கென்று நினைத்துக் கொள்ளுங்கோ.''

மாலினியின் இடையில் வலது கரத்தைப் பதித்தபடியே உணர்ச்சி மயக்கத்தில் வார்த்தைகளைச் சொரிந்தார்.

''நீங்க ரொம்ப சென்ரிமெண்டலாய் பேசுறீங்கள்.''

''அதோடு சின்சியராய்தான் சொல்லுறன், மாலினீ... டாலிங்.''

அடித்தொண்டையிலிருந்து வாஞ்சை வார்த்தைகள் வெளிவர அவளை அணைத்தார்.

அப்போது டெலிபோன் மணி அடித்தது. உணர்ச்சி வெறியிலிருந்து விடுபட்டு சோர்வோடு சென்று டெலி போனை எடுத்தார்

'இந்திராவா. இன்றைக்கு ஒரே அலைச்சல். வேளைக்கே வந்து தூங்கிக்கொண்டிருந்தன்.''

''நாங்கள் உயிரோடை யிருக்கிறமா எண்டு டெலிபோன் பண்ணியாதல் பார்க்கிறேல்லையா.''

''இப்பதான் கேட்டன். லையின் அவுற்றவ் ஓடர் எண்டாங்கள்... காலையிலை டெலிபோன் பண்ணுவம் என்று விட்டன்.''

''எப்ப வருவியன் என்று செல்வியும் பத்மினியும் கேட்கினம்;''

''இந்த வீக் என்ட் கட்டாயம் வருவன். நாலு நாளாதல் தங்கத் தக்கதாகவே வருவன்,'.

''செல்வி பேசப் போறாளாம்.''

''அப்பா கெதியாய் வாருங்கோ.''

''சனிக்கிழமை கட்டாயம் வருவன்..'

''குட் நைட்,.'

''குட்நைட்.''

நாகரத்தினம் அறைக்கு வெளியே வந்தார். மாலினி சிந்தனையில் ஆழ்ந்துபோய் வானத்தைப் பார்த்தபடியே நின்றாள்.

''செல்வி போன் பண்ணினாள்.''



நேரமாகுது. றூமுக்குப் போகவேணும்.''

''அத்தனை அவசரமா?''

'ஓம்''

''பதில் சொல்லியபடியே கீழே இறங்கும் படிக்கட்டை நோக்கி நடந்தாள். வேறு வழியின்றி நாகரத்தினமும் பின் தொடர்ந்தார்.

'செல்வி பவன'த்தைவிட்டுக் கார் தெருவில் இறங்கியது.

''நாலு நாள் உங்களைவிட்டுப் பிரியிறதென்பது ரொம்பக் கஷ்டமாயிருக்கு.''

''உப்பிடித்தான் சொல்லுவியள். அங்கை போனதும் எங்கே நினைக்கப் போறியள்.''

' மாலினி, அப்பிடியெல்லாம் சொல்லாதையுங்க.''

அவள் மௌனமாயிருந்தாள்,

''என் நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவு அழியாது''

''உங்கள் ஆதரவைப் பெற முடிந்ததில் நானும் அதிர்ஷ்டசாலிதான் ''

மாலினி கூறினாள்.

''அறிவும் அழகும் கொண்ட உங்களைப் போன்ற பெண்ணின் இதயத்தைப் பெற முடிந்ததில் நான்தான் அதிர்ஷ்டசாலி. பணம் தவிர என்னிடந்தான் என்ன சிறப்பிருக்கோ. நீங்க...''

''ஏன் அப்பிடி இன்பீரியராய் நினைக்கிறீங்க. அப்படியே மெருகேறிய வாலிபர் போலை யிருக்கிறீங்க, உங்க சுறு சுறுப்பும் பர்சனாலிட்டியும்...''

பெருமை தாங்கமுடியாது அவளது கரத்தைப் பற்றினார்!

''நீங்கள் லேட்டாய் றூமுக்குத் திரும்புவதைப் பற்றி கீழ் வீட்டார் ஒன்றும் சொல்ல மாட்டார்களா?''

''ஒன்றுமே சொல்லமாட்டார்கள். அவர்களுக்கு எது பற்றியும் கவலையில்லை. ஐந்தாம் திகதியின் முன்னர் வாடகை கொடுத்தால் மட்டும் சரி.''

''உந்த இடம் பிடிக்காவிட்டால் நான் வேறு இடம் எடுத்துத் தருவேன்,''

'இப்போது அவசியமில்லை.''

''உங்க றூமுக்கு நான் வரலாமா''

'எப்பொழும் வரலாம்''

நாகரத்தினம் பிரேக்கை அழுத்னார், ''குட் நைட்'' சொல்லியபடியே அவள் இறங்கிக்கொண்டாள்.

## 14

'செல்வி பவனம்' இரும்புப்படலை சாத்தப்பட்டிருந்தது. அதிலே ''கடிநாய் கவனம் என்ற பலகை தொங்கியது.'' வீடு அமைதியாக உறங்கிக்கிடந்தது. யன்னல்களெல்லாம் அடைக்கப்பட்டிருந்தன மேரிக்குக் காய்ச்சல். தன் அறையிலே சுருண்டு போய் படுத்திருந்தாள்.

பியசேனா வீட்டுக்கு எஜமானனானான். மேரிக்கு துணையாக அந்த வீட்டிற்கு வந்தபோது அவன் மெலிந்து வாடிப் போயிருந்தான். எட்டு மாதத்தில் உருண்டு திரண்ட கவர்ச்சியான பையனாகிவிட்டான். அவனது உடலின் செந்நிறம் பொலிவு பெற்றிருந்தது. கூர்மையான நாடியும் செவ்விதழ்களும் குழந்தைத் தன்மையைப் பிரதி பலித்தன.

அங்கு வருமுன்னர் அவன் மருதானையிலுள்ள ஒரு ஓட்டலில் மேசை துடைத்து, பாத்திரங்கள் கழுவி வந்தான். அங்கே வேலை செய்த நாதன், பாலன் என்ற மற்றிரு பையன்களின் தொல்லை தாங்கமுடியாமல் அவன் தன் ஒரே ஒரு மாற்று உடையையும் எடாமல் கடையை விட்டு ஓடி



வந்தான். பொரளை மார்க்கெட்டில் அநாதையான அவனைக் கண்டு இரங்கி மேரி அழைத்து வந்தாள். ஓட்டலில் காலை ஐந்துமணி தொடக்கம் இரவு வரை வேலை செய்து நசிந்த பியசேனாவிற்கு மேரியிட்ட வேலைகள் விளையாட்டாக இருந்தன; வீட்டிலே நாய்க்கும் வைத்து மிஞ்சும் சாப்பாடே நல்ல ருசியான சத்துள்ள உணவாக இருந்தது. போதிய ஓய்வும் நல்ல உணவும் அவனது உடல்கட்டை எட்டு மாதத்தில் பெரிதும் மாற்றி விட்டன.

பியசேனா அந்த வீட்டில் வேலையாளாக இருப்பதை நாதனும் பாலனும் அறிந்துவிட்டார்கள். லீவு நேரங்களில் கேட்டடியில் நின்று அழைப்பார்கள். ஆரம்பத்தில் அவர்களோடு பேசவே தயங்கினான். தான் பெரியவனாகிவிட்ட வீம்பைக் காட்டிப் புகழ ஆவலால் துடித்த அவன் பின்னர் துணிச்சலோடு மேரி உள்ளே வேலையாக இருக்கும் நேரமாகக் கேட்டடியில் வந்து அவர்களுடன் பேசினான்.

'நீ ஏன் சொல்லாமல் ஓடினாய். நாங்கள் எங்கையெல்லாம் உன்னைத் தேடி அலைஞ்சம். இனிமேல் அப்பிடியெல்லாம் தொல்லைப்படுத்த மாட்டம்; எப்பிடி உந்த வீடு ''

இவ்வாறு ஆரம்பித்து வீட்டில் உள்ளவர்கள் பற்றிய விபரங்களையெல்லாம் அறிந்து கொண்டனர்.

'அடுத்த ஞாயிற்றுக்கிழமை இரண்டு மணிக்கு ஒருத்தரும் இருக்க மாட்டினம். மேரியும் கடைக்குப் போய் விடுவாள். வந்தால் வீடெல்லாம் காட்டுவன்.''

பியசேனா சொல்லியிருந்தான்.

'சாப்பாடும் தருவியா?''

''சரி''

நாதன் மட்டும் அன்று சரியாக இரண்டு மணிக்கு வந்து சேர்ந்தான். பாலனுக்கு லீவு கிடைக்கவில்லை எனச் சொன்னான்.

மேரி காய்ச்சலால் ஏற்பட்ட சோர்வில் தூங்கிக் கொண்டிருந்தாள். பியசேனா நாதனை அழைத்துச் சென்றான். அதற்குள் நுழைய நாதனின் கால்கள் கூசின.

எக்ஸிபிஷனில் பொருட்களைக் காட்டி விளக்குவதைப் போல பியசேனா ஒவ்வொரு பொருளையும் சுட்டிக் காட்டித் தனக்குத் தெரிந்தளவில் விளக்கம் கூறினான். பிரிட்ஜ் ஒன்றைத் தவிர மற்றப் பொருட்களெல்லாம் நாதனுக்கு ஆச்சரியமாகவே யிருந்தது. குசினிக்குள் அழைத்துச் சென்று மின்சார அடுப்பில் சமையல் செய்யும் முறையெல்லாவற்றையும் காட்டினான்.

''இந்தா, இந்த இறைச்சித் துண்டுகளை உனக்காகத் தான் பொரிச்சன், சாப்பிடு.''

''எப்படியடா இறைச்சி கிடைச்சுது''

''இது நாய்க்காக ஒவ்வொரு நாளும் வாறது, அதை எடுத்துப் பொரிச்சன்.''

''நாய்க்கென்ன செய்யப்போகிறாய்?''

''மிஞ்சிற துண்டைக் குடுப்பம். எலும்புத் துண்டுகளையும் போட்டன். ஒரு நாளைக்குப் பட்டினி கிடந்தால் என்ன செத்துப்போமா? '

''நீ இப்ப பீடி குடிக்கிறேல்லையா?''

''சிகரெட்தான் குடிப்பன்.''

''வாங்குவியா? காசெங்காலை.''

''துரையின்ரை பக்கெட்களுக்கை ஒன்று ரண்டைக் களவெடுப்பன். காசுக்கும் பஞ்சமில்லை. சில்லரைக் காசுகள் அகப்பட்ட இடமெல்லாம் கிடக்கும். வீடு கூட்டேக்கை எடுத்துப் போடுவன்.''

''அதையெல்லாம் என்ன செய்கிறாய்?''

''எல்லாம் சேர்த்து வைச்சிருக்கிறன்.''



''உனக்கு என்ன சம்பளம் பேசியிருக்கு.'

''இன்னும் ஒண்டும் பேசேல்லை, வீட்டைவிட்டுப் போகேக்கை எல்லாத்தையும் ஒருமிக்க வாங்கலாம்.''

''அப்பிடி நம்பி ஏமாந்து போகாதை. ஒண்டும் தராமலே கலைச்சுச் போடுவாங்கள். இவங்களையெல்லாம் நம்பப்படாது. நீ வேறை களவெடுக்கிறாய். பிடிபட்டால் பொலீசிலைதான் குடுப்பாங்கள்.'.

''அம்மா துரை ரொம்ப நல்லவங்க. அப்பிடியெல்லாம் செய்யமாட்டாங்க. மேரி இருக்கிறாளே. அவளுக்கு என்னிலை நல்ல பிடிப்பு.''

''அவள்தானே அந்த வேலைக்காரி. குள்ளமாய், சிவப்பாய் ஓடியாடித் திரிவாளே.''

''அவள்தான், என்னைத் தன்ரை பிள்ளை மாதிரிப் பார்ப்பாள். அம்மெயின்ரை அடிதாங்காமல் வீட்டைவிட்டு ஓடிவந்த எனக்கு புது அம்மே.''

''கட்டிப் பிடிச்சுக் கிஸ் எல்லாம் தாறாளா அம்மே. அந்த ரூமிலைதானே தூங்கிறாய்.''

''...............''

''ஏண்டா சொல்லன்ரா உண்மையை''

''உனக்கு எப்பவும் ஊத்தையாய்த்தான் பேசத் தெரியும்.''

''சரி சரி வாடா. மேல் வீட்டைக் காட்டு, எனக்கு ஒரு சிகரெட் தாவன்ரா.''

''மேலை வா துரையின்ரை றூமிலை எடுத்துத் தாறன்..'

# 15

பியசேனாவைத் தொடர்ந்து பரிசுத்தமான ஆலயத்தில் நுழைவது போல அடிமேலடி வைத்து சுற்றுமுற்றும் பார்த்தபடி நாதனும் ஏறினான். முகம் தெரியத் தக்கதாக பொலிஷ் செய்யப்பட்ட நிலமும் வர்ண ஜாலமான திரைச்சீலைகளும் விசாலமான 'ரப்' வைத்த பாத்றூம்களும் அவனுக்குப் புதுமையாகத் தெரிந்தன. ஒவ்வொரு அறையாகத் திறந்து பெருமையோடு பியசேனா காட்டினான். மடிப்புக் குலையாத வெள்ளை சீட்டுகள் விரித்த ஸ்பிரிங் பெட்களை விரல்களால் நாதன் அழுத்திப் பார்த்தான். பத்மினி, செல்வியின் அறைகளைக் காட்டிவிட்டு நாகரத்தினத்தின் அறையை திறந்து காட்டினான். கட்டிலின் தலைமாட்டில் உள்ள மேசையில் கிடந்த சிகரெட் பாக்கெட்டை ஓடிச் சென்று எடுத்தாள்.

''டே ஒரு சிகரெட்டை எடுத்துக்கொண்டு விடடா? துரை ரண்டு நாளில் வந்ததும் சில வேளை நினைவு வந்தால் நான் திருடினதெண்டு நினைப்பார்.''

''போடா போ. அதிலை தொங்கிற சேட்டிலை ஒன்றும் ஒரு சாரமும் பார்த்து எடுத்துத் தாடா. இந்தக் கடலுக்சை இதெல்லாம் எங்கை தெரியப்போகுது.''

''உப்பிடிக்கேட்பாய் என்று தெரிஞ்சிருந்தால் உன்னை உள்ளுக்கை கூட்டிக்கொண்டே வந்திருக்கமாட்டன்,''

''அப்ப இந்த வீட்டிலை ஒரு வேலை எடுத்துத் தாவன்ரா''

''பெரியம்மாவுக்கும் விருப்பமில்லை. பெரிய பெட்டை, பெடியங்களை வைத்திருந்தால் பெரிய தொல்லை எண்டு பெரியம்மா வாறவங்களுக்குச் சொல்லுவா. மேரிக்கும் வேறை ஒருத்தரையும் வைத்திருக்க விருப்பமில்லை.''

''ஏனாம்.''



''அதுகள் அடுத்த வீடுகளையும் தெருக்களில் போறவங்களையும் நாள் முழுவதும் பார்த்துக்கொண்டேயிருக்குங்களாம் வீட்டிலே வேலையே ஒழுங்காய் செய்யாதுகளாம்.''

''மேரி ஏன் உன்னைப்போலை ஆட்களை வைத்திருக்கிறாள் எண்டு எனக்குத்தெரியும்.''

''ஏனெண்டு பொல்லன்ரா?''

''நீ ஒன்றும் தெரியாத பச்சைக் குழந்தை''

அவனது கபடச் சிரிப்பு ஒன்றும் பியசேனாவுக்குப் புரியவில்லை. இந்திராவின் அறையில் நுழைவதற்குரிய பக்கக் கதவைத் திறந்தான்.

''இதுதான் பெரியம்மாவின் றூம்''

''எடே இது ஒண்டு வேறையாய் கிடக்கா. நான் ரண்டுபேரும் ஒரு றூமிலை இருப்பாங்கள் எண்டெல்லோ நினைச்சேன். இங்கேயா பெரிய கட்டில் போட்டிருக்கிறாங்கள்''

ஆச்சரியத்தோடு சுற்றிவரப் பார்த்தான். யாவற்றிலும் அந்த அறையே விசாலமாகவும் அழகாகவும் இருந்தது. தமிழ் சினிமாப் படங்களில் வரும் பணக்கார காதலியின் அறைபோல அவனுக்குத் தோன்றியது. சுவர் ஓரமாக தொங்கிக் கொண்டிருந்த உடைகளையெல்லாம் கையால் தொட்டு கன்னத்தில் வருடிப் பார்த்தான். அவனுள்ளே ஒரு நெருப்பு சுவாலை வீசத்தொடங்கியது டிரெஸிங் ரேபிளின் முன் நின்று முக்கோணமாக வளைந்திருந்த கண்ணாடியில் தன் உருவத்தையும் பியசேனாவின் நிழலையும் பார்த்தான். கண்ணாடியின் முன்னே வரிசையாக அடுக்கியிருந்த ஆடம்பர அழகு சாதனங்களையெல்லாம் வியப்போடு பார்த்தான். பியசேனா ஒவ்வொன்றையும் எடுத்துப் பெயர்களைச் சொல்லி எதற்கு எதையெதை எப்படி உபயோகப்படுத்துவது என்றெல்லாம் விபரமாகக் கேட்டான்.

லக்டோ கலமையின், ஓடிக்கொலன், யாட்லி பவுடர் பூஷ்வா பாரிஸ் சென்ற், லிப்ஸ்ரிக், வனிஸ்ஷிங் கிரீம் ஹெயர் ஓயில், ஐ ரெக்ஸ், கியூரெக்ஸ்...''

அடுக்கிக் கொண்டே போனான்.

உனக்கெப்படி இந்தப் பெயரெல்லாம் தெரிஞ்சது ''

' குஞ்சம்மா இருக்கிறா. இந்தப்படத்திலை இருக்கிறா. அவ சொல்லித் தந்தது.''

அதே ட்றெஸிங் ரேபிளின் ஸ்ராண்டில் போடப் பட்டிருந்த படத்தைக் காட்டினான்;

''நல்ல குட்டிடா, உனக்கு அளவாயிருக்கும்.''

''ஊத்தைப் பேச்செல்லாம் இந்த வீட்டிலே பேசாதை''

''என்னைப் பாரடா. நானே ஊத்தைதானே''

பவுடரில் கொஞ்சத்தைக் கொட்டி முகத்திலே பூசி னான்.

''இந்தாடா உனக்கும் பூசி விடுறன்''

''எனக்கு வேண்டாம்''

ஓடிக்கோலனைக் கையில் தெளித்து, கழுத்திலே பூசினான்.

அவற்றின் சுகந்த மணம் அவனது உணர்ச்சிகளைக் கிறுங்கச் செய்தது. சென்டிலும் எடுத்து சாரத்தின் தலைப் பில் பூசினான்.

''போதும் வாடா போவம்''

''கொஞ்சம் பொறடா.''

கட்டிலருகே போனான், அதிலே உட்கார்ந்தான். கால் களை நீட்டிப் படுத்துக்கொண்டே மேலும்கீழுமாக அசையத் தக்கதாக முதுகால் அழுத்தி ஸ்பிரிங்கை அசைத்தான்.



''நீ ராத்திரிலலை இதுகளிலை படுக்கிறேல்லையாடா''

''மேரி விடமாட்டாள்.''

''இப்ப வாடா கொஞ்ச நேரமாவது இதிலே உருண்டு பார்ப்பம்,''

அவனது கையைப் பிடித்து அழுத்தி மெத்தைமேல் இழுத்து உருட்டினான். அவன் ''விடடா விடடா'' என்று சத்தமிட்டபடி தன் பலங்கொண்ட மட்டும் திமிறியபடி மெத்தையின் மறுபக்கம் வரை உருண்டான். விடுபட முடி யாதபோது அவனது கையைக் கடித்தான்.

''ஆ, ஊ நாயே''

நாதன் கையை உதறியபடி எழுந்து நின்றான்.

''உப்பிடித் தெரிஞ்சிருந்தா உன்னை உள்ளையே விட் டிருக்கமாட்டான் ''

விம்மியபடி சொன்னான். ஆத்திரமும் அழுகையும் அவ னுக்கு வந்தது.

''இப்பென்னடா நடந்திட்டுது. பச்சைக் குழந்தை''

கடிபட்ட இடத்தைக் கையால் அழுத்தி வருடியபடியே சொன்னான்.

' மெத்தையெல்லாம் ஊத்தையாய்ப் போச்சு ''

''அதுதான் மாத்திவிடன். இங்கை வேறை பெட்சீட் இல்லையா என்ன.''

''நீ இப்ப வெளியை போ''—பியசேனா கத்தினான்.

இருவரும் கீழே இறங்கி வந்தனர்.

''இதுக்கெல்லாம் கோபிக்காதையெடா. சும்மா விளை யாட்டாய் எடுடா''

''சரி நீ போ, இனிமேலை இங்கை வராதை''

''உப்பிடியெல்லாம் பேசினால் இந்தவீட்டிலையிருந்தே உன்னைக் கலைச்சிடுவேன். உனக்கின்னும் பதினாலு வயதாகேல்லை. எந்த வீட்டிலையும் வேலை செய்யமுடியாது. லேபர் கந்தோருக்கு எழுதிப்போடுவன்''

அதைக் கேட்டதும் பியசேனா பயந்துவிட்டான்.

''அப்பிடியெல்லாம் செய்து போடாதை''

''அப்ப என்னோடை உறவு போடு''

''சரி உறவுதான்''

''ஏதாவது குடிக்கக்குடுடா. களையாய் இருக்கு. இந்த சென்ட் தெருவெல்லாம் மணக்கப் போகுது. எங்கையெடா பாத்நூம்''

''அந்தப் பக்கம் போ. உது கழுவினாலும் போகாது''

நாதன் வந்ததும் குளிர்ந்த கொக்கோ கோலாவை ஊற்றிக் கொடுத்தான்.

''என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்டசாலிதாண்டா''

மன எரிவோடு பாராட்டிக் கொண்டே அவன் வெளியேறினான்.

மேரியின் அறையுள் நுழைந்தபோது அவள் காய்ச்சலால் அனுங்கிக்கொண்டே கிடந்தாள்.

## 16

நாகரத்தினம் வந்துவிட்டாரா என்பதை அறிவதற்காக அன்று மாலையில் மாலினி அவரின் வீட்டுக்கு டெலிபோன் செய்தாள். பியசேனாவே பேசினான்.

''துரை வரேல்லை நோனா''

''மேரி எங்கை''



''காய்ச்சலாப் படுத்திருக்கிறா''

மூன்று நாட்களாய் காய்ச்சல் எனவும் டிஸ்பிரின் கொடுப்பதாகவும் சொன்னான்.

மாலையிலேயே மேரியைப் பார்க்க மாலினி வந்தாள். நெற்றியில் தொட்டுப் பார்த்து நோய்பற்றி யாவும் விசாரித்தாள். வைட்டமின் புட்டிகள், பிற கை மருந்துகள் இருந்த அலுமாரித்தட்டை பியசேனா திறந்து காட்டினான். அவற்றில் சிலவற்றை எடுத்து சாப்பிடவேண்டிய விபரங்களை மேரியிடமும் பியசேனாவிடமும் சொன்னாள். ஓடிக்கோலோனை ஐஸ்வாட்டரில் விட்டு துணியில் தோய்த்து நெற்றியில் அடிக்கடி வைக்கும்படி சொல்லித் தானே யாவையும் வரவழைத்து உடனேயே செய்வித்தாள். குளுக்கோஸ், ஹார்லிக்ஸ், பிளேயின் டீ மட்டும் கொடுக்கும்படி சொன்னாள்.

''புளூதான். அலையாமல் படுத்திருந்தால் இரண்டு நாளில் சுகமாகிவிடும்''

மாலினி ஆறுதல் சொன்னாள். அவளின் அன்பும் ஆதரவான வார்த்தைகளும் காய்ச்சலினால் சோர்ந்து போயிருந்த மேரியின் கண்களைத் துளிர்க்கச் செய்தது. நாய்போல உழைத்தபோதும் இத்தனை பரிவை அவள் எந்த நாளும் அந்த வீட்டில் கண்டதில்லை.

''நான் வந்ததெண்டு அம்மாவிட்டைச் சொல்லிப் போடாதை''

விடைபெறும்போது மாலினி சொன்னாள்,

''அப்பிடித் தெரியாதா நோனா. நீங்க வந்து பார்த்ததுக்கு ரொம்ப நன்றி. நான் ஒருக்காலும் மறக்க மாட்டன்''

அவளின் வார்த்தைகளில் நன்றி கனிந்தது.

மாலினி ஹோலைத்தாண்டி வாயிலில் வரும்போது பப்பி ஓடி வந்து வாலை ஆட்டிக்கொண்டே அவள்மேல் பாய்ந்தது. அவள் திடுக்கிட்டுப் பயந்து சத்தமிட்டாள்.

''அது கடிக்காது நோனா.''

பியசேனா ஓடிவந்து பிடித்துக் கொண்டான்.

கேட்டைத் திறந்து தெருவில் இறங்கியபோது வேக மாக ஓடிய கார் ஒன்றின் பின்புறம் இருந்தவர்கள் அவளைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றனர். பொழுது கருகியதால் அவளால் எவரையும் இனங் கண்டு கொள்ள முடியவில்லை.

பஸ் நிலையத்தை நோக்கி நடந்தபோதும் பப்பியின் பாய்ச்சலால் ஏற்பட்ட பயத்தை அவளால் மறக்க முடிய வில்லை. நெஞ்சு பதறிக் கொண்டேயிருந்தது. அது வாய் வைத்திருந்தால்...? பெரியாசுபத்திரிக்குச் செல்லும்போ தெல்லாம் நாய் கடிக்காக வயிற்றில் ஊசிபோட்டுக் கொள் வதற்கு கியூவில் நிற்பவர்களைப் பார்த்திருக்கிறாள். அக் காட்சியே அவள் நினைவில் முதலில் தோன்றியது. குழந் தைப் பிள்ளைகள் கத்துவதையும் பெரிய பெண்களே அனுங் குவதையும் சேட்டிருந்தாள். இருபது ஊசியா! அப்பப்பா! நல்லவேளை தப்பிப் பிழைத்தேன்.

அடுத்துப் பொன்னையாவின் நினைவுதான் தோன்றி யது. நாய் மேல் அவளுக்கும் வெறுப்பை ஏற்படுத்தியவன் அவனே தான். எவ்விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் தர்க்க ரீதியாக வாதிடுவதில் அவன் வல்லவன். வேடிக்கை யாகவும் நளினமாகவும் சொல்வதிலும் திறமைசாலி. இக் காலத்தில் மிருகக் காட்சிச் சாலை தவிர எங்குமே நாய் இருக்கப்படாது என்று சொல்லுவான். அவனோடு நாய் பற்றி வாதிட்டது அப்போது அவள் நினைவில் வந்தது

''நாய் உங்களுக்கு என்ன தீங்கு செய்தது?''

ஒரு தடவை அவள் கேட்டாள்.



''எனக்கல்ல. உலக வளர்ச்சிக்கே தீங்கு செய்யுது. அடிமைத்தனத்தின் சின்னமே நாய்தான். வாலைமட்டும் ஆட்டி ஒரு வேலையும் செய்யாது வளர்ப்பவர்களை ஏமாற்றி வயிற்றை நிரப்புகிறது. எசமான் உதைத்தாலும் காலை நக்கும் அடிமைத்தனம். அடித்தாலும் வீட்டைவிட்டு வெளி யேறி சுதந்திரமாகப் பிழைக்கத் தெரியாத மிருகம். இதைத் தான் நாங்கள் நாயிடம் கற்று வெள்ளைக்காரன்ரை காலை நக்கிக்கொண்டிருந்தம். இன்றும் வெள்ளைக்காரன்ரை ஆட்சிதான் வரவேண்டும் என்று எத்தனை பேர் ஆசைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்துக்கும் நாம் அடிமையாய் இன்று இருப்பதும் இந்த நாயை வளர்த்துத்தான்.''

''நாய் வீட்டைக் காக்கும்''

அவள் சிறு பெண்போலச் சொன்னாள்.

''இந்தப் பொய்யைத்தான் இன்றும் பாலர்களுக்கே சொல்லிக் கொடுத்து ஏமாற்றுகிறோம். வீட்டைக்காக்க இன்று நாயேன். பணத்தைப் போட்டு வைக்க பாங்கு இருக் கிறது, அயன்சேவ், இரும்புப் பெட்டிகள் பூட்டுகள், சாவி கள் எல்லாமிருக்கின்றன. நாயா கறுவாக்காட்டுப் பணத்தை யெல்லாம் காப்பாற்றுகிறது''

''நாய் நன்றியுள்ள மிருகம்''

''ஒரு துண்டு இறைச்சிபோட்டால் எதிரிக்கும் நன்றி யுள்ளதாய் இருக்கும். களவு எடுக்கப் போறவன் நாயுள்ள வீடென்றால் இரண்டு நாளைக்கு இறைச்சியைப் போட்டு விட்டே போவான். மறுநாள் வாலை ஆட்டி வீட்டையே காட்டிக்கொடுத்து விடும். எதிரியை இனங்கண்டு கொள்ள முடியாத அடிமைத் தொழிலாளியைப் போன்றதுதான் நாய். மற்றவன் நக்கினால் பெருமைப்படும் முதலாளிக் குணம் மனிதரிடம் புகுந்துவிடுகிறது. அந்தக் குறைபாட்டை வைத்தே நாய் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தன் இனத்தையே வெறுக்கும் ஒற்றுமையற்ற ஒரே இனம் நாய்

தான். கூட்டாக வாழத் தெரியாத மிருகம். பெரிய குடும்பங்களிலே நாய் வளர்ப்பதற்காக மாதம் ஐம்பது, நூறு ரூபா வரை செலவு செய்கிறார்கள். வேலைக்காரருக்குத்தானும் இத்தனை மதிப்பில்லை. காரிலே உலாவுதற்கு அழைத்துச் செல்கிறார்கள். கட்டி அணைக்கிறார்கள். அவற்றுக்கு வைத்தியம் செய்யஎன்றே தனி டாக்டர்கள் இருக்கிறார்கள். இந்த நாட்டில் நாய்கள் உண்ணும் உணவும் இறைச்சியும் எத்தனையோ ஏழைத் தொழிலாளரது வயிற்றை நிரப்ப முடியும். பெண்கள்கூட எம் நாட்டில் நாயிடமிருந்துதான் அடிமைத் தனத்தைக் கற்று வைத்திருக்கிறார்கள்''

''என்னையும் சேர்த்தா சொல்லுகிறீர்கள்''

''என் பின்னே ஏன் சுற்றிக் கொண்டே திரிகிறாய்'

கோபமேற்பட்டபோதும், என்ன விஷயத்தை எடுத்தாலும் புதுமையான கருத்துகளைச் சொல்லவல்ல அவனது திறமையை எண்ணி மகிழ்ந்தாள். சில நிமிடங்களே மனம் மகிழ்ந்தது. அவனால் ஏற்பட்ட ஏமாற்றம்; அவனது அசட்டையான வார்த்தைகள் மீண்டும் இதயத்தில் இரத்தத்தைக் கொட்டியது. நெஞ்சத்தில் பாரமேறியது. கண்கள் உடைந்து விடவல்ல நிலைக்குத் துக்கம் பீறிட்டது.

## 17

மாலினி பஸ் நிலையத்திற்கு வந்து விட்டாள் பஸ்ஸில் ஏறியபோதும் சிந்தனை வலுத்துக்கொண்டே இருந்தது. அவன் நினைவை இதயத்திலிருந்து எடுத்துவிட எவ்வளவுக் கெவ்வளவு முயன்றாளோ அவ்வளவிற்கு நினைவலைகள் நெஞ்சோடு மோதிக் கொண்டேயிருந்தன.

நான் எத்தனை முட்டாள். இந்த இரும்பு மனிதனோடு போய் மோதிக்கொண்டேன். என் ஒழுக்க நினைவுகள் கட்டுப்பாடுகள் முழுவதையும் சிதறடித்து விட்டானே. இந்த



மனப் புண்ணை ஆற்றவா நாகரத்தினத்தோடு சுற்றுகிறேன் அல்லது அவருக்குப் பாடம் படிப்பிக்கவா?

தன் இதயத்தின் புதிரையே அவளால் உணர்ந்தறிய முடியவில்லை.

வீட்டிற்குச் சென்று மெத்தையில் படுத்தபோதும் நெஞ்சம் எரிந்துகொண்டேயிருந்தது. ஏதாவது படிக்கலாமா என்று மேசையைப் பார்த்தாள். பொன்னையா கொடுத்த நூல்களே கண்ணில் பட்டன அவற்றை அவளால் எடுத்துப் படிக்கவும் முடிவதில்லை. வீசவும் முடியவில்லை. நாகரத்தினம் அங்கில்லாத நினைவும் நாலு நாட்களாகக் காணாத பிரிவும் இதயத்தைப் புரையோடச் செய்தன. மின் விளக்கை அணைத்துவிட்டு மெத்தையில் விழுந்து புரண்டாள்.

' அம்மா சாப்பிடக் கீழே வாறீங்களா? அங்கை கொண்டாறதா? '

கீழ்வீட்டு வேலைக்காரப் பெண்ணின் குரலும் கதவில் தட்டும் ஒலியும் கேட்டது. சாப்பிடவில்லை என்ற நினைவு அப்போதுதான் வந்தது.

' சாப்பாடு வேண்டாம். பாலை மட்டும் கொண்டுவா''

## 18

மறுநாள் பத்திரிகை நிலையத்திற்கு ஒரு கடிதம் வந்திருந்தது. சொன்னபடி வரமுடியவில்லை எனவும் அடுத்த நாள் கட்டாயம் புறப்படுவதாகவும் நாகரத்தினம் மாலினிக்கு எழுதியிருந்தார்.

மாலினி நாகரத்தினம் வீட்டுக்கு டெலிபோன் செய்து மேரியின் சுகம் பற்றி விசாரித்தாள். காய்ச்சல் குறைந்திருப்பதாக அவளே பதில் கூறினாள். மேலும் ஒரு நாளாவது படுத்து ஓய்வு எடுக்கும்படி மாலினி சொன்னாள்.

''சரி நோனா''

''பசித்தால் பாண் மட்டும் சாப்பிடு. ஹார்லிக்ஸ் மூண்டு நாலு தடவை குடிக்கவேணும். மருந்துகளை விடப் படாது''

''சரி நோனா''

மறுநாள் காலையில் நாகரத்தினம் டெலிபோன் செய் தார். அவரின் குரல் அவளுக்கு ஆறுதலாயிருந்தது. உடனே அவரைப் பார்க்க வேண்டும் போலவும் இதயம் துடித்தது.

''இப்பவே உங்களைப் பார்க்கவேணும் போலைகிடக்கு. மாலை வரையும் ஒரு வகையாகச் சமாளித்துப் பார்ப்பம்''

நாகரத்தினம் சொன்னார். அவர் நினைவும் அவளின் ஆர்வம்போல இருப்பது அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. இந்தக் கவர்ச்சிக்கும் ஈர்ப்புக்கும் என்ன பெயர்? பொன்னையாவின் மேல் வைத்த காதலுக்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

''நீங்கள் வந்தது பற்றியும் செய்த உதவிகள் பற்றியும் மேரி மிகவும் பாராட்டினாள். எவரையும் கவரத்தக்க மந்திர மாய சக்திகளெல்லாம் உங்களிடம் இருக்கு''

''அதிகப் புகழ்ச்சி வேண்டாம்''

''உண்மையைத்தானே சொல்லுகிறேன். இன்றைக்குக் கனக்க வேலையும் இருக்கு. ஆறு மணிக்கு வீட்டுக்கு வருகிறேன். எங்காவது டின்னருக்குப் போவோம்''

''ம்... ம்...''

''அந்தச் சேலையை வருடப் பிறப்பன்று உடுத்தினீங்களா?''

''நீங்களில்லை. நானும் உடுக்கவில்லை''

''மாலையிலை அதையே உடுத்துக் கொண்டு நில்லுங்கோ''



''ரொம்ப நிச்சயிருக்கு. அதை உடுத்துக்கொண்டு...''

''பெரிய ஹோட்டலாய் பார்த்துப் போறது. மவுன் லவினியா ஹோட்டலுக்குப் போவோமே. சைக்குளோன் நிதிக்காக டின்னர் டான்ஸ் இருக்கு. நான் இரண்டு டிக்கெட் இப்பொழுதே வாங்கி வைக்கிறேன். நான் முக்கியமான செய்தி ஒன்றும் உங்களுக்குச் சொல்ல வேண்டும்.''

மாலையில் மாலினி மாடியிருந்து இறங்கி அசைந்தாடி வருவதைக் காரிலிருந்தே நாகரத்தினம் ரசித்துக்கொண்டிருந்தார்.

''யு லுக் வொண்டர்புல். என் சிலெக்ஷன் நல்லாயில்லையோ என்று நினைச்சன். உங்கள் நாச்சுறல் பியூட்டிக்கு சேலையே அழகு பெற்ற மாதிரித் தெரியுது''

இறங்கி வெளியே வந்து காரின் கதவைத் திறந்து மாலினியை ஏறவிட்டுக் கொண்டே சொன்னார். அவள் ஏறி உட்கார்ந்ததும் கதவைச் சாத்திவிட்டு காரின் முன்புறமாக வந்து ஏறிக் கொண்டார்.

''நீங்கள் பல பெண்களோடு பழகியிருக்கிறீர்களென்று தெரியுது''

''ஏன் மாலினி அப்பிடிச் சொல்லுறீங்க?''

காரை ஸ்டார்ட் பண்ணிக்கொண்டே கேட்டார்,

''பெண்களுக்குப் பிடிக்கத் தக்கதாகப் பேசப் பழகியிருக்கிறீர்கள்''

''உண்மையை வாய் திறந்து சொல்லப் பழகியிருக்கிறேன் என்று சொல்லுங்கோ''

''பெண்களுக்குப் பிடிக்கத்தக்க விஷயங்களை, அவர்களது குறைபாடுகளை எல்லாம் மனோ தத்துவ முறையில் அறிந்து வைத்திருக்கிறீர்கள்''

''மாலினி, நீங்கள் ஒரு இன்ரலியன்ட் கேள் என்பது என் கணிப்பு. நீங்கள் இப்படியான புகழ்ச்சிகளிலை ஒரு போதும் எடுபடமாட்டீங்க என்று எனக்குத் தெரியும். அதுக்காக உண்மையைப் பேச வேண்டாமென்று சொல்லு நீங்களா?''

''சீசரைப் பற்றி டெஸியஸ் சொன்ன மாதிரி நீங்களும் எனக்குக் கணக்கு விடவேண்டாம்''

நாகரத்தினத்திற்குச் சிரிப்புத்தான் வந்தது

''சரி என் புகழ்ச்சிகளை வித்ட்றோ பண்ணிக் கொள்ளுறன். இந்தச் சேலை, என் சிலெக்ஷன் பிடிச்சுதா என்றாவது சொல்லுங்கோவன்''

''பிடிச்சதுதான். ஆனா ரொம்ப ஆடம்பரமாயிருக்கு. எனக்கு இத்தனை ஆடம்பரம் வேண்டாம்''

''இத்தனை ஆடம்பரமில்லாமலே நீங்கள் அழகாயிருப்பீங்கள் என்பது உண்மைதான். என்றாலும் ஆடம்பரத்தை விரும்பாத முதல் பெண்ணை இன்றுதான் பார்க்கிறேன்''

''பெண்களைப் பற்றிக் குறைவாகவும் தவறாகவும் மதிப்பிட்டு வைத்திருக்கிறீர்கள். என்னைப் போன்ற பெண்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நீங்கள் பெரிய இடத்துப் பெண்களைப் பற்றித்தான் அதிகமாக அறிந்திருக்கிறீர்கள். ஏழைத் தொழிலாளி, விவசாயப் பெண்களைப் பற்றி நீங்கள் எதுவும் அறியவில்லை. இந்த நாட்டின் தொண்ணூற்றொம்பது வீதமானோர் அவர்கள்தானே''

''அவர்களை எனக்குத் தெரியாதா? நாலு ரூபாவுக்கு மானத்தை விற்பார்கள்''

''அதை வாங்குபவர்கள் நீங்கள் தானே''

மாலினியின் வார்த்தைகளில் சூடு பிறப்பதை நாகரத்தினம் உணர்ந்து கொண்டார்.



உலகத்து ஒழுக்கம், நீதி, நேர்மை, மதம் எல்லாமே பொருளாதார அடிப்படையிலேயே நேரடியாகவும் சில வேளை மறை முகமாகவும் இயங்கி வருகிறது என்று பொன்னையா அடிக்கடி கூறுவது அவள் நினைவில்வந்தது. நாகரத்தினம் கூறும் பணம்படைத்தோரின் மனோபாவங்கள் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தன.

என்ன கோபம் வந்து விட்டதா, ஐ ஆம் சொரி... தம் இனத்தைப்பற்றிக் குறைவாகக் கூறினால் பெண்களுக்குக் கோபம் வருவது உண்மையே''

ஒளிக்கிரணங்கள் குன்றிய சூரியன் பிரமாண்டமான சந்திர உருப்பெற்று கடல் மேட்டில் மறைந்துகொண்டிருந்தான். மங்கிய செங்கதிர் ஒளியில் இருவருமே கடற்கரை வழியே நடந்து கொண்டிருந்தனர்.

''எட்டு மணி வரையும் இங்கேயே உலாவவேண்டுமா?''

''நீங்களிருக்கேக்கை ஒண்டரை மணி நேரமும் பத்து நிமிஷம் போலை கழிந்துவிடும்.''

''டின்னரிலை அறிந்தவர்கள் கண்டால் என்ன சொல்லுவியன்''

''உண்மையைச் சொல்லுவன்''

''எப்பிடி''

''சுதேசிப் பத்திரிகைக் கம்பனி மானேஜிங் டிரெக்டரின் பிரைவேட் செக்கிரிட்டரி''

''நீங்கள் எப்பிடி அழைத்து வந்ததெண்டால்?...''

''இந்திரா நுவரெலியாவிலை. தெரிந்த ஆங்களை அழைத்து வந்தன். இதில் என்ன தவறிருக்கு.''

''அவங்க ஒன்றும் தவறாக நினைக்க மாட்டாங்களா?''

''அப்பிடியெல்லாம் நினைக்கமாட்டார்கள். டான்ஸ் சென்றால் ஒவ்வொரு ஆணும் ஒரு பெண்ணை அழைத்துச் செல்வதுதான் மேல்நாட்டு முறை''

''மேல் நாட்டு நாகரீகத்தையெல்லாம் அப்படியே கொப்பியடிப்பீங்களோ?''

''அரசியல் முறைகூட அவர்கள் தந்தது தானே!''

''இந்த நாட்டில் அந்த மேல் நாட்டு ஜனநாயகத் திலை நம்பிக்கை ஏற்பட்டு வருவதால்தான் இப்போதைக்கு புரட்சி ஏற்படாதென்று அவர் சொல்லுவார் ''

''உன் பழைய தோழர்தானே. எங்கே அவரை நீ காண வில்லையா? நான் வேலைதருவதாகச் சொல்லவில்லையா?''

''காணவில்லை''

## 19

பொன்னையாவின் நினைவு வந்ததும் ஒருதடவை அவ னோடு அவ்விடத்துக்கு நீச்சல் போட்டி பார்க்க வந்தது மாலினியின் நினைவில் வந்தது. கடற்கரை யருகே யிருந்த மீனவர் குடிசைகளைப் பார்த்து மனம் வெந்தான்.

''எத்தனை தேர்தல் வந்தது? எத்தனை அரசாங்கம் மாறியது இவர்கள் வாழ்க்கை மாறினதா? இந்தக் குடிசை களை இப்படியேதான் பார்க்கிறேன். அதே பழங்காலத்து வள்ளங்களே இன்னும் கடலுக்குப் போகின்றன. நாங்கள் இன்னும் மீன்டின்களை இறக்குமதிசெய்கிறோம். இவற்றை மாற்ற முடியாத முதலாளித்துவ ஜனநாயகம் எதற்கு?''

அவன் அன்று சீறியது சிலநாள் முன்னர் பேசியது போல காதில் ஒலித்தது.

'மாலினி என்ன ஆழ்ந்த யோசனை?''—நாகரத்தினம் அவளின் சிந்தனையைக் கலைத்தார்.



''நீங்கள் ஏதோ முக்கியமான செய்தி சொல்லப் போவ தாக டெலிபோனில் சொன்னீர்களே. அதைச் சொல்லுங் கோவன்.''

''இப்ப வேண்டாம் வீட்டுக்குத் திரும்பும்போது சொல்லுகிறேன்.''

''உப்புடிச் சொல்லி ஆவலைத் தூண்டுகிறீர்கள்''

இருவரும் திரும்பி ஒட்டலை நோக்கி நடந்தனர்.

நடனமும் கேளிக்கைகளும் நடைபெற்றுக்கொண்டிருந் தன. மேல் நாட்டு இசை ஒலிகள் முழங்கிக்கொண் டிருந்தன.

விஸ்கியும், பிராண்டியும், ஜின்னும் தண்ணீராக ஓடின. நாகரத்தினம் தமது பிஸ்னெஸ் நண்பர்களுக்கு சம்பெயினும் விஸ்கியும் ஓடர்செய்து வழங்கினார். அரசியல் பேச்சு வார்த் தைகளே பெரும்பாலும் பேச்சில் அடிபட்டன.

மாலினி உட்கார்ந்தபடியே யாவையும் வேடிக்கை யாகவும் விசித்திரமாகவும் பார்த்துக்கொண்டிருந்தாள். நாகரத்தினம், அவரின் நண்பர்களது அரசியல் பேச்சு வார்த்தைகளும் இடையிடை அவளின் செவிகளில் விழுந்தன.

''இடதுசாரிக் கூட்டாட்சியைத் தடுக்க வேண்டும். சுதந்திரக் கட்சி யு. என். பி, யோடு ஏன் கூட்டுச் சேர முடியாது?''

''இதெல்லாம் சுதந்திரக்கட்சிக்குள்ளே பசு வேஷம் போட்டு நுழைந்திருக்கும் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்டு களின் வேலை''

ஒரு நண்பர் சொன்னார்.

''சிறிமாவோடை இவங்களெல்லாம் சேர்ந்து ஏமாற்றப் பார்க்கிறாங்கள்.''

எட்மன் பேசினார்

''இடதுசாரிகளின் சர்வாதிகாரம் வரப்போகுது. ஜனநாயகம் அழியப்போகுது. எங்கள் நாட்டின் கலை, கலாச்சாரமெல்லாம் அழித்துப் போடுவாங்கள்''

அவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு நின்றமற்றொருவர் சொன்னார்:

'நாட்டிலே இப்பொழுது நிலவுகிற நிலையைப் பார்த்தால் இடது சாரிகளையும் சேர்த்துக் கூட்டாட்சி நடத்துவதே நல்ல வழி. யூனியன்களெல்லாம் ஒன்று சேர்ந்து இருபத்தொரு கோரிக்கைகள் என்று நாட்டையே பயமுறுத்துகிற வேளையிலே அவங்களைச் சாந்தப்படுத்த இதுதான் வழி. இல்லாவிட்டால் அந்தப் பூதமே வளர்ந்து எல்லாவற்றையும் கொண்டுபோய்விடும்.''

அவர்களது பேச்சுவார்த்தைகளிலும் செயல்களிலும் இருக்கும் முரண்பாடுகளை மாலினி எண்ணிப் பார்த்தாள்.

நாட்டின் மொழி கலை, கலாச்சாரம் என்று கோஷமிட்டுக்கொண்டு நடைமுறையில் அவர்கள் அங்கே நடத்தும் கேளிக்கைகளும், புயல் நிவாரணத்தில் ஏழைகளுக்குக் குடிசைகள் கட்டிக்கொடுப்பதற்காக நடத்தும் நடனமும் அவளுக்கு வேடிக்கையாகத் தோன்றின.

அவள் தனியே இருப்பதைப் பார்த்து ஓரிருவர் வந்து நடனமாட வரும்படி கேட்டனர்.

''நோ, தாங்யூ''

டின்னர் பரிமாறப்பட்டது.

அரசியல் விவாதம் முடிந்து நாகரத்தினம் மாலினி உட்கார்ந்திருந்த மேசையை நோக்கித் திரும்பினார். அப்போது எட்மன், 'நாகா வன் மோமன்ற்'' என்று அழைத்தார்.

மாலினியைக் கண்களால் காட்டிக் கேட்டார்:



''ஆர் அந்தக் குட்டி. நல்ல சரக்காயிருக்கே. எங்கே பிடித்தீர்? எங்களையும் மறக்க வேண்டாம்.''

''அதிலை வேலையில்லை. நீங்க முயன்றால் கன்னத்திலை தான் விழும். அது ஒரு பெரிய கதை. மற்றொரு முறை சொல்லுறன்.''

''வேறை நல்லதாய் ஒண்டும் வந்து சந்திக்கேல்லையா.''

''ஒண்டிருக்கு, பரவாயில்லை. மிடிள் ஏஜ்தான். றோசி எண்டு பெயர். எங்கையோ ஒரு பக்டரியிலை மாதம்முழுக்கக் கஷ்டப்பட்டு அறுபது எழுபது ரூபா உழைத்தவளாயிருக்க வேண்டும். ஒருநாள் நூறு ரூபா நோட்டொன்றைக் கொடுத்தன். கிழமைக்கொருக்கா டெலிபோன் பண்ணுது. அண்டைக்கு செல்வியின் பேத்டேக்கும் வந்திட்டுது. பெரிய சிரமமாய் போச்சு. வேணுமெண்டால் அடுத்த முறை டெலிபோன் பண்ணேக்கை உங்க டெலிபோன் நம்பரைக் குடுத்துவிடுறனே.''

''ஐயோ, இப்படியானது வேண்டாம். மறந்து போயும் நம்பரைக் குடுத்திடாதை நாகா. நான் வாறன்''

## 20

நாகரத்தினம் சிரித்துக்கொண்டே மாலினியின் பக்கமாகத் திரும்பினார்.

'நான் உங்களை ரொம்ப நேரம் தனியக் காத்திருக்க வைச்சிட்டன்.''

''பரவாயில்லை. கடைசியாக ஒருவரோடு பேசிக்கொண்டு நின்றீர்களே. ஆர் அவர்? அடிக்கடி என்னையே பார்த்துக்கொண்டு நின்றார். என்னைப்பற்றி பேசிய மாதிரி இருந்தது.''

''எட்மன் என்று பெரிய பிஸ்னெஸ்மன். உங்க அழகைப் பற்றி ரொம்பவும் புகழ்ந்தார். உங்க ஸ்கின் சில்க் போலை சொவ்ராக இருப்பதாகச் சொன்னார்.'

''அவற்றை பார்வை எனக்குப் பிடிக்கேல்லை.''

''ஆராவது பார்த்தால் உங்கள் அழகை ரசிக்கிறார்கள் என்று நீங்கள் பெருமைப்படவெல்லா வேணும். ரோசா மலரைக் கண்டால் ஆர்தான் பார்த்து ரசிக்கமாட்டார்கள்.''

''அது ரோசாவைப் பார்க்கும் பார்வையல்ல, கசாப்புக் கடைக்காரன் கிடாயைப் பார்க்கும் பார்வையாயிருந்தது. இப்படிப்பட்டவர்களா உங்கள் நண்பர்கள்.''

மாலினியின் பேச்சில் அலட்சியமும் ஆத்திரமும் தொனித்தது

''பிஸ்னெஸ் செய்வதென்றால் நல்லவர் கூடாதவர் என்றில்லை எல்லோரோடும் பழகவேண்டும். வியாபாரம் என்றால் விபசாரம் போன்ற ஒரு தொழில்தான். ஒழுக்கம், நேர்மை, நீதி, உண்மை என்று ஒன்றுமே கிடையாது. பொருட்களை வாங்க வருபவர்களுக்கு எதைச் செல்லி என்றாலும் விற்றுவிடவேண்டும். இதுதான் வியாபாரத்தின் முதல் தந்திரம். மீன்காறியின் காசு மணக்கும்!என்று எவரும் விட்டுவிடுவதில்லை.''

முதலாளித்துவத்தின் ஒரே குறிக்கோள் எதையும் விற்றுப் பணமாக்குவதுதான் என்று பொன்னையா அடிக்கடி சொல்வது மாலியின் நினைவில் வந்தது. அதே இலக்கணத் திற்கமைய நாகரத்தினத்தின் பேச்சும் அமைந்திருந்ததை மாலினி ஒப்பிட்டுப் பார்த்தாள்.

''அப்ப நீங்களும் ஒரு வியாபாரி என்று சொல்லுங் கோவன்.'

''என்னை அத்தனை குறைவாக மதிபபிடவேண்டாம்''



''அப்ப நீங்கள் முதல்தரமான வியாபாரியா? கடைசித் தரமான பிஸ்னெஸ்மனா?''

''என்னைக் கிண்டல் செய்யத்தக்க விதமாகப் பேசப் பழகிவிட்டீர்கள். எப்பிடி உந்த வாய் முளைத்தது?''

''உங்கள் உண்மை உருவத்தை அறியும்போது பேசாது இருக்க முடியவில்லை.''

''பிறகு பேசுவம். இப்ப சாப்பிடு டாலிங்.''

சிக்கின் சூப்போடு சாப்பாடு ஆரம்பமானது.

பிரையிட் ரேபிள் ரைஸ் காரமான ஆட்டிறைச்சிக் குழம்புடன் நல்ல சுவையாக இருந்தது. மாலினி ஆர்வத்தோடு ஒவ்வொரு டிஷ்ஷையும் ரசித்துச் சாப்பிட்டாள். நாகரத்தினத்திற்கு அவை வழமையான உணவுகள். அவர் வழமை போலவே ஒவ்வொன்றையும் தொட்டுச் சுவைத்துப் பார்த்து விட்டு வைத்துவிட்டார்.

புருட்சலட், ஐஸ்கிரீம், நெஸ்கபே தொடர்ந்து வந்தன. மாலினியின் வயிறு நிறைந்துவிட்டது.

உடல் பருக்காமல் இருப்பதற்காக அவள் பட்டினியாக இருந்து உணவைக் கட்டுப்படுத்திய காலம் ஒன்றுஇருந்தது. பொன்னையாவுடன் முறிவு ஏற்பட்ட பின் அந்த எண்ண மெல்லாம் கைவிட்டு விட்டாள். சில வாரங்கள் எதுவுமே சாப்பிட முடியாமல் சுருண்டு வாடிப் போயிருந்தாள். அவள் வேதனையை உணராத தோழியர் யாவரும் அளவுக்கு மீறி 'டயற்' பண்ணுவதாக எச்சரித்தபோது அவள் உள்ளூறச் சிரித்துக் கொண்டாள்.

''நீங்கள் இவ்வளவாதல் சாப்பிடுறீங்க, நம்ம பத்மினி இருக்கிறாளே அவள் அளந்துதான் சாப்பிடுவாள். பால், ஐஸ்கிரீம், கேக், நெய், பட்டர், சீஸ் எதையுமே தொடமாட்

செ—8

டாள். இப்பவெல்லாம் பெரிய குடும்பங்களில் பெண்களுக்கு உருவம் உடம்பு என்று அதுதான் ஒரே கவலை ''

''அழகையும் ஒரு கலையாகப் பேணுபவர்கள் அவர்கள் தானே.''

அவள் பேச்சில் நளினமிருந்தது.

''வயதான பெண்களும் தம்மை உடைமூலம் இளமையாகக் காட்ட முயல்வதும் பெரிய குடும்பங்களில் ஒரு பாஷனாக வளருது. இந்திரா வீட்டிலே அரை ஜாக்கெட்டும் ஸ்கேட்டும் போடுவாள். உங்களையும் ஒருக்கா அந்த வேஷத்தில் பார்க்க ஆசையாயிருக்கு.''

சிரித்துக்கொண்டே சொன்னார்.

''உங்க மனைவியின் போட்டோ ஒன்றை அன்று டிரெஸ்ஸிங் டேபிளில் பார்த்தேன். அது ஸ்கேட்டோடு எடுத்த படமே. திருமணத்தின் முன்னர் எடுத்து என நினைத்தன்.''

''அத்தனை இளமையாய் தெரிஞ்சுதா?''

''இரவில்தானே பார்த்தன்.''

பத்துமணிக்கு மேல் ஆகிவிட்டது. இருவரும் எழுந்து புறப்பட்டனர்.

''நீங்கள் டான்ஸ் பழக ஏற்பாடு செய்யப்போகிறேன். இப்படியான சந்தர்ப்பங்களில் நடனமாடாவிட்டால் மரியாதையில்லை.''

''பரவாயில்லை, பிறகு பார்க்கலாம். இப்ப அந்த முக்கிய விஷயத்தைச் சொல்லுங்கோ ''

''உங்களுக்குக் கெதியாகக் கோபம் வருமா?''

''வராது சொல்லுங்கோ.''



காரில் உட்கார்ந்த பின்னர் மீண்டும் கேட்டாள். காரை ஸ்ராட் பண்ணாமலே நாகரத்தினம் சொன்னார் :

''நான் அடுத்த மாதம் லண்டனுக்கும் பிரான்ஸ், ஜேர்மனிக்கும் போய்விட்டு வரவேண்டும்.''

மாலினிக்கு சிறிது அதிர்ச்சியாயிருந்தது. மௌனமாக இருந்தாள். அவர் அவளின் கரங்களைப் பிடித்து ''மாலினி, மாலினி டாலிங்'' என்று உலுப்பினார்.

''என்ன கோபம் வந்துவிட்டதா? வராது என்று சொன்னீங்களே.'

'ஒன்றுமில்லை.''

''நான் மறந்திடுவன். கைவிட்டு விடுவன் எண்டு நினைச்சியளா?''

''இல்லை.''

''அப்ப ஏன் பேசாமல் இருக்கிறியள். ஒருக்காச் சிரியுங்கோ பார்ப்பம்.''

சொல்லிக் கொண்டே விரல்களால் கீச்சமூட்ட முயன்றார். அவள் அவரின் கைகளைப் பிடித்து வெறுப்போடு ஒதுக்கினாள். அவர் காரை ஓட்டினார்.

'ஏன் இப்படிக் கோபிக்கிறீங்கள். நான் முன்னர் சொன்ன வார்த்தைகளையெல்லாம் மறந்துவிட்டீர்களா? அன்றைக்கு எங்க வீட்டு மாடியிலே சொன்னனே. அதற்குள் மறந்துவிட்டீர்களா?''

''மறக்கவில்லை,'

''உங்களுக்கு என்ன பொருள் வேண்டுமானாலும்போக முன்னர் யோசித்துச் சொல்லுங்கோ. கட்டாயம் வாங்கி வருவன்.''

மாலினி மீண்டும் மௌனமே சாதித்தாள். அவளின் சிந்தனை வேறு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தது. அவர் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார் :

"நான் உல்லாசப் பயணம் போகிறேனா? ஜேர்மனிக்கு டயர் பக்டரி பற்றி அவசரமான அலுவல். பிரான்சில் கிளாஸ் பக்டரி ஒன்று ஆரம்பிப்பது பற்றி ஒரு கம்பனியுடன் பேச வேண்டும். லண்டனில் மூத்தவன் இராமநாதன் படிக்கிறானல்லவா அவனைப் பார்க்கவேண்டும். இடது சாரிக் கூட்டாட்சி வந்தாலும் கொஞ்சப் பணமாவது வெளியே வைப்பது ஆபத்துக்கு உதவும். இவை யாவுமே அவசரமான அலுவல்கள். நாலு வாரத்தில் திரும்பி விடுவேன். எனக்குக்கூட உங்களைப் பிரிவதுதான் இப்ப கஷ்டமாயிருக்கு. ஏன் மாலினி ஒன்றுமே பேசிறீர்களில்லை."

"பேச என்ன இருக்கு? தங்கள் பிரயாணம் வெற்றிகரமாயிருக்கட்டும். விஷ் யு ஓல் சக்செஸ்."

மீண்டும் மௌனம்.

"பெண்களின் நெஞ்சமே இப்படித்தான். வளைந்து கொடுக்காத இரும்பு"

"அப்ப ஸ்ரீல் பிளேட்டால் வெட்டுவதுதானே."

"அன்பு வாளால்தான் எங்களுக்கு வெட்டத் தெரியும்."

"வியாபாரிக்குரிய வார்த்தை ஜாலமெல்லாம் உங்களிடம் தாராளமாயிருக்கு. நீங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்."

"தங்கள் புகழ்ச்சிக்கு நன்றி."

கார் வீட்டு வாயிலில் நின்றது.

"குட்நைட்."

கதவைத் திறந்து கொண்டே அவள் இறங்கி நடந்தாள் எதுவும் புரியாத அவளின் மாற்றத்தைக் கண்டு மனவேதனையோடு காரை ஓட்டினார்.



## 21

மாலினி உடுப்பைக் களைந்து நைட்டி டிரெஸ்ஸை அணிந்து கொண்டு மெத்தையில் குப்புறக் கிடந்தாள். தடுமாற்றத்திலும் பழைய நினைவலைகளிலும் நெஞ்சு எரிந்தது. இரு வேறு துருவங்களையும் ஆராய்ந்து பார்த்தாள். இரு பகுதிகளிலும் உள்ள உண்மை, நீதி, நேர்மை ஆகியவற்றை மனத்தராசின் இரு முனைகளிலும் வைத்து நிறுத்துப் பார்த்தாள். இரு பகுதிகளிலுமுள்ள இன்பம், துன்பம், வேதனை, கஷ்டம் ஆகியவற்றையும் எடை போட்டாள்.

எதிலுமே முடிவு காண முடியவில்லை. இளமைக் கனவுகளும் இன்பத் துடிப்பும் ஆடம்பர உல்லாசமும் இதயத்தோடு ஒன்றி ஒரு பக்கத்தை அழுத்திக் கொண்டிருந்தன.

எப்படியும் மீண்டும் ஒரு தடவை பொன்னையாவைப் பார்த்துப் பேச வேண்டும். நம்பிக்கையை இழக்காது முயன்று பார்க்க வேண்டும் என்று இதயத்தின் அடியிலிருந்து புத்துணர்வு ஒன்று எழுந்தது. தேடிப் போகப்படாது. காத்திருப்போம். எதிர்பாராத சந்திப்பே நல்லது என்ற நப்பாசை உதித்தது. இந்தப் பெரிய மனிதர் தன் குடும்பத்தையே மறந்து அசையும்போது பொன்னையாவை அசைக்க இயலாதா? புதிய குரல் எழுந்தது.

எவரை இனி வாழ்க்கையில் கண்டு பேசுவதில்லை என்று தீர்மானித்து தோல்வியால் புழுப்போலத் துடித்தாளோ அவரை மீண்டும் பார்ப்பதற்கான ஆசை முகிழ்விட்டது. கருவானத்தில் வெடித்த மின்னல் ஒன்று இதயத்தைத் தாக்கிச் சென்றது.

மறுநாட்காலையில் நாகரத்தினம் டெலிபோன் செய்தார்

"மாலினி, என்னோடை கோபமா?"

''இல்லையே..'

''இரவு முழுவதும் எனக்குத் தூக்கமேயில்லை. என் பயணத்தையே கான்சல் பண்ணலாமா என்றே யோசித்தன். கொஞ்ச நேரத்திலை எப்பிடியெல்லாம் பயமுறுத்திப் போட்டீங்க.''

''அப்பிடி ஒன்றும் நான் செய்யவில்லை. நான் ஏதோ யோசினையில் இருந்தன். நீங்கள்தான் தப்பர்த்தம் செய்து கொண்டீர்கள்.''

''உங்களுக்கேதாவது கவலை, பிரச்சனைகளிருந்தால் எனக்குச் சொல்லப்படாதோ, என்னால் முடிந்தவரை எப்பொழுதும் உதவி செய்வேன்தானே.''

''உங்கள் உதவி தேவைப்படும்போது நான் தயங்காது எப்பொழுதும் கேட்பேனே.''

''நாளைக்கு ஒரு சினிமா பார்க்கலாமா?''

''ஒரு ஃபிரெண்டிடம் வருவதாகச் சொல்லிவிட்டன். இரண்டு நாள் கழித்துப் பார்ப்போமே. மேரி எப்படி இருக்கிறாள்?''

''இப்ப நல்ல சுகம். கொஞ்சம் வீக்காயிருக்கிறாள். அவ்வளவுதான். இன்னொரு நாளைக்கு உங்களை டின்னருக்குக் கூட்டி வரச் சொன்னாள்.''

''அடுத்த வாரம் பார்க்கலாம்.''

''அத்தனை பிந்தியா. செல்வி வந்துவிட்டால் ..''

மனைவியின் பெயரை மறைப்பதை அவள் புரிந்து கொண்டாள்.

''அதன் முன்னரே வருகிறேனே.''



## 22

அன்று செல்விபவனத்தில் நாகரத்தினம் வெளிநாடு செல்வதையொட்டி ஆடம்பரமான டின்னர் பார்ட்டி ஒன்று நடந்தது அவரது முக்கிய நெருங்கிய நண்பர்கள் யாவரும் அழைக்கப்பட்டிருந்தனர். மாலினி அதில் கலந்துகொள்ள விரும்பவில்லை. ஆயினும் நாகரத்தினத்தின் வற்புறுத்தலின் பேரில் வந்திருந்தாள். அப்புகமி, எட்மன், வில்சன் குடும்பத்தவர், மற்றும் ஆங்கிலேய, ஜெர்மன் குடும்பத்தவரே முக்கிய விருந்தாளிகளாயிருந்தனர்.

விஸ்கியும் பிராண்டியும் ஜின்னும் சாராயமும் தாராளமாக ஒன்றுமாறி ஒன்றாக வழங்கப்பட்டன.

இந்திராவுக்கு மாலினியின் வருகை அத்தனை பிடிக்கவில்லை. ஆயினும் நாகரத்தினத்தின் அதிகாரத்திற்கு அடங்கி எல்லோரோடும் சுமுகமாகப் பேசி நடித்தாள்.

தோளோடு வெட்டிய ஜாக்கெட்டும் செந்நிறக் கலரில் நூல்வேலை செய்யப்பட்ட மணிப்புரிச் சேலையும் இந்திரா உடுத்திருந்தாள். அவள் அணிந்திருந்த புதுமையான பிரெஸியர் மின் விளக்கொளியிலேயே ஜாக்கெட் ஊடாகத் தெரிந்தது முகம், உதடு, கண், நகங்களில் தீட்டிய வர்ணங்கள் மின் விளக்கொளியில் அழகூட்டி இளமைத் தோற்றமளித்தது. காதிலே வைரக் கம்மல் ஒளிர்விட்டது. மயிரை உச்சிக் கொண்டையாகப் போட்டிருந்தாள்.

''நீங்க என்ன அருந்துவீர்கள். பிரண்டி. வைன்.''

இந்திரா கேட்டாள்.

''கூல்ரிங்ஸ் ஒன்லி.''

மாலினி கூறினாள்.

மேரியை அழைத்து ஏற்பாடு செய்தாள்.

மேரி தன் நன்றிக் கடன் முழுவதையும் முகத்திலும் தட்டிலும் மட்டுமே காட்டிக் கொண்டாள்.

மாலினி கிடைத்த சந்தர்ப்பத்தை விடாது இந்திராவை உச்சியில் உயர்த்தி வைக்க விரும்பினாள்.

''உங்க கொண்டை நல்லாயமைஞ்சிருக்கு. புயூட்டி புல் சாரி. யங் கேள் மாதிரியிருக்கிறீங்கள்''

''தாங் யூ.''

' உங்களைப்போலை பியூட்டி ஏயிட்களை பயன்படுத்தத் தெரிந்தவர்கள். சேலை சிலெக் பண்ண, வீட்டை மொடேன் பாஷனாக வைத்திருக்க அறிந்திருப்பவர்கள் மிகக்குறைவு.''

''நீங்க ரொம்ப உயர்த்திறீங்க. என்னுடைய ஹொபியே இதுதான்.'

''எங்க பத்திரிகைகளின் வுமன் பேஜ்ஜில் கட்டாயம் உங்க திறமையையெல்லாம் வெளியிட வேண்டும் மற்ற லேடீசுக்கும் இவை முன் மாதிரியாயிருக்கும். நான் போட்டோ கிராபரையும் ஒரு சப்-எடிட்டரையும் அனுப்பி விடு கிறேன். அவங்களுக்கு நீங்க பயன்படுத்தும் எல்லா முறை களையும் சொல்லி வையுங்கோ.''

இந்திரா அவற்றைக் கேட்டதும் வானத்தில் மிதந்தாள் அவள் பத்திரிகைகளில் வரும் வுமன் பேஜ் செய்திகளை மட்டுமே பெரும்பாலும் படிப்பவள். அதே இடத்தில் தன் னைப் பற்றியும் வரப்போவதை அவளால் நினைக்கவே முடியவில்லை.

''எப்ப அனுப்புவீங்க.''

''உங்களுக்கு வசதியான நேரத்தை டெலிபோன் பண்ணி அறிந்து விட்டே வருவாங்க.''

மாலினியை அழைத்துச் சென்று மற்றப் பெண்களெல் லோருக்கும் இந்திரா அறிமும் செய்தாள். அவள் ஒரு பிரிண்டெட் நைலெக்ஸ் சேலையே உடுத்திருந்தாள். ஐரெக்ஸ் பவுடர் தவிர முகத்தில்எதுவுமே பூசியிருக்கவில்லை.



கழுத்துத் தெரியத் தக்கதாக கொண்டையை மட்டும் மேல் நோக்கி முடிந்திருந்தாள்.

ஆடம்பரமில்லாத போதும் அவளின் இளமையும் அழகும் மற்றப் பெண்களுக்கும் பொறாமை ஊட்டியது.

சாப்பாடு நடைபெறும் போதும் இந்திரா மாலினியைத் தன் அருகே வைத்திருந்தாள். மேல் நாடுகளில் தான்கண்ட அனுபவங்களையும் தன் திறமைகளையும் மாலினிக்குச் சலிப்பேற்படும் அளவிற்கு அளந்து கொண்டிருந்தாள். ஆயினும் மாலினி பணக்காரக் குடும்பங்களின் மனோ பாவங் களை அறிந்து கொள்ளும் ஒரே நினைவில் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

டின்னர் முடியும் வேளையில் இந்திரா சொன்னாள்:

''காசிருந்தென்ன, இந்த அரசாங்கம் வந்த பிறகு நினைச்சபடி என்ன பொருள் வாங்க முடியுது. சீஸ், பட்ட ருக்குக்கூட கட்டுப்பாடு வந்திட்டுது. அப்பிள், கிரேப்ஸ் ஏதாவது வாங்க முடியுதா? ஒஸ்ரேலியன் ஒறேஞ் எனக்கு ரொம்பப் பிடிக்கும். சாப்பிட்டு ரண்டு, மூண்டு வருஷ மாச்சு''

''இங்கிலிஸ் ஸ்ரோபெரீஸ் சாப்பிட்டு ரண்டு வருஷ மாச்சு''

அருகே இருந்த வில்சனின் மனைவி ஒத்தூதினாள்.

''பத்மினிக்குப் பிடிக்கு மெண்டு மூத்தவன் இராமநாத னுக்கு எழுதினன். ஒரு டின் அனுப்பியிருந்தான். முடிஞ் சிட்டுதோ தெரியேல்லை, பியசேனா! டே பியசேனா''

''உங்களுக்கென்ன, ஏதோ ஒரு மாதிரி எல்லாம் கிடைச்சிடுது அதிர்ஷ்டக்காரர். இரண்டு நல்ல சேவன்ட் கூடச் சேர்ந்திட்டுது. எங்க வீட்டிலை சேவன்ட் புறபிளமே பெரிய தீராத புறபிளெம். இண்டைக்கு வாறவன் மற்ற நாள் எதையாவது தூக்கிக்கொண்டு ஓடிவிடுகிறான். வளர்ந்

தவங்களை வைச்சால் எல்லாத்தையும் திண்டுபோட்டு அடுத்த வீட்டு வேலைக்காரப் பெட்டையைப் பார்க்கிறான். அடிக்கப்போனால் பொலிசிலை சொல்லுவன் என்று வெருட்டிறாங்கள். சம்பளத்தைக் குறைத்தால் இல்லாட்டி வெளியைபோடா என்றால் லேபர் கொமிஷனரிட்டைப் போவன், மூண்டுமாதச் சம்பளம் தா எண்டு கேக்கிறான். நாடே கெட்டுப்போச்சு. அந்தக் காலமெண்டால் உதைச்சாலும் வீட்டிலை கிடப்பாங்கள். வந்த அரசாங்கமும் அவங்களுக்கு சாதகமாய்ப் போட்டுது''

'எங்களுக்கும் டிரைவர் சில்வா பெரிய பிரச்சனை. அவன் என்னவும் செய்துவிடத் தக்கவன். வேலையில்லாமல் தெருவிலை திரிஞ்சவன். காலிலை தொட்டு மன்றாடினான். பாவம் என்று இவர் வேலை கொடுத்தார். இப்ப அவரை எதிர்த்தே சிலவேளை பேசிறான்''

''அவனைக் கலைக்காமல் ஏன் வைச்சிருக்கிறியள்?''

வில்சன் மனைவி கேட்டாள்.

''வீட்டு விஷயங்களெல்லாம் கொஞ்சம் தெரிஞ்சவன். இன்கம்ராக்ஸ் போலை விஷயங்களிலை ஏதேன் செய்து போட்டால்...''

## 23

விருந்து முடிந்ததும் 'உங்கள் பிரயாணம் வெற்றிபெற வேண்டும்' என எல்லோரும் கைகுலுக்கி நாகரத்தினத்தை வாழ்த்தி விடைபெற்றனர். மாலினி விடைபெறும்போது இந்திராவைப் பார்த்து ''எங்கே பத்மினி?'' என்று கேட்டாள்

''அவள் கொஞ்சம் ரிசேவ்ட். ஆட்களோடை அதிகம் பழகமாட்டாள். மேலே றூமுக்குப் போட்டாள்.''

மாலினி இந்திராவோடு சுமுகமாகப் பேசிப் பழகி அவளை வென்றதை யிட்டு நாகரத்தினத்திற்கு மகிழ்ச்சியே.



அவளை வீட்டில் விட்டு வர டிரைவர் சில்வாவை அனுப்பினார்.

மறுநாள் நாகரத்தினம் மாலினியை டெலிபோனில் அழைத்து இரவு வந்ததுக்காக நன்றி தெரிவித்தார்.

''இந்திரா உங்களை இனி விடமாட்டாள். நானில்லாத வேளையிலும் வீட்டுக்குச் சென்று பழகியிருப்பது இப்போதைக்கு நல்லது''

''பார்ப்போம்''

''உங்களுக்கு என்ன வாங்கிவர வேணுமெண்டு சொல்லேல்லையே.''

'என்னை மறக்காமலிருந்தால் போதும்.''

''மறப்பதா? அது இந்தப் பிறவியிலை இல்லை. என்ன கொண்டுவாறதெண்டு சொல்லுங்கோ?''

''உங்க இதயத்தை அப்பிடியே கொண்டு வந்தால் போதும்.''

''அது நிச்சயம் அப்பிடியே வரும்.''

''அதுவே போதும்.''

மாலினி விமான நிலையத்திற்கு வழியனுப்பச் செல்லவில்லை அவரின் பிரிவு தனிமையை ஏற்படுத்தியது. எத்தனை தோழியரிடம் மாலையில் சென்று அரட்டையடித்தபோதும் இதயத்தின் அடியில் ஆறாத புண்ணின் வாடை வீசிக்கொண்டேயிருந்தது. யாழ்ப்பாணத்திற்குத் தாயாரைச் சென்று பார்த்து வரவும் அவளுக்கு ஆர்வமேற்படவில்லை ஒரே அண்ணன் குடும்பத்தாரிடம் பதுளைக்குச் சென்றால் ஆறுதல் ஏற்படுமா என்று சிந்தித்துப் பார்த்தாள். அண்ணியின் கட்டுப்பாடும் வைதீக எண்ணங்களும் பயமுறுத்தின.

# 24

அன்று மாலையில் வேலை முடிந்து படிக்கட்டுகளால் கீழே இறங்கிக் கொண்டிருந்தாள்.

எதிரே பொன்னையா ஒரு நண்பனோடு படிக்கட்டில் மேலே ஏறி வருவதை மாலினி கண்டாள். அவளது நெஞ்சம் ஒருகணம் மின்சாரம் தாக்கியது போன்று அதிர்ந்தது. உடலெல்லாம் நடுங்கியது. நெஞ்சை யாரோ அழுத்திப் பிடித்திருப்பதாகத் தோன்றியது. சமாளித்துக்கொண்டே ஒரு புன்னகையை வரவழைத்தபடி ''ஹலோ'' என்றாள். வார்த்தைகள் வெளியே வரவில்லை. முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின. அவனது கண்களை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை. கால்களும் வியர்த்தன

''பார்த்து ரொம்ப நாளாச்சு. எப்பிடிச் சுகமெல்லாம்?''

மாலினியின் பதட்டத்தைப் பார்த்து உள்ளூற சிரித்தபடி பொன்னையா கேட்டான்.

''எப்பிடி உங்க சுகமெல்லாம். ரொம்ப இளைச்சுப் போயிருக்கிறியள்?''

தடுமாற்றத்துடன் 'வார்த்தைகள் வெளிவந்தன. நெஞ்ச அழுக்கம் குறையத் தொடங்கியது.

''ஏதோ நாங்களும் வாழுறம். எங்களையும் மறக்காமலிருக்கிறியளே. அதுவே போதாதா.''

''ஏனப்பிடிச் சொல்லுறியள். நீங்கதானே மறந்துவிட்டீங்களே?''

மனவேதனையின் அழுத்தம் குரலில் தொனித்தது. கண்கள் துளிர்க்க முயன்றன.

''மறக்கிறதெண்டில்லை. கொஞ்சம் ஒதுங்கி வாறன் என்று சொல்லுங்கோ. மறந்துவிட்டேன். ஐ ஆம் சொறி



இவர் என் யூனியன் தோழர் விக்கிரம. இந்த அம்மா இங்கே ஒரு பெரிய கை. முதலாளித்துவத்தின் கைப் பொம்மை என்று சொல்லன். மிஸ் மாலினி?''

நிலைமையைச் சமாளித்துக்கொண்டே பொன்னையா அவளைத் தன் நண்பருக்கு அறிமுகப்படுத்தினான். மாலினி ஒரு புன்னகை உதிர்த்தாள்.

'முதலாளித்துவத்தைத் தேடி என்ன அலுவலோ!''

நளினமாகக் கேட்டாள். குரலில் தெளிவு ஏற்பட்டு விட்டது.

''யூனியன் நியூஸ் ஒன்று கொண்டு வந்தன், கொடுத்து விட்டுப் போக''

''தாருங்களேன். ஏன் வீணாக மேலே ஏறி உங்கள் அரிய நேரத்தை பாழாக்க வேணும்.''

அவன் ஒரு கவரைக் கொடுத்தான். அவள் வாங்கி ரைப் அடித்திருந்த செய்தியை இரு கணங்கள் நோட்டமிட்டாள், திரும்பி வாசலில் நின்ற வாச்சரைக் கை காட்டி அழைத்தாள். அவன் ஓட்டமாக ஓடி வந்தான்.

''இதைச் சென்றல் நியூஸ் எடிட்டரிட்டை நான் தந்ததாகச் சொல்லி கொப்பி எடுத்து எல்லாப் பேப்பருக்கும் கொடுக்கச் சொல்லு.''

அவனிடம் கொடுத்தாள். அவன் வாங்கிக்கொண்டே மேலே ஓடினான்.

''ரொம்ப தாங்ஸ்''

''தாங்ஸ் என்ன? எதிர்கால சுதேசிப் பத்திரிகைக் கம்பனியின் எடிட்டர் இன் சீவ்வுக்கு இந்த உதவிகூடச் செய்யக்கூடாதோ.''

''என்ன மாலினி புதிர் பேசிகிறாய்?''

பொன்னையா சிரித்துக்கொண்டே கேட்டான்.

''அப்பிடித்தான் இங்கையெலலாம் நியூஸ் அடிபடுது. உங்களுக்கின்னும் தெரியாதா? பேப்பரிலை போட முடியாத நியூஸ். அல்லது இதுவரையில் வெளியிட்டிருப்போமே ''

படிக்கட்டுகளில் இறங்கியபடியே மாலினி சொன்னாள். விக்கிரம பின் தொடர அவன் அவளோடு சேர்ந்து இறங்கினாள். அவளின் பதட்டம் ஆறிவிட்டது.

''ஆர் இந்தக் கதையெல்லாம் கட்டிவிட்டது?''

வியப்புடனும் சிரிப்புடனும் கேட்டான்.

''இதிலென்ன புதுமை. இடதுசாரி கூட்டரசாங்கம் வரப்போகுது. அப்ப புதிய எடிட்டர் இன் சீவ்வாக வர இங்கே ஆருக்குத் தகுதியும் திறமையும், இங்குள்ள தொழிலாளர்களின் ஆதரவும் இருக்கு, உங்களைத் தவிர.''

''விக்கிரம கேட்டியா நியூஸை, முதலாளித்துவம் அன்றாடம் கற்பனையில் தயாரித்துப் பரப்பும் செய்தியிலும் பார்க்க இது பெரிய கற்பனையாயிருக்கே.''

''பனை ஏறுபவங்களெல்லாம் பாராளுமன்றத்துக்கு வந்ததாக 1956-ல் தோல்வியடைந்த பிரதமர் ஒருவர் சொல்லவில்லையா? அதைப் போல பெரிய மாற்றங்கள். புரட்சிகள் நடைபெறும்போது ஏன் ஒரு யூனியன் லீடர் பத்திரிகை நிர்வாகத்திற்கு வர முடியாது.''

''புரட்சியா? அத்தனை விரைவாக்வா.''

அவன் சிரித்துக்கொண்டே சிறிது தாமதித்து நின்றான்.

''இப்ப எங்கே போய்க் கொண்டிருக்கிறம்.''

''தெருவிலேதான். செய்தி அதிர்ச்சியிலை உலகத்தையே மறந்து விட்டீர்களே.''

''மாலினி எங்கே போகவேண்டும்?''



''நீங்க போற வழியிலை கொஞ்சச் தூரமாதல் பேசிக்கொண்டே வாறேன் ''

''முடிவுவரை வரமாட்டாய் என்று இப்பவே சொல்லிக் காட்டுகிறாயே. இப்பவும் பம்பலப்பட்டி லோறிஸ் தெரு வீட்டிலை, அதே மாடி றூமில்தான் இருக்கிறியா?''

''அங்கேதான் இருக்கிறன். இப்ப எனக்கு ஒரு டீ வாங்கிக் கொடுங்களேன்.''

''அந்த நாஷனல் கபேக்குப் போவம்,''

## 25

தெருவைக் கடந்து றீகல் தியேட்டர் ஓரமாக மூவரும் நடந்தனர். முன்புறத்தில் காரெல்லாம் அடுக்கியிருந்தது. 'ஹவுஸ் புல்' என்ற பலகை வாயிலின் இரும்புக் கதவில் தொங்கியது நிர்வாணமான ஆபாச நடனப் போஸ்டர்களெல்லாம் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

''எத்தனை கூட்டம்! என்ன படம் அது?''

''நியூயோர்க் பை நையிட்''

விக்கிரம சொன்னான்.

''இதுதான் நேக்கெட் ஏகாதிபத்தியம். அவனுக்கென்ன எதையும் வித்து லாபம் திரட்டுவதொன்றுதானே குறிக்கோள். பெண்டாட்டியையும் நிர்வாணமாக்கிப் படமாக்கி விற்பதென்றாலும் செய்வான். எங்கடை நாட்டுக் கலை. கலாச்சாரத்தை வளர்க்க வேணுமெண்டு சொல்லிக் கொண்டு ஆட்சிக்கு வந்திட்டு, இப்ப இதுகளையும் அனுமதிக்கிறாங்களே அவங்களைச் சொல்லு.''

''உங்க கூட்டாட்சி வந்தால் இதுகளையெல்லாம் தடை செய்து விடுவீங்களா?''

"என்ன மாலினி பகிடிவிட்டுக் கொண்டே வாறாய்."

பொன்னையா அவள் முகத்தைப் பார்த்துச் சொன்னான்.

"கூட்டாட்சி வராதெண்டு சொல்லுறீங்களா?"

வெளிப்புறத்தில் ஒதுக்குப் புறமாக இருந்த மேசையில் மூவரும் உட்கார்ந்தபோது மாலினி ஆர்வத்தோடு கேட்டாள்.

"கூட்டாட்சி வாறது வராதது வேறை. பெரும்பாலும் கூட்டாட்சி ஏற்படும் சாத்தியமே இருக்கிறது. ஆனால் நான் அதுக்கு எதிர்."

மாலினிக்குச் சிறிது அதிர்ச்சியாகவே இருந்தது. கூட்டாட்சி ஏற்படலாம் என்று பணக்காரரிடை ஏற்பட்டிருக்கும் கிலேசத்தை அவள் நன்கு அறிந்திருந்தாள். அவர்கள்தான் கூட்டாட்சியை விரும்பவில்லை யென்றால் தொழிலாளர் யூனியன் தலைவர்களும் எதிர்ப்பது அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

"அங்கே முதலாளிகளெல்லாம் கூட்டாட்சி வரப் போகிறதென்று கதிகலங்கிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே நீங்களென்னவென்றால் கூட்டாட்சிக்கு எதிராகப் பேசிறீங்கள்."

மாலினி வியப்போடு சொன்னாள்.

"அவங்களுக்குக் கொஞ்சம் பயமிருக்கும்தான். அது சிவத்தத் துணியைக் கண்டு வெருளும் மாட்டின் பயம் போன்றது. எங்கள் எதிர்ப்பு தத்துவ, விஞ்ஞான சரித்திர பூர்வமானது.

பொன்னையாவின் குரலில் அவனது மன உறுதி ஒலித்தது.



"பத்திரிகை நிலையத்துத் தொழிலாளர்களெல்லாம் குதூகலமாக ஆதரிக்கிறாங்கள். நீங்க எதிர்த்தால் நிச்சயமாய் தூக்கி எறியப்படுவீர்கள். யோசித்து எதிர்ப்புக் காட்டுங்கோ. எங்கே உங்களைப் போல ஆட்கள் கிடைப்பார்கள் என்று பத்திரிகை நிலையத்திலே தேடிக்கொண்டிருக்கிறார்கள். நீங்க ஒரு ஸ்ரேற்மென் கொடுங்க. 'தொழிற் சங்கத்தலைவர்கள் கூட்டாட்சிக்கு எதிர்ப்பு' என்று. நாளைக் காலைப் பத்திரிகைகளெல்லாம் தலைப்புச் செய்தியாய் வெளிவரும்."

"செய்திகள் கட்டாயம் வராமலா போகுது. கொஞ்சக் காலம் நாங்கள் ஒதுங்கி நின்றுதான் பார்ப்போமே. சரித்திர உண்மை என்றும் நிலைத்திருக்கும்."

"என்ன அது?"

"இப்படியான கூட்டாட்சி, எங்குமே நிலைத்திருந்ததில்லை. இது பாராளுமன்றத்திற்கு கூட்டாச்சி. பூஷ்வா ஜனநாயகத்தின் பாராளுமன்றம்தானே இது. முதலாளித்துவத்தின் பிறப்பிடமான பிரிட்டன் தந்ததுதானே. இதிலே என்றுமே எனக்கு நம்பிக்கையில்லை என்று சொல்லியிருக்கிறேனே."

வெயிட்டர் வந்து நின்றான்

"மாலினி ஏதாவது சாப்பிடுகிறாயா?... என்ன விக்கிரம பேசாமல் இருக்கிறாய்?...இந்த அம்மாவுக்கு உங்க றோல்ஸ் பிடிக்கும். றோல்ஸ் மூணு, டீ மட்டும் கொண்டுவா"

"உங்க விவாதத்தைக் கேட்டுக்கொண்டிருகிறேன்."

மாலினியை விக்கிரம ஏற இறங்கப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். அவளின் அழகும், பேச்சும், சரளமாகப் பழகும் தன்மையும் அவனைக் கவர்ந்தன. அவளைப் போன்று அரசியலில் ஆர்வமுள்ள பெண்களை அவன் கண்டு பழகியதில்லை.

''நண்பர் விக்கிரம எங்கே வேலை செய்கிறார் தெரியுமா? நாகரத்தினம் அன் கோ ரயர் கம்பனியிலை.''

பொன்னையா சொல்லிக்கொண்டே மாலினியின் முகந்தைக் கூர்ந்து பார்த்தான்.

''அப்பிடியா?...''

வியப்பு குரலில் பிரதிபலிக்காத விதமாக அவள் கேட்டாள்:

''எப்படி, மிஸ்டர் நாகரத்தினம் நல்ல முதலாளியா?''

விக்கிரமனைக் கூர்ந்து பார்த்தாள்.

''எங்கே உனக்கு அவரைத் தெரியும்போலைக் கிடக்கு''

பொன்னையாவின் வார்த்தையிலிருந்த நளினத்தை மாலினி உணரவில்லை.

''கொஞ்சம் தெரியும்.''

''எல்லா முதலாளிகளையும் போலத்தான் அவர்.''

விக்கிரம பதிலளித்தான்.

''சுதந்திரக் கட்சியின் வர்க்கத்துக்கே அவரை ஒரு உதாரணமாக எடுக்கலாம். அவரைப்போல பல சிங்கள, தமிழ் முதலாளிகளை இன்று காணலாம். யு. என். பி. ஆட்சிக் காலத்தில் வெள்ளைக்கார வெளிநாட்டு முதலாளிகளோடு போட்டி போட முடியாது, பாங்குகளில் கடன்பெற முடியாது தாளம் போட்டவர்கள். சுதந்திரக்கட்சி வந்த பிறகு தேசீயம் என்ற போர்வையில் நுழைந்து இன்றுபெரிய முதலாளிகளாகிவிட்டார்கள். வெளிநாட்டு முதலாளிகளின் பிடி தளர்ந்து உள் நாட்டு முதலாளி வர்க்கம் இன்று தோன்றியுள்ளது. சுதந்திரக் கட்சி இவர்களது கட்சியே இவர்களே இனிமேல் சுதந்திரக் கட்சிக்கு எதிராக நின்று விழ்த்திடுடுவாங்கள்.''



பொன்னையா கூறிய கருத்தில் உண்மைஇருப்பதாகவே மாலினி உணர்ந்தாள், சுதந்திரக் கட்சியின் தூண்களாக இருந்தவர்களே எதிப்புக் காட்டுவதை அவள் எண்ணிப் பார்த்தாள்.

பொன்னையா தொடர்ந்து சொன்னான்;

''தேசியப் போர்வையில் பண்டார நாயக்காவை ஆட்சிக்கு கொண்டுவந்த தேசிய முதலாளிகளே உள் நாட்டுக் கப்பல் கம்பெனிக்கு ஆதரவு தரவில்லை என்று பண்டார நாயக்காவைச் சுட்டுக் கொன்றார்கள், தற்போதைய அரசாங்கமும் தேசிய முதலாளிகளுக்கு எதிராக நின்றால் ஒழித்துக்கட்டி விடுவார்கள்;''

''நீங்கள் ஏதோ சொல்லுறீங்கள். கூட்டரசாங்கம் வரப் போகிறதென்று, எனக்கு தெரிந்த பணக்காரர்களெல்லாம் கதிகலங்கிப்போய் இருக்கிறார்கள்.''

மாலினி முதல் தடவையாக அவனது கண்களை நோக்கினாள். ஒரு கணத்தில் தலை குனிந்தாள்.

''அவர்கள் கதிகறங்கவில்லை. விழிப்பாக இருக்கிறார்கள் என்று சொல்லு. முதலாளிகளே தற்போது எம்மிலும் பலம் வாய்ந்தவர்கள் இராணுவமும் பொலிசும் அவர்கள் பக்கமே என்றும் இருக்கும். கூட்டரசாங்கம் ஏற்பட்டதும் எல்லாம் வரப்போவதாகப் பொய்மைக கனவு கண்டு கொண்டு தொழிலாளர்கள் தூங்கிவிடுவார்கள். முதலாளிகளோ தூங்கமாட்டார்கள். இப்பொழுதே விழிப்பாக இருந்து கொண்டு வேலை செய்கிறார்கள். உங்கள் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தாலே தெரியாதா?''

''சுதந்திரக் கட்சித் தலைவர்களிடையே பரம்பரை நிலக்சுவான்தாரும் பணக்காரரும் இருக்கிறார்கள். அவர்கள் எப்படி இடதுசாரி கூட்டரசாங்கத்தை விரும்புகிறார்கள். யு. என். பியோடு சேரலாமே.''

மாலினி றோல்சைக் கடித்துக்கொண்டே பொன்னையாவின் முகத்தை நோக்கினாள் அவனது சுருண்ட முடி வரண்டிருந்தது. பெனியன் அணியாது வெள்ளை சேட் போட்டிருந்தான். சேட் வியர்வையில் நனைந்து போயிருந்தது. வெள்ளை கால் சட்டையின் பொக்கெட்பக்கம் அழுக்கேறியிருந்தது. காலிலே விரல்களை மட்டும் மறைக்கும் பொலிஷ்ஷைக் காணாது காய்ந்த சாண்டல். அரைமீசை மட்டும் அவனுக்கு அழகாகவேயிருந்தது, அவனது குரலை ஆவலோடு கேட்டாள்.

''யு. என். பியோடு சேர்ந்தாலும் தொழிலாளரின் ஒன்றுபட்ட கோரிக்கைளும் பிரச்சனைகளும் முதலாளிகளை பயமுறுத்திக் கொண்டேயிருக்கும். தற்போது இடதுசாரிகளுச்கு இரண்டு மூன்று மந்திரிப் பதவிகளைக் கொடுத்து விட்டால் தொழிலாளரின் கூக்குரலெல்லாம் அமைதியாகி விடும். இது வைரத்தை வைரத்தால் அறுக்கும் தந்திரம்.''

''தொழிலாளர்கள் ஏமாற்றப்படப் போகிறார்கள் என்று சொல்லுகிறீர்களா?''

தேநீரை அருந்தியபடி மாலினி கேட்டாள்.

''லெனின் ஒரு முறைசொன்னார், 'எல்லா நீதி. ஒழுக்கம், மதம், அரசியல், சமுதாயப் பேச்சுக்கள், உறுதிமொழிகளின் பின்னாகவும் ஏதோ ஒரு வர்க்கத்தின் பிரதிபலிப்பு மறைந்திருப்பதைப் படித்துணரும்வரை மக்கள் எல்லா வேளையும் அரசியலில் ஏமாற்றப்பட்டு பலியிடப்பட்டேவந்திருக்கிறார்கள். எதிர்காலத்திலும் ஏமாறிக்கொண்டேயிருப்பார்கள்' என்று. இந்த வார்த்தைகளில் எவ்வளவோ உண்மையிருக்கிறது.''

பொன்னையா சொல்லிக்கொண்டே கடைசி முடறு தேநீரைக் குடித்துவிட்டு 'கப்'பை வைத்தான்.

மாலினி தேநீரைக் சிறிது சிறிதாக அருந்தினாள், பொன்னையாவை அன்று எதிர்பாராது கண்டது அவளுக்கு



ஓரளவு ஆறுதலாக இருந்தது. அவனை விரைவில் அனுப்பி விட அவள் விரும்பவில்லை. எப்படித் தனிமையில் கதைக்கலாம், மறுமுறை காண்பதற்கு எப்படி ஏற்பாடு செய்யலாம் என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

## 26

உரையாடலை வளர்ப்பதற்காக விக்கிரமனின் பக்கம் மாலினி திரும்பினாள்.

''என்ன மிஸ்டர் விக்கிரம; நீங்கள் எந்தக் கட்சி! ஒன்றுமே பேசாமல் இருக்கிறீர்கள், இருவரும் 'போரடி'க்க அவரது தியரி பேசிக் கொண்டிருக்கிறார். கூட்டரசாங்கத்தை நீங்கள் வரவேற்கவில்லையா?.'

''என்ன மாலினி, பத்திரிகைக்கு இன்ரர்வியு பண்ணுறியோ?,'

பொன்னையா இடைமறித்துக் கேட்டான்.

''அப்படித்தான் வையுங்களேன். பொதுமக்கள் அபிப்பிராயத்தையும் அறிந்து வைப்பது எங்கள் தொழிலல்லவா?''

''உங்கள் கருத்துக்குச் சார்பாக ஒரு கடிதம் வந்தால் ஆயிரம் கடிதம் வந்ததாக எழுதுவதுதானே உகிக பத்திரிகா தர்மம்.''

மாலினி விக்கிரமாவின் முகத்தைப் பார்த்தாள். அவன் சிகரெட்டை ஒரு தடவை உறிஞ்சி கையில் எடுத்துக் கொண்டே சொன்னான்:

''முதலில் இந்த முதலாளித்துவப் பத்திரிகைகளின் பொய்ப் பிரசாரங்களை ஒழிக்க வேண்டும். அதுக்காக

வாயினும் கூட்டரசாங்கம் வருவதையே நான் விரும்பு கிறேன்,''

''முதலில் என் வேலையே போய்விடும். இவர் எடிட்டர் இன் சீவ்வாக வருவார், என் வேலையும் நீடிக்கும் என்றெல்லோ மனக்கோட்டை கட்டினேன். இப்ப அதுவும் உடைந்துவிட்டது, கூட்டரசாங்கத்திற்கு எதிராக இப்பொழுதே பேசத் தொடங்கிவிட்டார்.''

மாலினி சிரித்துக்கொண்டே நயமாகச் சொன்னாள்.

''சுதந்திரக் கட்சியில் இடது பக்கத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். யூ.என். பியோடு சேராது எம்மை அழைக்கும்போது சுதந்திரக் கட்சியை இடது பக்கமாக ஈர்க்கவல்ல இந்த அரிய சந்தர்ப்பத்தை நாம் ஒருக்காலும் விடப்படாது. சுதந்திரக் கட்சியை வெறும் முதலாளிக் கட்சி என்று சொல்லிவிட முடியாது. அவர்கள் வந்த பிறகே தொழிற்சங்க இயக்கம் இந்த நாட்டில் வேகமாக வளர்ந்தது. பஸ், துறைமுக வேலைகள், இன்சுரன்ஸ், எண்ணெய் யாவையும் தேசீய மயமாக்கினார்கள். கூட்டுச் சேர்ந்தால் இதைத் தொடர்ந்து இன்னும் எத்தனையோ சாதிக்கலாம். தொழிலாளரின் சர்வாதிகார ஆட்சியைக் கூட சிலவேளை ஏற்படுத்திவிடலாம்.''

விக்கிரம மாலினியைப் பார்த்துச் சொன்னான்.

''லாபம் தரும் தொழில்களைத் தேசீயமாக்குவதை எந்த அரசாங்கமும் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அது இங்கு மட்டுமல்ல. முதலாளித்துவ ஆட்சி நடைபெறும் ஆசிய நாடுகள் பலவற்றில் முன்பே செய்துவிட்டார்கள். இந்தியா, எகிப்து, பர்மா, இந்தோனேசியா- இப்படி எத்தனையோ நாடுகளில் பலவற்றை தேசீயச் சொத்தாக்கியிருக்கிறார்கள். இங்கும் ஏற்கெனவே ரெயில், தபால், மின்சாரம் எல்லாம் அரசாங்கச் சொத்தாகவே கொலோனியல் ஆட்சிக் காலத்தில்கூட இருந்து வந்தது.''



பொன்னையா விக்கிரமவின் காரணங்களை மறுத்தான். நண்பர் இருவரிடையேயும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதை மாலினி ரசித்துக்கொண்டே கேட்டாள்:

''முற்போக்குச் சக்திகள் ஒன்றுபடுவதை நாம் ஏன் தடுக்க வேண்டும்?''

''தம் கையில் கிடைத்த ஆட்சியை, தொடர்ந்து தொழிலாளிகளின் தொல்லையில்லாது ஆளுவதற்கு விரும்பும் ஆதிக்க ஆசை பிடிந்தவர்களின் வலையில் தொழிலாளர்கள் விழுந்துவிடப்படாது,''

'நீங்களிருவருமே இப்ப போராடி விடுவீர்கள் போலையிருக்கு. இத்தோடு இந்த விவாதத்தை இன்று நிறுத்திக் கொள்வோம்.''

மாலினி விவாதத்தை இடைமறித்து பொன்னையாவைப் பார்த்துக் கேட்டாள்:

''இப்போது எந்த வழியாகப் போகிறீர்கள். நீங்கள் இன்னும் இரட்மலானையில்தானா இருக்கிறீர்கள்?''

மாலினி விக்கிரமாவைப் பார்த்துவிட்டுப் பொன்னையாவின் பதிலை எதிர்பார்த்தாள். வெயிட்டர் ஏழுபது சதத்திற்குப் பில் கொண்டு வந்தான். பொன்னையா தன் பழைய பர்சைத் திறந்து எண்பது சதத்தைச் சில்லறையாக எடுத்து வைத்தான். மூவரும் எழுந்தனர்,

''நான் இன்னும் இரட்மலானையில்தான். விக்கிரம பாணந்துறைக்குப் போகவேண்டும் நாங்கள் இருவருமே சீசன் டிக்கெட் வைத்திருக்கிறோம், ரெயிலுக்குப் போக வேண்டும்..'

''நீங்கள் இன்றைக்கு மட்டும் பஸ்ஸில் வந்தாலென்ன?''

மாலினி மென்மையாகக் கேட்டாள்.

''முப்பத்தைந்து சதம் வீண் செலவல்லவா?''

''நான் டிக்கெட் வாங்கித் தருகிறேனே.''

''பெண்ணிடம் பணம் வாங்கிச் செலவழிக்கும் பழக்கம் என்னிடமில்லை.''

''சரி நீங்களே டிக்கெட்டை எடுங்கள். எனக்காக பஸ்ஸில் வாருங்கள்,''

''தோழரை விட்டுவிட்டா?''

''நான் ரெயிலுக்குப் போகிறேன். நீங்க பஸ்ஸில் வாங்க. நாளைக்குச் சந்திப்போம்..'

விக்கிரம பதிலை எதிர்பாராமலே மாலினிக்குக் கையைக் காட்டிவிட்டு நடந்தான். மாலினியும் பொன்னையாவும் எதிரேயிருந்த பஸ் நிலையத்திற்குச் செல்ல இருபுறமும் பார்த்துத் தெருவைக் கடந்தனர்.

ரீகல் தியேட்டரில் மெட்னிக் காட்சி முடிந்து கூட்டம் ஓடிவந்தது அவர்களைத் தொடர்ந்து கார்களும் டாக்சிகளும் போக்குவரத்தையே தடைசெய்தன.

பாணந்துறை இரண்டு, தட்டு பஸ் ஒன்று வந்து நின்றது. எல்லோரும் நெருக்கியடித்துக் கொண்டே ஏறினர். மாலினியும் பொன்னையாவும் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டனர். உள்ளே இருக்கவே இடமில்லை. வாயிலில் நெரிபட்டுக் கொண்டு நின்றனர். தனிமையாகப் பல விஷயங்கள் பேச வேண்டும் என்ற மாலினியின் திட்டம் வீணானது பல மாதங்களின் பின் அவனோடு ஸ்பரிசித்துக் கொண்டு நிற்கும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மனம் ஓரளவு திருப்தியடைந்தது. அவனே இரு டிக்கெட்டுகள் வாங்கிக் கொண்டான்.

''உங்களோடு ரொம்பப் பேசவேண்டும் எப்ப சந்திக்கலாம்?''



''நாலைந்து நாட்கள் பிஸியாயிருப்பன். அதன்பிறகு டெலிபோன் பண்ணேன்''

''என்ன நம்பர்?''

அவன் சொல்லிய நம்பரை அவள் மனனம் செய்து கொண்டாள்.

கொம்பனித் தெரு வந்ததும் அவளுக்கு ஒரு சீட் கிடைத்தது உட்கார்ந்தாள். பொன்னையா முன்புறமாகப் போக நேர்ந்தது. அவன் அருகே நிற்கவோ உட்காரவோ வாய்ப்புக் கிடைக்காததிற்காக நொந்து கொண்டாள்.

பம்பலப்பிட்டியில் அவள் இறங்கும்போது அவன் கையை உயர்த்திச் சிரித்தான். அவனைப் பிரிவதில் வேதனையும் சந்தித்ததில் ஒரு வகைக் குதூகலமும் மனதில் நிறைந்தன.

தத்தளிப்பவனுக்குச் சிறு துரும்பு கிடைத்ததுபோல அன்று கிடைத்த சிறு நம்பிக்கை அவளைக் காற்றில் மிதக்கச் செய்தது. இன்ப நினைவலைகளோடு உடைகளையும் மாற்றாது மெத்தையில் படுத்தபடி கனவுலகில் ஆழ்ந்தாள்.

## 27

**தா**ன் தங்கியிருந்த இடங்களிலிருந்து நாகரத்தினம் அனுப்பிய படங்கள் கொண்ட தபாலட்டைகள் மாலினிக்கு வந்து கொண்டிருந்தன. விமானத்தாள் கடிதங்களும் வந்தன. தான் மறக்கவில்லை எனவும் நினைக்கும் போதெல்லாம் நெஞ்சு வலிப்பதாகவும் எழுதியிருந்தார். தமது பிரயாணம் இரண்டு வாரம் தாமதமாகலாம் எனவும் அரசியல் விஷயங்களை லண்டனுக்கு எழுதும்படியும் பிரான்சிலிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

பொன்னையாவைச் சந்தித்ததால் ஏற்பட்ட, ஆறுதலால் நாகரத்தினத்தின் பிரிவு அவளுக்கு அத்தனை பெரிதாகத் தோன்றவில்லை,

மாலினி மூன்று தடவை பொன்னையாவிற்கு டெலி போன் செய்தும் ஏமாற்றமே கிடைத்தது. ஒரு தடவை அவ்வேளை அங்கு இல்லை என்றார்கள். மறு தடவை லீவு என்று தெரிவித்தார்கள். சுகவீனம் என்ற செய்தி மனதைச் சுட்டது. யூனியன் அலுவலாகவும் லீவுக்காக மெடிக்கல் செர்ட்டிபிக்கெட் அனுப்பியிருக்கலாம்; இவர்கள் சுகயீனம், என்று சொல்லுகின்றனர் என மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டாள்.

இந்நிகழ்ச்சிகளால் மனம் பல்வேறு சுழல்களில் அகப் பட்டு முடிவுகாண முடியாது சுழன்றது. நாகரத்தினத்தை இதயத்திலிருந்து கிள்ளி எறிந்துவிட முடியாது தவித்தாள்; அவரைத் திருப்திப்படுத்துவதற்காக ஒருநாள் மாலையில் செல்வி பவனத்திற்குச் சென்றாள். அவ்வேளை இந்திரா டிரெஸ் பண்ணிக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். செல்வியும் மேரியும் வந்து பேசிக்கொண்டிருந்தனர். தனக்கு தந்தையார் அனுப்பிய படங்களையெல்லாம் செல்வி கொண்டுவந்து காட்டினாள்.

பதினைந்து நிமிடங்கள் கழித்து இந்திரா கீழே இறங்கி வந்தாள்.

''ஐ ஆம் சொரி. நீங்க டெலிபோன் பண்ணிவிட்டு வந்திருக்கலாமே. நான் ஒரு பார்ட்டிக்கு இப்பவே போக வேணும். டீ சாப்பிட்டீங்களா? மேரி கேக் கொடுத்தியா? அந்தக் கட்லெட்டிலேயும் கொடு. மறந்து விட்டேனே. பேப்பரைப் பார்த்துவிட்டு எத்தனை பேர் பாராட்டினாங்கள். இங்கே ஒரே டெலிபோன் கோல்தான். எத்தனை விசிட் டேர்ஸ்? ரொம்ப தாங்ஸ். என்னைப் பெரிய பொப்புல ஃபிகராக்கி விட்டியள்.''

வாசலில் கார் நிற்கும் சத்தமும் ஹார்ண் ஒலியும் கேட்டது.



''இன்னொரு முறை கட்டாயம் வாருங்கள். டெலி போன் செய்ய மறக்காதையுங்கோ''

காரை நோக்கி சுறுசுறுப்பாக நடந்தாள். காரில் புல் சூட்டில் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் இருந்தனர். செல்வி தாயின் பின்னே சென்று கையைக் காட்டினாள்.

''துரை இருக்கேக்கையே ஆடுற நோனாவுக்கு இப்ப பூரண சுதந்திரம். தலைகால் தெரியாமல் ஆடுறா. இது எங்கை போய் முடியுமோ தெரியாது...''

செல்வி வந்ததும் மேரி பேச்சை நிறுத்தினாள், மாலினி தன் ஆவலை அடக்கிக் கொண்டாள்.

''அந்தக் காரிலை போற அங்கிள் எனக்கு ஒரு மவுத் ஓகன் தந்தவர். காட்டட்டா?''

செல்வி குழந்தை போலவே கேட்டாள்.

''எப்ப தந்தவர்?''

மாலினி சாவதானமாகக் கேட்டாள்.

''நுவரெலியாவிலை நின்றமெல்லே, அப்ப''

''கொண்டுவந்து வாசித்துக் காட்டுங்கோ பார்ப்பம்.'

செல்வி படிக்கட்டு வழியே மேலே ஓடினாள்.

''இந்தப் பெரிய இடத்து விஷயங்களை அறிஞ்சா நீங்க நம்பமாட்டீங்க. நோனா, வெக்கம், மானம், மரியாதை எண்டு ஒண்டுமே இதுகளுக்குக் கிடையாது. இது தமிழ் நாகரிகமுமில்லை. சிங்கள நாகரிகமுமில்லை. வெள்ளைக் காரன்ரையுமில்லை எல்லாம் கலந்த சாம்பார். பன்னி ரண்டு, ஒரு மணிக்கு மேலேயும் வெளியை ஆடிப்போட்டு வருவாங்கள் காலையிலை ஒன்பது மணிவரையும் தூங்கு வாங்கள் ஆறுமணிக்குக் கோப்பியைக் கொண்டுபோய் எழுப்பிக் கொடுக்கவேண்டும். குடிச்சிட்டுப் படுப்பாங்கள்.

இந்தப் பொடியனிட்டையே நான் கோப்பியை கொடுத்து அனுப்புறேல்லை அங்கை கோப்பியைக் கொண்டுபோனால் அவங்கள் படுத்திருக்கிற மாதிரியைப் பார்த்தா எனக்கே கண் கூசுது. அதைப் பார்க்கிற உந்தப் பிள்ளையள் எப்பிடி ஒழுக்கமாய் வளரப் போகுதோ தெரியேல்லை...''

செல்வியைக் கண்டதும் மேரி பேச்சை நிறுத்தினாள்.

செல்வி மவுத் ஓகனைக் கொண்டுவந்து படித்துக் காட்டினாள். மாலினி பாராட்டினாள். சிறிது நேரம் கழிந்தது, மாலினி வீட்டுக்குப் போக எழுந்தாள்.

''இன்னும் கொஞ்ச நேரம் இருந்திட்டுப் போங்க அன்ரி. விளையாட எனக்கு ஒருத்தருமில்லை.''

''ஏன், அக்கா எங்கை?''

''இன்னும் மெடிக்கல் கொலிஜால் வரேல்லை''

மேலும் பத்து நிமிடங்கள் செல்வியோடு பேசிக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் பியானோ வாசிக்கச் செய்து கேட்டாள். கைதட்டிப் பாராட்டிவிட்டு மாலினி விடை பெற்றாள்,

''டிரைவர் சில்வா எங்கே?''

கேட்வரை நடந்துவந்த மேரியை மாலினி கேட்டாள்.

''வீட்டிலை ஒண்டுக்கு இரண்டு காரிருக்கு. டிரைவரை நாலுமணிக்கே வீட்டை அனுப்பிப் போட்டு இந்த நோனா ஊரவங்கடை காரிலை சுத்துது. இதுகளையெல்லாம் நான் ஒருத்தருக்குமே சொல்லுறேல்லை நோனா. நீங்க இளகின மனம் படைத்த என்னைப் போன்ற பெண் எண்டுதான் மன ஆறுதலுக்குச் சொல்லுறன் நோனா''

அவர்கள் வீட்டு ஒழுக்கங்கள் பற்றிய விஷயங்களைத் துருவிக் கேட்க அவள் மனம் சிறிது கூசியது.



''என்ன செய்கிறது? ஒவ்வொரு குடும்பத்திலை ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி. எங்களுக்குச் சரியாகப் படுறது அவங்களுக்குப் பிழையாயிருக்கும், அவங்களுக்குச் சரியாய் இருப்பது எங்களுக்குப் பிழையாய் தெரியும்.''

''என்ன நோனா சொல்லுறியள். பியசேனா எண்ட அந்த வளந்த பெடியனைக் கூப்பிட்டு கால் பிடிக்கிறதா அத்த நோனா நான் ஒருத்தி பெண் இருக்கிறன் கூப்பிடப் படாது. அதைச் சரியென்று சொல்லுறதா, நோனா இதொண்டு மட்டுமா? இப்பிடி எத்தனை கூத்தம்மா.''

மேரியைச் சாந்தப்படுத்தச் சில வார்த்தைகளைக் கூறி விட்டு மாலினி புறப்பட்டாள். புறப்படு முன் மாலினியின் வீட்டு விலாசத்தை மேரி எழுதி வாங்கிக் கொண்டாள்

# 28

தெருவெல்லாம் தொழிலாளர் கூட்டம் நெரிந்து கொண்டிருந்தது. பொன்னையா ஒதுக்குப்புறமாக நின்று பார்த்துக்கொண்டு நின்றான். அவன் மனதில் அமைதியில்லை, ஆழ்ந்த சிந்தனை. நெற்றியிலிருந்து வடிந்த வியர்வையையே துடையாது கூட்டத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரி சமசமாஜிக் கட்சிக்கும் இடையில் பதின்நாலு அம்சத்திட்டத்தில் ஒற்றுமை ஏற்பட்டது.

கூட்டரசாங்கம் அமைப்பதை எதிர்த்து சமசமாஜிக் கட்சியின் புரட்சி வாதிகள் என ஒரு பகுதியினர் வேறாகப் பிரிந்தார்கள். யூன் 16-ம் திகதி சுதந்திரக் கட்சியும் இடதுசாரி சமசமாஜக்கட்சியும் கூட்டரசாங்கம் அமைத்தனர். புதிய அமைச்சரவை அன்று கவர்னர் ஜெனரலின் ராணி மாளிகையில் சுப நேரத்தில் மாட்சிமை தங்கிய எலிசபெத்

மகாராணிக்கும் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்திற்கும் விசுவாசமாகச் செயலாற்றுவதாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இலங்கையில் தொழிலாளரின் புதிய யுகம் பிறந்து விட்டதாகப் பெரும்பான்மையான மத்தியதர, சாதாரணத் தொழிலாளர்கள் யாவரும் ராணி மாளிகைக்கெதிரே கூடி ஆர்ப்பரித்தார்கள்.

இடதுசாரி அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் முடிந்ததும் வெளியே நடந்து வந்தார்கள். நாட்டில் தொழிலாளி வர்க்க ஆட்சி ஏற்பட்டதாக அவர்களை வானளாவ வாழ்த்தி, மாலை சூட்டி, தோள் மேலேற்றி. ஜனத்திரளிடையே ஊர்வலமாகக் கொண்டு திரிந்தனர்.

ஒதுக்குப்புறமாக நின்ற பொன்னையா யாவையும் வேதனையோடு வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"தொழிலாளர் ஆட்சி நீடூழி வாழ்க"

"இலங்கைத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்".

"உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்"

"புரட்சி ஓங்குக"

பொன்னையாவின் அருகே நின்ற விக்கிரமவும் சத்தமிட்டான். பொன்னையாவின் நினைவில் இதுபோன்ற உலக வரலாற்றுக் காட்சிகளெல்லாம் கண் முன் நின்றன.

பிரெஞ்சுப் புரட்சிகள், ரஷ்ய நாட்டுக் கூட்டாட்சிகளின் போது ஏற்பட்ட பரபரப்புகள் திரைப்படம்போல மனதில் ஓடின. அந்நிகழ்ச்சிகள் பற்றிய நூல்களையெல்லாம் அவன் பல தடவை படித்திருந்தான். மீண்டும் அவனுக்கு லெனினின் வார்த்தைகளே நினைவில் வந்தது!



"...எல்லாவற்றின் பின்னேயும் ஒரு வர்க்கத்தின் சுயநலம் மறைந்திருப்பதை உணர்ந்தறியும் வரை மக்கள் அரசியலில் ஏமாற்றப்பட்டார்கள். ஏமாற்றப் பட்டுக் கொண்டேயிருப்பார்கள்"

அவன் நெஞ்சம் பொருமி வேதனைப்பட்டது, இந்தக் கூட்டரசாங்கத்தின் வர்க்கமென்ன? இதை உணர்ந்தறியாத தொழிலாளர்கள் எப்படி ஏமாற்றப்படுகிறார்கள்? இதற்கு விடிவு இல்லையா? தொழிலாளர்களை, அவர் கோரிக்கைகளைப் பணயம் வைத்து விஷப் பரீட்சை செய்கிறார்களா? உண்மையில் இவர்கள் தொழிலாளர்களின் தலைவர்கள் தானா? தொழிலாளி வர்க்கத்தைச் சேராத தலைவர்களா?

கூட்டம் சிறிது சிறிதாகக் கலைந்தது. விக்கிரம குதூகலத்தோடும் புத்துணர்வோடும் நடந்தான். பொன்னையா சோர்வோடும் ஆழ்ந்த யோசனையுடனும் அவனருகே தலைகுனிந்தபடி நடந்தான்.

"ஏன் பொன்னையா கூட்டாட்சியைத்தான் விரும்பா விட்டாலும் நாட்டின் அரசியல் வரலாற்றில், இது ஒரு முற்போக்கான கட்டமென்றாவது நீ வரவேற்கப்படாதா!".

"அப்படி வரவேற்பது சரி. ஆனால் இனிமேல் தான் உங்க கட்சி மிக விழிப்பாக இருக்க வேண்டும்"

"போப்பா போ. இனி இந்த முதலாளித்துவத்தாலை என்ன செய்ய முடியும்? இருந்துதான் பார்ப்பமே."

விக்கிரம கையை உயர்த்திச் சொன்னான். பெருமிதத்தால் ஏற்பட்ட பூரிப்பில் அவன் மிதந்து கொண்டிருந்தான்.

"என் அறிவுக்கு எட்டிய வரை தொழிலாளர்களின் புரட்சியால் தான் தொழிலாளரின் ஆட்சியை நிலைநாட்ட முடியும். தேர்தல் முறையால் நிலைநாட்ட முடியாது. இப்போது நடைமுறையிலிருக்கும் தேர்தல் முறையெல்லாம்

முதலாளித்துவத்தின் கைப் பொம்மைகள். இதன் மூலம் தொழிலாளரின் ஆட்சியை ஏற்படுத்த முடியாது''

கூட்டரசாங்கத்தைப் பொன்னையா முழு மனதோடு ஆதரிக்காததினால் தொழிலாளரிடையே அவன் மதிப்புச் சிறிது குறைந்திருந்தது. ஓராண்டு காலமாக இலங்கைத் தொழிலாளர் அனைவரின் ஒரே முகமான முன்னணியை அமைப்பதில் ஈடுபட்டு அவன் வெற்றி கண்டான்.

ரப்பர், தேயிலைத் தோட்டத் தொழிலாளர் உட்பட தொழிலாளர் அனைவரும் இலங்கையில் முதல் தடவையாக ஒரு முகமாக நின்று இருபத்தொரு கோரிக்கைகளை முன் வைத்துப் போராட்டத்தை ஆரம்பிக்கத் தொடங்கிய மூன்று மாதங்களிடையே ஏற்பட்ட பிரிவினை அவனைக் கவலைக் குள் ஆழ்த்தியது. தொழிலாளர்கள் தம் ஏமாற்றத்தை ஒரு சில மாதங்களிலாவது உணரத் தொடங்கலாம். அது வரை ஒதுங்கியிருப்பதே நல்லது என பொன்னையா எண்ணிக் கொண்டே சோர்வோடு நடந்தான்.

## 29

அன்று மாலை, பல தடவைகள் முயன்ற ஏமாற்றத்தின் பின் மாலினி பொன்னையாவை டெலிபோனில் பிடித்துக் கொண்டாள்,

''உங்கள் தலைவர்களோடை சேர்ந்து நீங்களும் பெரிய மனுஷராகிவிட்டீர்களோ, அன்று கூறியதை அம்படியே மறந்துவிட்டீர்கள். டெலிபோன் பண்ணினாலும் ஆளில்லை. இவையெல்லாம் பெரிய மனிதர்களாகிறவர்களின் குணங்கள்.''

'இன்று டெலிபோனில் பிடித்ததிலிருந்தாவது நான் சிறியவனாகிவிட்டேன் என்று தெரியவில்லையா? '



''என்னைப் பொறுத்த வரையிலே நீங்கள் இன்னும் பெரிய மனிதரே. எப்பொழுது சந்திக்கலாம்?''

''உனக்கு வசதியுள்ள வேளையெல்லாம்''

அவனின் பதிலை மாலினி நம்பவில்லை. அவனைப் பரீட்சிக்கும் விதமாகவே கேட்டாள்.

''இன்று மாலையில்''

''சரி'

''எங்கே?''

''நீ அழைக்கும் இடத்தில்''

''ஐந்து மணிக்கு நாஷனல் கபேயில். ஏமாற்றப் படாது.''

''சரியம்மா''

''நான் அம்மா இல்லை''

''சரி மாலி''

அவனது முடிவு எதிர்பாராத இன்பமாக இருந்தது.

மாலினியின் நினைவு அவன் கவலையைச்சிறிதுகுறைத்தது. மாலையில் சரியான நேரத்திற்கு அங்கு சென்றான். அவன் கபேயை நோக்கிச் செல்வதை மாடியிலிருந்து பார்த்துவிட்டு அவள் கீழே இறங்கி அவனைத் தொடர்ந்தாள். அவன் ஒதுக்குப் புறமாக உட்கார்ந்த சில கண நேரத்தில் அவள் வந்து உட்கார்ந்தாள்,

இளைத்துப் போயிருந்த அவனின் தோற்றத்தைப் பார்த்து அவள் கவலையடைந்தாள். அவன் முகத்திலே முன்னிருந்த களை இல்லை.

''என்ன இரண்டு மூன்று வாரத்திலே இப்படி வாடி விட்டீர்கள். முகத்திலே கவலைக் கோடுகள், என்ன கவலையோ?''

''ஒன்றுமில்லையே''

''ஏன் மறைக்கப் பார்க்கிறீங்கள்?''

''மறைப்பதற்கு என்ன இருக்கிறது? அதைப்பற்றிப் பின்னர் பேசுவோம். இப்போது நீ ஏன் அழைத்தாய் என்று சொல்லேன்''

தன் விருப்பத்தை மறைத்துக்கொண்டே சொன்னான்.

'உங்களுக்கு ஒரு விருந்து தரப்போகிறேன். அதற்காக''

''என்ன ஒக்கேஷனோ''

''அதைப்பற்றியும் பிறகு பேசுவோம். இப்போது என்ன விருந்து வேணும்?''

''அப்ப கேக்கும் பியரும் வாங்கிக் கொடு''

''வெயிட்டரிடம் சொல்லி கேக், ஒருபோத்தல் பியர், காப்பி வரவழைத்தாள். அவன் பியரை சுவைத்துப் பருகிக் கொண்டே இடையிடை கேக்கை எடுத்துச் சாப்பிட்டான். அவன் பியரைக் குடித்து முடிக்கு முன்னரே சிகரெட்டுக்குச் சொல்லியனுப்பினாள். சிகரெட்டொடு பில்லையும் கொண்டு வந்து ஒரு தட்டில் வெயிட்டர் வைத்தான். பத்து ரூபா நோட்டு ஒன்றை தன் கைப் பையைத் திறந்து எடுத்து வைத்தாள்,

''சரி இப்பவாவது சொல்லன். எதற்காக இந்த விருந்து?''

''நீங்க என்ன கவலை முதலில் சொல்லுங்கோ.''

''நீ சொன்னதும் சொல்லுகிறேன்.''

''கூட்டரசாங்கம் ஏற்பட்டதற்காக.''

''நான் அதுக்காகவே கவலைப்படுகிறேன். என் கவலைக்கு நீ விருந்துவைப்பதுபோல்இருக்கிறது. இதனால்



தான் நாங்கள் மீட் பண்ணுவதற்கே ஒரு போயிண்ட் இல்லை என்று சொல்லுகிறேன்.''

ஏன் அப்படிக் கருதுறீங்க?''

''அண்டைக்கு இதே இடத்திலேயே இருந்து காரணம் சொன்னேன்- நான் குடிக்கிறேனே இந்த பியர் கம்பனி முதலாளி, அங்கே எரியுதே அந்த பல்ப் செய்யும் முதலாளி, நீ உடுத்திருக்கும் சேலையைத் தயாரித்த மில்காரன், ரயர், சோப், பிளேட் இப்படியான உள் நாட்டுப் பொருட்களைத் தயாரித்து நாட்டைக் கொள்ளையடித்துத் தொழிலாளர் களைச் சுரண்டிப் பணம் குவித்துக் கொண்டிருக்கும் புதிய உள்நாட்டு முதலாளி வர்க்கம் சிருஷ்டித்தகட்சியே சுதந்திரக் கட்சி, திடீரென அது தொழிலாளி வர்க்கக் கட்சியாகி விடுமா, நாம் ஆதரிப்பதற்கு. இந்தப் புதிய முதலாளி களெல்லாம் கூட்டாட்சி வந்தால் தொழிலாளருக்கு லாபத்தில் பங்கு கொடுக்கப் போகிறார்களா? வீட்டிலே வளர்த்த புலிகள் என்பதால் அவை பூனைகளாகி விடாது; இதே புலிகள் வளர்த்தவர்கள் மேலேயே இனிப் பாயத் தொடங்கும். கூட்டரசாங்கத்தின் மேல் உங்கள் முதலாளித் துவப் பத்திரிகைகளின் பாய்ச்சலிலேயே இதைக் காண லாமே? சுதந்திரக் கட்சியை ஆதரித்த பத்திரிகைகளே இப் பொழுது எதிராகச் சீறத் தொடங்கிவிட்டன. சுதந்திரக் கட்சி இதால் அழிவதைப் பற்றி அதிகக் கவலை எனக்கு கிடையாது. தொழிலாளி வர்க்கம் பொய்மைத் தோற்றத் தில் மயங்கி இந்த அறியாமைக்குப் பலியிடப்படுவதுதான் கவலையாயிருக்கிறது.''

''தனி மனிதர் கவலை எதையும் சாதித்து விடாது. பொது வாழ்வின் நினைவில் நீங்கள் உங்கள் தனி வாழ்வை யும் சுகத்தையும் வீணாகத் தியாகம் செய்கிறீர்கள்.''

''என் வாழ்க்கைக்காகக் கவலைப்படுவதற்கு நன்றி. அதுவும் யோசிக்க வேண்டிய விஷயமே. நினைவூட்டிய தற்கு மிக நன்றி. அடுத்த நிகழ்ச்சி என்னவோ?''

''இப்படியே சென்று கோல்பேஸ் கடற்கரையால் நடந்து காலி வீதியில் பஸ் ஏறுவோம்''

''சரி''

இருவரும் எழுந்து நடந்தனர். பத்திரிகை நிலையத்து நண்பர்கள், அங்குள்ள தொழிற்சங்க வேலைகள் பற்றியெல்லாம் பொன்னையா விசாரித்தறிந்தான்.

''நான் பயங்கரமான பேர் வழியாக உங்கள் மனேஜிங் டிரெக்டரால் கருதப்பட்டவன். நீ என்னோடு கதைப்பதை அறிந்தாலே உன்னை வேலையிலிருந்து நீக்கிவிடுவானே?'

''அப்படிச் செய்தால் நல்லதாய்ப் போச்சு. நீங்கள் எங்காவது ஒரு பக்டரியிலையாவது ஒரு வேலை தேடித் தருவீங்க.''

''பக்டரியிலை வேலை செய்தாலும் உன்னுடைய பணக்கார மனோபாவம் மாறுமோ என்பது சந்தேகம்.''

''ஏனப்படிச் சொல்லுகிறீங்கள்?''

''அது பரம்பரையாய் வரும் ஒரு சொத்து. மூளையிலேயே வேரூன்றிவிடுவது. அத்தனை சுலபமாய் அதை அழித்துவிட முடியாது. பக்டரியிலே வேலை செய்தாலும் என்ரை அப்பா அப்படியிருந்தவர், பாட்டா இப்படி வாழ்ந்தவர் என்ற குலப் பெருமைகள், அவர்களைப் போன்ற வாழ்வு வாழவேண்டும் என்ற மனோபாவங்களை அத்தனை விரைவில் ஒழித்திட முடியாது.''

''பிரதமர் சிறீமாவோவிலும் பார்க்க நான் மோசமா?''

''அத்தனை மோசமில்லை நீ. சிறீமாவோ நிலப்பிரபுத்துவத்தின் பிரதிநிதியல்லவா. வெள்ளைக்காரன் தன் பொருளாதார ஆக்கிரமிப்பை நீடிக்க நிலப்பிரபுக்களிடம் 1948-ல் சுதந்திரம் என்ற பெயரில் ஆட்சியைக் கொடுத்தான். அவர்களிடையே குடும்பச் சண்டை போட்டுப் பிரிந்து கட்சி அமைத்து ஆட்சிக்கு வந்தவர்தானே பண்டார நாயகா. இந்த நாட்டின் அரசியல் வளர்ச்சியைப் பார்த்தால் சுதந்திரம் பெற்று பதினாறு வருடங்களாகியும் இரு குடும்பச் சொத்தாகவே இந்த நாடு இன்னமும் இருக்கிறது. சேன நாயகா குடும்பம் பண்டார நாயகா குடும்பம்''



''பண்டார நாயகா இந்த நாட்டிலை புரட்சியை ஏற்படுத்தவில்லையா?''

''முதல் தடவையாக தேசீய உணர்ச்சியைத் தட்டி எழுப்பி வெகுஜன இயக்கமாக மக்களை அரசியலில் பங்குபற்றச் செய்தவர் அவரே. ஒரு நாட்டின் வளர்ச்சியை பொலிஸ், ராணுவத்தின் இறுக்கம் தேக்கமடையச் செய்துவிடலாம். எம் நாட்டில் அத்தேக்கத்தை உடைத்து இறுக்கத்தைத் தளர்த்தியவரும் அவரே.''

கோல்பேஸ் கடற்கரைக்கு இருவரும் வந்துசேர்ந்தனர். பொழுது மறைந்து விட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் மாறி மாறிப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தனர்.

''எனக்குக் கால் வலிக்கிறது. கொஞ்ச நேரம் உட்காருவோமா?''

''சரியம்மா.''

''நீங்க ஒரு புது மனுஷராகவே இருக்கிறீங்க. என்ன விஷயத்தை எடுத்தாலும் ஏதோ எல்லாம் புதிதான விஷயங்களையே சொல்லுறீங்க. இதையெல்லாம் எங்கே படித்தீங்க?''

''நான் உன்னைப்போல் செல்வத்தில் வளரவில்லை. ஏழ்மையில் பிறந்து ஏழ்மையில் உழன்று கொஞ்சம் முன்னுக்கு வந்தவன். என் அப்பா ஒரு சாதாரண விவசாயி. அவர்களது கஷ்டங்களை எனக்கல்லவா தெரியும். அக்கஷ்

டங்களையெல்லாம் நிரந்தரமாக ஒழிப்பதற்கு வழியறிவதற்காக படித்துக் கண்ட வழிகளே இவை. உனக்குத் தந்தேனே நூல்கள், அவற்றையெல்லாம் படித்தாயா?''

''டிரை சப்ஜெக்ற். படிக்கவே முடியவில்லை.''

''காதல் கதைகளையே படித்து இன்னும் கனவுலகத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்பது தெரியுது. சரி அவையெல்லாம் கிடக்கட்டும். நீ பேச இருப்பதைப் பேசு.''

''நீங்கதானே பேசிக்கொண்டே இருக்கிறீங்களே. அதையே கேட்டுக் கொண்டேயிருக்கலாம்''

''ஏதோ எல்லாம் கனக்கப் பேச வேண்டுமென்று அழைத்தாய். இப்போது மௌனமாயிருக்கிறாய்.''

மாலினியின் முகத்தில் புன்னகை அரும்பியது. கால்களை நீட்டியபடி கடலையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தாள். அவனும் பார்த்தான். அவன் எதுவுமே பேசவில்லை. நீண்ட மௌனம். அவள் அவனருகே நெருங்கியிருந்தாள்.

## 31

''மாலினி ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். இன்று நீ ரொம்ப அழகாயிருக்கிறாய். உன் புன்னகையும் பற்களும் முல்லை மொட்டுகள் விரிந்தால் போலை கிடக்கு''

பொன்னையா குமிழ்சிரிப்போடு சொன்னான்.

''உங்களுக்கெல்லாம் அழகைக்கூட ரசிக்கத் தெரியுதா? என்னிலே அப்பிடி என்ன அழகைப் பார்க்கிறீங்க''

''ஏன் நாங்கள் மனிதர்களில்லையா? நல்ல கொண்டையெல்லாம் போடுறாய். கழுத்து மூங்கில் போலையிருக்கு''



''இதயம், கலை உணர்ச்சி, மென்மையான உணர்வுகள் உள்ளவர்களல்லவா மனிதர்கள்''

''எங்களுக்கும் அவ்வுணர்ச்சிகளெல்லாம் உள்ளன. இதயமுமிருக்கிறது. நிதானமாக, தேவை ஏற்படும்போது மட்டுமே எம் இதயத்தைக் காட்டுவோம். அவற்றை சுயநலத்திற்காகவும் தமது பொழுது போக்கிற்காகவும் பயன்படுத்துபவர்கள் நாகரத்தினம் போன்ற முதலாளிகள், சுரண்டல்காரக் கயவர்கள்''

''ஏன் அவரையும் முதலாளித்துவத்தையும் இதற்குள்ளே இழுக்கிறீர்கள்''

''அவரைக் கொஞ்சம் தெரியும் என்று அன்று மழுப்பினாயே. அவரோடு காரிலே சுற்றித் திரிவதொன்றும் எனக்குத் தெரியாதென்று நினைக்காதே''

மாலினிக்கு அந்தச் செய்தி அதிர்ச்சியாகவே இருந்தது. இனி மறைப்பதில் பயனில்லை என எண்ணிக் கொண்டாள்.

''சரி, அவரது காரிலே போவதால் இப்ப என்ன வந்து விட்டது?''

''அவனோடு சுற்றுவதுதானே, பிறகு என்னை ஏன் தேடித் திரிகிறாய்?''

''நீங்கதானே என்னை வெறுத்தீர்களே. இப்போது அவரது காரில் போகிறேன் என்பதைக் கண்டதும் பொறாமை வருகிறதா?''

''ஓமோம் பொறாமைதான் வருகிறது, சரி போவோம்''

அவன் சொல்லிக்கொண்டே எழுந்து கோபத்தோடு நடந்தான். அவன் பின்னே ஓடிச் சென்று அவனது கையைப் பிடித்தாள்.

''ஏன் பொன் இப்பிடியெல்லாம் கோபிக்கிறீங்க''

''நான் கோபிக்கவில்லையே''

நடந்தபடியே சொன்னான்.

''அப்ப ஏன் ஓடுறீங்க?''

''வீட்டுக்குப் போக நேரமாகிவிட்டது.''

''உங்களோடு விரைவாக என்னால் நடக்க முடியாது. கொஞ்சம் மெதுவாக நடவுங்களேன்.''

அவன் மெதுவாக நடந்தான். இருள் சூழ்ந்து விட்டது. அவனது கரத்தைப் பிடித்து தன் கையோடு பிணைத்தபடி அவள் நடந்தாள். ஒரு தடவை அவனது கரத்தை எடுத்து தன் கன்னத்தைத் தடவிக் கொண்டாள்.

''பொன். நான் உங்கள் மேல் என் இதயத்தையே பறி கொடுத்திருப்பது தெரியாதா?'

''..............''

''ஏன் பேசாமலிருக்கிறீர்கள்.''

''நீ உணர்ச்சி மயக்கத்தில் பேசுவதற்கு நான் என்ன பதில் சொல்வது.''

''இது உணர்ச்சி மயக்கமா?''

''இல்லை. அதற்கு வேறும் ஒரு அழகான பெயர் இருக்கிறது. அதுதான் காதல்,''

''ஒருவரை மனமாரக் காதலிப்பது தவறா!''

''நாகரத்தினமும் உன்னை மனமாரக் காதலிக்கிறார் தானே, அது தவறா?''

''ஏன் இப்படியெல்லாம் பேசி என் இதயத்தைப் புண்ணாக்குகிறீர்கள்?''

''புண்ணாக்குவதற்காகவில்லை. உனக்குத் தெளிவு ஏற்படுத்துவதற்காகவே இப்படிக் கேட்கிறேன்.''



பஸ் நிலையத்திற்கு இருவரும் வந்து சேர்ந்தனர். பஸ் ஒன்று வந்து நின்றது. மேலே ஏறி இருவரும் உட்கார்ந்து கொண்டனர். எக்ஸ்பிரஸ் பஸ் விரைவாக ஓடியது. அவனது கரத்தைத் தன் விரல்களிடை கோர்த்தபடி அவனோடு உராய்ந்துகொண்டே இருந்தாள். அவன் அவ்வேளையும் சலனமெதுவும் ஏற்படாது நிதானமாக எதிரே பார்த்தபடி இருந்தான்.

''மாலினி, ஒன்று மட்டும் உனக்குச் சொல்லுவேன். நாகரத்தினத்தோடு காரில் போக வேண்டாமென்று சொல்ல நான் யார்? ஆனால் அவனோடு விழிப்பாகப் பழகு. அந்த வர்க்கமே வேறு. அதன் மனோபாவங்களை நீ உணர மாட்டாய்''

பஸ் பம்பலப்பிட்டிச் சந்தியிலே நின்றது. மாலினி கீழே இறங்கி நின்று புன்னகையோடு மேலே பார்த்துக் கை காட்டினாள். அவனும் கையை உயர்த்திக்கொண்டே சிரித்தான்.

அவன் இன்னும் விடுபடாத புதிராகவே இருந்தான். அவன் ஒதுங்க ஒதுங்க அவளின் காதல் உணர்வு மேலெழுந்து கொண்டிருந்தது. எப்படியும் அவனை வென்றுவிடலாம் என்றோர் நப்பாசை அவள் இதயத்தில் மீண்டும் வேரிட்டது.

## 32

நாகரத்தினம் மேல் நாட்டிலிருந்து திரும்பியதும் குவிந்திருந்த வேலைகளில் மூழ்கியிருந்தார். ஒரு நாள் மாலை மாலினியைக் காரில் அழைத்து வீட்டில் விட்டார். தான் அவளுக்காக வாங்கிவந்த சேலை, சென்ட், ஓடிகொலன், மற்றும் அழகுசாதனப் பொருட்களையும் அன்பளிப்பாகக் கொடுத்தார்.

வேலைகளெல்லாம் குவிந்து போயிருக்கின்றன. அவற்றை முடித்த பின்னர் ஓய்வாகச் சந்தித்துப் பேசுவோம்.''

நாகரத்தினம் சொன்னார். பொன்னையாவின் நட்பு திரும்பக் கிட்டியதால் அவரின் சந்திப்பை அவள் அத்தனை ஆர்வமாக எதிர்பார்க்கவில்லை. அவர் அவ்வாறு கூறிய போதும் ஏமாற்றமாகத் தோன்றவில்லை.

நாகரத்தினம் கூட்டரசாங்கம் ஏற்பட்ட பின் பெரிய மாற்றமெல்லாம் ஏற்பட்டிருக்கலாம் என்ற பயத்துடனேயே இலங்கைக்குத் திரும்பினார். ஆனால் வழமை போலவே யாவும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பின்னர் கூட்டரசாங்கத்தின் புதிய பட்ஜெட்டில் பெரிய மாறுதல்கள் இருக்கலாம் என்று பயந்தார். அதிலும் பிரமாதமாக எதுவுமிருக்கவில்லை. ஒரு லட்சம் மதிப்புள்ள ஒரு வீட்டுக்கு மேல் வைத்திருப்பவர்கள் மேலதிக வீடுகளின் பெறுமதியில் ஆண்டுதோறும் பத்து வீத வரி செலுத்த வேண்டும் என்ற ஒரு அம்சமே நகரத்துச் செல்வரிடை ஓரளவு பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வரியும் அவரை எவ்விதத்திலும் பாரதூரமாகப் பாதிப்பதாகவில்லை. கட்டிய புது வீட்டைவிட மேலதிகமாக ஒரு சாதாரண வீடு மட்டுமே அவரிடமிருந்தது. அதையும் முன்பே பத்மினியின் பெயரில் எழுதி வைத்திருந்தார்.

பணங்களை வரியாகச் செலுத்தாது நுட்பமாக முதலீடு செய்து வருமான வரி ஆகியவற்றிலிருந்து தப்பிக்கொள்வதில் அவர் வல்லவராயிருந்தார். ஒவ்வொரு புதிய உள்நாட்டுக் கைத்தொழிலுக்கும் ஐந்து ஆண்டுகள் வரி விலக்கு இருந்தது. நாலு ஆண்டுகள் முடிந்ததும் சேரக்கூடிய மேலதிகலாபங்களைப் புதிய கைத்தொழில்களில் முடக்கினார். டிரைவர், கார்கள் ஆகியவற்றின் செலவுகளையெல்லாம் கம்பனிச் செலவில் காட்டிக்கொள்வார். மேலதிக



பணங்களை பிளாக்மார்க்கெட் விலை கொடுத்து ஸ்ரேலிங் பவுண், டொலர்வாங்கி சுவிட்சலாந்து, லண்டன் வங்கிகளில் மகனுடைய பெயரில் போட்டு வைத்திருந்தார். உள்நாட்டு வங்கிகளில் முடிந்த மட்டும் கடனெடுத்து வியாபாரத்திலும் கைத்தொழில்களிலும் முடக்கியிருந்தார்.

எவ்வகையாகவும் அரசாங்கத்தால் அசைத்துவிட முடியாதபடி குட்டி முதலாளித்துவத்தை அவர் அமைத்துக் கொண்டார்.

1956 ன் பின்னர் இரண்டு மூன்றுஆண்டுகளாக அவருக்குத் தமிழர், தமிழ் மொழி என்ற இனப் பற்றுகள் யாவும் இருந்தன. அவை சிறிது சிறிதாகப் பின்னர் மறைந்துவிட்டன. இலங்கையில் இருந்தால் தமிழ் மொழியிலேயே எல்லாம் படிக்க நேரும் என்பதற்காக தமது மகன் இராமநாதனை இங்கிலாந்திற்குப் படிப்பதற்கு அனுப்பினார்.

வியாபாரிகள், தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள் உயர்தர அரசாங்க உத்தியோகத்தாருடன் ஒன்று சேர்ந்து புதிய உலகம் ஒன்றில் அவர் வாழ்ந்து வந்தார். அவரது மனைவியாரும் அத்தகையவர்களுடனேயேபழகி விருந்துகள், பார்ட்டிகள், மேல்நாட்டு நடனங்கள், நைட் கிளப்புகள் ஆகியவற்றோடு ஒன்றி உல்லாசமாகப் பொழுதைப் போக்கி வந்தாள்.

இந்திராவைப்பற்றி அவரின் காதில் விழுந்த சிலசெய்திகளைப் பற்றியெல்லாம் அவர் துருவி ஆராய்வதை விட்டுவிட்டார். அவர் நேரடியாக இந்திராவுடன் மோதுவதில்லை. எதுவுமே அறியாதவர்போல நடித்துக்கொள்வார். ஏதாவது விஷயங்கள் பற்றி முரண்பாடு பற்றி வாதிடும் போது மட்டும் அவரின் காதில் விழுந்த கதைகளை ஆயுதமாகப் பாவித்து அவளின் வாயை அடக்கிக் கொள்வார். இதனால் இருவரும் பெரும்பாலும் மோதுதல் ஏற்படாத வகையில் தம் மனம் போலச் சுற்றித் திரிந்தனர். இருவரும்

அவசியமாக ஒன்றாகச் செல்லவேண்டிய திருமணங்கள், விருந்துகள், பார்ட்டிகள் ஆகியவற்றிற்கு மட்டுமே நடிகர்களாக ஒன்று சேர்ந்து செல்வர். இந்திரா அழைப்பவற்றிற்கு அவரும், அவர் அழைப்பவற்றிற்கு இந்திராவும் பெரும்பாலும் ஒப்புக்கொண்டு கணவன் மனைவியாக ஒரே காரில் சென்று தமது ஒற்றுமையையும் குடும்பச் சிறப்பையும் காட்டிக் கொள்வர்

அன்றிரவு இந்திராவின் தோழி ஒருத்தியின் வீட்டில் டின்னர் பார்ட்டிக்கு நாகரத்தினத்தையும் கட்டாயம் வரும்படி இந்திரா வற்புறுத்தி அழைத்தாள்

## 33

மாலினியை ஒரு நைட் கிளப்புக்கு அழைத்துச் செல்வதாக ஒருவாரத்தின் முன்னரே நாகரத்தினம் திட்டமிட்டிருந்தார். இந்திராவின் வற்புறுத்தலின் பேரில் அத்திட்டத்தைக் கைவிட்டு அவளோடு விருந்திற்குச் சென்றார். தமது இன்ப நினைவுகளைப் பாழாக்கியதால் அவரின் மனம் எரிந்து கொண்டேயிருந்தது. காரில் செல்லும்போது கூட அவர் அவளோடு அதிகம் பேசவில்லை. அவள் அவரின் கோபத்தைத் தணிக்க வேண்டிச் 'செய்யக்கூடிய சாகசமெல்லாம் மாலையிலிருந்தே செய்துகொண்டிருந்தாள். சில வாரங்களாகவே அவள் அவருடன் முன்னதிலும் பார்க்க அதிக சாகசம் காட்டி வருவதை அவர் உணர்ந்திருந்தார்.

புதிதாக எதையாவது பெரிதாகப் பெறுவதற்காக இந்த நடிப்பு என்று நாகரத்தினம் எண்ணிக்கொண்டார்.

டின்னர் பார்ட்டி கலகலப்பாக இருந்தது. இசையும் நடனங்களும் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருந்தன, ஆண்களும் பெண்களும் உலாவியபடியே கைகளில் மதுக் கிண்ணங்களுடனும் சிற்றுண்டிகளுடனும் உரையாடிக் கொண்டு நின்றனர். வெயிட்டர்கள் தட்டுகளில் சிற்றுண்டி



களைப் பரிமாறிக்கொண்டு நின்றனர். அரசியலே அங்கும் ஆண்களிடையே முக்கிய பேச்சு வார்த்தையாக இருந்தது. பெண்களின் பேச்சுவார்த்தைகளிலும் அரசியல் கலந்திருந்தது. ஒருத்தி இத்திராவிடம் சொன்னாள்:

'சிறீமாவோ புடிஸ்ட் லேடீஸ் கொலிஜில்தான் சீனியரில் என்னோடு படிந்தவ. படிப்பிலேயே பெரிய கெட்டிக்காரியில்லை. நவீன நாகரிகமே தெரியாது இருந்தார். இன்றைக்கென்னவென்றால் உலகத்தின் முதல் பெண் பிரதமராம். இதுவும் ஒரு காலந்தான் '

பொறாமை அக்குரலில் எதிரொலித்தது

''புருஷனையே, 'அரசியலை விட்டுவா, இல்லாட்டி டைவோர்ஸ் எடுப்பன்' என்றே வெருட்டினாவாம், இன்றைக்கு தானே அரசியலுக்கை மூழ்கிப்போய் விட மனமில்லாமல் பெரேரா, கெனமன் போன்றவர்களோடு சேர்ந்து திரிகிறா''

மற்றொருத்தி வம்பளந்தாள்.

'எங்க தமிழ் முறைப்படி விதவைகளை எந்த நல்ல காரியத்திற்கும் முன்னே நிற்கவிட மாட்டார்கள். இங்கே விதவையைக் கொண்டே திறப்பு விழாக்கள் நடத்துகிறார்கள்''

இந்திரா தன் மன எரிவையும், சமய ஆசாரங்களில் நம்பிக்கை கொண்டவள் போலவும் காட்டி, தன் கருத்தைச் சொல்லித் தீர்த்தாள்.

''எங்கே உந்த நெக்லெஸ் செய்வித்தாய், இந்திரா?''

அவர்களின் உரையாடல் பாஷனில் திரும்பியது.

நாகரத்தினம் நிமலசேனா என்ற கைனகோலஜிஸ்ட் டாக்டர் நண்பரை பலமாதங்களின் பின்னர் அன்று கண்டதும் சென்று கதைத்தார். இந்திராவையும் முன் ஒரு தடவை அவரிடம் காட்டி ஆலோசனை பெற அழைத்துச்

சென்றிருந்தார்ர் அந்த டாக்டரின் உறவினர் ஒருவருக்கு தமது கம்பனியில் வேலை கொடுத்திருந்தார். அதுபற்றிப் பேசிய பல மாதங்களின் பின்னர் அன்றே எதிர்பாராது நாக ரத்தினம் டாக்டரைச் சந்தித்தார். டாக்டர் முதலில் நன்றி தெரிவித்தார். பின்னர் பிஸ்னெஸ் பற்றிப் பேசத் தொடங்கி அரசியலுக்கு வந்தார்.

''கேள்விப்பட்டீங்களா. நூறு ரூபா நோட்டுச் செல் லாமல் போகலாம் என்று வதந்தி அடிபடுகிறது. உண் மையா? '

''இடது சாரிக் கூட்டாட்சி வந்து விட்டது. என். எம். பெரெரா நிதி மந்திரி. என்னவும் எவ்வேளையும் நடைபெற லாம் என்ற கிலி. நான் அறிந்தளவில் அப்படி எதுவும் நடை பெறாது. உங்களிடம் அதிகமாக இருந்தால் என்னிடமே தந்து மாற்றிக் கொள்ளலாம்''

''பெருந்தொகையாக நூறு ரூபா நோட்டுகளை பாங் கில் டிப்பொசிற் பண்ணுபவர்களை இன்கம்ராக்சினரே பாங்குகள் மூலம் அறிகிறார்களாம்''

''உந்தப்பீதியில் எங்களிடமே நூறுரூபா நோட்டுகளைச் சில நண்பர்கள் கொண்டு வந்தார்கள். நாங்கள் அன்றாட விற்பனையில் சேரும் காசுகளில் மாற்றிக் கொடுக்கிறோம்''

''இதனால் தங்கம் சவரின் நூற்று எண்பது ரூபாவிற்கு ஏறிவிட்டதாம். ஸ்ரேலிஸ் பவுண் பிளாக்கிலை நாற்பத் தொன்பது ரூபாவாம். பாங்கிலை பர்மிட்டிருந்தால் பதின் மூன்றரை ரூபா தானே. இந்த நாடு போகும் போக்கில் என்னவும் நடக்கலாம் போலை கிடக்கு. ஒரு நல்ல பொருள் வாங்க முடியுதா? விலைகளெல்லாம் ஏறிக்கொண்டே போகுது. இந்த அரசாங்கம் வீழ்வதற்கு மார்க்கமில்லையா? இந்த நாட்டிலை பணத்திற்கே மதிப்பில்லாமல் வந்து கொண்டிருக்கு.''



டாக்டர் தன் மனக் குறையெல்லாவற்றையும் சொல்லிக் கொண்டே போனார். நாகரத்தினம் சமாதானம் கூறிவிட்டு ''எக்ஸ்சுயூஸ் மீ'' என்று சொல்லிக்கொண்டே வேறாரு நண்பரைப் பார்த்துப் பேச முன் சென்றார்.

''மிஸ்டர் நாகா ஒரு விஷயம்''

நாகரத்தினம் திரும்பி டாக்டரைப் பார்த்தார்.

''அன்றைக்கு உங்க மிஸ்ஸிஸ் வந்தாங்களே. நான் அந்த விஷயத்தை விரும்பேல்லை, உங்களுக்காகத்தான் இன்ஜெக்ஸனும் போட்டு மருந்தும் கொடுத்தன். ஆனா அவ்வளவு சக்ஸெஸ் ஆகுமென்று நான் கரன்டியாய்ச் சொல்லமாட்டன்''

''எதைப் பற்றிச் சொல்லுறீங்க சரியாய் விளங் கேல்லை''

''மிஸ்ஸிஸ் சொல்லியிருப்பாங்களே. பிறெக்னஞ்சியைப் பற்றி'

நாகரத்தினத்திற்கு ஒரே அதிர்ச்சியாயிருந்தது தன் அறியாமையை வெளிப்படுத்த அவர் விரும்பவில்லை. ஆயினும் டாக்டரின் முகம் சிறிது சுண்டியதை அவர் கண்டார்.

',ஓ யெஸ் அதுவா. பரவாயில்லை தாங் யூ நிமலா''

ஒருமாதிரிச் சமாளித்தார். ஆயினும் தன் நடிப்பு டாக்ட ருக்குப் பூரண திருப்தியளித்திருக்காது எனவே நாகரத்தினம் எண்ணினார்.

## 34

நாகரத்தினத்தின் முகம் கறுத்தது. மனம் பதறியது. நெற்றியில் சுருக்கம் விழுந்தது. அவர் பேச இருந்த நண்ப

ரோடு பேசவும் முடியவில்லை. கையலிருந்த சிகரெட்டை நடுங்கிய விரல்களில் இறுகப் பிடித்துக் கொண்டார்.

விஸ்கி, பிரண்டியிலும் பார்க்க சாராயமே அங்கு தாராளமாகப் பரிமாறப்பட்டது. அவர் அவ்வளவாக சாராயத்தை விரும்பிப் பருகுவதில்லை. அன்று ஒன்று மாறி ஒன்றாகக் குடித்தார். நிதானம் தவறும் நிலைக்கு வந்து விட்டார்.

இந்திராவின் தோழி ஒருத்தி மற்றொருத்திக்கு நாகரத்தினத்தைக் காட்டிச் சொன்னாள்:

''இந்திரவின் ஹஸ்பன் பெரி காரன் போலையிருக்கு எபபடிச் சமாளிக்கிறாளோ யல்லை''

இந்திராவின் செவிகளில் அவ்வார்த்தைகள் விழுந்தன. தன் மானம் மரியாதை யாவும் போய்விட்டதாக எண்ணிக் கொண்டே திருமணத் தம்பதிகளிடம் விடை பெற்றுக் கொண்டு நாகரத்தினத்திடம் ஓடிவந்தாள். அவர் தள்ளா நிலையில் நின்றார்.

''வாருங்க. வீட்டை போவம்'

கையைப் பிடித்துக்கொண்டே காரை நோக்கி நடந்தாள். இந்திராவின் கண்களில் கவலையும் கோபமும் தோய்ந்திருந்தது.

வீடு சேரும் வரையும் அவள் உயிரைப் பிடித்துக் கொண்டிருந்தாள். நாகரத்தினத்தால் காரையே நிதானமாக ஓட்ட முடியவில்லை. முகமெல்லாம் வியர்வை வடிந்து கொண்டிருந்தது. ஆழ்ந்த சிந்தனையிலும் குடி வெறியிலும் முகம் பேயறைந்தது போன்று காணப்பட்டது

காரைவிட்டிறங்கியதும் தள்ளாடிக்கொண்டே மாடிக்குச் சென்று சூட்டைக் களையாமலே மெத்தையில் விழுந்தார்.



இந்திரா நையிட் டிரெஸ்ஸின் மேல் டிரெஸ்ஸிங் கவுணைப் போட்டுக் கொண்டே நாகரத்தினத்தின் அறைக்குள் நுழைந்தாள்.

''என்ரை மானமெல்லாம் போட்டுது. என்ரை பிரெண்ஸ் எல்லாம் எப்படிக் கேவலமாய்ப் பேசினாங்கள். என்னைப்போல அழகான, குணமான பெண்ணுக்கு இப்பிடி ஒரு குடிகாரனா மாப்பிளையாய் வரவேணுமெண்டு கவலைப் படுறாங்க.''

''ஆரெடி உன்ரை குடிகாரனில்லாத மாப்பிளை?''

நாகரத்தினத்தின் திடீர் கேள்வியும் 'ஆரெடி' என்ற அழைப்பும் இந்திராவை சிறிது பின் வாங்கச் செய்தது.

''இப்ப, என் பசிறீங்க''

'நான் குடிவெறியிலை பேசிறேன். அவளின்ரை மானம் மரியாதையெல்லாம் கெட்டுப் போச்சாம். தேவடியாள் ஆட்டம் ஆடலாம். அதுமட்டும் மானமான காரியம்''

மாலினி றோசி ஆகிய வேறு பெண்களை அவருக்கெதிராக இழுத்துப் போர் தொடுக்க இந்திரா நினைத்தாள். ஆயினும் மனதின் மூலையிலிருந்து ஏதோ ஒரு குரல் தடுத்துவிட்டது.

''எந்தத் தேவடியாள் நான் ஆடினதெண்டு சொன்னவள்?''

''என்னடி பதிவிரதையாகப் பார்க்கிறாய்? ஆடிப் போட்டு பிள்ளை வாங்கினதில்லை. அழிக்கவும் போய் விட்டாள்''

''ஆர் சொன்னது?''

இந்திராவின் குரல் கேரியது.

''டொக்டரே தான். இப்ப பார்ட்டிலை, அதுதான் குடிச்சனான். என்ரை பேரைச் சொல்லி இன்னொருத் தன்ரை குழந்தையை அழிக்கப் போனியா? மானம் போட்டுதாம் மானம்.''

இந்திரா எதுவும் பேசாது சிறிது நேரம் நின்றாள். பின்னர் குற்ற மனத்தோடு மெதுவாச் சொன்னாள்.

''என்னை நம்புங்கோ டாலிங். அது உங்கடை பிள்ளை தான்''

நாகரத்தினத்தின் காலடியில் முழந்தாளிட்டுத் தலையை அவனது மடியிலே வைத்துக்கொண்டே சொல்லி அழுதாள். அவர் கையால் பிடித்துப் பின்புறமாகத் தள்ளினார்.

''இப்ப என்னை இதை நம்பச் சொல்லுறியா?''

''கடவுளாணை, என் குழந்தைகளாணை''

நாகரத்தினம் சிரித்தார்.

''என் குழந்தை யென்றால் எனக்குச் சொல்லாமல் அழிக்கப் போவியா? உது ஆரிட்டையெடி வாங்கின பிள்ளை? எந்தப் புருஷனும் மனைவி ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது இது ஒண்டுக்கேதான். உனக்குப் பிறக்கிற பிள்ளை எனக்காகவே இருக்கவேண் டும்? நான் எதையும் பொறுப்பேன். இன்னொருத்தன் பிள்ளையை என் பிள்ளையாய்ப் பாசம் காட்டி வளர்த்து என் சொத்தில் பங்கு கொடுக்க நான் தயாராயில்லை''

''உண்மையாகச் சொல்லுறன் டாலிங் என்னை நம்புங்கோ. இது உங்கடை பிள்ளையேதான். எனக்கு இனிமேல் பிள்ளை வேண்டாம். இன்னொரு பிள்ளைப் பெறுவதை நினைக்கவே பயமாயிருந்தது. உங்களுக்குச் சொன்னால் அழிக்கச் சம்மதிக்க மாட்டீர்கள். பிள்ளைக் காக என் அழகையும் பொழுது போக்கையும் விட்டு விட விருப்பமில்லை. அதுதான் இப்படிச் செய்ய முயன்றன்.''



''இப்ப பணம் வந்த பிறகுதான் இந்த அழகு, ஆடம் பர ஆசையெல்லாம் வருகுதோ. செல்வி பிறக்க முன்னர் நீ எப்படி இருந்தாய்? இப்ப எப்படி மாறிவிட்டாய்?''

''நீங்க எப்படி இருந்தீங்க. இப்ப எப்பிடி மாறி விட்டீங்க'' என்று கேட்க நினைத்தாள். அவ்வேளை மௌ னம் சாதிப்பதைத் தவிர நல்ல வழி எதுவும் இல்லை என எண்ணிக் கொண்டாள்.

''பிள்ளை பிறந்தால் உன் அழகு போய் விடுமென்று ஆர் சொல்லித் தந்தது.''

''பிரெண்ஸ்''

''நாப்பத்திரண்டு வயதாயிற்று. கண்ணாடியிலே நரை மயிர் பார்த்துப் பிடுங்கத் தொடங்கிவிட்டாய். பிள்ளைக் குக் கல்யாணம் கட்டுற வயது. இப்பத்தான் அழகிலே ஆசை வந்து விட்டதா.''

நளினமான நடிப்போடு நாகரத்தினம் சொன்னார்.

'உங்க மயிர் மட்டும்...'' அவளை அறியாது வாயில் வந்த பேச்சை நிறுத்திக்கொண்டே மீண்டும் அவரது மார் பில் விழுந்து கட்டியணைத்து ' டாலிங் என்னை நம்புங்கோ நம்புங்கோ'' என்று கண்ணீருடன் கனிவாகப் பேசி அவ ரோடு மெத்தையில் குப்புற விழுந்து முத்தமிட முகத்தைப் பதித்தாள்.

## 35

நாகரத்தினம் மாலினியை அடிக்கடி சினிமாவிற்கும் டின்னருக்கும், பார்ட்டிகளுக்கும் வரும்படி அழைத்துக் கொண்டேயிருந்தார். அவள் கேட்காமலே சேலைகள், நகைகள், அழகு சாதனப் பொருட்களெல்லாம் வாங்கிப் பரிசளித்தார். ஒரிரு தடவை வற்புறுத்தி ஷொப்பிங்கிற்கு

அழைத்துச் சென்று அவன் விருப்பிய பொருட்களெல்லாம் வாங்கிக் கொடுத்தார்.

அறிந்த நண்பரொருவர் விசாரித்தபோது தமது உறவினர் கொழும்புக்கு வந்திருப்பதாக கூறிச் சமாளித்தார். அவளுக்கும் ஆடம்பரமாக உடுத்துக்கொண்டு அவரோடு சுற்ற முடிந்தது.

நாகரத்தினத்திற்கு முன்பு இருந்த தயக்கம் எதுவும் தற்போது கிடையாது. தான் கண்டிக்கு பிஸ்னெஸ் அலுவலாக சனி, ஞாயிறு செல்வதாகவும் அவளை வரும்படியும் ஒரு முறை அழைத்தார். அவள் மறுத்துவிட்டாள்.

வரம்புமீறி நினைத்த நேரமெல்லாம் வரும்படி அழைத்துக் கொண்டிருந்ததை ஆரம்பத்தில் மறுகக முடியாத மாலினி பொன்னையாவின் வார்த்தைகளையும் நினைத்து பின்னர் இடையிடை சாட்டுக்கூறத் தொடங்கினாள். சந்தர்ப்பம் கிடைக்கும் வேளையெல்லாம் அவர் தன் உயிரெல்லாம் அவளின் மேல் வைத்திருப்பதாகக் கூறிக் காதல் வார்த்தைகள் சொரிந்தார் அவரது வேகமான மாற்றத்தின் காரணத்தை அறிய ஒரு நாளைக்கு வீட்டுக்குச் சென்று மேரியையும் இந்திராவையும்.செல்வியையும் பார்த்து வரத் தீர்மானித்தாள்.

அன்று எதிர்பாராதவிதமாக பொன்னையா மாலினிக்கு டெலிபோன் செய்தான். சத்தியஜித்ரேயின் திரைப்பட விழா நடப்பதாகவும் தான் ஒரு படத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் எப்பொழுது வசதியிருக்கும் எனவும் கேட்டான். மறுநாள் சனிக்கிழமை மட்னிஷோவிற்குப் போவதற்குச் சம்மதித்தாள். அவனது திடீர் நினைவு அவள் மனதிற்குத் தெம்பு ஊட்டியது. அவளின் நம்பிக்கைக்கு உரமிட்டது.

''நேற்றும் இன்றுமாவது நீங்களாகவே என்னை நினைத்தீர்களே. போன பிறவியில் நான் செய்த தவமாயிருக்க வேண்டும்.''



தியேட்டரில் பொன்னையாவைக் கண்டதும் மாலினி சொன்னாள்.

''நான் அத்தனை அரிதான பெரிய கடவுளல்லவே தவம் செய்து காண்பதற்கு எத்தனை தொழிலாளர்களையெல்லாம் நாள்தோறும் காண்கிறேனே. அவர்களெல்லாம் தவம் செய்தவர்களோ''

''நானும் ஏன் ஒரு தொழிலாளிப் பெண்ணாகப் பிறக்கவில்லை என்று கவலைப்படுகிறேன்.''

''இன்னொரு பத்து இருபது வருடங் கழித்துப் பிறக்க ஆசைப்பட்டாலும் பரவாயில்லை. இப்ப தொழிலாளியாய் இருந்து முதலாளிகளின் சர்வாதிகார ஆட்சியில் நசிவதை விடக் கொடியது வேறென்ன இருக்கிறது.''

'தொழிலாளிகள் ஆட்சி வர அத்தனை நெடும் பயணமாகுமென்றா சொல்லுகிறீர்கள். இப்பொழுதே வந்துவிட்டதாக எத்தனையோ பேர் சொல்லுகிறார்கள்.''

''இந்தப் பொய்மைத் தோற்றம் விரைவிலேயே அம்பலமாகிவிடும் இங்குள்ள இராணுவ அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் யாவரும் இங்கிலாந்தில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் கீழ் பயிற்றப்பட்டவர்கள், வெள்ளைக்காரன் தந்த அரசியல் சட்டம் அப்படியே இருக்கிறது. அதற்கு மாறாகச் செல்வது தேசத் துரோகம் என்று அவர்கள் முற்றாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள் அந்தப் பலத்தை அத்தனை இலகுவில் உடைத்தெறிய முடியாது அதே அரசியலமைப்பைக் காப்பதாகவே தற்போது சேர்ந்துள்ள தொழிலாளரின் தலைவர்களெனக் கூறப்படுவோரும் கவர்னர் ஜெனரல் இராணுவத் தலைவரின் முன்பே சத்தியப் பிரமாணம் செய்திருக்கிறார்கள். இவர்களே அதை மீறினால் நாட்டுத் துரோகிகளாகக் குற்றம் சாட்டப்படுவார்கள். இதெல்லாம் உனக்கு எங்கே புரியப் போகிறது.''

''என்ன விஷயத்தைத் தொட்டாலும் அரசியல் பேசாமல் உங்களால் இருக்க முடியாது.''

நளினமாக மாலினி சொன்னாள் இருவரும் ஒதுக்குப் புறமான சீட்டில் அருகருகே இருந்தனர்.

''மனிதன் ஒரு அரசியல் விலங்குதானே.''

'என்னை அழைத்து வரவேண்டும் இந்தப் படத்திற்கு என்ற திடீர் ஞானம் தங்களுக்கு எப்படி ஏற்பட்டதோ.''

மாலினி கதையை மாற்றிப் பார்த்தாள,

''அமெரிக்க முதலாளிகள் காட்டும் கற்பனை உலகைச் சினிமாவிலும் கதைகளிலும் பார்த்து மயங்கி அவையே வாழ்க்கை, கலை என்று மயங்கிக்கொண்டிருக்கும் மனோபாவமுடைய பெண் நீ கலை ஒரு சமூகப் பணி. அது வாழ்க்கையோடு ஒட்டியது: மனிதனுக்கும் மனிதனுக்கு மிடையில் உறவு ஏற்படுத்துவது. மனிதனை, அவனது வாழ்க்கையை, ஆசாபாசங்களை அவன் வளர்ச்சியோடும் கால கட்டத்தோடும் பொருளாதார அடிப்படையில் வைத்து யதார்த்தத்தோடு காட்ட வேண்டும். நல்ல கலையாயின் அது என்ன சமூகப் பணி ஆற்றியுள்ளது என்று கேட்டுப் பார்க்க வேண்டும். சத்யஜித்ராயின் படங்கள் பூரணத்துவமானவை என்று நான் சொல்லவில்லை. ஆனாலும் உன்னைப் போன்றவர்களுக்கு இவை ஒரு மாற்றமாகத் தோன்றும்.''

சினிமா ஆரம்பமாகியது. மாலினி அவனது வலது கையை எடுத்துத் தன் கரங்களிடையே வைத்துக்கொண்டாள்

'அபராஜிதா' என்ற அந்தப் படம் அவளுக்கு நன்கு பிடித்துக் கொண்டது; ஆடம்பரமெதுவுமின்றி வாழ்க்கையோடு ஒன்றியதாகவும் மனித உணர்வுகளைத் தொடுவதாகவும் உணர்ந்தாள்.



,'இப்படியான படங்கள் வந்தால் நினைவூட்டுங்கள். நானே உங்களை வற்புறுத்தி அழைத்துச் செல்வேனே.''

வெளியேறும்போது சொன்னாள்.

தான் டீ குடிக்க வேண்டும் என்றும் வேண்டினாள்.

''நான் நடந்து போகும்போது தெருக்கரையில் காணும் சாதாரண மக்களின் டீக்கடைகளுக்கே போய்விடுவேன். உன்னை அழைத்துப் போவதாயின் டிப் கொடுக்கும் பூஷ்வா ஓட்டல்களுக்கெல்லோ அழைத்துச் செல்ல வேண்டும்.''

''நீங்கள் போகும் டீக் கடைகளுக்கே நானும் வருகிறேனே.''

''உந்த ஆடம்பரங்களோடு போனால் உன்னை ஒரு மாதிரித்தான் பார்ப்பாங்கள்.''

மருதானை ஸ்ரேசனின் எதிரே இருந்த ஒரு நடுத்தர முஸ்லீம் ஓட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

## 36

மருதானை நிலையத்தில் புகைவண்டி எடுத்து இருவரும் பம்பலப்பிட்டியில் இறங்கி கடற்கரையில் உலாவிவிட்டு அங்கேயே அரைமணி நேரம் கழித்து வரும் வண்டியில் பொன்னையா மட்டும்செல்வதாக இருவரும் முடிவுகட்டினர். மாலினி தனிய வீடு திரும்புவதாக ஒப்புக் கொண்டாள்.

''தொழிலாளர் விவசாயிகளே நாட்டின் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். ஏன் தேர்தல் மூலம் தொழிலாளர் ஆட்சியை ஏற்படுத்த முடியாது என்று கருதுகிறீர்கள்?''

புகை வண்டியில் போகும்போது மாலினி கேட்டாள்.

''பத்திரிகைக்கு ஏதாவது இன்ரவியூவோ.''

''தேர்தலை வெறுக்கும் நீங்களே தேர்தலுக்கு ஓட்டும் போடப் போகிறீங்களே.''

''1931-ல் சர்வஜன வாக்குரிமை ஆசியாவில் முதலாக எமக்கே கிடைத்தும் என்ன பயன்? 1956 வரை தொழிலாள, விவசாயிகளால் ஒருவித பெரிய மாற்றத்தையும் இந்நாட்டில் ஏற்படுத்த முடியவில்லை. ஏனெனில் நாடு பிரபுத்துவ அமைப்பாக இருந்தது. மக்களின் வோட்டுக்களை நிலமும் பணமும் படைத்தவர்கள் வாங்கிக் கொண்டார்கள். சுதந்திரமும் செல்வர்களின் கையிலேயே கொடுக்கப்பட்டது. அவர்கள் தம்மையும வெளிநாட்டு முதலாளிகளையும் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள். இடதுசாரிக் கட்சித் தலைவர்கள்தொழிலாளர்களிலிருந்து வந்தவர்களல்ல. மேல் நாடுகளில் சோஷியலிசம் பற்றிப் படித்துவிட்டு வந்து தாம் படித்த தத்துவத்தை வைத்து ஏகாதிபத்தியத்தை மேடைகளில் மட்டும் திட்டிக் கொண்டிருந்தார்கள். தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஒன்று சேர்ந்து நாட்டை வெள்ளைக்காரனிடமிருந்து விடுதலையடையச் செய்வதற்கு ஒரு வெகுஜன இயக்கத்தைக்கூட அவர்கள் நடத்தவில்லை. இந்தியாவில் நடந்தது போன்ற விடுதலை இயக்கத்தை இங்கு எவருமே நடத்தவில்லை என்றே கூறுவேன்.''

''போதும் போதும். உங்களை ஒரு கேள்வி கேட்டு விட்டால் போதும் ஒரு பிரசங்கமே செய்து விடுவீர்கள்.''

''நான் பேசுவதெல்லாவற்றையும் புரியத்தக்க அறிவு முதலில் உனக்கு இருக்க வேண்டும்.''

''எல்லாம் புரிந்தது போதும்''

செல்லக் கோபத்தோடு சொன்னாள்.

''உதட்டளவில் மட்டும் நீ பேசுகிறாய். சிந்தனையோடு கேட்டிருப்பின் என் கருத்துக்களைப் பற்றி உன் விமர்சனத்தையாவது சொல்லியிருப்பாயே.''



கடற்கரை யோரமாக ஓடிக்கொண்டிருந்த வண்டியிலிருந்து மாலினி கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். குளிர்ந்த கடற்காற்று அவளது பின்னலுக்குள் அகப்படாது நெற்றியில் படிந்திருந்த மயிரோடு விளையாடிக் கொண்டிருந்தது. அவளது தோள் அவனது தோளோடு ஒன்றிக் கொண்டிருந்தது. பொழுது மறைந்து கொண்டிருந்தது.

''அந்தச் செவ்வானத்தைப் பாருங்கோ என்ன அழகாக இருக்கிறது? அதைப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன நினைவு வருகிறது?''

''உன் கன்னத்தைப் போல என்று தமிழ்ப் படங்களில் வரும் காதலர்கள் கூறுவது போலக் கூறி உன்னை வெறும் கற்பனையில் மயங்கச் சொல்லுகிறாயோ.''

அவன் ஏதாவது காதல் வார்த்தைகள் சொல்லி தன்னை மகிழ்விப்பான் என அவள் எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தாள்.

''கற்பனையே இல்லாத விசித்திர மனிதரா நீங்கள்.''

''நாங்கள் அடுத்த நிலையத்தில் இறங்கிப் பார்த்ததும் உந்தச் செவ்வானம் மறைந்துவிடும் காதலும் இதைப் போன்ற ஒரு வர்ண ஜாலத்தான்; அதைப்பார்த்து நாங்கள் ரசிக்கமாட்டோம் என்று நினைக்காதை; மயங்கி ஏமாந்து விடமாட்டோம்.''

பம்பலப்பிட்டியில் இறங்கியதும் செவ்வானம் மறைந்து இருள் சூழ்ந்துவிட்டது. கடற்கரையில் கடலரிப்பைத் தடுப்பதற்காகப் போட்டிருந்த கருங்கல்லின் மேல் இருவரும் உட்கார்ந்தனர். காலிலிருந்த சிலிப்பரை கீழே கழட்டி விட்டு வெறும் காலோடு கல்லின்மேல் குந்தியிருந்தான். அவளது நைலெக்ஸ் சேலை காற்றில் அசைந்து அவனது உடலையும் ஸ்பரிசித்துக் கொண்டிருந்தது.

''மற்றவங்கள் போலை நீங்க ஏன் சூஸ், சொக்ஸ் போடக் கூடாது.''

''உன்ரை மனோபாவங்களைத் திருப்திப்படுத்தத் தக்க ஆளாய்ப் பாரேன். நான் என் வசதி, உழைப்பைப் பொறுத்து வெறுங் காலோடு திரிவன்.''

அவன் குரலில் கடுமை இருந்தது. இருவரும் சிறிது நேரம் மௌனமாயிருந்தனர்.

மாலினியின் முகவாட்டத்தைப் பார்த்து பொன்னையா சிறிது மனம் வருந்தினான்.

''ஏன் மாலி கோபமா, ஒரு வார்த்தையிலேயே முகம் அப்போது நீ காட்டிய வானம் போலாகிவிட்டதே. எங்கே ஒருக்கா சிரி ''

அவளது இடையிலே விரல்களால் குத்தி சிரிக்கச் செய்தான்.

''நான் உங்களை ஒன்று கேட்கலாமா''—மாலினி தயக்கத்தோடு மௌனத்தைக் கலைத்தாள்.

''நீ கேட்டு நான் பதில் கூறாத கேள்வி ஏதாவது இருக்கிறதா?''

''கோபிக்க மாட்டீர்களே '''

''உன்னைக் கோபிக்க நான் யார்?''

''உங்களுக்கு இப்போது என்ன சம்பளம் கிடைக்கிறது?''

''இதுக்குத்தானா இவ்வளவு பயம். எல்லாமாக இருநூற்று ஐந்து ரூபா.''

''இன்னுமொரு கேள்வி இருக்கிறது.''

''எத்தனை பேரைக் காப்பாற்றுகிறேன் என்பதுதானே. அம்மா, அப்பா, இரண்டு தங்கைகள். கேள்வியில்லாமலே பதில்.''



''அதல்ல. நீங்கள் பெறுவது முன்னர் எங்கள் கம்பெனியில் பெற்றதிலும் பார்க்கப் பாதிச் சம்பளமில்லையா''

''உனக்குத் தெரிந்ததுதானே. தெரியாத விஷயம் என்னவோ.''

''நாநூறு ரூபா சம்பளத்தில் ஒரு வேலை பெற்றுத் தருகிறேன் ஏற்றுக் கொள்வீர்களா?''

கடலைப் பார்த்திருந்த பொன்னையா அவளைப் பார்க்கத் திரும்பினான்.

''அப்படியும் ஒரு அதிர்ஷ்டமா? என் திறமையைத் தெரிந்த அந்த முதலாளி எவரோ?''

''நாகரத்தினம்''

''அப்படித்தான் நினைத்தேன்'' என்று சொல்லிக் கொண்டே அவன் எழுந்து நின்று சிரிக்கத் தொடங்கினான் மாலினி ஒன்றும் புரியாது இருளிலே அவனது சிரிப்பொலியைக் கேட்டுக் கொண்டே எழுந்தாள்.

''மாலினியே என் அப்பாவிக்குஞ்சே''

அவளது கன்னத்தைக் கிள்ளிக்கொண்டே மீண்டும் சிரித்தான்

''ஏன் என்னைக் கேலி செய்யிறீங்க. விஷயத்தைச் சொல்லுங்கோ.''

சிரிப்பு அடங்கியதும் சொன்னான்:

''அவனது கம்பெனியில் வேலை நிறுத்தத்திற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். நாளை மறுநாள் விக்கிரமாவோடு சேர்ந்து நானும் நாகரத்தினத்திடம் பேச்சு வார்த்தைகளுக்குப் போகிறோம் பேச்சு வார்த்தை முறிந்தால் வேலை நிறுத்தம், இடதுசாரிக் கூட்டரசாங்கம் எந்தப் பக்கம் நிற்கப்போகிறதென்பதிலிருந்து தான் தொழி

லாளர்கள் உண்மையை உணரத் தொடங்குவர். இது தொழிலாளர்களும் சேர்ந்த ஆட்சி என்ற பொய்மை கிழித் தெறியப்படும் நாள் தூரத்திலில்லை. என்னைப் பல நாட்க ளுக்குப் பார்க்க மாட்டாய். போய் வரட்டா.''

மாலினி ஏமாற்றத்தோடு அவனைப் பார்த்துக் கொண்டே நின்றாள். பொன்னையா திரும்பி அருகே வந்தான்

''மாலினி, உன்னை வீடுவரை கூட்டிவந்து விடவேண் டுமா? தனியாகப் போவாயா?''

''ஏழு மணியாகவில்லை; கிட்டத்தானே. நான் போய் விடுவேன். அதோ சிக்னல் விழுந்துவிட்டது. வண்டி வரப் போகிறது.''

ஏமாற்றம், மகிழ்ச்சி ஆகிய இரு உணர்வுகளோடும் மாலினி வீடு திரும்பினாள். வாழ்க்கையே இவ்விரு உணர்ச்சிகளும் கலந்த நாடகந்தானா என்ற வினா அவளது மனதில் துளிர்த்தது.

## 37

மாலினி செல்வி பவனத்திற்கு அன்று மாலையில் புறப் பட்டாள். இந்திரா டெலிபோன் செய்துவிட்டு வரும்படி முன்னர் சொன்னது அவள் நினைவில் வந்தது. அதை அவள் விரும்பவில்லை. தோழி ஒருத்தியை அவ்வழியில் பார்க்க வந்ததாகவும் அப்போது நினைவு வந்து அங்கு இறங்கியதாகவும் கூறுவதாகத்தீர்மானித்துச் சென்றாள். நாகரத்தினம் அன்று கண்டிக்குச் சென்று விட்டார் என்பதை அவள் அறிந்திருந்தாள். மாலினியிடம் டெலிபோனில் சொல்லி விட்டே அவர் சென்றிருந்தார்.

வாயிலில் சென்று மணியை அழுத்தியதும் பியசேனாவே கதவைத் திறந்தான். அவனை ஏற இறங்க அவள் பார்த்



தாள். சிறுபிள்ளைத்தனமும் ஒருவித இனம் காணமுடியாத கவர்ச்சியும் அவனில் இருப்பதைக் கண்டாள்.

''அம்மா''

''டொக்டரிட்டை போய்விட்டா?''

''மேரி''

''குசினியிலை''

''செல்வி''

''மேலே'

''இரண்டு பேரிடமும் சொல்லு''

மாலினி உட்கார்ந்தாள்.

மேரி முதலில் ' நோனாவா'' என்று சொல்லிக் கொண்டே சிரித்துக் கொண்டு வந்தாள்.

''அம்மாவிற்கு என்ன சுகயீனம்?''

''என்ன என்றே சரியாய் சொல்லுறாங்களில்லை. சில வேளை குமட்டல் சத்தமும் காலையிலைகேட்குது. எல்லாம் இந்த வீட்டில் மூடு மந்திரம்தானே''

மேரி மெதுவாகச் சொல்லிவிட்டு பின்னர் குரலை உயர்த்தினாள்.

''உங்களிடம் ஒருக்கா வரவேண்டுமெண்டு நினைச்சால் இங்கை எங்கை ஒழிவு. நாள் முழுதும் வேலை தானே.''

''அன்ரியா, எங்கை இந்தப் பக்கமே காணவில்லை.''

செல்வி குதூகலமாக மாடிப்படியிலிருந்து இறங்கி வந்தாள்.

மாலினியோடு செல்வி பேசிக் கொண்டிருந்தாள். மேரி குசினிக்குச் சென்று சில நிமிடங்களில் ஒரு கப்பில் நெஸ்கபே

யுடன் வந்தாள். மாலினி வாங்கி காப்பியின் மணத்தை நுகர்ந்தாள். இவையெல்லாம் எமக்குக் கிடைக்காத பானங்கள் என நினைத்துக் கொண்டே கப்பின் விளிம்பில் தன் உதடுகளைப் பதித்தாள்.

வெளியே கார் சத்தம் கேட்டதும் மேரிசென்று கதவைத் திறந்தாள்.

பத்மினி கையிலே டென்னிஸ் ராக்கெட்டுடன் உள்ளே நுழைந்தாள். முழங்காலுக்குச் சிறிது மேலாக நிற்கும் வெள்ளைச் சட்டை. காலோடு ஒட்டிய முழுநீள ஜங்கி. இரட்டைப் பின்னலை மேலே மடித்து ஒன்றாக பிணைத்துக் கட்டியிருந்தாள். மாலினியைக் கடந்து மாடிப்படியில் கால் வைத்த பத்மினி ஒரு தடவை மாலினியைப் பார்த்துத் திரும்பினாள்.

''நீங்கதானே சுதேசி பேப்பர் கம்பனியில் வேலை செய்யும் மிஸ் மாலினி?''

''யெஸ்''

''உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டனான் பார்த்த நினைவில்லை. அதுதான் கேட்டன். தாங்யூ''

வேறு எதுவுமே பேசாது அவள் மேலே ஏறிச்சென்றாள் இந்திராவின் முகச்சாயல் அவளிடம் அப்படியேஇருந்தது.

''கார் அம்மாவை ஏற்றத்தான் போயிருக்கு. இப்ப வந்துவிடுவா''

மேரி சொன்னாள்.

செல்வி, தான் கடைசியாகப் படித்த பியானோப் பாடத்தைப் படித்துக் காண்பித்தாள்.

இந்திரா சிறிது நேரத்தில் வந்து சேர்ந்தாள். ஆடம்பரத்திற்குக் குறைவேயில்லை. முகத்தில் மட்டும் களை சிறிது குறைந்திருந்தது. சுறுசுறுப்பும் ஓட்டமும் முன் போலிருக்கவில்லை.



''நீங்களா, வந்து ரொம்ப நேரமா? கொஞ்சம் உடம்பு சரியில்லை. மேலே றூமுக்கு வாருங்களேன்.''

இந்திரா கூறிக்கொண்டே படிக்கட்டுகளில் நிதானமாக ஏறினாள். மாலினி பின் தொடர்ந்தாள்.

இந்திரா மெத்தையில் உட்கார்ந்து கொண்டே எதிரே இருந்த பிளாஸ்டிக் பின்னலிட்ட நாற்காலியில் அமரும்படி மாலினியை வேண்டினாள்.

''இந்த நாற்காலியே புதுமையாயிருக்கு. எங்கிருந்து வரவழைத்தீர்கள்?''

''மலாயாவிலிருந்து என் பிரெண்டு ஒருத்தி வரும்போது நாலு வரவழைத்தேன். மூன்றையும் மாடியின் முன் புறத்தில் போட்டிருக்கிறோம்.''

''முன்பு பார்த்ததிலும் இந்த றூம் ரொம்ப அழகாயும் கூலிங்காயும் இருக்கு. அந்தப் புதுக் 'கேட்டின்' துணியெல்லாம் எங்கே வாங்கினீங்க. பியூட்டி புல் டிசைன்''

''கார்கில்ஸிலே சிலெக் பண்ணினன். யார் இருபத்தெட்டு ரூபா. இனிமேல் இதெல்லாம் எங்கே வரப்போகுது? யு என். பி, வந்தால்தான்.''

''இத்தனை பியூட்டியான றூமையும் அறேஞ்மெண்டுகளையும் நான் எந்த வீட்டிலையுமே பார்க்கேல்லை''

உள்ளே ஒருவிதப் பொறாமை எரிந்தபோதும் வெளியே அவளைக் கவரத் தக்கதாக முன்னர் போலவே பாராட்டை எழுப்பினாள். என்ன சிறப்பு இருந்தாலும் நாகரத்தினத்தின் இதயத்தை இவளால் கவர முடியவில்லை; அந்த வெற்றி எனக்கே உரியது; அவரை ஆட்டிப்படைக்கத் தக்க திறமை தன்னிடமே இருப்பதாக உள்ளூற எண்ணிப் பெருமைப்பட்டாள்.

''நீங்க பத்திரிகையிலை அறிமுகப்படுத்தினீங்க. இப்ப வெல்லாம் அந்த பியூட்டி கொன்ரெஸ்ட், இந்த பாஷன்

ஷோ யாவுக்கும் என்னையும் ஜட்சாக அழைக்கிறாங்க. அதற்கே வாரத்திலை இரண்டு நாள் சரியாகிவிடுகிறது.''

''உங்களிடம் உள்ள திறமையை அறிந்துதானே கேட்கிறார்கள்.''

''நீங்க அறிமுகப்படுத்தினதால்தானே இந்தப் பெருமையெல்லாம் தெரிய வந்தது.''

''திறமையைக் கண்டு பிடித்து அறிமுகப்படுத்துவது எமது தொழில் .''

மாலினி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள். வாயிலைக் கடக்கும்போது இந்திரா சொன்னாள்:

''அவர் கண்டிக்குப் போனதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.''

அந்த வார்த்தைகளின் அர்த்தத்தை அவளால் நன்கு புரிந்து கொள்ள முடியவில்லை. கீழே சொன்னார்கள் என்று கருதினாளா? அவரே நேரிடையாக என்னிடம் முன்னரே சொல்லியிருப்பார் என எண்ணிச் சொன்னாளா?

கீழே இறங்கியதும் மேரி கதவைத் திறந்து கேட் வரை அழைத்துச் சென்றாள்.

''நான் நீங்கள் போன முறை வரேக்கை சொன்னது உங்களுக்கு நினைவிருக்கும். எல்லாத்துக்கும் ஒரு முடிவு வரும் எண்டு சொன்னன். அது போலை நடந்து போச்சு. இந்தம்மா வயித்துப் பிள்ளையை துரைக்குத் தெரியாமல் அழிக்கப் போய் அகப்பட்டுப் போச்சு. ஆற்றை பிள்ளை எண்டே துரைக்குத் தெரியாது. அடிக்கடி இப்ப சண்டை தான். உந்தம்மாவை டைவோஸ் பண்ணினாலும் பண்ணி விடுவார் போலை கிடைக்கு,''

மேரியின் கடைசி வார்த்தைகள் அவளது காதுகளில் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே யிருந்தன. அவ்வொலி



அவளது மூளையையே குழப்பிக் கொண்டிருந்தது. மேரியின் பேச்சில் உண்மையிருக்குமா? உண்மையாயிருந்தால்......! மாலினியால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. வீடு சேர்ந்த பிறகும் சிந்தனை சுழன்றுகொண்டே யிருந்தது. இந்திராவின் செல்வச் செருக்கையும் ஆடம்பரச் செருக்கையும் அழிக்க வேண்டும் எனவும் மனம் எரிந்தது. இடையே பொன்னையாவின் நினைவு மீண்டும் எழுந்தது.

## 38

நாகரத்தினம் அன் கோவில் வேலை நிறுத்தம் ஆரம்பித்துள்ள செய்தியை மாலினி பத்திரிகைச் செய்தி மூலமே முதலில் அறிந்தாள். வேலை நிறுத்தம் ஏற்படாது தடை செய்வதற்காக அரசாங்க அமைச்சர்களே முயன்றும் தடை செய்ய முடியவில்லை.

வருடப் பிறப்பின்போது ஆரம்பித்த போனஸ் தகராறு யூன் முப்பது வரை ஆகியும் முடியவில்லை. தொழிற் சங்க இயக்கத்தைச் சார்ந்த மூன்று ஊழியரை கம்பனி வேலையிலிருந்து நீக்கியிருந்தது. ஆண்கள் வேலை செய்த இடங்களில் அதே வேலைக்கு குறைந்த ஊதியத்தில் பெண்களை நியமிக்கும் புதிய வழியொன்றை, தொழிற் சங்கம் சம்பளத்தை உயர்த்தும்படி கேட்ட கோரிக்கைக்காக கடைப்பிடிக்கத் தொடங்கியிருந்தனர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொழிற்சங்கத் தலைவர்கள் முன் வைத்தார்கள். பொன்னையா விக்கிரம உட்பட மற்றும் தொழிற்சங்கத்தைச் சார்ந்த பிரேமதாசா, சண்முகம் ஆகியோர் பேச்சு வார்த்தைக்கு நாகரத்தினத்திடம் சென்றனர். போனஸ் விஷயம் ஒன்றில் மட்டுமே ஓரளவு விட்டுக் கொடுக்க அவர் தயாராக இருந்தார். வேலையிலிருந்து நீக்கிய தொழிலாளர்களை மீண்டும் வேலையில் சேர்ப்பது அவரது தன்மானத்தைப் பொறுத்த விஷயமாக இருந்தது. அத்தொழிலாளர்கள்

அவரை ஊத்தைப் பேச்சில் பேசி அடிக்க வந்தார்கள் என்பது அவரது குற்றச் சாட்டு. அதை நிரூபிக்கும்படி யூனியன் தலைவர்கள் கேட்டபோது 'என் கண் முன்னே என் தொழில் நிலையத்தில் எனக்கு நடந்ததை நான் நிரூபித்துக் காட்ட வேண்டுமா?' என்று கூறிவிட்டார்.

விக்கிரம தமது தொழிற்சங்கத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமையைச் சொல்லி அதை ஓரளவு நியாயமாகத் தீர்த்து வைக்கும்படி தமது கட்சியின் பிரதிநிதிகளாகக் கூட்டரசாங்கத்தில் சேர்ந்திருப்பவர்களைச் சென்று தனிப்பட அணுகினான். அவர்களின் அலட்சியமும் தத்துவ வறுமையும் கொண்ட பதில்கள் அவன் கண்களை முதல் தடவையாகத் திறக்கச் செய்தன.

''இது தொழிலாளர்களும் சேர்ந்து அமைந்திருக்கும் கூட்டரசாங்கம். இதில் நீங்கள் வேலை நிறுத்தம் செய்து அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்கலாமா? உற்பத்தி குறைந்தால் நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்படும்''

ஒரு உதவி மந்திரி விக்கிரமாவிடம் கூறினார் அவன் அப்படியே அதிர்ச்சியடைந்தான். ஒரு கணம் நந்தான். அடுத்த கணம் ஆத்திரமடைந்தான். அவனது இரத்தம் கொதித்தது.

''நாம் அமைதியாக இருப்பதற்கு தொழிற்சாலையின் நிர்வாகத்திலேயோ லாபத்திலேயோ எயக்குப் பங்கு இருக்கிறதா?''

''நாங்கள் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தொழிலாளர் கவுன்சில்கள் அமைக்கச் சட்டம் கொண்டுவரப் போகிறோம். அவை உங்கள் பிரச்சினைகளையெல்லாம் பார்த்துக் கொள்ளும்''

''சரி. இப்போது 'உங்கள் பிரச்சினை' என்று நீங்களே சுட்டிக் காட்டத் தொடங்கிவிட்டீர்கள். நாங்கள் வேறு



நீங்கள் வேறாகி வருகிறோம் என்பதைக் கண்டுகொண்டேன். சென்று வருகிறேன்''

பொன்னையாவின் தீர்க்க தரிசனத்தை விக்கிரம அன்று உணர்ந்து கொண்டான்; அதன்பின்னர் பொன்னையாவை எதிர்த்து அடிக்கடி வாதாடிக் கொண்டிருப்பதை விட்டு விட்டான்.

வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தொழிலாளரின் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள். தனிப்பட்ட பிரச்சினைகளைக் கவனிப்பதில் பொன்னையா, விக்கிரம மற்றும் நண்பர்கள் முழு மூச்சாக ஈடுபட்டிருந்தனர். வேலை நிறுத்தம் ஒரு மாதத்திற்கு மேலும் நீடிக்கலாம். ஆகவே, செலவுகள் யாவையும் கட்டுப்படுத்தி, பொழுது போக்குச் செலவுகளை அறவே நிறுத்தி, மிக அத்தியாவசிய உணவுப் பொருட்களை மட்டும் வாங்கும்படி யூனியன் தலைவர்கள் யாவரும் தொழிலாளர்களை வற்புறுத்தி வந்தனர்.

நாகரத்தினம் தமது தொழிற்சாலை நிலைமைகளையும் தொழிலாளரின் அநீதியான கோரிக்கைகளையும் விளக்கி நீண்டதோர் அறிக்கையைப் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார். அவரின் ஒழுங்கான விளம்பரம் பெறும் பத்திரிகைகள் யாவும் முதல் பக்கத்திலே கொட்டை எழுத்துகளில் அவரது அறிக்கையை வெளியிட்டன. தொழிலாளரின் தலைவர்களும் ஒன்று சேர்ந்து தேசீய நலன் கருதி உற்பத்தியைப் பெருக்கி நாட்டை வளமாக்கும் இவ்வேளையில் இவ் அநீதியான வேலை நிறுத்தம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கே துரோகம் செய்வதாகும் என்று தமது அறிக்கையை முடித்திருந்தார். 'கோடரிக்காம்புகள், நாட்டின் துரோகிகள், தொழிலாளரின் ஏமாற்று' என்று ஒவ்வொரு பத்திரிகையும் அச்செய்திக்கு ஒவ்வொரு விதமாகத் தலைப்பிட்டன.

விக்கிரமாவும் பொன்னையாவும் தமது நிலைமையை விளக்கி தமது நியாயமான கோரிக்கைகள் பற்றி ஒரு அறிக்கையைத் தயாரித்தனர். எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்

பினர். முதலாளித்துவப் பத்திரிகைகள் தமது பாரபட்சமற்ற நடுநிலைமை என்ற ஜனநாயகத்தைக் காட்டவாயினும் தமது செய்திகளை ஒரு மூலையிலாயிலும் நிச்சயம் வெளியிடுவர் என்ற நம்பிக்கையுடன் அனுப்பினர்.

''சுதேசிப்பத்திரிகை நிலையத்தில் உங்க பிரெண்டு மிஸ் மாலினியிடம் நேரில் கொடுத்தாலென்ன? சென்ற தடவை கொடுத்த செய்தியை நன்கு பெரிதாக வெளியிட்டிருந்தார்கள்''

விக்கிரம நினைவூட்டினான். மாலினியின் நினைவுக்கு வந்ததும் அவளை ஒரு தடவை பார்க்க வேண்டும் என்ற நினைவு காரணமின்றி அவனது இதயத்தினடியில் ஊறியது.

''சரி. மாலையில் இருவருமாகப் போவோமே. முதலாளித்துவத்தை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தக்க சந்தர்ப்பங்களை நாம் எப்போதும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்''

பொன்னையா கூறினான். உடனே அவளுக்கு டெலிபோன் செய்தான்.

''ஏதோ போர் வீரர்களுக்கே என்னைப்பற்றி நினைவு வந்தது ஆச்சரியம்தான். பெண்களிடம் இவ்வேளை என்ன தேவையோ''

மாலினி டெலிபோனில் கேட்டாள். அவ்வேளை பொன்னையா முன்னொரு தடவை வேலை நிறுத்தம் என்பதும் யுத்தம் போன்றதே என்று அவன் கூறிய விளக்கம் அவள் நினைவில் வந்தது.

''வேலை நிறுத்தம் என்பதே இரத்தம் சிந்தும் போராட்டம்; வேள்வி, தொழிலாளர்களெல்லோரும் போர் வீரர்கள். தமது குடும்பம், நிரந்தரத் தொழில் என்னும் செக்கூரிட்டி, தமது பொழுது போக்குகள், கிடைக்கும் சிறு அமைதி, இன்பம் ஆகிய யாவையும் பணயம் வைத்துப் புரியும்



போராட்டமே வேலை நிறுத்தம். முதலாளி தன் பாதுகாப்பாளரான பொலிஸ், இராணுவங்களையே கொண்டு பயமுறுத்தும்போதும் அவர்கள் எதிர்த்து நின்று போராடுகிறார்கள். வெளியே இரத்தம் சிந்தாமலிருக்கலாம். ஆனால் தம் நெஞ்சிலே, வர்க்க பேதம் என்ற நெருப்பிலே இரத்தத்தைச் சொரிகிறார்கள். அதனால்தான் வேலை நிறுத்தம் முடிவடைந்ததும் அவர்களின் உடலே வாடியிருப்பதைக் காணலாம். ஆனால் அவர்கள் அதன்பின்னர் முன்னதிலும் பார்க்க அதிக வர்க்க உணர்வும் ஒற்றுமையும் அடைகின்றனர்.''

''யுத்தகளத்திலும் காயமுற்ற போர் வீரர்களது புண்களை ஆற்றவும் சோர்வுற்றவர்களுக்குத் தெம்பூட்டவும் பெண்களைத்தான் அனுப்புவார்களாம்''

பொன்னையாவின் பதில், அவளின் நெஞ்சை ஒரு தடவை குளிரச் செய்தது.

''தங்களுக்கு தற்போது என்ன காயமோ?''

''மனச் சோர்வு என்ற ஊமைக் காயம்''

'தங்களுக்குக் கூடவா''

''ஏன் நான் மனிதனில்லையா''

''ஆற்றிவிடுகிறேனே. எப்போது சந்திக்கலாம்?''

''ஐந்து மணிக்கு''

'உண்மையாகவா?'

''தவறாது''

''எங்கே?'

''அங்கேயே, கீழே''

அவர்களது உரையாடலை விக்கிரம கேட்டுக்கொண்டிருந்தான். தனக்குள்ளேயே புன்னகை புரிந்தான்.

## 39

மாலையில் பத்திரிகை நிலையத்தை நோக்கிச் சென்றபோது விக்கிரம சிறிது தயக்கத்துடன் பொன்னையாவைக் கேட்டான்.

''யாரிந்தப் பெண்? ரொம்ப அழகாக இருக்கிறாள். முற் போக்காகப் பேசுகிறாள். உங்கள் காதலிதானே''

பொன்னையாவின் உதட்டில் கேலிப்புன்னகை வழிந்ததைக்கண்டு விக்கிரம 'ஏன் கேட்டோம்' என்று மனதைக் கடிந்தான்.

''இங்கு வேலை செய்தபோது நல்ல பழக்கம்; என்னை விடுவதில்லை என்று இப்பொழுதும் சுற்றிக் கொண்டே என் இதயத்தை அசைத்துக் கொண்டிருக்கிறாள்.''

''உப்படியான சூழலில் வாழும் பெண் உங்களோடும் என்னைப்போன்ற தொழிலாளரோடும் பேசிப் பழகுவதையும் உரையாடும் விஷயங்களையும் பார்த்தால் எனக்கே ஆச்சரியமாயிருக்கு. இப்படி ஆயிரத்தில் ஒன்றைக்கூடக் காணமுடியாது''

விக்கிரம தனது வியப்பைத் தெரிவித்தான். வேலை செய்யும் இடத்திலேயே அவனின் பின்னால் சுற்றுவதற்கு எத்தனையோ வாலிபர்களிருக்கலாம். அத்தனை அழகும் கவர்ச்சியும் அவளிடம் இருந்ததை அவன் கண்டான். அப்படியிருக்க ஏன் இந்தப் பெண் சாதாரண தொழிலாளியாகிவிட்ட ஒருவனை இன்னும் சுற்றிக்கொண்டிருக்க வேண்டும். விக்கிரமவால் விடைகாண முடியவில்லை.

இருவரது வருகையையும் மேலிருந்து கண்ட மாலினி படிக்கட்டு வழியே சுறுசுறுப்பாக இறங்கி வந்தாள். கண்களில் ஆர்வம் ஜொலித்துக் கொண்டிருந்தது. இருவரது முகங்களும் வாடிபோயிருப்பதை அவள் கண்டு காரணத்தை உணர்ந்து கொண்டாள்.



''மனக் காயமடைந்த போர் வீரர்களென்பது முகத்திலேயே தெரிகிறது''

''அதனால் போராட்டத்தைக் கைவிட்டு விட்டோமென்று நினைக்க வேண்டாம்''

''உங்கள் எதிரியின் அறிக்கையைக் காலையில் படித்திருப்பீர்கள்''

மாலினி சொன்னாள்.

''இது எங்கள் பதில்''

பொன்னையா கவரை நீட்டினான். அவள் வாங்கிப் பிரித்து நோட்டம் போட்டாள். கையெழுத்து இருக்கிறதா என்பதையும் பார்த்துவிட்டு வாச்சரைக் கூப்பிட்டு மேலே கொடுத்து வரும்படி அனுப்பினாள்.

''நான் தந்ததென்று சொல்லு''

அவன் பெற்றுக்கொண்டு மேலே ஓடினான்.

''நாகரத்தினமும் உங்களிடமேயே அனுப்புவாரோ''

''இல்லை. அவர் மனேஜிங் டிரெக்டரிடம் அல்லது எடிட்டரிடம் நேரில் கொடுப்பார். அல்லது அவர்களுக்கு டெலிபோன் செய்துவிட்டு அவர்களிடமே அனுப்பிவிடுவார்.''

விக்கிரமவிற்கு இவ்வினாவும் பதிலும் அத்தனை ஆழமாகப் புரியவில்லை.

''என்னோடு பேச வருகிறீர்களென்று இருந்தன். ஏதோ உங்கள் காரியமாய்த்தான் வந்திருக்கிறீர்கள். சரி இப்போது எங்கே போவது?''

''போராட்டத்தில் சோர்ந்து போயிருக்கும் எங்களுக்கு தாகத்திற்காவது ஏதாவது வாங்கித் தாருங்கள்''

பொன்னையா நளினமாகக் கேட்டான்.

''அப்ப நாஷனல் கபேக்கே போய்விடலாம்''

கார்களும் பஸ்களும் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்த அகண்ட தெருவை, காத்து நின்று கடந்து மூவரும் நாஷனல் கபேயை நாடிச் சென்றனர்.

' போர் வீரர்களுக்கு என்ன டிரிங் வேணுமோ?' '

' பியர்''

''சாப்பிட''

' எதுவும் வேண்டியதில்லை''

வெயிட்டரிடம் விசாரித்துவிட்டு மூன்று றோல்ஸ், இரண்டு புட்டி பியர், ஒரு தேநீருக்கு ஓடர் கொடுத்தாள். பின்னர் இருவரது சோர்ந்து கவலை படிந்த முகங்களையும் பரிதாப உணர்ச்சியோடு பார்த்தாள். பொன்னையா முக சவரம் செய்யாததினால் முகத்தில் மயிர் வளர்ந்திருப்பதையும் பார்த்தாள்.

''மிஸ்டர் விக்கிரம, இவர் மிகவும் ஆபத்தான ஆள், உங்களைக் கொண்டு போய் வேலை நிறுத்தத்திலை மாட்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்; நீங்கள் ஆதரித்த சமசமாஜிக் கட்சிதானே ஆட்சியிலே இருக்கே. போய் நியாயம் வழங்கும்படி கேட்டுப் பார்த்தால் என்ன?''

''நீதியில்லாமல் போய் தொழிலாளர்களின் உடைமைகளையெல்லாம் பணயம் வைத்து விஷப் பரீட்சை செய்வமா? எம் பக்கம் நியாயமிருக்கிறது. போராடுகிறோம், அரசாங்கத்திடமிருந்து உதவி கிடைக்காது. வெலோனா தொழிற்சாலை, வாழைச்சேனை பேப்பர் மில்ஸ் ஆகியவற்றிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன.''

விக்கிரம கூறினான். அவன் கருத்தில் மாற்றம் இருப்பதை மாலினி உணர்ந்து ஆச்சரியப்பட்டாள்.



''இது எதைக் காட்டுகிறதென்றால், தொழிலாளர் தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் ஏமாற்றினாலும் தொழிலாளி வர்க்கம் தமது சொந்த நம்பிக்கையுடன் தொடர்ந்து போராடிக் கொண்டேயிருக்கும் என்பதைக் காட்டுகிறது''

பொன்னையா இடையிலே புகுந்து விளக்கம் கொடுத்தான்.

''வெற்றியோ தோல்வியோ அவற்றிற்கெல்லாம் விளக்கம் கூறுவதில் இவர் கை தேர்ந்தவர். இந்தச் சோஷியலிச அரசாங்கத்திற்கு எத்தனை ஆயுள் என்று கூடச் சோதிடம் கூறிவிடுவார்.''

''அடுத்த தேர்தல்கூட அதிக தூரத்திலில்லை. இன்னும் ஒரு வருடங்கூட இல்லையே.''

''இந்த அரசாங்கத்தை வீழ்த்தி யு. என். பி. முதலாளித்துவக் கட்சியை மீண்டும் கொண்டு வந்தால் ஒரு முற்போக்கான சோஷியலிச அரசாங்கத்தைத் தொழிலாளர்களே வீழ்த்திய பழி உங்களுக்கே சேரும்.''

மாலினி பொன்னையாவைப் பார்த்துக்கொண்டே சொன்னாள். இருவரும் பியரை சிறிது சிறிதாகச் சுவைத்தனர். உதட்டில் ஊறிய பியர் தன்மையை பொன்னையா நாவால் தடவி சுவைத்துக்கொண்டே சொன்னான் :

''இந்தப் பெட்டைக்கு மார்க்ஸ், லெனின் தத்துவமெல்லாம் எங்கே புரியப் போகுது? விக்கிரம உனக்கு முக்கியமான ஒரு விஷயத்தைக் கூறுகிறேன். சோஷியலிசம் என்று இந்தப் பெட்டை மட்டுமல்ல பூஷ்வா ஜனநாயக ஆட்சிக்காரரே ஒரு பாஷனாக இன்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஒரு நாட்டு அரசாங்கத்தின் கருத்தையோ எண்ணங்களையோ பார்த்து அது சோஷியலிச ஆட்சியோ அல்லது முதலாளித்துவ அரசாங்கமா என்று

ஒருபோதும் தீர்மானிக்கப்படாது. அந்நாட்டின் சமுதாய அமைப்பின் குணாம்சங்களையும் ஆட்சி செலுத்துவதில் முழுப் பொறுப்பையும் வகிக்கும் வர்க்கத்தின் தன்மையையும் ஒட்டித்தான் தீர்மானிக்க வேண்டும்.''

பொன்னையா மிகவும் அழுத்தி நிதானமாகக் கூறினான்.

'பெரிய சோஷியலிசம் பேசும் வீரர்களே ஆண் வர்க்கம் பெட்டை வர்க்கமென்று ஒதுக்கிப் பேசுகிறார்கள். ஏன் இந்த விஷயங்களை இந்த பெட்டைக்கும் புரியத்தக்கதாகச் சொல்லப்படாதோ.'

மாலினி நளினமாக இருவரையும் பார்த்துக் கேட்டாள். அவளின் முகத்தில் மெல்லிய கோப உணர்வுகள் விளையாடின.

''பெட்டை எண்டது பிடிக்கேல்லை இந்தம்மாவிற்கு. சரியம்மா உங்களுக்கும் சேர்த்துச் சொல்லுகிறேன். நீங்களெல்லோரும் இந்த இடதுசாரிக் கூட்டரசாங்கத்தை சோஷியலிச அரசாங்கமென்று சொல்லுகிறீர்கள். அது சரியா என்று பார்ப்பதற்கு அரசியல் தலைவர்கள் பேசுவவிருந்தோ அவர்களது விருப்பங்களிலிருந்தோ பார்க்கப்படாது. இரண்டு கேள்வியைக் கேட்க வேண்டும் தற்போது ஆட்சி செலுத்துவதில் முழுப் பொறுப்பையும் வகிக்கும் வர்க்கமென்ன? தொழிலாளி வர்க்கமா? இல்லை. இரண்டாவது கேள்வி. தற்போதைய இலங்கைச் சமுதாய அமைப்பின் குணாம்சமென்ன? தேசீய முதலாளித்துவம். இல்லாவிட்டால் நாகரத்தினம் அன் கோ வில் அல்லது வெலோனா கம்பனியில் ஏன் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது?முதலாளிக்கும் தொழிலாளருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட அரசாங்கம் பார்த்துக்கொண்டு இருப்பது மட்டுமல்ல, முதலாளிகளைப் பாதுகாக்க பொலிஸ் படையை அனுப்புகிறது. நாகரத்தினம் வீட்டு வாசலிலேயே பொலிஸ் காவலாம். நீ போய் பார்க்கவில்லையா?''



பொன்னையா பொடி வைத்துப் பேச்சை முடித்தான் மாலினிக்கு ஓரளவு தெளிவு ஏற்பட்டதைத் தெரிவிக்க இருந்தாள். ஆயினும் கடைசி வார்த்தைகள் அவளைச் சிறிது சுட்டன.

'நான் ஏன் போக வேண்டும்? நீங்களெல்லோ போர் வீரர்கள். போய் வீட்டு வாசலில் மறியல் நடத்தலாமே அல்லது கல்லெறியலாமே''

'அவனைக் கண்டால் சொல்லு வீட்டுக்குக் கல்லெறி கெதியாய் விழுமெண்டு''

''ஏன் உங்களுக்குச் சிறைக்குச் செல்ல ஆசையாயிருக்கோ''

''இந்த அரசாங்கம் தொழிலாளர்களின் அரசாங்கமல்ல தாங்கள் விரும்பும் சோஷியலிச அரசாங்கமல்ல என்பதைத் தொழிலாளர்களுக்கு காட்டுவதற்காயினும் ஒரு தடவை சிறை செல்ல ஆசையாயிருக்கிறது''

''சரியய்யா வீரரே. பொலிசோடு போராடி சிறைக்குப் போங்கோ. கல்லெறிந்து போகவேண்டாம்''

வெயிட்டர் கொண்டுவந்த பில்லுக்கு மாலினியே பணம் கொடுத்தாள்.

''ஏதோ ஏழைத் தொழிலாளர்களை ஆதரிக்க ஒரு பூஷ்வா பெண்ணாதல் இருக்கே. எங்க அதிர்ஷடம்தான்''

மூவரும் வெளியே வந்தார்கள்.

''சரி மாலினி நீ தனிய வீட்டுக்குப் போவாய்தானே.''

''இல்லை, பயமாய் இருக்கு. கூட்டிக்கொண்டே விடுங்களேன்.''

''நான் இவரோடு போகவேண்டும். அலுவல் இருக்கிறது''

''நான் முக்கியமான விஷயம் ஒன்று சொல்ல வேணும் நில்லுங்க.''

''நாளைக்குக் காலையில் பார்ப்போம். இந்த லேடி பாவம். கைவிட்டு விடாதையுங்கோ.''

சிரித்துக்கொண்டே விக்கிரம புகையிரத நிலையத்தை நோக்கி நடந்தான்.

## 40

''அந்த முக்கிய விஷயத்தைச் சொல்லன்.''

மாலினியைப் பார்த்து பொன்னையா கேட்டான்.

பஸ் நிலையத்தை நோக்கி இருவரும் தெருவைக் கடந்தனர்.

''அன்று தொழிலாளரின் பேச்சுவார்த்தைகளின்போது என்ன நடந்தது?''

''நீ ஏதோ சொல்லுவதை நிறுத்திவிட்டு இப்போது என்னையே கேள்வி கேட்கிறாய்''

பஸ் வந்து நின்றது. இருவரும் மேலே ஏறி பின்புற ஆசனத்தில் அருகருகே உட்கார்ந்தனர். மாலினியே கண்டாக்டரிடம் பணத்தை நீட்டி டிக்கெட் வாங்கிக்கொண்டாள்.

''நீங்க முதலில் சொல்லுங்கோ, பிறகு நான் சொல்லுகிறேன்''

மாலினி சொன்னாள்

''நீங்கதான் அந்த மிஸ் மாலினியின் தோழரோ. உங்களைப்பற்றி ரொம்பக் கேள்விபட்டிருந்தன். இன்றுதான் பார்க்கிறேன். அவங்க எல்லாம் சொல்லியிருப்பாங்க என்றார். எனக்கு உன்மேல் தான் முதலில் கோபம் வந்தது.''



''நீங்க என்ன சொன்னீங்க''

''அதல்ல இப்ப விஷயம். இந்த கோரிக்கைகள் பற்றி என்ன சொல்லுகிறீர்கள் என்பது பற்றித்தான் இப்போது பேச வந்தோம் என்றன். சிறிது சுட்டுவிட்டது. அவன் உனக்கு என்ன சொன்னான்?''

''உன் தோழர் ஒரு அசையாத அசுரனாயிருக்கிறான். அவனோடு நியாயமே பேச முடியாமலிருக்கு என்றார்''

மாலினி பெருமையோடு சொன்னாள்.

''பிறகு வேலை நிறுத்தத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையா? அவனுக்கு வேலை நிறுத்தத்தைப்பற்றியே கவலையில்லையா?''

''பக்டரி தொடங்கி ஐந்து வருடம் முடிந்திட்டுது. இனி வாற லாபத்திலை அரசாங்கத்துக்கு வருமான வரி கொடுக்கவேண்டும். வேலை நிறுத்தத்தைச் சாட்டாக்கி லாபம் இல்லை, நட்டமென்றுகூட கணக்குக் காட்டலாம் என்றார்''

''ஓகோ. அப்படியா சொன்னான். நானும் அப்படித்தான் எதிர்பார்த்தன். தொழிலாளர்களின் வயிற்றிலடிக்க முதலாளிகள் எத்தனை தந்திரோபாயங்களைக் கையாளுறாங்கள். தெய்வபக்தி, இரக்க சிந்தனை என்பதெல்லாம் எத்தனை போலிவேஷம். என்ன இருந்தாலும் வர்க்கம் வர்க்கந்தான். எத்தகைய பொய்த் தோற்றங்களாலும் அதை மாற்றிவிட முடியாது.''

பம்பலப்பிட்டியில் மாலினி அவனது ஸ்பரிச உணர்ச்சிச் சுகத்திலிருந்து விடுபட விரும்பாதவளாக எழும்போது கெஞ்சலாகச் சொன்னான் :

''ஓய்வாயிருக்கும்போது கட்டாயம் டெலிபோன் செய்யுங்கோ, மறக்க வேண்டாம்''

பஸ்ஸால் இறங்கி வீடு நோக்கிச் செல்லும்போதுதான் அவளுக்கு ஒரு விஷயம் நினைவு வந்தது. பொன்னையாவிற்குச் செலவிற்குப் பணம் ஏதாவது தேவையா என்று கேட்டிருக்கலாம் என்று எண்ணிக் கவலைப்பட்டாள். கேட்டாலும் அவன் கைநீட்டிப் பெறமாட்டான் என எண்ணி, தானே மனதையும் தேற்றிக்கொண்டாள்.

பணம் மலையாகவும் மண் கும்பியாகவும் குவிந்து கிடப்பதை நாகரத்தினம், தன் உழைப்பு, பொன்னையாவின் சம்பளம் ஆகியவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தாள். அவற்றிலும் பல தடவை குறைவாக தம் உழைப்புச் சக்தியை விற்கும் தொழிலாளர்களே நாட்டில் பெரும்பாலானவர். ஒருநாள் தன்னை அழைத்து சென்று டின்னர், டிப்ஸ், டிரிங்ஸ் ஆக நூறு ரூபா நோட்டை வீசிவிட்டு அவர் கவலையில்லாது வந்தது அவள் நினைவில் வந்தது.

நாகரத்தினம்—பொன்னையா. சமுதாயத்தின் இரு முனைகள். இவர்களிடையே நிலவும் முரண்பாடு எத்தனை? இம் மோதல்களில் வெற்றி பெறுபவர் யார்? நான் எந்தப் பக்கம்?

அவளால் உறுதியான விடை காண முடியவில்லை

நாகரத்தினம் வீட்டில் மனைவி குழந்தைகள் இருக்க எதற்காக என்னிடம் வருகிறார். தமது களைப்பு, கவலைகளை ஆற்றி ஆறுதல் பெறவா? அதற்கு ஒரு பெண்தானா வேண்டும்?

முடிவு காணமுடியாத விட்டத்துள் மனம் அகப்பட்டுச் சுழன்றது.

கண்டிக்குச் சென்றிருந்தபோது இந்திராவைப் பார்த்ததுபற்றி அவள் சொன்னபோது அவர் எதுவுமே கூறவில்லை.

‘‘சுகயீனம் என்று சொன்னா. இப்பொழுது எப்படி?’’



‘‘ஓரளவு சுகம்’’

வேறு எதையும் அவர் கூறவில்லை. குழந்தை பிறக்கப் போவது என்பதை ஏன் மறைக்க வேண்டும்? எவருடைய குழந்தை என்பதைக் கண்டுபிடிக்க முடியாது தவிக்கிறாரா? அவரும் சேர்ந்து கர்ப்பத்தை அழித்துவிடப் பார்க்கிறாரா? நீதிமன்றத்தில் சந்தேகம் ஏற்பட்டால் அதன் பலாபலனை எதிரிக்கே வழங்கிவிடும் தீர்ப்பா இது? அப்படி வழங்கும் போதே அழிந்துவிடும் உயிர்!

# 41

நாகரத்தினம் அன்றுமாலை மாலினியை அழைத்துக் கொண்டு அமெரிக்க சினிமாப் படம் ஒன்றிற்குச் சென்றார். அன்று அவர் கவலையே குடிகொண்ட மனிதராகக் காணப்பட்டார். அவரின் சிந்தனை யாவும் எங்கோ குடி கொண்டிருந்தது. அவள் கூறியவற்றைக்கூட அவர் கிரகிக்கவில்லை. ‘‘என்ன சொன்னீங்க?’’ என்று இரண்டாவது தடவை கேட்டார்.

‘‘உங்கள் முகத்தில் கவலைகள் மூட்டம் போட்டிருப்பது அப்படியே தெரிகிறது. என்ன கவலைகளோ?’’

‘‘அப்படியா, கஷ்டப்பட்டுச் சேர்க்கும் பணத்தைக் காப்பாற்றுவதே கஷ்டமாகிவிட்டது. பாவம் என்று வேலை கொடுத்த தொழிலாளிகளே இன்று பங்கு கேட்கிறார்கள்’’

மாலினிக்கு பொன்னையா இரக்கம் பற்றிக் கூறியது அவ்வேளை நினைவில் வந்தது.

அவள் தயங்காது பதில் கூறினாள் :

‘‘இன்று பங்குதானே கேட்கிறாங்கள், கொடுத்துவிடலாமே. சோஷியலிசம் வந்தால் நஷ்டஈடு இல்லாமல் முழுவதையும் எடுத்துப் போடுவாங்கள். இந்த அரசாங்கமே

சிலவேளை இடதுசாரிகளின் தூண்டலினால் உங்க தொழில்களை தேசீய மயமாக்கிவிட்டால்..."

"அப்படி இந்த அரசாங்கம் செய்யமாட்டாது. அரசாங்கமே தற்போது என் நடவடிக்கைகளுக்கு சாதகமாகவே இருக்கிறது. நஷ்டஈடு இல்லாமல் தொழிலாளரை எடுக்க விடுவதா? அப்படி நேரின் நான் உழைத்து எழுப்பியதை நானே அழித்துவிடுவேன்."

"தங்களுடைய உழைப்பின் சுரண்டல்தான் தொழிற்சாலையாய் மாறியது என்று அவங்கள் சொல்லுவாங்கள். அழிக்கவிடுவாங்களா?"

"உங்களுடைய தோழரின் நோய் தொற்றிவிட்டது போலிருக்கிறது. அவனைப் பிறகு நீங்க காணவில்லையா?"

"இல்லையே. இந்த வேலை நிறுத்தத்தைத் தீர்த்துவிட்டால் உங்கள் செந்தளிப்பான முகத்தையாவது நானும் பார்க்கலாம்."

"அதுமட்டுமல்லவே, இப்படி எத்தனையோ கவலைகள்? ஏழைகளுக்கு மட்டுந்தான் கவலைகள் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள்."

நாகரத்தினத்தின் பேச்சில் மனச் சோர்வு நன்கு தெரிந்தது.

"எனக்குச் சொல்லி ஆற முடியாத கவலைகளும் வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது."

மாலினி சிறிது உரிமையோடு பேசினாள்

"இருக்கலாம்"

"எவரிடமும் கூற முடியாத இரகசியங்களும் மனிதர்களிடம் உள்ளன."

"உண்மைதான்"



மாலினி ஓரளவு ஊகித்துப் பார்த்தாள். இந்திராவின் கர்ப்பம் பற்றிய விஷயத்தை அவர் கூறுவதாக இல்லை.

சினிமாவும் மாலினியின் ஸ்பரிச உணர்வும் ஒன்றரை மணிநேரம் அவரைக் கவலைகளிலிருந்து ஓரளவு விடுபடச் செய்தது.

டின்னருக்கு வெளியே செல்வதை அவள் விரும்பவில்லை. அவளை பம்பலம்பிட்டியில் இறக்கிவிட்டு வீடு சேர்ந்தார்.

அன்று நேரத்தோடு வீடு திரும்பியதால் செல்வியோடு சிறிது நேரம் பேசிப் பொழுதுப் போக்கினார். பின்னர் குடிப்பதைத் தவிர அவரால் கவலையிலிருந்து விடுபடவழி காண முடியல்லை. வேலை நிறுத்தம் பற்றிய நினைவு மனதை உறுத்திக்கொண்டிருந்தது.

மேரி சாப்பிட வரும்படி அழைத்தாள். குறைவாகச் சாப்பிட்டு வந்து படுத்துக்கொண்டார். பாஷன் ஷோவுக்குச் சென்று டின்னரும் முடித்துத் திரும்பிய இந்திரா உடைகளைக் களைத்து, நைட் டிரெஸ் மாற்றிக்கொண்டு அவரின் அறையுள் நுழைந்தாள்.

"டார்லிங் வேளைக்கே வந்து விட்டீர்களே. உங்க மீட்டிங் நேரத்தோடு முடிந்து விட்டதா? சாப்பிட்டீங்களா?"

நாகரத்தினத்தின் அருகே படுத்துக்கொண்டு அணைத்தபடி கேட்டாள். அவளது கரத்தை விடுவித்துக்கொண்டே நாகரத்தினம் கேட்டார்.

"நீ சொன்ன திகதியில் குழந்தை பிறக்காவிட்டால் என்ன செய்வது?"

"என்னை கொலை செய்து விடுங்கள்"

இந்திரா அழுத்தமாகச் சொன்னாள்.

''நீ சாவதல்ல. என்னைத் தூக்கு மேடைக்கும் போகச் சொல்லுகிறாயா?''

''இல்லை. தானாகவே தற்கொலை செய்வதாக ஒரு கடிதம் எழுதித் தந்துவிட்டு தற்கொலை செய்து கொள்ளு கிறேன்.''

''நீ சொன்ன திகதிக்கு இரண்டு வாரம் முத்தி இல்லா விட்டால் இரண்டு வாரம் பிந்தியும் குழந்தை பிறக்கலாம் சில வேளை குறை மாதமாகப் பிறந்தால்...''

'அவநம்பிக்கை ஏற்பட்டால் உப்பிடி எத்தனையோ, கற்பனை செய்யலாம், மீண்டும் என் உயிராணையாகச் சொல்லுகிறேன். டார்லிங் என்னை நம்புங்கோ '

''நீதானே நம்பமுடியாமல் செய்துவிட்டாயே.''

அப்படியானால் குழந்தையையே அழித்து விடுங் களேன்.''

''அதற்குதானே நீ மருந்தெடுத்தாயே. பலனேற்படா விட்டால்.''

' ஒப்பரேசன் செய்துவிடுங்கள். அதுக்கும் சம்மத மில்லாவிட்டால் நான் இன்றிரவே தற்கொலை செய்து கொள்ளுகிறேன்''

''நீ போ இப்ப உன்ரை றூமுக்கு. எத்தனை தொல்லை களுக்குள் நான் தவிக்க வேண்டியிருக்கு. வீட்டுக்கை நீ, அங்கே வேலை நிறுந்தம். என்னைக் கொஞ்சம் நிம்மதியா யிருக்கவிடு. நீ சத்தமிட்டு பிள்ளைகளை எழுப்பி உன் நாட கத்தைக் காட்ட வேண்டாம்.''

அவள் முன்னராயின் மேலும் எதிர்த்து வாதாடியிருப் பாள். அவ்வேளை தாங்கமுடியாத நெஞ்சத்துடன் சென்று மெத்தையில் குப்புற விழுந்து விம்மி விம்மி அழுதாள்.



# 42

இந்திராவின் விம்மும் குரல் கேட்டுக் கொண்டிருந்தது. நாகரத்தினத்தின் நெஞ்சில் பல்வேறு கவலைகள் ஒன்று மாறி ஒன்றாக மோதிக் கொண்டிருந்தன, தூக்கமே வர மறுத்தது. கட்டிலிலே தலையணை ஒன்றை நெஞ்சோடு அணைத்தபடி புரண்டு கொண்டிருந்தார் கவலைகளை ஒதுக்க இன்ப நினைவுகளிடையே மனதைத் திருப்பினார். அவர் பழகிக் கைவிட்ட எத்தனையோ பெண்களிடையே மாலினியின் உருவம் மட்டுமே கண்முன்னே கற்பனையில் தோன்றி உணர்வுகளைக் கிளர்த்தெழச் செய்தது. மாலினி எத்தனை இனிமையான பெண். விவேகமும் திறமையும், எளிமையும் அழகும், உலகியல் அறிவும் வளர்ச்சியும் அறிநத பெண். மாலினியையும் இந்திராவையும் மனத் தராசின் இரு புறங்களிலும் வைத்து நிறுத்துப் பார்த்தார். மாலினியோடு ஒப்பிடுவதற்கே எதுவுமில்லாது இந்திராவின் முனை எழுந்து மேலே குத்திட்டு நின்றது.

எனக்கும் இந்திராவிற்கும் என்ன ஒற்றுமை இருக் கிறது? என் விருப்புகள் யாவையும் அவள் வெறுக்கிறாள். அவளின் ஆசைகள், விருப்புகள் வாழ்வு பற்றிய எண்ணங்கள் கருத்துகள் எதையுமே என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது இருக்கிறது. இம்முரண்பட்ட இருவரிடையே என்ன குடும்ப வாழ்வு? உரையாடத் தொடங்கினால் நாம் இருவரும் ஒற்றுமைப்படுதற்கு ஒரு விஷயமுமே யில்லை. பிள்ளைகள் விஷயத்திலாவது பெரும்பாலான குடும்பங்களில் ஒற்றுமை நிலவுவதாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். இவளுக்குவளர்ந்த பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று பிறருக்குக் காட்டி அறி முகப்படுத்தவே வெட்கமாக இருக்கிறது. தன் முதுமையை யும் வயதையும் கூட்டிக் காட்டுவது வளர்ந்த பிள்ளைகள் என எண்ணிக் கொள்ளுகிறாள். பண விஷயத்தில்கூட நான் எவ்வளவு சிக்கனமாக இருந்து சேரும் பணங்களைச் சரியாக முதலீடு செய்ய வேண்டும் என எண்ணுகிறேன்.

அவளே எவ்வளவு பணத்தையும் தனது ஆடம்பரத்தையும் குடும்பப் பெருமையையும் நிலைநாட்டச் செலவழித்து விடலாம் என்பதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டுள்ளாள். பால் உணர்ச்சி ஒன்றில்தான் ஆரம்ப காலங்களில் ஒன்றி நின்றோம். அதுவும் எப்பொழுதோ மறைந்து விட்டது. இப்போது ஒருவித ஒற்றுமையும் இன்றி ஒரே வீட்டில் போலி வாழ்வு வாழ்கிறோம். எதற்காக இந்த நடிப்பு வாழ்வு? எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகிறோமா? உலகத்தை நாம் ஏமாற்றுகிறோமா? சட்டத்தின் பிணைப்பா சமுதாயத்தின் பிணைப்பா, பொருளுறவின் இணைப்பா எம்மை ஒரே வீட்டில் வைத்து வேடிக்கை பார்க்கிறது. இந்தப் பிணைப்பை உடைத்து என் வாழ்வை இன்பமாக்கிக் கொள்வதில் என்ன தவறு? பழகிய தோஷம் ஒன்றிற்காக என் இன்ப வாழ்க்கையைப் பாழாக்குவதா? வாலிபமும் இளமையும் அழிந்து வருகின்றன; அதன் முன்னர் உலகத்து ஆசைகளையெல்லாம் அனுபவித்து விடவெண்டும் என அவரின் இதயம் துடிதுடித்தது.

சிந்தனையும் கவலைகளும் ஒன்று சேர அமைதியும் தூக்கமுமின்றித் துடிதுடித்தார் மறுநாள் வேளைகள் நினைவில் வந்தன. எழுந்து நித்திரை மாத்திரைகளைப் போட்டுக் கொண்டு படுத்துக் கொண்டார். கண்கள் இடுக்கிக் கொண்டு வரும்போது மாலினியின் உருவமே நினைவிலிருந்து மறைந்து கொண்டிருந்தது.

காலையில் எழுந்து பாத்றூமுள் நுழைந்தபோது அங்கே இந்திரா குமட்டிக் கொண்டிருந்தாள் காலை முழுவியளமே சரியில்லை என எண்ணிக் கொண்டார். வெறுப்பும் ஆத்திரமும் வந்தது.

"வயிற்றுப் பிள்ளையில் விருப்பமில்லாதவர்களுக்குத் தான் குமட்டல் வாறதாம்."

நாகரத்தினம் சொல்லம்பு வீசினார்.



இந்திரா வாயை தண்ணீரில் அலசிக் கொப்பளித்தாள்.

"எனக்கு விருப்பமில்லை என்று ஆர் சொன்னது?"

"உன் குமட்டல் சொல்லுது. நீ டொக்டரிட்டைப்போன செய்தி சொல்லுது."

"இந்த வேளைகளில்தான் கணவன்மார் அன்பாகவும் ஆதரவாகவும் இருக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். நீங்கள் என்னை எப்பிடிக் கொல்லலாம் என்று திட்டம் போடுறியள்?"

இந்திரா குமட்டிய களையோடு கண்ணீர் அரும்பக் கூறினாள்.

"நீதானே முதலில் நஞ்சை விதைத்துப் போட்டு இப்ப என்னட்டை அன்பும் ஆதரவும் கேட்கிறாய்?"

"இரக்கமேயில்லாத மிருக சாதிகள்."

பாத்றூமை விட்டு தன் அறையை நோக்கி நடந்தபடியே சொன்னாள்.

'என்ரை மிருகக் குணத்தைக் காட்டி விடுவன். அதுக்கு இப்ப நேரமில்லை?"

நாகரத்தினம் மனக்கொதிப்போடு கூறியபடியே பாத்றூம் கதவை அடைத்துக் கொண்டார். இருவரது படுக்கையறைகளுக்கும் இடையில் ஒரு கதவும் பாத்றூமுமே பொதுபாக இருந்தன.

வேலை நிறுத்தம் தொடர்ந்தபோதும் அவர் அலுவலகம் செல்வது என்றும் தடைப்பட்டதில்லை. முன்னரிலும் பார்க்க ஒழுங்காகச் சென்று நெடுநேரம் அலுவலகத்தில் தங்கினார். தமது பலத்தையும் அசையாத நெஞ்சுரத்தையும் காட்டுதற்கு அதையே வழியெனக் கொண்டார்.

பொலிசாரின் உதவி அவருக்கு இருந்தது. தொழிற்சாலையிலும் அலுவலக வாசலிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல் புரிந்தனர். வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர் யாவரும் அலுவலகத்தின் எதிரே கூட்டமாக நிற்காதும் பொலிசார் பார்த்துக் கொண்டனர். நடைபாதையைத் தடுத்து கூட்டமாக நிற்பது சட்ட விரோதம் என்ற சட்ட உப விதிகளை தாம் கடைப்பிடிப்போம் என்று தொழிலாளர்களைப் பொலிசார் அச்சுறுத்தி யிருந்தனர். சுலோகங்கள் தாங்கிய அட்டைகளைப் பிடித்தபடி தொழிலாளர்கள் அலுவலகத்தின் எதிரே நடந்துகொண்டிருந்தனர். விக்கிரம தொழிலாளர்களின் கட்டுப்பாடான எதிர்ப்பைக் கண் காணித்துக் கொண்டிருந்தான்.

## 53

நாகரத்தினத்தோடு அவரின் உயர்தர அதிகாரிகள் ஒரு சிலர் மட்டுமே கம்பனியில் வேலை செய்தனர். அவர்கள் சங்கத்தைச் சேராதவர்கள், நாகரத்தினத்தின் கையாட்களாக இருந்தவர்கள். சங்கத்தைச் சார்ந்த கருங்காலிகள் இருவர் மட்டுமே வேலை செய்தனர், அவர்கள் யாவரது முகத்திலும் பயமே குடிகொண்டிருந்தது. கருங்காலியாகிய மூவர் ஆசுபத்திரியில் காயம் பட்டுச் சிகிச்சைக்காக இருந்தனர். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் கல்லெறிந்ததாகவும், அடித்ததாகவும் குற்றச் சாட்டு. அதற்காக சில தொழிலாளர்களைப் பொலிசார் விசாரணை செய்தனர்.

வேலை நிறுத்தம் ஏற்பட்ட சில நாட்கள் தொடக்கமாக உதவி லேபர் கமிஷனர், முதலாளி தொழிலாளர்களின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டேயிருந்தார். ஆனால் நாகரத்தினத்தின் பிடிவாதத்தை எவராலும் அசைக்கமுடியவில்லை. மறுநாள் மீண்டும்



உதவி லேபர் கமிஷனர் நடுவராக இரு பகுதியினரிடையேயும் பேச்சு வார்த்தைகள் நடைபெற இருந்தது.

வேலை நிறுத்தம் ஆரம்பித்து மூன்று வாரமாகிவிட்டது, வேலை நிறுத்தம் பிசுபிசுத்து ஒவ்வொருவராக வேலைக்குத் திரும்பிவிடுவர் என்ற நாகரத்தினத்தின் எண்ணமும் தோல்வியுற்றது பத்துப் பதினைந்துபேர் வேலைக்குத் திரும்பியிருந்தனர். கல்லடியில் மூன்றுபேர் காயமடைந்து ஆசுபத்திரிக்குச் செல்லத் தொடங்கியதையொட்டி வேலைக்குச் சென்று வந்தவர்களும் வீட்டிலேயே நின்றுவிட்டனர்.

''கருங்காலி நாய்கள் இருவர்—எஜமான் ஒருவர்''

''கடி நாய் கவனம்—கல்லடி கவனம்''

புதிய சுலோக அட்டைகளைத் தொழிலாளர் சேர்த்துக் கொண்டனர்.

கல்லடிபட்டு ஆசுபத்திரியில் கிடந்த அவரது மூன்று விசுவாசிகளையும் நண்பகலின்போது நாகரத்தினம் பார்க்கச் சென்றபோது அங்கு பொன்னையா அவர்களுடன் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து நாகரத்தினம் ஆச்சரியப்பட்டார். பொன்னையாமேல் அவருக்கு ஓரளவு மதிப்பும் வெறுப்பும் இருந்தது. மதிப்பு அவனது திறமையான பேச்சினாலும் மாலினி அவன்மேல் வைத்திருக்கும் மரியாதையாலும் ஏற்பட்டது. வெறுப்பு போர் முனையில் எதிரியாக இருந்ததாலும் தன் காதலியின் இதயத்தைப் பங்குபோட முயலுகிறானா என்ற சந்தேகத்திலும் ஏற்பட்டது. அவரும் அடிபட்ட தமது வேலையாட்களைச் சுகம் விசாரித்தார். பொன்னையா மீண்டும் அங்கு நின்று பேசிக்கொண்டிருப்பதை நாகரத்தினத்தால் தாங்க முடியவில்லை.

''கல்லடித்துக் காயமாக்கிவிட்டு உதட்டால் கருணை காட்டும் பாசாங்கு நாடகமோ.''

நளினமாக நாகரத்தினம் சொன்னார். பொன்னை யாவை தலைநிமிர்ந்து பார்க்க அவரால் முடியவில்லை.

"எதிரிகளைக் கைகூலியாக்கும் நாடகத்திலும் தேர்ந்த வர்கள் உங்கள் இனத்தவர்கள்தான்''.

பொன்னையா நேரடியாகவே அவரைப் பார்த்துக் கூறினான்.

"கூட இருந்தவர்களுக்கும் கல்லடிக்கும் கயவர்களை எனக்குத் தெரியும். நாங்கள் எதிராக நிற்பவர்களைக் கூடத் தொடுவதில்லை.''

"நீங்கள் உங்கள் கைகளால் தொடுவதில்லைதான்.''

பொன்னையா நளினமாகக் கூறி மேலும் தொடர்ந் தான்;

"எம்மை நொருக்குவதற்குத்தானே உங்களுடைய கைப் பொம்மைகளான பொலீஸ் படையே இருக்கே.''

"காடையர்களைக் கட்டுப்படுத்தப் பொலீசும் இல்லை யென்றால்...''

"காடையர் என்று இன்னொருக்கால் சொன்னால் எங்கள் கைவரிசையை இங்கேயே காட்டிவிடுவேன்.''

பொன்னையா ஆத்திரத்தோடு சொன்னான்.

"மன்னிக்கவும். கல்லடிக்கும் கனவான்கள். அப்படித் தானே சொல்லச் சொல்லுறாய்.''

நாகரத்தினம் தம் நக்கல் பேச்சில் மீண்டும் இறங்கினார்.

"போர்க்களத்தில் நம்பிக்கை யிழந்து துரோகிகளாக மாறி எதிரியோடு சேர்ந்து காட்டிக்கொடுக்க முனைபவர் களுக்குக் கல்லடிப்பதென்ன புற முதுகில் சுடுவதற்கே எவரும் தயங்குவதில்லை.''



பொன்னையா அழுத்திச் சொன்னான்.

"ஓ... இதுவும் போர்க்களமா? என்னிடத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களையெல்லாம் என் எதிரிகளாக நான் கருதுவதில்லை,''

"நாங்கள் எம் வர்க்க எதிரிகளாகவே உம்மை மட்டு மல்ல உமது வர்க்கம் முழுவதையுமே கருதுகிறோம். வேலை நிறுத்தம் என்பது தொழிலாளி முதலாளி வர்க்கப் போராட் டம். ஆடுகள் நனைவதாக ஓநாய் அழுதுதாம். நல்ல நாடகம். நாங்கள் உமது உறவினர்கள். அப்போது நாங்கள் வாழுவதற்காகக் கேட்கும் சிறிய உரிமைகளைக் கொடுப்பதுதானே''

"அநியாயமாகக் கேட்டால்''

'உம்மைப்போல மாடமாளிகைகளிலை வாழவேண்டும் என்று நாம் ஆசைப்பட்டுக் கேட்கவில்லை. குடிசைகளில் தான் வயிற்றுக் கவலையில்லாது வாழவே கேட்கிறோம். ஓநாயே நியாய அநியாயம் பேச வந்து விட்டால்...'!

"உங்க வாய்க் கொழுப்புகளையும் பொறுத்துத்தான் பார்ப்போமே''

நாகரத்தினம் சீறினார்.

"பொறுத்தென்ன, போராடியே பார்ப்போமே. பாணும் பிளெயின் டீயும் குடித்துத்தான் எம் தொழிலாளர் கள் இப்போது போராடுகிறார்கள். மூன்று கிழமையென்ன மூன்று மாதத்திற்கும் இப்படியே போராடுவார்கள். அதற் குள் ஒரு முடிவு ஏற்படாவிட்டால் என்ன நடக்குமென்று இருந்து பாருமேன்''

பொன்னையாவின் பேச்சு அவரை அதிரச் செய்தது. மூன்று மாதம் என்பதை அவரால் நினைக்கவே முடிய வில்லை. மூன்று மாதம் தொடர்ந்தால் ஏற்படக்கூடிய

நஷ்டங்கள், வங்கித் தொல்லைகளையெல்லாம் ஒரு கணம் நினைந்துப் பார்த்தார். அவர் முகத்தில் வியர்வை துளிர்த்தது.

''பொறுத்துத்தான் பார்ப்போமே. தற்போது தங்கள் எதிரியோடு சேர்ந்த நம்பிக்கைத் துரோகிகள்மேல் தங்களுக்கு எப்படி இரக்கம் ஏற்பட்டதோ''

நாகரத்தினம் வஞ்சத்தோடு கூறினார்.

''போர்க்களத்தில் காயமடைந்தவர்கள் எதிரியானாலும் காப்பாற்றுவது தானே மனிதாபிமானம்.''

நீங்களே மனிதாபிமானம் பேச வந்து விட்டீர்களா?''

''எங்கள் வயிற்றிலடிக்கும் உங்கள் சுரண்டல் மனிதாபிமானத்தை எமக்கு நல்லாகத் தெரியும். இவர்கள் எப்படியானாலும் எமது வர்க்கத்தவர்கள். ஒருபோதும் உங்கள் வர்க்கத்தவராக நீங்கள் மாற்றிவிடப் போவதில்லை. இவர்கள் மேல் நீங்கள் காட்டும் பரிவு நாயிடம் எதிர்பார்க்கும் விசுவாசத்தைப் போன்றது. அவர்கள் என்றும் நாய்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க வேண்டாம்.''

பொன்னையா உணர்ச்சியோடு பேசினான்.

''நாங்களிருவரும் வேறுபடுகிறோம் என்பதிலாவது நாம் ஒன்றுபடுவோம். நான் வருகிறேன்''

## 44

நாகரத்தினம் மரியாதையைக் காட்டும் நாகரிக மனிதர்போல் பேச்சு வார்த்தைகளை முடித்துக்கொண்டு வெளியேறினார். பேச்சு வார்த்தைகளில் தாம்கண்ட தோல்வியும் மூன்று மாதம்வரை வேலை நிறுத்தம் தொடரலாம் என்ற பொன்னையாவின் பயமுறுத்தலும் அவரின் அமைதியற்ற நெஞ்சை மேலும் பாதித்தன. பகலில்,



வேலை நேரத்தில் அவர் விஸ்கி அருந்தி மன அமைதிபெற முயல்வதில்லை. சிகரெட்டை மட்டும் அதிகமாக ஊதித் தள்ளுவார். அன்று நண்பகல் உணவோடு சிறிது அதிகமாக விஸ்கியும் அருந்தினார். அலுவலகத்திற்குத் திரும்பியபோதும் அமைதியின்மை அதிகரித்துக் கொண்டேயிருந்தது. அலுவலக வாயில் நடைபாதையில் உச்சிவெய்யிலில் தொழிலாளர்கள் வழமைபோல சுலோக அட்டைகளுடன் உலாவிக் கொண்டு நின்றதைப் பார்த்தபோது அவருக்கு ஆத்திரமாத்திரமாக வந்தது. அரசியல் காரணங்களுக்காக தொழிலாளர்களின் தலைவர்கள் தூண்டி விட்டுவிட்டு வேடிக்கை பார்ப்பதாகவே அப்பொழுதும் எண்ணிக் கொண்டார். தம்மிடம் மன்றாடி வேலை பெற்றவர்களே எதிரிகளாக மாறி வேலை நிறுத்தம் செய்வதையும் அவரால் தாங்க முடியவில்லை. தொழிலாளர்களுக்கு விட்டுக் கொடுப்பது, தோல்வியடைவது ஆகியவற்றை அவரால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. எத்தனைநாள் வேலை நிறுத்தத்தை தமக்கு நஷ்டம் ஏற்படாதவகையில் குறைந்த வருமானவரி மட்டும் அரசாங்கத்திற்குக் கொடுத்துச் சமாளிக்கலாம் என்பதைக் கணக்கிட்டுச் சொல்லும்படி தமது அக்கவுண்டன் சுந்தரம் பிள்ளையிடமும் முதல்நாளே சொல்லியிருந்தார். சுந்தரம் பிள்ளையின் கணிப்பும் அவருக்கு அத்தனை சாதகமாக இருக்கவில்லை. சிகரெட்டை ஊதியபடியே சிந்தித்துக் கொண்டு இருந்தார்.

'பாங்கிலிருந்து ஓ. டி. பற்றியும் டெலிபோன் செய்தாங்கள்.''

சுந்தரம் பிள்ளை நினைவூட்டினார்.

''அதைப் பற்றிக் கவலை வேண்டாம். நான் பார்த்துக் கொள்ளுவன்.''

சமாளித்துப் பதில் சொன்னபோதும் அவரின் மனதில் புதிய பீதி ஒன்றும் ஏற்பட்டது. அரசாங்கமே வேலை நிறுத்தம் நீடித்தால் தமக்கெதிராக மாறலாம் என்ற ஒரு நினை

வும்ஏற்பட்டது. இந்தக் கூட்டரசாங்கத்திலும் பார்க்க ஐச்கிய தேசீயக் கட்சி வந்தால் எமக்கெல்லாம் வசதியாயிருக்கும் என்ற புதிய எண்ணம் ஒன்றும் இதயத்தின் அடியில் வேரிடத் தொடங்கியது.

பொன்னையாவே வங்கியிலே கிளார்க் ஒருவனைப் பிடித்து டெலிபோன் செய்திருப்பானோ என்று ஒரு சந்தேகமும் ஏற்படத் தொடங்கியது. அவன் நெஞ்சழுத்தம் கொண்டவன். ஏதுவும் செய்து விடுவான். அவனை மாலினி ஒருத்தியாலேயே வசப்படுத்த முடியும்.

அமைதியின்மையால் புதிய சந்தேகங்களும் எண்ணங்களும் கரும்புகாரும் வெண்மேகமுமாக இதய வானத்தில் ஓடின.

மாலினி ஒருத்தியே தன் மனதின் அமைதியின்மையை ஆற்றவல்லவள் என்ற நம்பிக்கை பலமாகிக் கொண்டே வந்தது. மாலையில் சந்திப்பது பற்றி உடனே டெலிபோன் செய்தார். அவள் மறுப்புச் சொல்லாது வேறு அப்போயின்மெண்ட் என்று சாட்டுகள் கூறாத வகையாக மன்றாட்டமாகவே கேட்டார்.

இத்தனை பலமும் பிடிவாதமும் கொண்ட மனிதர் தன்னளவில் தயவாகவும் தாழ்மையாகவும் இறங்குவது மாலினிக்கே ஆச்சரியமாக இருந்தது. இது உண்மையான காதலா அல்லது விஸ்கியில், பிராண்டியில் கிடைக்கும் மயக்கத்தை என்னிடம் பெறப் பார்க்கிறாரா என்பதை மாலினியால் பிரித்தறிய முடியவில்லை அவரது பரிவு, தாராள சுபாவம், தனக்காக எதையும் செய்ய முன்வரும் தியாக உணர்வு எதையும் அவளால் உதாசீனம் செய்து விடவும் முடியவில்லை. அவரோடு பேசுவதிலும் பழகுவதிலும் சுற்றுவதிலும் ஒருவகை இன்பத்தை அவள் உணர்ந்தாள்.

இந்த இன்பம் போலி உணர்வான பொய்த் தோற்றமா, நிஜமான இன்பம் தர வல்லதா என்பதை அவளால் சிந்திக்கவே முடியவில்லை. பொன்னையாவின் துணிச்சல்தான் என்ன! எத்தனை நெஞ்சுரம் கொண்டவர். என் இதய பூர்வமான காதலையே செவ்வானம் என்று பழித்தாரே, என்ன விசித்திரமான மனிதர்? அவரோடு ஒப்புடும்போது நாகரத்தினம் எத்தனை நல்ல மனிதர். அவரது இதயம் எத்தனை மென்மையானது. என் மனம் கோணாதபடி எப்படியெல்லாம் நடக்கிறார். இனிமையாகப் பேசுகிறார்; வர்ணிக்கிறார். அப்படியிருந்தபோதும் என் மனம் பொன்னையாமேல் ஏன் வட்டமிட வேண்டும். பொன்னையாவின் இதயத்தை வெற்றி பெறுவதுதான் என் லட்சியமா? எத்தனை தோல்வி. அதன் பின்னரும் மனம் சோர்வடையவில்லையே. ஒரு தடவை ஏற்பட்ட தோல்வியின் காயம் தந்த வேதனை;வாழ்க்கையில் எற்பட்ட வெறுப்பு; அதை மறந்துவிட்டு மீண்டும் மனம் முயல்கிறது. வெற்றி பெறலாம் ஏன்ற சிறு நப்பாசை, தோல்வியால் ஏற்படக்கூடிய மற்றொரு முறிவைத் தாங்க முடியுமா? நாகரத்தினத்தின் இதயமாவது என்றும் என் பக்கம் நிலைத்திருக்கும் முடிவில்லாத வட்டம்போல அவள் நினைவு இருவரிடையேயும் சுற்றிக்கொண்டிருந்தது. இடையே பொன்னையாவின் தோழன் விக்கிரம. அவரின் பெயரைச் சொல்லிக்கொண்டு வேலை நிறுத்தம் பற்றிய செய்தி தரும் சாட்டில் வந்து பேச முயல்கிறான்!



## 45

பொழுது மறையும் வேளை. மாலினியையும் அழைத்துக்கொண்டு காலி ரோட்டிலே காரை விரைவாக நாகரத்னம் ஓட்டினார்.

''எங்கே விரைவாக? நிதானமாக ஓட்டுங்கள்''

''என்ன வேகத்திலும் நான் நிதானமிழக்க மாட்டேன்''

''எங்கே என்று சொல்லுங்களேன்?''

''அமைதி கிடைக்கும் தூரம்வரை

''அத்தனை தூரம் வேண்டாம்''

''இல்லை. கிட்டத்தான். கடற்கரை மணல்வரை, கார் நிறுத்தத்தக்க இடத்திற்கு.''

ஒரு சிறு தெருவழியே காரைத் திருப்பி கடற்கரைவரை ஓட்டினார். மவுன்லெவினியா கடற்கரையிலேயே ஒதுக்குப்புறமான தனிமையான இடம். கடற்கரையில் இடையிடை சிலர் நடந்து கொண்டிருந்தனர். ஒரு சிறு ஓடத்தை சில மீனவர்கள் கடலிலே இறக்கிக்கொண்டிருந்தனர். தூரத்திலே மவுன்லெவினியா ஓட்டல் தெரிந்தது.

''இங்கே எப்படி அமைதி கிடைக்கும்? கடலலையைப் பார்த்து அமைதி காண முடியுமா?''

''ஓடமொன்று துணையாக இருந்தால்...''

''ஓடமா? அந்த மீன் பிடி வள்ளம் அசைவதைப் பாருங்கள். உயிரைக் கையில் பிடிந்துக்கொண்டு நாள்தோறும் கடலுக்குள் செல்லுகிறார்கள்.''

''அது அவர்கள் தொழில்.''

'உயிரைப் பணயம் வைத்துச் செய்யும் பயங்கரமான தொழில்.'

''அது அவர்களுக்குப் பழக்கமாகி விட்டது.''

''ஏழ்மைகூடப் பழகி விடுகிறது அதனால்தான் ஏழைகள் தம்மைச் சுரண்டுபவர்களை எதிர்த்துப் போராடாமல் ஏழ்மையிலேயே புரண்டு வாழாது மடிந்து கொண்டிருக்கிறார்கள் என்று பொன்னையா அடிக்கடி சொல்லுவார்.''

''உன் தோழர் சொல்லுவதையெல்லாம் நீ கேட்கிறாயே தவிர நீ சொல்லுவதையெல்லாம் அவர் கேட்க மாட்டாரே.''

அவரின் பேச்சில் சிறிது பொறாமையும் கலந்திருந்தது.



''அவருக்கு நீதியெனப் பட்டால் மட்டும் கேட்பார். நான் சொல்வதெல்லாவற்றையும் சரியெனக் கேட்கத் தக்கவர் ஒருவரும் இருக்கிறார்.''

குறும்புப் புன்னகையோடு மாலினி வாஞ்சையாகச் சொன்னாள். நாகரத்தினம் அவளின் கன்னத்தைக் கிள்ளிக் கொண்டே சொன்னார்.

''இந்த வேலை நிறுத்தத்தை நியாயமாக முடித்துவிடும்படி சொல்லேன்.''

மாலினிக்கு அவரின் வேண்டுகோள் ஆச்சரியமாக இருந்தது. கோழைத்தனமான வேண்டுகோளா அல்லது தன் வெற்றிக்கு என்னைப் பயன்படுத்தப் பார்க்கிறாரா என்பதை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை.

''இது பற்றி நான் எது சொன்னாலும் கேட்கமாட்டார், இது தொழிலாளி முதலாளிப் போராட்டம், ஒரு பெண்ணின் உதவியால் வெற்றி பெற்றோம் என்பது தொழிலாளி வர்க்கத்திற்கே இழுக்கு என்று சொல்லிவிடுவார். அவர்கள் பலர் நீங்கள் ஒருவரே. அவர்கள் கேட்பதைக் கொடுத்து வேலை நிறுத்தத்தை முடித்துவிடுங்கள் என்று நான் உங்களைக் கேட்கிறேன்.''

அவள் சிரித்தபடியே பேச்சை முடித்தாள்.

''நீங்கள் சொல்வதெல்லாவற்றையும் கேட்க நானும் தயாரில்லை. கேட்பதெல்லாவற்றையும் கொடுப்பதா? நாளைக்கு என் தலையையும் கேட்பாங்கள்.''

''இப்போது மயிரோடவது போகட்டும் முழுவதையும் கொடுக்க வேண்டுமென்றில்லை. அவர்களும் களைத்திருப்பார்கள். ஓரளவு இறங்குங்கள்; அவர்களும் இறங்கி வருவார்கள்.''

''நாளைக்கு லேபர் கமிஷனர் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். பார்ப்பம்.''

பார்ப்போமென்ன, வேலை நிறுத்ததை கைவிடத் தக்கதாக இறங்கும் மனநிலையோடு போங்கள். அரசியல் நிலைமைகளும் சரியாயில்லை. அதனால்தான் தலையோடு போவது மயிரோடு போகட்டும் என்று சொன்னேன்.''

எனக்குப் புரியவேயில்லை.''

ஆர்வத்தோடு நாகரத்தினம் கேட்டார்.

''நாட்டிலே ரயருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையிலேவேலை நிறுத்தம் நீடிப்பதை அரசாங்கமே விரும்பவில்லை. தொழிற்சங்கத் தலைவர்கள் இடதுசாரி மந்திரிகளைப் பார்த்து உங்கள் தொழிற்சாலையைத் தேசீய மயமாக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்களாம்.''

''ஆர் மாலினி உங்களுக்குச் சொன்னது?''

''அதை மட்டும் கேட்க வேண்டாம்' அப்படி ஏற்படத்தக்க சூழ்நிலைக்கு இடம் கொடுக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.''

''ஆர் பொன்னையா சொன்னானா?''

''விக்கிரம சொன்னான்.''

''அவன் கதை கட்டிவிட்டிருப்பான். உதுக்கெல்லாம் நான் மசிகிறவனில்லை. எனக்கும் அரசாங்கத்திலே செல்வாக்கு இருக்கிறது ''

''என்றாலும் இந்த அரசாங்கத்தை நம்பமுடியாது உங்களுக்கெல்லாம் யு. என். பியைப்போல நல்ல அரசாங்கம்இருக்க முடியாது. எங்க மனேஜிங் டிரெக்டரும் அப்படியே சொல்லிக் கொண்டிருக்கிறார்.''

''அது உண்மை என்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். உழைத்த பணத்தைக் காப்பாற்ற வென்றாலும் யு. என். பி வரவேண்டும்.''



''இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதாக எங்க மனேஜிங் டிரக்டர் தீர்மானித்துவிட்டார்; பத்திரிகைகளை அரசாங்கம் எடுத்து நடத்தும் சட்டம் மிக விரைவில் வரப் போகிறதாம். எங்க கம்பெனியில் அதை எதிர்ப்பதற்கு சுறு சுறுப்பாக வேலை நடைபெறுகிறது.''

''அடிக்கடி பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதாகப் பயமுறுத்திப் பத்திரிகைகளில் அரசாங்கத்திற்கு ஆதரவு தேடும் படலம் இது ''

'இல்லை. புலி புலி என்று நெடுக ஏமாறினோம்; இம்முறை நிச்சயமாக மசோதா வரப்போகிறது.''

''அத்தோடு இந்த நாட்டு ஜனநாயகமும் ஒழிந்து விடும்.''

''அதைக் காப்பாற்றுவதற்காக மனேஜிங் டிரெக்டர் என்னவும் செய்யத் தயாராக இருக்கிறார்.''

''எனக்குத் தெரிந்த பெரிய புள்ளிகள் யாவருமே இப்பொழுது இந்த அரசாங்கத்தை ஒழிக்க வேண்டும் என்றே சொல்லுகிறார்கள். நானும் சேர்ந்துவிட்டேன்.''

''இந்தச் சுதந்திரக் கட்சியால் முன்னுக்கு வந்த நீங்களே தீர்மானிக்கும் போது வேறு எவர்தான் தயங்கப் போகிறார்கள். எங்கள் மனேஜிங் டிரெக்டரோடு சேருவது தானே.''

வானத்தில் கார்முகில் சூழ்ந்து மழை தூறத் தொடங்கியது.

காரை நோக்கி எட்டி நடந்தனர். மழையுடன் கடற்காற்றும் உக்கிரமாக வீசியது. காரில் ஏறியதும் ஷட்டர்களை நாகரத்தினம் மேலே இழுத்துவிட்டார்.

''சிறிதுநேரத்தில் கடற்கரையின் அழகே மங்கிவிட்டது. கருப்புகார் வந்து யாவற்றையும் கெடுத்துவிட்டது.''

நாகரத்தினம் சொன்னார்.

'செவ்வானம் ஒரு பொய்மைத் தோற்றம். அதை ரசிக்கலாம். ஆனால் அதில் மயங்கிவிடப்படாது. கார்மேகத்தில்தான் உண்மை இருக்கிறது. உலகில் உண்மைதான் நிலையான உறுதியான அழகு...?''

மாலினியின் பேச்சை நாகரத்தினம் இடைமறித்தார்.

''உங்கள் தோழருடைய கருத்துப் போலிருக்கிறது. எப்படி இந்தக் குறுக்குப் புத்தியெல்லாம் உங்களுக்கும் தொற்றியது?'

''அவற்றில் உண்மையும் புதுமையும் இருப்பதால் தான்.''

''அப்படி என்ன உண்மையும் புதுமையும்.''

''அவர் சொல்லுவார். செவ்வானம் சோறு போடாது. கருவானந்தான் மழை பொழியும் என்று. அது உண்மை தானே.''

கருத்தை உணர்ந்த நிலையில் மாலினி சொன்னாள்.

''எந்த நேரமும் வயிற்றைப் பற்றியே அவர்களுக்கு நினைவு. அழகுணர்ச்சியே யில்லாத மிருகங்களவர்கள்.''

''அது உண்மைதான். எந்த நேரமும் வயிற்றைப் பற்றித்தான் அவர்கள் நினைத்துக் கொள்ளுகிறார்கள். நீங்கள்தானே அவர்கள் வயிற்றிலடிக்கிறீர்களே.''

''இல்லை. அவர்களாகவே அடித்துக் கொள்ளுகிறார்கள். வேலை நிறுத்தம் செய்ய நானா தூண்டினேன்,''

''நீங்கள்தான் காரணம் என்றுதானே அவர்கள் கூறுகிறார்கள். தாமும் சேர்ந்து உழைத்ததில் பங்கு கேட்கிறார்கள். அவ்வளவுதானே. பக்டரியைக் கேட்கவில்லையே.''



''நீங்களும் அவர்களோடு சேர்ந்து விடுவீர்கள் போலிருக்கு. என்ன அழகாகப் பேசப்பழகியிருக்கிறீர்கள்? உங்களோடு பேசியும் வெல்ல முடியாது. அதற்கு மேலாக உங்களிடம் அழகும் கவர்ச்சியுமிருக்கிறது. அதன் முன்னாலேயே நான் தோற்றுவிடுவேன்.''

நாகரத்தினம் புன்னகையுடன் சொன்னார். சொல்லிக் கொண்டே மாலினியின் கழுத்தையும் கன்னத்தையும் இடது கரத்தால் ஒரு தடவை மென்மையாகத் தடவிவிட்டுச் சொன்னார்:

''உங்க ஸ்கின் றோசிலும் பார்க்க சொவ்ராயிருக்கு.''

மாலினி மௌனமாயிருந்தாள். நாகரத்தினம் அவளின் வலது கரத்தை எடுத்துத் தன் மார்போடு வைத்து வருடியபடியே இடது கரத்தை அவளது இடையோடு வைத்து நெருக்கமாக அணைத்தார்.

''மழை விட்டுவிட்டது. போய்விடுவோம்.''

அவரது கரத்கை எடுத்து விடுவித்தபடி மாலினி கூறினாள். நாகரத்தினம் அவளின் வேண்டுகோளை மறுக்க முடியாதவராகக் காரை ஓட்டினார்.

## 46

மறுநாள் வேலை நிறுத்தம் பற்றிய பேச்சு வார்த்தைகள் உதவி லேபர் கமிஷனர் முன்னிலையில் காரசாரமாக நடைபெற்றது. தொழிற்சங்கத் தலைவர்கள் நாகரத்தினத்தின் குறைபாடுகளையும் ஓரளவு அறிந்திருந்தனர். நாகரத்தினம் இளகத் தொடங்கியபோதும் தொழிலாளர்கள் அசையாது இறுக்கமாக நின்றனர். ஒரு கட்டத்தில் 'நாம் வேலை நிறுத்தத்தை மூன்றுமாதமாவது நடாத்திக் காட்டி அரசாங்கத்தைக் கொண்டு தேசீய மயமாக்குவோம்' என்று

மேசையில் குத்திக் கொண்டு பொன்னையா எழுந்தான். நாகரத்தினம் பயந்தேபோய் விட்டார். பொன்னையாவைத் தொடர்ந்து மற்றத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் எழுந்தனர். உதவி லேபர் கமிஷனர் மன்றாட்டமாக வேண்டியதின் பேரில் மீண்டும் உட்கார்ந்தனர், தொழிலதிபர்கள் சங்கத்தின் பிரதிநிதியாகவந்தவரை யாவும்பேசும்படி நாகரத்தினம் விட்டுவிட்டார். வேலை நிறுத்தத்தை அன்று எப்படியும் முடிவடையச் செய்ய வேண்டும் என்று ஆரம்பத்திலேயே நாகரத்தினம் அவரிடம் கூறியிருந்தார். தொழிலாளர் பிரதிநிதிகளிடம் பேசிப் பழகிய அனுபவத்தைக் கொண்டு விரைவிலேயே அவர் தீர்மானங்களை எடுத்தார். தொழிலாளர்களுக்கு பெரும்பாலான வெற்றி கிடைத்தது.

வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து பழிவாங்கும் நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை என்றும் முடிவு செய்யப்பட்டது. உடனே ஒப்பந்தம் எழுதி இரு பகுதியினரும் கையெழுத்திட்டனர்.

தொழிலாளரின் வெற்றிக் கோஷங்கள் வெளியே எழுந்தன. வெற்றியை அறிவிக்கும் கூட்டத்திற்காக யாவரும் ஊர்வலமாகச் செல்லும்வரை காத்திருந்த பின்னரே நாகரத்தினம் வெளியே வந்தார். அவரது முகத்தில் ஓரளவு தெளிவு ஏற்பட்டது.

வீட்டுக்குச் செல்வதற்குக்காரில் ஏறியபோது பத்திரிகை விற்கும் பையன் ஒருவன் ஓடிவந்து 'லேட் எடிஷன்' என்று மாலைத் தினசரி ஒன்றை நீட்டினான். அதை வாங்கி விரித்தார்.

பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் கூட்டுத்தாபனம் பற்றிய புதிய மசோதாவின் விதிகளை அப்பத்திரிகை முதல் பக்கம் முழுவதும் கொட்டை எழுத்துத் தலைப்புடன் பிரசுரித்திருந்தது: ''ஜனநாயகத்தின் அஸ்தமனம், சர்வாதிகாரத்தின் உதயம்.''



இரண்டு வரியில் கொட்டை எழுத்துக்கள் பக்கத்தின் மூன்றில் ஒரு பாகத்தைப் பிடித்திருந்தன. சர்வாதிகார ஆட்சி வரப்போகிறது. அதை எதிர்த்து ஜனநாயகப் பற்றுள்ள யாவரும் போராட முன் வரவேண்டும் என்ற ஆசிரியத் தலையங்கத்தைப் படித்துக்கொண்டே நாகரத்தினம் வீடு சேர்ந்தார். பத்திரிகைச் செய்தி அவருக்கும் திகிலை யூட்டியது. தாம் உழைத்தவை, பிள்ளைகளுக்காகவும் எதிர்காலத்திற்காகவும் சேர்த்தவை யாவும் பறிபோய் விடுமா என்ற பிரமையும் ஏற்பட்டது. கூட்டரசாங்கத்தை ஒழித்தே தீரவேண்டும் எனத் திடசங்கல்பம் செய்துகொண்டார்.

மாலையில் வீட்டில் சென்று தங்குவதே நாகரத்தினத்தால் முடியாத செயலாக இருந்தது. இந்திராவுடன் வெளியே சுற்றுவதை அவர் முற்றாக விட்டுவிட்டார். அவள் கர்ப்பமாக இருப்பது அவருக்கு சாட்டாகிவிட்டது அவளும் வெளியே உலாவ அழைத்துச் செல்லும்படி அவரை வேண்டுவதில்லை. முக்கியமாகச் செல்லவேண்டிய ஓரிரு திருமணங்களுக்கும் பார்ட்டிக்கும் மட்டும் அழைத்துச் சென்றார். தொழில் முறையில் அவை அவசியமாயிருந்தன தமக்கிடையே ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையையோ குடும்பப் பிரச்சனையையோ அவர் வெளியே காட்ட விரும்பவில்லை. அவை தமது தொழில்களையும் வியாபாரத்தையும் பெரிய இடங்களிலுள்ள நம்பிக்கைகளையும் எவ்வாறு பாதிக்கவல்லது என்பதை நன்கு அறிந்திருந்தார்.

வீட்டிலே செல்வியுடன் மட்டும் பேசி விளையாடிப் பொழுது போக்குவார். அவளைக் கடற்கரைக்கும், சினிமாவுக்கும், கோவிலுக்கும் இடையிடை அழைத்துச் செல்வார். வாரத்தில் ஒரு தடவை கோவிலுக்குச் சென்று வந்தவர் இப்பொழுது இரண்டு தடவையும், சில வேளைகளில் மூன்று தடவையும் சென்று வந்தார்.

மாலையில் தனிமையில் பொழுது போக்குவதென்பது அவரால் முடியாத விஷயமாக இருந்தது. மாலினியை

நாள்தோறும் அழைத்துச் சுற்றுவதும் சிரமமாகவேயிருந்தது. அவளும் அடிக்கடி சுற்றுவதை விரும்பவில்லை. எட்மன், அப்புகாமி போன்ற தமது தொழில், வியாபார சகபாடிகளுடன் இடையிடை மாலை வேளைகளைக் கழிக்கத் தொடங்கினார். பெரும்பாலும் அவர்களின் வீட்டிலேயோ பெரிய ஓட்டல்களின் 'பாரி'லேயோ மதுவைச் சுவைத்து அரசியல் பேசுவதில் பொழுது கழிந்தது. அவர்களும் அரசியல் கருத்தில் அப்போது ஒன்றி நின்றனர். கூட்டரசாங்கத்தை முறியடிக்கவேண்டும்; ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் பதவிக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே அவர்கள் குறிக்கோளாகவும் இருந்தது.

பொழுதை இன்பமாகக் கழிப்பதில் எட்மன் அவருக்கு நல்ல உடந்தையாக இருந்தார். கொழும்பு மாநகரிலும் சுற்று வட்டத்திலுமுள்ள இரகசியமான மூலை முடுக்குகளையெல்லாம் எட்மன் நன்கு அறிந்திருந்தார். நாகரத்தினம் செல்லுவதற்கும் தயங்கிய இடமெல்லாம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். எட்மனுடன் ஒப்பிடும்போது தமக்குத் தெரிந்தவை மிகக் குறுகிய சூழல் என்பதை நாகரத்தினம் உணர்ந்துகொண்டார். மசாஜ் கிளினிக், நைட்கிளப், சூதாட்டம் ஆகிய புதிய பொழுதுபோக்கும் இடங்களையும் நாகரத்தினம் பழகிக்கொண்டார்.

எப்படியான உணர்ச்சிக் கிளறகல்லை அனுபவித்த போதும் மாலினியுடன் பழகுவதிலும் பேசுவதிலும் அவளுடன் சுற்றித் திரிவதிலுமுள்ள அமைதியான இன்பத்தை அவரால் எங்கும் காண முடியவில்லை. மனோரஞ்சித மலரின் நிரந்தர சுகந்தம் அவளில் மட்டும் வீசிக்கொண்டிருப்பதாக எண்ணிக்கொள்வார், அதை நிரந்தரமாக்க முடியுமா? விடை காண முடியாது நெஞ்சு தவித்தது.



# 47

ஆகஸ்டு—செப்டம்பர் வெப்ப காலமும் கல்லூரி விடுமுறையும் வந்தன. நுவரெலியாவில் வழமையாக நடைபெறும் குதிரைப்பந்தயம், பாஷன்ஷோ ஆகியவற்றைவிட்டு விட இந்திரா விருமபவில்லை. அவற்றை விட்டுவிட்டால் பெரிய இடங்களில் வீம்பு பேச முடியாது போய்விடும் என்று எண்ணிக்கொண்டு பிரயாணத்திற்கு வேண்டிய எற்பாடுகளைச் செய்தாள்.

''என்னை மட்டும் எதிர்பார்க்க வேண்டாம்.''

நாகரத்தினம் அழுத்திச் சொன்னார்.

'அது தெரிந்தது தானே''

''என்ன தெரிந்தது?''

''உங்களுக்கு இங்கே நிறைய வேலையிருக்கும்''

இந்திரா நளினமாகச் சொன்னாள். நாகரத்தினத்திற்கு அது சிறிது சுட்டுவிட்டது. உடனே வஞ்சத்தை அவள் பக்கமாகத் திரும்பினார்.

''நீ அங்கே உன் இஷ்டம்போல் ஆடித் திரியலாம்''

''ஏன் நீங்கள் அந்த ஆட்டக்காரியளையெல்லாம் இங்கேயே கொண்டு வரலாம் எண்டு சொல்லுங்கோவன்''

''என்னடி பழையபடி வாய் முளைக்குது''

''போன தடவை ஆரையெல்லாம் இங்கை கூட்டி வந்தீங்களெண்டு எனக்குத் தெரியாதா?''

''நீ போனால் இந்த வீட்டை ஒருத்தரும் வரப் படாதோ''

''மரியாதையானவங்கள் வந்து போறதையா நான் சொல்லுறன்''

''மானங்கெட்ட நீ எனக்கு மரியாதை சொல்லித் தாறியா? உன்னைக் கேட்டு நான் எதுவும் செய்யப் போற தில்லை. நான் எப்படியும் நடப்பன்? என்னவும் செய்வன்? மானம் கெட்ட உனக்கு இங்கை இருக்க இடம்தாறன். என்ரை பெண்டாட்டி என்று வைத்திருக்கிறேன். அது போதாதா? அதுவும் விருப்பமில்லை யெண்டால் வெளி யேறித் துலையன், எனக்கா வேறை பெண்டாட்டி கிடை யாது.''

''அந்த ஆட்டக்காரிதானே காத்துக் கொண்டிருக் கிறாள். கொண்டு வந்து வைச்சிருமன்''

இந்திரா நிதானமிழந்து பேசினாள். மனதில் குடைந்து கொண்டிருந்தது வெளியே வந்தது.

''நீ போய்த் துலையேன்''

''அதுக்குத்தானே காத்திருக்கிறியள். அந்த ஆட்டக் காரி வாறதையுந்தானே நான் இருந்து பார்க்கப்போறன்; இந்த கிழட்டு வயதிலை உமக்கும்...''

''ஆரெடி கிழடு? நீ இன்னும் குமரியெண்டு உனக்கு நினைப்பு. உனக்கு பைத்தியமும் பிடிச்சிட்டுது. நீயே கற்பனை செய்து நீயே பயந்து கொண்டிருக்கிறாய். நீ நுவரெலியாவுக்குப் போகாமல் இங்கை காவலிருக்கிறது தானே. ஆடினது போதாது, இப்ப வாய் வேறை''

நாகரத்தினம் மேலும் பேச்சு வார்த்தையை வளர்க்க விரும்பாதவராக வெளியேறினார்.

## 48

இந்திரா, பத்மினி செல்வி மூவரும் நுவரெலியாவிற் குச் சென்று கழிக்கும் விடுமுறைக் காலத்தை சுதந்திர மாகவும் இன்பமாகவும் கழிக்க நாகரத்தினம் திட்ட மிட்டார்.



இந்திரா, பத்மினி, செல்வி மூவரும் டிரைவர் சில்வா வுடன் நுவரெலியா சென்ற மறுநாள் மாலை மாலினியை வீட்டுக்கு வரும்படி நாகரத்தினம் அழைத்திருந்தார். தான் சிறிது தாமதமாக வருவதாகவும் டின்னர் முடிந்த பின் அவளை அழைத்து வீட்டில் விடுவதாகவும் சொல்லி யிருந்தார்.

மாலினி செல்வி பவனத்திற்கு வந்து பல வாரங்களாகி விட்டன. மேரியையும் பார்த்துப் பேச விரும்பினாள். சீக்கிரமாகவே அங்கு வந்துவிட்டாள்.

பியசேனா கதவைத் திறந்து விட்டான். மேரி அவளை வரவேற்று உபசரித்துப் பேசினாள்.

''இன்னொருவர் டின்னருக்கு வருவார் என்று துரை சொன்னதும் நீங்கள்தான் வருவீர்கள் என்று நினைச்சன். நல்லதாய்ப் போச்சு. நான் காய்ச்சலாய் கிடக்கேக்கை நீங்கள் வந்து பார்த்ததையெல்லாம் நான் இன்னும் மறக்கேல்லை. உங்களை வந்து பார்க்க வேணுமெண்டு நினைப்பன். இங்கை வெளிக்கிட முடிஞ்சால்தானே. நேரம் கிடைக்கேக்கை இரட்மலானைக்கு மட்டும் எங்க வீட்டை ஓடிப்போய் வந்திடுவேன்...''

மேரி மனம் விட்டுப் பேச ஒருவரும் கிடைக்காத குறையை யெல்லாம் ஒன்று சேர்த்துச் சொல்லிக்கொண்டே போனாள். மாலினி பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந் தாள் இடையிடை அவள் அறிய விரும்பிய செய்திகளும் மேரியின் பேச்சிலிருந்து வெளிவந்தன.

''நோனா வீட்டிலை இருக்கேக்கை இனிமேல் நீங்க வராமல் இருக்கிறதுதான் நல்லதெண்டு நினைக்கிறேன்'

மேரி தன் கருத்தைச் சொன்னாள்.

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?''

மாலினி கேட்டாள்.

''உங்க மேலைதான் நோனா அதிகம் சந்தேகப் படுகிறா''

''நான் இந்திரா இருக்கும்போது வந்தால் சந்தேகம் குறையலாமல்லே?''

மேரிக்கு மாலினியின் அவ்வார்த்தைகள் ஆச்சரியமாகத் தோன்றின.

''அதுவும் ஒரு வழிக்குச் சரிதான்''

மேரி விஷயத்தை அவ்வளவோடு மழுப்பினாள்.

''இது பார்வைக்குப் பெரிய வீடுதான். உள்ளுக்கு எல்லாம் போறை. இங்கை நடக்கிற விஷயங்களை வெளியே சொன்னாலே ஒருத்தரும் நம்பமாட்டாங்கள்''

மேரி தன் விரக்தியைத் தெரிவித்தாள். இடையிடை குசினிப் பக்கமாக ஓடியோடி வந்து பேசிக் கொண்டிருந் தாள். பியசேனா குசினியில் நிரந்தரமாக நின்றான். பப்பி வீட்டுக்குள்ளே ஏறு நடை போட்டுக்கொண்டு நின்றது.

''போன தடவை இந்திரா நுவரெலியாவுக்குப் போன போது நான் இங்கு டின்னருக்கு வந்தது அம்மாவுக்குத் தெரியுமா?''

''தெரியுமே''

'ஆர் சொன்னது?''

''அந்தப் பெடியன் பியசேனா, அவன் என்ன செய்தி யென்றாலும் நோனாவுக்குச் சொல்லிவிடுவான். நான் உங்களோடை கதைக்கிற விஷயங்களையும் சொல்லிவிடு வான். அதுக்காகத்தான் அவனைக் குசினியிலை அடுப்பு களைப் பார்க்க விட்டிருக்கிறேன்''



''இன்றைக்கு நான் வந்ததையும் சொல்லிவிடுவான் என்பது அவருக்குத் தெரியாதா?''

''தெரிந்தாலும் அவர் பரவாய் பண்ணமாட்டார். அவனிலே அவருக்கும் நல்ல நம்பிக்கை. விபரம் தெரியாத குழந்தைப் பொடியன் என்பது அவரின் கணிப்பு. ஆனா அப்பிடித் தெரியேல்லை''

நாகரத்தினம் சிறிது நேரத்தில் வந்து சேர்ந்தார்.

''மன்னிக்கணும் மாலினி. போட் மீட்டிங் நடந்தது தாமதமாகிவிட்டது''

''பரவாயில்லை. நான் உங்க வீட்டைச் சுற்றிப் பார்த்து மேரியோடு பேசிக் கொண்டிருந்தன். ஒவ்வொரு தடவை பார்க்கும்போதும் புதுப்புதுப் பொருட்களெல்லாம் வந்து சேருது.''

''நான் கஷ்டப்பட்டு உழைக்கிறேன். என்மேல் வஞ்சம் தீர்ப்பதுபோல அவள் செலவு செய்கிறாள். எனக்கு இந்த அளவுக்கு மீறிய ஆடம்பரமெல்லாம் பிடிக்கிறேல்லை. உங்களைப்போல சிம்பிள் லிவிங், ஹை திங்கிங்ஸ், அது தான் என் மோட்டோவும்''

''என்னைப் பிளீஸ் பண்ணச் சொல்லுறீங்க போலை யிருக்கு''

''நிஜமாவேதான் உங்களிடமிருந்துதானே அதைப் படிக்கிறேனே. எல்லாம் பேசுவம். ரென் மினிட்ஸ், ஒரு 'வாஷ்' எடுத்துக்கொண்டு ஓடி வருகிறேன்.''

நாகரத்தினம் மாடிப்படிகளில் ஏறினார். மேரி தன் கதைகளைத் தொடர்ந்தாள் :

''துரை உண்மையாக அத்தனை ஆடம்பரத்தையே விரும்புறவரல்ல. எல்லாம் நோனாதான். ஆசைகளைப் பெருக்கிப்போட்டு அந்தலையில்லாமல் நீந்திக் கொண்டிருக்

கிறா. எதிலையுமே திருப்தியில்லை. இந்த வயித்து பிள்ளைச் சண்டையிலைதான் இப்ப கொஞ்சம் அடங்கிப் போயிருக்கிறா. இல்லாட்டா துரையைப் பிடித்துத் திண்டிடுவா.''

மேரியின் பேச்சு இயல்பானதா, சந்தர்ப்ப வாதமான பேச்சா என்றோர் சந்தேகமும் மாலினிக்கு ஏற்பட்டது. துரைக்குத் தெரிந்தவர், வேண்டியவர் என்ற உறுதியில் அம்மாவைப் பற்றிக் குறைவாகக் கதைத்து அவரை உயர்வாகப் பேசுகிறாள். இந்திராவின் ஆட்களிடம் நாகரத்தினத்தைப் பற்றிக் குறைவாகக் கூறி அம்மாவை உயர்த்திப் பேசுவாளா?

தன்மேல் மேரி காட்டும் தனிப்பட்ட அன்பையும் ஆராய்ந்து பார்த்தாள். அது நோய் வாய்ப்பட்டிருந்த போது உதவியதற்காக மட்டுமா? அல்லது முன்னர் அவள் சொன்னதுபோல நாகரத்தினம் இந்திராவை டைவோஸ் செய்ய நேரிட்டால், தானே அந்த வீட்டுக்கு எஜமானியாக வரலாம் என்ற நினைப்பிலேயா? என்ன பேதமையான கற்பனை? மாலினி உள்ளூறச் சிரிந்துக் கொண்டாள்

நாகரத்தினம் உடைமாற்றிக் கொண்டு கீழே வந்ததும் இருவரும் டின்னருக்காக உட்கார்ந்தனர். மேரி சுறுசுறுப்பாக தன் கைவரிசைகள் யாவையும் பரிமாறினாள்.

மாலினி சிலவற்றைப் பாராட்டிக்கொண்டே சுவைத்துச் சாப்பிட்டாள்.

''என்ன, பிரதமரின் மகள் சுநேத்ரா லண்டனுக்குப் படிக்கப் போவதைப் பற்றி உங்க பத்திரிகைகளெல்லாம் பிரமாதப்படுத்துகின்றனா?''

நாகரத்தினம் தன் மகனை லண்டனுக்கு அனுப்பியதிலும் தவறு காணாதபடி ஒரு பக்கச் சார்பாகப் பேச முனைவதை மாலினி உணர்ந்துகொண்டாள்.



''உங்கள் மகன் லண்டனில் படிப்பதால் சுநேத்ரா போவதும் சரியாகிவிடுமா? இங்கே எல்லோரும் சிங்களமும் தமிழும் படிக்கும்படி போதித்துவிட்டு மகளை ஆங்கிலத்தில் படிக்க லண்டனுக்கு அனுப்புகிறதெண்டால் இதில் முரண்பாடில்லையா?'

'நான் அங்கைதான் போய் படிக்கப் போகிறேன் என்று பிள்ளை தாய் சொல்லை மீறினால்—அப்படித்தான் நடந்ததெண்டு நான் அறிந்தேன்.''

''எப்படி நடந்தாலும் அரசாங்கத்தின் போக்கைக் கண்டிப்பதற்கு நல்ல சந்தர்ப்பமல்லவா? அதை விடுவார்களா?''

மாலினி கூறினாள்.

''இதெல்லாம் சின்ன விஷயம்.''

''சின்ன விஷயங்களைப் பெரிதாக்குவது பெரிய விஷயங்களைச் சின்ன விஷயமாக்குவதெல்லாம் பத்திரிகைகளின் தந்திரங்கள். சின்ன விஷயம் ஆக்கமுடியாத இரு பெரிய விஷயங்களிருக்கின்றன. அவற்றைத் தாண்டினால் தான் இந்த அரசாங்கம் நிலைக்க முடியும். அந்த இரண்டும் பெரிய கடமைகள்.''

அவள் சொன்னாள்.

''ஒன்று பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கும் மசோதா. மற்றது ..''

நாகரத்தினம் கேட்டார்.

''இலங்கை, இந்திய பிரச்சனைக்குத் தீர்வு காண்பது, இதற்காக அம்மா ஒக்டோபரில் டில்லிக்குப் போகிறா. இதிலேயும் என்ன முடிவு எடுத்தாலும் பிரச்சனை அப்படியே தான் இருக்கும். அம்மாவுக்கு இதிலும் எதிர்ப்பு ஏற்படவே போகிறது.''

டின்னர் முடிந்ததும் இருவரும் எழுந்தனர்.

''மாடிக்கு வாருங்கள். காற்றோட்டமாக இருக்கும். பேசலாம்.''

இருவரும் மாடிப்படிகளில் ஏறினர். நடுமாடியில் நின்று திரும்பியபடி நாகரத்தினம் சொன்னார்:

''மேரி. கோப்பியை மேலே கொண்டு வா!'.

## 49

முன்புற மாடியில் பிளாஸ்டிக் முக்காலிகளில் நெருங்க உட்கார்ந்தபடி இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

''மாலினி, சென்ற தடவை இங்கு வந்திருந்தபோது இதே யிடத்தில் பேசியவை நினைவிருக்கிறதா?''

''நல்லாய் நினைவில் உள்ளன.''

''உண்மையாக அவை போலி வார்த்தைகளல்ல.''

நாகரத்தினம் மாலினியின் ஒரு கரத்தைப் பிடித்துத் தன் கரங்களிடையே வைத்துக்கொண்டார்.

''உங்களைப் போல உலக விஷயங்களை, என் தொழில் வியாபார விஷயங்களை, நூல்கள் சினிமா, நடனம், நாடகம் இசைபோன்றவற்றைப் பற்றியெல்லாம் மனந்திறந்து பேசி மகிழத்தக்க ஒரு துணையில்லாததுதான் என்வாழ்க்கையின் பெரிய குறை மிகப் பெரிய குறை. அதனால் என் இதயமே வெற்றிடமாகியது அந்த இடத்தில்...''

மாலினி இடைமறித்துக் கேட்டாள்:

''ஏனப்படி சொல்லுறீங்கள். இந்திரா இல்லையா?''

''அது ஒரு சூனியம். நான் கூறிய ஒரு துறையில்கூட அறிவில்லை எல்லாம் வெறும் போலி நடிப்பு.''



''எத்தனை மாறுபட்ட விருப்பு வெறுப்புக்கள் இருந்தாலும் பிள்ளைகளை வளர்ப்பதிலேயே பெரும்பாலான குடும்பங்கள் ஒன்றுபடுகின்றன என்று சொல்லுவார்கள்.''

''அதுகூட எங்கள் குடும்பத்திலில்லை. பத்மினி இந்திராவை எதிர்த்துச் சண்டைபோடத் தொடங்கிவிட்டாள். செல்விகூட தாயை மதிப்பதில்லை, எங்கள் குடும்பம் அதிர்ஷ்டமான குடும்பம் என்பதெல்லாம் வெறும் பகட்டு. நீ அன்று சொன்னாயே செவ்வானம் என்று. அதைப் போன்ற ஒரு அழகான பொய்த்தோற்றம்தான் எங்கள் குடும்பமும், இதனிடையே என் இதயத்தில் தோன்றும் ஒரே ஒரு உண்மையான உருவம் ..''

நாகரத்தினம் எழுந்தார். அவரது கண்களிலே மது போதைக்கும் மேலான போதை ஒன்றை மங்கிய ஒளியில் மாலினி கண்டு எழுந்து ஒதுங்கினாள்.

''துரை, கோப்பி.''

மேரி குரல் கொடுத்துக்கொண்டே வந்தாள்.

ஒன்பது மணியளவில் இருவரும் கீழே இறங்கிவந்தனர். பியசேனா மாலினியை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்றான். மேரி சிரித்து வழியனுப்பினாள்.

''அடிக்கடி வாங்க நோனா.''

''பார்க்கலாம்.''

பியசேனாவின் பார்வையைக் கண்ட மாலினி பின் சீட்டில் ஏறி உட்கார்ந்தாள். நாகரத்தினம் எதுவும் பேசாது காரை ஓட்டினார். சிறிது தூரம் தாண்டியதும் காரை நிறுத்தி மாலினியை முன் சீட்டுக்கு வரும்படி வேண்டினார்.

''இதுக்கெல்லாம் இந்தக் காலத்திலை பயப்படுவதுக்கு என்ன இருக்கு.''

''பியசேனா ஒருமாதிரிப் பார்க்கிறான்.''

' அவன் ஒன்றுமே புரியாத அப்பாவிப் பையன் ''

''அப்படியாகத் தெரியவில்லை.''

அவரின் வார்த்தைகளை மாலினி முற்றாக நமபிவிட வில்லை.

கார் மெதுவாக ஊர்ந்து சென்றது.

''மாலினி இனி எப்ப வசதியாயிருக்கும்?''

''நாளையிண்டைக்கு.''

''ஞாயிறுதானே. உன்னைக் கிக்கடுவா கடற்கரைவாடி வீட்டுக்கு அழைத்துச் செல்லப் போகிறேன், காலைவிலேயே போய் இரவு திரும்பி விடலாம். அடிப்பாகம் கிளாஸ் பதித்த மோட்டார் லோஞ்சு அங்கே இருக்கிறது. கடல் மீன்களை யெல்லாம் காட்டுவேன்.'

வீட்டு வாயிலில் கார் நின்றது. மாலினி இறங்கி நடந்து செல்வதை சிலகணங்கள் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தார். அவளின் அசைவிலேயே அழகு மயக்குவ தாக உணர்ந்தார்

வீட்டுக்குத் திரும்பியபோது பப்பி அவரது காலை நக்கி, மார்பிலே பாய்ந்து வரவேற்றது. மாடியில் சென்று படுத்துக் கொ ண்டார். வீட்டின் அமைதியும் தனிமையு பல்வேறு சிந்தனைகளை எழுப்பின அடுத்த நாள் சனிக்கிழமை, பின் ஞாயிற்றுக்கிழமைப் பொழுதை கழிக்கும் திட்ட மொன்றை மனதிலே தயாரித்துக் கொண்டார்.

பிஸ்னெஸ் பற்றிய நினைவு மனதைக் குழம்பச்செய்தது. என்றுமே நிம்மதியற்ற தொழிலை நிம்மதியாக நடத்தக் கூடிய வழிவகைகளைப் பற்றி யோசித்துப் பார்த்தார்; கறுப்புப் பணத்தைக் காப்பாற்றுவதிலுள்ள சிரமங்களை எண்ணிப் பார்த்தார், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் பிரச்சனைகள்பல இலகுவாகத் தீர்ந்துவிடும் என நம்பி



னார் இடதுசாரிக் கூட்டாட்சி பலம் பெற்று வருமா? இடது சாரிகளின் கை ஓங்கினால் நடக்க முடியாததெல்லாம் நடந்துவிடலாம். அரசாங்கத்தின் பணத் தேவையை ஒட்டியே பெரிய தொழில்களை தேசீயமயமாக்க முனைந் தால் நஷ்ட ஈடு தருவார்களா? அதுவும் கிடைக்காது போனால்...! வெளிநாட்டு எண்ணெய்க் கம்பனிகளை எடுத் ததற்காகக் கொடுக்கும் நஷ்டஈட்டுப் பணத்திலேயே தகராறு ஏற்பட்டு அமெரிக்க உதவியெல்லாம் நின்றுவிட்டதே. எமக் கும் அரசாங்கம் கையை விரித்துவிட்டால்...'

## 50

நாகரத்தினத்தின் ஞாயிற்றுக்கிழமைத் திட்டமெல் லாம் பொடியானது. பிள்ளைகளின் விடுமுறைக் காலத்தில் அவர் போட்டிருந்த திட்டங்கள் யாவும் சிதைந்தன. மாலினியின் தாய் நோய் கண்டு ஆபத்தான நிலையில் இருப் பதாகத் தந்தி வந்தது. நாகரத்தினத்திற்கு டெலிபோனில் சொல்லிவிட்டு மாலினி யாழ்ப்பாணம் புறப்பட்டாள். எட்டு ஒன்பது மாதங்களாகவே அவள் யாழ்ப்பாணம் சென்ற தில்லை தாய்க்கு மாதந்தோறும் பணம் மட்டும் ஒழுங்காக அனுப்பி வந்தாள்.

நாகரத்தினத்திற்கு ஒரே ஏமாற்றமாகி விட்டது. இந்திரா பிள்ளைகள் இல்லாத காலத்தில் மாலினியுடன் ்பசி முடிவு செய்ய எண்ணிக் கட்டிய மனக்கோட்டைகள் யாவும் தகர்ந்தன. ஏமாற்றத்திற்குமதுவே ஆறுதலளித்தது. மீண்டும் ஒழுங்காக எட்மனை நாடினார். எட்மன் புதிய புதிய இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றான். எல்லை யற்ற இன்பப் போதைகளை நாடி இருவரும் அலைந்தனர்.

வீட்டிலே வேலை குறைவு. மேரி வெளியே தன் உறவினர், தெரிந்தவர்களை பார்க்கச் செல்லும் போதும்

மார்க்கெட்டுக்குப் பொருட்கள் வாங்கப் போகும் வேளைகளிலும் பியசேனா வீட்டு எஜமானனானான். அவனது பழைய ஓட்டல் நண்பர்களான நாதனும் பாலனும் மேரி இல்லாத வேளை வீட்டுக்குள்ளேயே நுழைந்து விடுவர். அவன் அவர்களை உள்ளே அனுமதிப்பதை அவ்வளவு விரும்பாத போதும் தன் தராதரத்தை உயர்த்திக் காட்டுவதை பியசேனா விரும்பினான். இறைச்சி, சிகரெட் இரண்டுமே அவர்களுக்குத் தேவையாக இருந்தது. கண்ணில் தெரியும் சாப்பாட்டுப் பொருட்களையும் அவர்கள் சுருட்டிக் கொண்டார்கள். லேபர் கமிஷனருக்கு அறிவித்துவிட்டாலும் என்ற பயத்தில் பியசேனா அவர்களது சேஷ்டைகளை ஓரளவு பொறுத்துக் கொண்டான்

''என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்டக்காரன்டா.''

பாலன் சொன்னான்.

''எனக்கெல்லே இங்கே வேலை எடுத்துத் தரும்படி கேட்டன். துரையிட்டைச் சொன்னியாடா.''

நாதன் கேட்டான்.

''கேட்டன் அவர் வேலை இங்கை இல்லை என்று சொல்லிப் போட்டார்.''

பியசேனா சொன்னான்.

''நீ பொய் சொல்லுறாய்.''

''சத்தியமாய் உண்மையெடா. மேரி வந்திடப்போறாள். நீங்கள் போங்கடா.''

''அவள் வந்தால் வரட்டன். எனக்கு வேலை வாங்கித் தரும்படி நானே அவளைக் கேட்கப் போகிறேன்.''

நாதன் சொன்னான்.

''மேரியை நான் நேரே பார்த்ததில்லை. நல்ல சரக்காடா.''

பாலன் கேட்டான். பியசேனா கோபத்தோடு சொன்னான் :



''ஊத்தைப் பேச்செல்லாம் இங்கை பேசவேண்டாம்.''

''பேசினா என்ன செய்வாய்? நீயும் உன்ரை மேரியும். எல்லாம் புனிதமான ஆட்கள்தான்.''

பாலன் சொன்னான்.

''உங்க துரை ஒரு இளங் குட்டியைக் காரிலை கொண்டு திரியிறார். அது ஆரடா?''

'எனக்குத் தெரியாது.''

''என்னடா ஒண்டுமே தெரியாத அப்பாவி மாதிரி நடிக்கிறாய்.''

நாதன் கேலியாகக் கேட்டான். பியசேனா ஒன்றும் தெரியாதவன்போல முழித்தான்.

''உன்ரை சின்னம்மா என்று காட்டினியே. என்ன பேர்?... பத்மினியில்லையா பத்மினி. சினிமா ஸ்ராரின்ரை பெயர். ஒருநாள் மட்னி ஷோவிலை ஒருவனோடை தியேட்டரிலை பார்த்தன். ஆரடா அவன்? தியேட்டர் மூலைப்பக்கமாக அவளைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டிருந்தான்.''

''எனக்குத் தெரியாது.''

''அவன் சிங்களப் பெடியன்போலை யிருந்தது. நீ மக்கு ஒண்டுமே தெரியாது, தெரியாது எண்டு பொய் சொல்லுறாய்.''

''சத்தியமாய் எனக்கு ஒண்டும் தெரியாதெடா. இப்ப போய் விடுங்கோ மேரி வாற நேரமாச்சு.''

''முந்தாநாளோ எப்பவோ றோஸ்மீட் பிளேசுக்குக் கிட்ட றோசலின் லேனுக்குள்ளை ஒரு வீட்டு வாசலில் காருக்குள்ளை இருந்தாயாம். எங்கையடா அங்கே போனாய்.''

பாலன் கேட்டான்.

''துரையோடை போனனான். ஆராவது உள்ளே வந்தால் ஹோர்ண் அடிக்கும்படி அவர்தான் சொல்லிப் போட்டு உள்ளே போனார். ஆரடா உனக்கு சொன்னது''

''ஓட்டல் பால்காரன்தான் அங்கையும் பால் குடுக்கிறான். அவன்தான் சொன்னான். எத்தனை நாள் அங்கை போனாய்?''

''ரண்டு நாள் மட்டும்.

''டே. அது பேய் பிடிச்ச வீடடா? அந்த வீட்டிலை ஒருத்தி அம்மணமாயே பேயடித்துச் செத்துப் போனாள். அந்தப் பேய் அந்த வீட்டையே சுத்திக்கொண்டு திரியுதாம் இனிமேல் காவலுக்கு விடேக்கை கவனமாயிடா. எங்க பால்காரன் சொன்னான். முந்தி ஓட்டலுக்கு வாறவன்ரா. உன்னை அவனுக்கு நல்லாய் தெரியும்.''

''பேய்க்கெல்லாம் நான் பயப்பிடமாட்டன்.''

''நீ அந்த வீட்டுக்கை போய் ஒண்டும் பார்க்கேல்லையா?''

''இல்லை.''

''துரை ஏன்ரா அங்கை போறார்.''

''தெரியாது.''

''மற்ற முறை பார்த்துவந்து சொல்லடா. அந்தப் பேய் வீட்டிலை ஆரார் இருக்கிறாங்கள் எண்டு பார்த்து வா. துரை பேய்களை வாலாயம் செய்யப் போகிறாரோ தெரியாது. மொக்கன் மாதிரி இருக்காதை. இதையெல்லாம் பார்த்துச் சொல்லடா.''

''சரி பார்த்து எல்லாம் வந்த பிறகு சொல்லுறன்ரா. இப்ப துரையும் எந்த நேரமும் வந்திடலாம் போங்கடா.''

''சரிடா. சிகரெட்டும் இறைச்சியும் வையடா. நாளையிண்டைக்கு லீவு நேரம் வாறன்டா.''



பாலன் சொன்னான். இருவரையும் வெளியே விட்டு கேட்டைப் பூட்டினான், பியசேனா.

பேய் வீட்டைப் பற்றிய செய்திகள் அவனுக்குத் திகிலூட்டின. பால்காரன் புழுகு விட்டிருப்பான், இவங்கள் நம்பி விட்டாங்கள் என எண்ணிக் கொண்டான்: எப்படியாயினும் மனதில் முளைத்த பயத்தை முற்றாகக் கிள்ளி எறிந்துவிட முடியவில்லை. துரை எதற்காக அங்கே போகிறார்? என்னை அழைத்துச் சென்று ஏன் காரில் காவலிருத்த வேண்டும்? எவர் உள்ளே நுழைந்தாலும் காரின் ஹோர்னை அடிக்கும்படி ஏன்சொல்ல வேண்டும்? ஹோர்ன் அடித்ததும ஆர் வருவது என்று யன்னலால் பார்ப்பார்களோ?

நாதனும், பாலனும் எழுப்பிய வினாக்கள் அவனது ஆராய்ச்சி உணர்வை வலுப்படுத்தின. மறுமுறை கட்டாயம் பார்ப்பதாக எண்ணிக் கொண்டான்.

## 51

மாலினியின் பிரிவு நாகரத்தினத்தை மிகவும் வாட்டியது. எத்தனை நண்பர்களோடு, பெண்களோடு பழகிய போதும் மாலினி அவரின் இதயத்தில் தனியிடம் பெற்றிருந்தாள் அவளை நெஞ்சம் அடிக்கடி நினைத்துக்கொண்டது. தனிமையின்போது நெஞ்சம் பொருமிப் பாராமாகியது. மனைவி குழந்தைகளின் பிரிவுகூட அவரின் இதயத்தில் அத்தனை பாரத்தைச் சுமத்தவில்லை.

தாயின் நிலைமை மோசமாக இருப்பதாகவும் தான் திரும்ப இரண்டு வாரங்களுக்கு மேலாகலாம் என்றும் மாலினி எழுதியிருந்தாள் அது மேலும் பெரிய ஏமாற்றமாகி விட்டது.

செல்வியின் நினைவு திடீரென வந்தது, வெள்ளிக் கிழமை மாலையில் நுவரெலியாவிற்கு திடீர் விஜயம் செய்தார் இந்திரா அவர் வருகையை எதிர்பார்க்கவேயில்லை.

"ஏனு கொழும்பு கசந்துபோய் விட்டதோ"

இந்திரா ஏளனமாகக் கேட்டாள்.

"நேரம் கிடைத்தால் உன்னைப் பார்க்காவிட்டாலும் என் குழந்தைகளையாவது பார்க்க ஆசைப்படமாட்டேனா."

"பெரிய பிள்ளைப் பாசந்தான்."

"உன்னிலும் பார்க்க எனக்குத்தான் பிள்ளைப் பாசமாதல் இருக்கிறதென்பதையாவது நீ ஒப்புக் கொள்ள வேண்டும்."

"ஏனப்படி?"

"நீ தானே வயிற்றுப் பிள்ளையையே அழிக்க முயன்ற அரக்கியாச்சே."

இந்திராவிற்கு ஈட்டிபோல் அவ்வார்த்தைகள் நெஞ்சில் தாக்கின. நாகரத்தினத்திற்கு எவ்வேளையும் இந்திராவைத் தாக்குவதற்கு நல்லதோர் ஆயுதம் கிடைத்தது.

இந்திராவின் கண்கள் துளிர்த்தன. நாகரத்தினம் அதைப் பொருட்படுத்தவேயில்லை. 'நீலிக் கண்ணீர்' என வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டார்.

நாகரத்தினத்தோடு பேசுவதை நிறுத்திவிடுவதே தன் அமைதிக்கும் நல்ல வழி என அவள் அடிக்கடி நினைந்த போதும் எல்லா வேளைகளிலும் அவளால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. அவர் செய்யும் அநியாயங்களில் பத்தில் ஒன்றுகூட அவள் செய்ததில்லை. அவரின்மேல் வஞ்சம் தீர்க்க முனைந்து, தானே தற்போது பழியைச் சுமக்க வேண்டி வந்த துரதிர்ஷ்டத்தை நினைந்து வருந்தினாள்.



நாகரத்தினம் திங்கட்கிழமை காலையில் கொழும்புக்குப் புறப்பட்டார். செல்வியைத் தொடர்ந்து இந்திராவும் மேலும் இரண்டு மூன்று நாட்களாவது தங்கிச் செல்லும்படி வேண்டினர். இந்திரா கேட்டபோது அவர் சீறினார்.

"ஏன் வில்சன் குடும்பத்தார் வரவில்லையோ"

"வந்திருக்கிறார்கள். அதுக்கென்ன."

"இனிமேல் தான் பயமில்லாமல் ஆடலாமே"

"ஏனப்பிடிச் சொல்லுறியள்?"

"இந்தக் கர்ப்பம் இறங்கும்வரை இன்னொரு கர்ப்பம் ஏற்படமாட்டாது."

இந்திரா விம்மி விம்மி அழுதாள். தான் நரக முள்ளிடையே அகப்பட்டு விட்டதாக எண்ணினாள். அவளது இன்ப வாழ்வு யாவும் சிதைந்து விட்டதாக நினைத்து ஏங்கினாள். இந்தச் சூழ்நிலையில் இன்னும் எத்தனை காலம் ஒரே வீட்டில் குடும்பமாக வாழ முடியும் என்பதை நினைத்து நினைந்து கண்ணீர் வடித்தாள். அக்கவலையில் உணவும் உறக்கமுமே குறைந்தது. தன் இளமை அழிந்து முகத்தில் சுருக்கங்கள் ஏற்படுவதாகக் கண்ணாடியில் பார்த்துப் பதை பதைத்தாள்.

நாகரத்தினம் ஏதோ திட்டம் போட்டுக்கொண்டே தன்னைப் பழிவாங்க முனைவதாக எண்ணிக்கொண்டாள். எத்தனை தோல்வியின் போதும் கடைசியாக வைத்து விளையாடக்கூடிய பகடக்காய் ஒன்று தன் கையிலும் இருப்பதை எண்ணி ஆறுதலடைந்தாள்.

இந்திரா கொழும்புக்குத் திரும்ப முன்னர் மாலினி வந்துவிடவேண்டும் என நாகரத்தினம் ஆவலோடு அவள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மாலை நேரங்களெல்லாம் மாலினியின் நினைவு அவருக்கு அடிக்கடி வந்தது. எட்மன் அறிமுகப்படுத்திய சில இடங்கள் அவருக்கு நல்ல பொழுது

போக்காயிருந்தன. தனியாகவே அவர் சென்று வரத் தொடங்கினார். தன்னை நன்கு தெரியாதவர்களிடையே ஏற்படக் கூடிய துணிச்சலில் ஒரு தனி இன்பத்தையும் கண்டார். கொழும்பு மாநகரிலேயே மேல் நாடுகளில் இருப்பதாகக் கேள்விப்பட்ட பல்வேறு பொழுது போக்கிடங்கள் இருப்பதைக் கண்டு அவரே ஆச்சரியப்பட்டிருந்தார். எட்மன் காட்டியிராவிடின் தானே அறிந்திருக்க முடியாது என்று எண்ணினார்.

## 52

அன்று தமது காரை கராஜ் ஒன்றில் சேவிஸ்சுக்குவிட்டு விட்டு நண்பர் ஒருவரின் காரை இரவலாக நாகரத்தினம் எடுத்து வந்தார்.

சாப்பாடு முடிந்து வழமைக்கு மாறாக சிறிது விஷ்கி அருந்தினர். சிறிது நேரம் ஓய்வாகத் தனிமையில் படுத்திருந்தார். பின்னர் எழுந்து டெலிபோனில் பேசினார். உடைகளை மாற்றிக்கொண்டு புறப்பட்டார். பியசேனாவையும் காரில் அழைத்துச் சென்றார் மழை பெய்து ஓய்ந்து தூமித்துக் கொண்டிருந்தது. றோசலின் லேனின் வேறும் சில கார்கள் நின்றன கார்களில் எவருமில்லை. பியசேனாவைக் காரில் தனியே விட்டுவிட்டு அந்த மாடி வீட்டில் நுழைந்தார். ஒரே காரில் பலர் வந்தால் மட்டுமே ஹோர்ணை ஒரு தடவை அழுத்தும்படி அவர் சொல்லிச் சென்றார். சிறுது நேரம் சழிந்ததும் பாலனும் நாதனும் கூறிய அந்த பேய் வீட்டைப் பார்த்துவிட அவன் விரும்பினான். மழை தூறிக்கொண்டிருந்தது. தயங்கித் தயங்கி மெதுவாகச் சென்றான். எவ்வித அரவமுமேயில்லை. காரில் வந்தவர்களெல்லோரும் இந்த வீட்டிலேயே இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை. சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே வாசலுக்கு வந்தான் வெளி ஹோலிலே எவரும் இல்லை. வீட்டைச் சுற்றி வந்தான், எவ்வித நட



மாட்டமோ அரவமோ இல்லை. பழைய வீடு. உடைந்த பழைய யன்னல்கள். யன்னலிடைகளில் இருந்த சந்துகள் வழியே பார்த்தான் எவருமில்லை. மாடியில்தான் இருப்பார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. கதவை மெதுவாகத் திறந்து பார்த்தான். 'கிறீச்' என்றது. உள்ளே நுழையத் துணிவு ஏற்படவில்லை. கதவைச் சாத்திவிட்டு ஓடிவந்து காரில் ஏறிக்கொண்டான். முதத்தில் பயத்தால் அரும்பிய வியர்வைத் துளிகளை உடுத்திருந்த சாரத்தின் கீழ்ப்பக்கத்தால் துடைத்துக் கொண்டான்.

ஒரு மணி நேரத்திற்குமேல் கழிந்த பின்னரே நாகரத்தினம் வந்தார். தான் மாடிப் படிகளிலேயே ஏறிப் பார்த்திருக்கலாம் என்று பியசேனா எண்ணமிட்டான். நாகரத்தினம் அவனது முகமாற்றத்தையே கவனியாதவராக காரில் ஏறி ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டே காரை ஓட்டத் தொடங்கினார். அவர் முதுகில் வியர்வை வடிந்து சேட் நனைந்திருந்தது.

## 53

மாலினி யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பியது நாகரத்தினத்திற்கு ஓரளவு ஆறுதலாயிருந்தது. தாயார் ஓரளவு நலம் பெற்றிருப்பதாகத் தெரிவித்தாள். இந்திரா வீடு திரும்ப மூன்று நாட்களேயிருந்தன. மாலினியை மீண்டும் ஒரு நாள் டின்னருக்காக அழைத்திருந்தார். அவரது நண்பன் எட்மனின் திடீர் விஜயம் அவரது திட்டங்கள் யாவையும் தகர்த்துவிட்டது. மரியாதைக்காக அவரையும் டின்னருக்கு நிற்கும்படி வேண்ட நேரிட்டது. அவரும் ஒப்புக் கொண்டார்.

எட்மனின் பார்வையை அவள் சிறிதும் விரும்பவில்லை. முன்னர் மவுன்லெவினியா ஓட்டலில் ஓர் இரவு அவன் பார்த்த பார்வை இன்னும் அவள் நினைவில் இருந்தது. எட்மன் எத்தனை நெருங்கிய நண்பனாக இருந்தபோதும்

மாலினியுடன் அவன் அதிகம் பேசுவதையே நாகரத்தினம் விரும்பவில்லை.

எட்மனின் பார்வையில் பொறாமையும் மிளிர்ந்ததை நாகரத்தினம் கவனித்தார். தனக்குப் பங்குதரவில்லை என்ற வஞ்சமும் அவன் பார்வையில் தெரிந்தது.

"மிஸ் மாலினி, நீங்க பெரிய இடத்தில் இருக்கிறீங்க. எங்களுக்கும் ஆபத்தில் உதவலாம்"

எட்மன் பேச முயன்றார்.

மாலினி எதுவும் பேசவில்லை.

"மாலினி ஆருக்கும் உதவுவாங்கள். முதலாளிகளையும் தொழிலாளிகளையும் ஒருவிதமாகப் பார்க்கும் தன்மை படைத்தவங்க."

"பியூட்டியோடு நல்ல குணங்களும் சேர்ந்திருப்பது அபூர்வந்தான்."

எட்மன் மாலினியை உயர்த்தி கவனத்தை ஈர்க்க முயன்றார்.

டின்னர் முடிந்து மூவரும் அரசியல் பேசிக்கொண்டிருந்தனர். மாலினி உரையாடலில் அதிகம் ஈடுபடவில்லை. நாகரத்தினம் கேட்ட சிலவற்றிற்குச் சுருக்கமாகப் பதில் கூறினாள். எட்மன் எப்பொழுது வெளியேறுவான் என நாகரத்தினம் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்.

எட்மன் தன் கடைசித் துருப்பையும் போட்டுப் பார்த்தான்.

"மிஸ் மாலினி, நீங்கள் பம்பலப்பிட்டிக்குத் தானே போக வேண்டும். நானும் அந்தப் பாதையால்தான் போகிறேன். உங்களை வீட்டிலே இறக்கி விடுகிறேனே?"

மாலினியின் முகபாவம் மாறியது. எதுவும் பேசாது -கரத்தினத்தைப் பார்த்தாள்.



"பரவாயில்லை. நான் வெள்ளவத்தைக்கு ஒருவரிடம் செல்ல வேண்டும். அப்போது அழைத்துச் சென்றுவிடுவேன். உங்களுக்கு அவசரமாயின் போய் வாருங்கள்."

எட்மன் தோல்வியை ஏற்றுக்கொண்டு மேலும் இருக்க முடியாதவராகி விடைபெற்றுக் கொண்டார். மாலினி தன் நெஞ்சில் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை வெளியே கொட்டினாள்.

"உங்கள் நண்பர்கள் சிலரைப்பார்க்கவே பயமாயிருக்கு. நல்ல பிரெண்ஸ்தான்; என்னை விழுங்குபவர் போலப் பார்த்துக்கொண்டேயிருந்தான். இந்த வயதில்கூட இத்தனை ஆசை வெறியா? பணக்காரர்கள் தெருவிலே காணும் பெண்களையெல்லாம் விலைக்கு வாங்கிவிடலாம் என்று நினைத்துக் கொள்ளுகிறார்களோ?"

"எங்க தொழிலுக்காக எல்லாரோடும் பழகவேண்டியிருக்கிறது. நல்லவர் கூடாதவர் என்று பார்த்து ஒதுக்க முடியாது. பணம் இருந்தால் எல்லாவற்றையும் அடைந்துவிடலாம் என்ற துணிவு எல்லோருக்கும் ஏற்படுவது இயல்பே. ஆனாலும் பணத்தாலும் அடைய முடியாத பொருட்களும் உண்டு."

"அவை என்னவோ?"

"உங்களைப் போன்றவரின் நல்ல இதயம்... அந்தளவில் நான் அதிர்ஷ்டசாலியே. எட்மன் ஒரு மில்லியனயர். உங்களை அவனால் விலைக்கு வாங்கிவிட முடியுமா?"

மாலினி எதுவுமே பதில் பேசவில்லை. இருவரும் எழுந்து வெளியே வந்தனர்.

மாலினி வானத்தைப் பார்த்தபடி நடந்தாள்.

"எங்காவது மோதிவிடப் போகிறீர்கள்; நிலத்தைப் பார்த்து நடவுங்கள்"

''கிராமத்திலே வானம் எத்தனை அழகாக இருக்கிறது. நகரத்துப் போலி வெளிச்சங்கள் அதன் அழகையே கெடுத்து விடுகின்றன.''

''உங்கள் நீலச் சேலைப் புட்டாக்கள் வானத்திலும் பார்க்க அழகாயிருக்கின்றன. உங்கள் நெற்றி...''

''பிறைச் சந்திரனிலும் அழகாயிருக்கிறது. அப்படித் தானே. உந்தப் போலி வர்ணனைகளையெல்லாம் கேட்டுச் சலித்துவிட்டது.''

''ஆரிடம் கேட்டீர்கள்?''

''ஆண்களிடம்...''

''எங்கே? எந்த ஆண்கள்?''

''தமிழ் சினிமாக்களில்.''

நாகரத்தினத்தின் பதட்டத்தைச் சமாளித்துவிட்டாள்.

## 54

இந்திரா, பத்மினி, செல்வி மூவரும் விடுமுறை கழித்து வீட்டுக்குத் திரும்பிவிட்டனர். கல்லூரிகள் ஆரம்பித்து விட்டன. வீட்டில் பழைய சலசலப்பு மீண்டும் ஏற்பட்டது. டெலிபோன் மணி அடிக்கடி அடித்துக் கொண்டிருந்தது. இந்திரா நாகரத்தினத்துடன் அளவுக்கு மீறிக் கதைப்பதைக் குறைத்துக்கொண்டாள். டொக்டரிடம் இரண்டுவாரத்திற்கு ஒரு தடவை தவறாது சென்று வந்தாள் வழமையான சுறு சுறுப்பான தன் கொழும்பு வாழ்க்கையை அவளால் முற்றா கத் துறந்துவிட முடியவில்லை.

வயிற்றின் வளர்ச்சியை வெளியே காட்ட அவள் வெட் கப்பட்டாள். அவளின் தோழியர் பலர் கேலியாகப்



பார்த்துப் பரிகாசம் செய்தனர். ஒருசிலர் தாய்மை உணர் வோடு அவளுக்கு அறிவுரை கூறினர்.

தனக்கு ஒரு தம்பி விளையாடுவதற்குக் கிடைக்கப்போகி றான் என்று செல்வி மகிழ்ந்தாள், பத்மினி தாயை வெறுத் தாள். முன்னரே இருந்த வெறுப்பு மேலும் வளர்ந்து வந்தது.

பத்மினி ஒரு சிங்கள வாலிபனுடன் கூடித் திரிகிறாள் என்பதை அறிந்ததும் இந்திரா கொதித்தாள், அன்று மாலையில் தாய்க்கும் மகளுக்குமிடையில் பெரிய போராட் டமே ஏற்பட்டது

''நீ ஒரு சிங்களப் பெடியனோடு கூடித் திரிகிறாயாம். உண்மையாடி?''

இந்திரா பத்மினியிடம் நேரடியாகவே கேட்டாள்.

''உண்மைதான். அதுக்கென்ன செய்யப் போறாய்?''

பத்மினியின் பதிலைக் கேட்டு இந்திரா திகைத்தாள்.

''அவரிட்டைச் சொல்லப் போறேன்''

''உனக்குத் தெரிஞ்சது இதுவரையிலை அப்பாவுக்குத் தெரியாமலிருக்குமா?''

''உன்ரை படிப்பையே நிற்பாட்டி விடுறன் பார்,''

'முடிஞ்சால் நிற்பாட்டிப் பாரன்''

''நீ அவனைக் கட்டப் போறியாடி''

''அவரைத்தான் கட்டப் போறேன்''

'உனக்கு என்ன திமிர்! என்ன கொழுப்பு? பூனைமாதிரி அறையுக்கையே இருந்து வந்தாய். இப்ப புலிமாதிரிப் பாயிறாய். நாளைக்குத் தொடக்கம் நீ மெடிக்கல் கொலிஜ் ஜுக்குப் போறதைப் பார்க்கிறேன்'

' அதையும் பார்ப்பமே. நான் ஒரேயடியாய் வெளிக் கிட்டுப் போய்விடுவேன். நீ வயித்திலை இருக்கிறதைப் பெத்து வள.''

''ஆடித்திரிஞ்சு போட்டு என்னடி றாங்கி பேசிறாய் இப்ப''

''நீ ஆடித்திரிஞ்சமாதிரி நான் ஆடேல்லை நான் ஒருத் தரைத்தான் காதலிக்கிறேன். அவரோடை ஆடித்திரிவேன் நீ ஆரடி கேட்க''

''என்ன திமிர் உனக்கு, பெற்ற தாயோடை பேசிற மரியாதையைப் பார்.''

''நீ மரியாதையாய் நடந்திருந்தாலெல்லோ நான் மரி யாதை காட்டுவன். இந்த வயதிலை பிள்ளை பெத்து வளர்க்கப்போறா. எனக்கே வெட்கமாயிருக்கு''

''அதற்கு உன் அப்பனைக்கேள். அவா வரட்டும், எல்லாம் சொல்லிவிடுறன்.''

''அவரைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாமலிருக்க இன்னும் அத்தனை குழந்தையல்ல நான். இந்த வயதிலை என்னுடைய வயதுள்ள ஒருத்தியைக் காரிலை கொண்டு தெருவெல்லாம் சுத்தித்திரியிறார். நீயும் பார்த்துக் கொண் டிருக்கிறாய்.''

''ஆரெடி அவள்.''

''உனக்கு இன்னும் தெரியாது. அப்பாவி. நான் ஆடு றது மட்டும் தெரிஞ்சிட்டுது. அந்த மிஸ் மாலினி உன் னையே பத்திரிகையிலே போட்டுப் பெரிசாக்கி கையுக்கை போட்டு வைச்சிருக்கிறாளே அவள்தான்.''

இந்திராவின் முகத்தில் வியப்பு எதுவும் தெரியவில்லை.

''அவளுக்கு உன்ரை வயுதா?''



''ஆகப்போனா மூன்று நாலு வயது கூட இருக்கும். ஆடம்பரமில்லாமலே உன்னிலையும் பார்க்க அழகாயிருக் கிறாள்.''

இந்திராவின் நெஞ்சு எரிந்தது.

''கழுதைகூட குட்டியாயிருக்கேக்கை அழகாய்த்தான் இருக்கும்.''

''அவள் கழுதையில்லை. உன்னிலும் பார்க்க இன்ரெ லியன்ரான பெண். உன்னையே உதைச்சுப்போட்டு வீட் டிலை நுழைந்திடுவாள். நீ குற்ற மனத்தோடை குறு குறுத்துக் கொண்டிருக்கிறாய்.''

பத்மினி கேலியாக மரியாதை காட்டாது சொன்னாள்.

''அத்தனை மடைச்சியில்லை நான். உன் அப்பனுக்குப் பணம் வந்த கிறுக்கிலை ஆடித்திரியிறார். அவர் ஆடித் திரியிறார் எண்டு நீயும் ஆடப்பார்க்கிறாய். நான் சொல்லுற புத்தியைக்கேளடி. இல்லாட்டா நிச்சயம் என் கையாலேயே இத்தக் குடும்பம் அழிஞ்சு போயிடும்.''

'உன்ரை பேய்ப் புத்தியைத்தான் இப்ப கேட்கப் போறன். நீ என்ரை அறையை விட்டே போ. இதுக்கை இனிமேல் நுழைய வேண்டாம்.''

இந்திராவைப் பிடித்து அறைக்கு வெளியே விட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டாள். புண்பட்டிருந்த அவளின் இதயம் மேலும் புண்ணானது. கட்டிலில் சென்று படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். சாதுவாக வாழ்ந்த பத்மினி விரைவில் இப்படியாக மாறிவிடுவாள் என இந்திரா கனவிலும் எதிர்பார்க்கவில்லை. ஏற்கனவே இருந்த மனத்துன்பங்களுடன் புதிய கவலை ஒன்றும் இதயத் தைச் சுற்றிப் படர்ந்தது கவலையினால் உணவே உட் கொள்ள முடியவில்லை. தூக்கமும் வர மறுத்தது. அத் தோடு விஷ ஜுரமும் பிடித்துக்கொண்டது. எங்கும் வெளி

யேற முடியாது அறைக்குள்ளே உடல் நலமும் மன நலமு மின்றி வாடினாள்.

## 55

மாலினி பொன்னையாவை நேரில் காணத் துடிதுடித் தாள். பொன்னையாவை நேரில் கண்டு பேசிச் சிலவாரங்க ளாகிவிட்டன. தாயாருக்குச் சுகயீனம், யாழ்ப்பாணம் செல்வதாகச் செய்தி மட்டும் டெலிபோனில் சொல்லிவிட்டு முன்னர் சென்றாள். அங்கிருந்து திரும்பியபோது காங் கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் வேலை நிறுத் தத்தைக் கவனிக்க பொன்னையா முதல்நாளே யாழ்ப்பாணம் சென்றதாக அறிந்தாள். அவன் அங்கிருந்து திரும்ப ஒரு வாரத்துக்கு மேல் ஆகிவிட்டது. திரும்பிய பின்னரும் நேரில் கண்டு பேச முடியவில்லை.

வெலோனா பக்டரியில் வேலை நிறுத்தம், வியாங் கொடை டெக்ஸ்டைல் மில்லில் வேலை நிறுத்தம் என்று சொல்லிக் கொண்டேயிருந்தான். பத்திரிகைகளில் தவறாது வெளிவர வேண்டிய செய்திகளை விக்கிரம மூலம் அனுப்பு வான். அல்லது டெலிபோன் செய்துவிட்டு வேறு எவராவது நண்பர் மூலம் அனுப்புவான். நேரடியாக பத்திரிகை நிலை யத்திற்கு அனுப்பும் செய்திகள் பெரும்பாலும் வெளியிடப் படுவதேயில்லை. மாலினியின் மூலம் அனுப்பும் செய்திகள் சுருக்கமாகவாயினும் தவறாது வெளிவருவதைக் கவனித் திருக்கின்றான். ஆகவே தவறாது வெளிவரவேண்டும் என அவன் கருதும் செய்திகளை அவளின் கையில் சேரச் செய் தான். அன்று டெலிபோன் செய்து வியாங்கொடை டெக்ஸ் டைல் மில் வேலை நிறுத்தம் பற்றிய செய்தி ஒன்றைநண்பர் மூலம் அனுப்புவதாகச் சொன்னபோது அவள் அவனை இறுகப் பிடித்தாள்.

''நீங்கள் நேரில் கொண்டு வந்தால்தான் நான்வாங்கிக் கொள்வேன். இல்லாவிட்டால் பெட்டியில்தான் போடச் செய்வேன்.''



மாலினி வற்புறுத்திச் சொன்னாள்.

''எவ்வளவோ வேலையிருக்கு. எனக்கு உன்னைப் பார்த்துப் பேச விருப்பமில்லையா? அடுத்த வாரம் கட்டாயம் வருவேன்.''

''முடியாது.''

''நாளைக்கு வருகிறேன்.''

''இல்லை இன்றைக்கு.''

''பிடிவாதம் சாதாரண பெண்களுக்குத்தான் இயற்கை யானது. உனக்குமா?''

''நானும் பெண்தான். உங்கள் பிடிவாதம் அதை மிஞ்சியதாய் இருக்கிறது.''

''சிறீமாவோவின் பிடிவாதங்களே உன்முன்னே தோற்றுவிடும்.''

''இது அரசியலில்லை. அன்பாகக் கேட்கிறேன், பிளீஸ்.''

''சரி அப்பிடியெண்டால் ஐந்தரைக்குத்தான் வரு வேன்.''

'பரவாயில்லை. நான் காத்திருப்பேன்.''

பொன்னையா கொண்டுவந்த செய்தியை மேலே அனுப்பிவிட்டு பொன்னையாவோடு கீழே பேசிக்கொண்டே இறங்கிவந்தாள். கீழே நின்றவர்கள் யாவரும் இருவரை யும் ஏற இறங்கப் பார்த்தனர்: அவனைத் தெரிந்தவர் களின் பார்வையில் பொறாமை தெரிந்தது,

மேலே ஏறிவந்த பழைய சகபாடி ஒருவர் ''ஹலோ பொன்னையா'' என்று அழைத்து சுகம் விசாரித்தார்.

''பத்திரிகைக் கூட்டுத்தாபன மசோதா இத்தடவை கட்டாயம் பார்லிமெண்டிலும் பாஸ் பண்ணிவிடுவார்கள். கோர்ப்பரேசன் போர்ட்டில் உங்களுக்குக் கட்டாயம் ஒரு இடம் கிடைக்குமாம்.''

''அதை உடைக்கத்தானே உங்க மானேஜிங் டிரெக்டர் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார், அத்தனை சுலப மாக அலுவல் முடிந்து விடுமா? எனக்குக் கூட்டுத்தாபனத் தில் இடம் தந்தாலும் நான் ஏற்க வேண்டுமல்லவா?''

''ஏன் அதற்கு நீங்களும் எதிர்ப்பா?''

''எதிர்ப்பதற்குத்தானே உங்கள் மனேஜிங் டிரெக்டர் புத்த பிக்குகள் படையையே திரட்டுகிறார். நான் பத்திரிகை ஏகபோக உரிமையைத் தகர்ப்பதை வரவேற்கிறேன். ஆனால் இந்த அரசாங்கத்தில் எப்பதவியும் ஏற்கத் தயா ராக இல்லை. வெறும் தொழிலாளியாகவே இருக்க விரும்புகிறேன்.''

''பேச்சுரிமை, எழுத்துரிமை பத்திரிகைச் சுதந்திரம் எல்லாம் அழிவதை நீங்களும் விரும்புகிறீர்களா?''

''ஜனநாயகம். பத்திரிகைச் சுதந்திரம் என்றெல்லாம் பேசிறீங்கள். அது யாருக்கு இருக்கிறது. நீங்க நினைக் கும் கருத்தையெல்லாம் இந்தப் பத்திரிகையில் எழுத முடியுமா? பத்திரிகைக்காக முதல் போட்ட முதலாளிகள் இருக்கிறார்கள். இப்பத்திரிகைகளில் வெளியிடப்பட வேண்டியவற்றை அவர்களல்லவா தீர்மானிக்கிறார்கள். ஜனநாயகம் என்ற போர்வையில் சில முதலாளிகளின் கருத்துகள் மட்டும் வெளிவருவதிலும் பார்க்க தேர்தலில் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் கருத்துப் படியாவது பத்திரிகைச் செய்திகள் வருவது உயர்வான தில்லையா? அதனால்தான் வரவேற்கிறேன்.''

''அரசாங்கம் ஒரு பக்கச் சார்பாகவே செய்திகளை வெளியிடலாம். மாற்றுக் கட்சிகளை ஒதுக்கி விடலாம்.''



''இப்போது உங்கள் பத்திரிகைகளில் முதலாளிகளுக்குச் சார்பான செய்திகளை மட்டுந்தானே போடுகிறீர்கள். அதற்கு மேலாக நாட்டிலே நடைபெறும் வகுப்புவாதம், கொலை, கொள்ளை, கற்பழித்தல், திருட்டுப்பற்றிய செய்தி களைத் தானே வெளியிடுகிறீர்கள். இந்த நாட்டுப் பத்திரி கைகளைப் பார்த்தால் கொலையாளிகளும் கொள்ளையடிப் பவர்களும் கற்பழிக்கும் கயவர்களும் திருடர்களும் நிறைந்த நாடாகவே தெரியும், நாட்டுக்காக உழைப்பவர்கள், கொடுமைகளை எதிர்த்துப் போரிடுபவர்கள், தொழிலாளர் களது புதிய சாதனைகள், புதிய கண்டுபிடிப்புகள் அவர்களது போராட்டங்கள் பற்றிய செய்திகள் முக்கிய இடம்பெறு கின்றனவா?''

''புதிய அரசாங்கத்தின் பத்திரிகைச் செய்திகளைத் தானே விரைவில் பார்ப்போமே,''

சமாதானமாகப் பேசிவிட்டு அவர் மேலே ஏறினார். மாலினியும் பொன்னையாவும் தெருவில் இறங்கி நாஷனல் கபேயை நோக்கி நடந்தனர்.

''உங்களோடு டீயும் றோல்சும் சாப்பிட்டு ரொம்ப நாளாய் போச்சு ''

மாலினி சொன்னாள்,

''இன்றைக்கு நானே வாங்கித் தருகிறேனே.''

ஒதுக்குப் புறமாக உட்கார்ந்தபடி பொன்னையா ஓடர் கொடுத்தான். மாலினி கேட்டாள் :

''வீட்டுக்குப் போனீர்களே அப்பா. அம்மா. தங்கை எல்லோரும் சுகமா!''

''சுகந்தான்,''

''ஒரு புதினமுமில்லையா?''

மாலினி ஆர்வத்தோடு அவன் வீட்டு விஷயங்களை அறிய முயன்றாள்.

"புதினமில்லாமலா. ஈடு வைத்துப் படிப்பித்த காணிளைச் சித்தாரிகப் போறாங்கள். நீ கலியாணத்தைக் கட்டச் சம்மதித்தாய் காசாக சீதனம் வாங்கியாவது ஈட்டை மீளலாம் என்று சொன்னார்கள்."

"நீங்கள் என்ன சொன்னீர்கள்."

"சரி என்று சொல்லி விட்டுவந்தேன்."

பதில் கூறிக்கொண்டே மாலினியின் முகத்தைப் பார்த்தான். அதில் கவலை மேகங்கள் படர்வதைக் கண்டான்.

நீங்க பொய் சோல்லுறீங்க. என்ன சொன்னீங்களெண்டு உண்மையைச் சொலலுங்கோ?'

"காணியைச் சித்தாரிக்கட்டும். வீட்டை விட்டு மட்டும் எழுத்திடாதையுங்கோ என்று சொல்லிவிட்டு வந்தன்."

## 56

தேநீர் அருந்தியதும் இருவரும் எழுந்து காலிமுகத் திடரை நோக்கி நடந்தனர். பாராளுமன்றத்தைக் கடந்த போது மேலே நீலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. பாராளுமன்றம் கூடியிருப்பதை அறிவிப்பதாகப் பொலிஸ் காரர் நின்றனர்: கார்களும் கட்டிடத்தைச் சூழ்ந்து நின்றன இருவரும் மௌனமாக நடந்தனர்.

"சமசமாஜிகளிலேயே ஒரு பகுதியினர் பத்திரிகைக் கூட்டுத்தாபன மசோதா வருவதை எதிர்க்கிறார்களே, அவர்களைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?"

மாலினி மௌனத்தைக் கலைத்தாள்.

"ரொக்ஸியின் கோட்பாடுகளைச் சார்ந்த ஒரு சிலரே எதிர்க்கிறார்கள், புரட்சி ஏற்படும் வரை முதலாளித்துவ சாதனங்களான பத்திரிகைகள், நீதி பரிபாலனம் ஆகியவை



அப்படியே இருக்க வேண்டும் என்று சொல்பவர்கள் அவர்கள்."

"நீங்கள் மட்டும் ஏன் இவற்றைப் புரட்சியின் முன்னரே முறியடிக்க விரும்புகிறீர்கள்?"

"முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் வளர்த்த பத்திரிகைகளின் ஏகபோக உரிமை, நீதிபரிபாலன முறை யாவும் சாசுவதமானவை. பரிசுத்தமானவை. மாற்ற முடியாதவை என்ற தவறான தப்பபிப்பிராயம் மக்களிடையே நிலைத்திருக்கிறது. இவற்றை முறியடிப்பதன் மூலம் மக்கள் இப்படியான முதலாளித்துவ பொய்த் தோற்றங்களில் மயங்காதிருப்பதற்கு இது முதற்படியாகும். மக்களே உலகின் பிரமாக்கள், மக்களால் எதையும் மாற்றியமைக்க முடியும் என்ற புதிய நம்பிக்கை நாட்டில் ஏற்படுவது வளர்ச்சிக்கு வழிவகுக்கும்."

மாலினி எதுவும் பேசாது சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், பூஷ்வா... இப்படியான வார்த்தைகளே இல்லாது உங்களுக்கு எதுவுமே பேச வராது அரசாங்கம் பாஸிஸப் போக்கில் மாறி அதன்கையில் பத்திரிகை அகப்பட்டால் ஜெர்மனியில் நடந்ததைப் போல..."

மாலினியை மேலும் பேசவிடாது அவன் இடையிட்டான்.

"அது வேறு விஷயம். முதலாளித்துவ ஜனநாயகம் பாஸிஸமாக மாறாது காப்பது நாட்டின் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் கடமையாகும். அவர்கள் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும்,"

''அவர்கள்தானே இந்தக் கூட்டரசாங்கத்தையே தொழிலாளர் ஆட்சி என நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.''

''அந்தப் பொய்த் தோற்றம் இப்போழுது மறைந்து வருகிறது. தொழிலாளர்களே இப்பொழுது உண்மையை உணரத் தொடங்கி விட்டார்கள்.''

''நீங்கள் மட்டும்தான் அப்படிச் சொல்லுகிறீர்கள்?''

மாலினி அவன் முகத்தைப் பார்த்துச் சொன்னாள்.

''உணர்ந்து அறிய முடியாதவர் கண்களைக் காலம் திறந்துவிடும்.''

''காலம் வரும்வரை காத்திருக்கும்படி நீங்களே கூறுவதானால்...''

''படித்த உன்னைப் போன்றவர்களே மயங்கும்போது சாதாரணமானவர்களுக்கு எப்படி விளக்க முடியும்?''

''என்னைக்கூடச் சொல்லுகிறீர்களா?''

''ஓம்..''

''சரி, காலம் எனக்கும் தெளிவேற் படுத்தட்டும்.''

மாலினி சிறிது நேரம் பேசாது நடந்தாள்.

தான் கருதியதை அவள் முற்றாக உணர்ந்து கொண்டாளா என்பதை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. அவனுக்கு லெனினின் அந்தப் பொன் மொழிதான் மீண்டும் நினைவில் தோன்றியது. எல்லாவற்றின் அடிப்படையாகவும் வர்க்கத்தின் பிரதிபலிப்பு இருப்பதைத் தொழிலாளர் அறிந்து கொள்ளும்வரை அவர்கள் ஏமாந்து கொண்டேயிருப்பார்கள் என்ற கருத்தை மீண்டும் மீண்டும் அசைபோட்டுப் பார்த்தான்.

இருவரும் பஸ்ஸில் ஏறிக்கொண்டனர். பொன்னையா, தான் இனிமேல் அடிக்கடி அவளைச் சந்திப்பதாகக் கூறினான்.



''நீங்கள் கூறும் உறுதி மொழிகளை நம்பவே முடியாது. இப்படிப் பொய்யர் ஆவது உங்க கட்சிக்கே அவமானம்.''

''உன்னைப் பார்ப்பதிலும் பார்க்க முக்கியமான அலுவல் இருந்தால் நிச்சயமாக அதையே கவனிப்பேன். அது உனக்குத் தெரிய வேண்டுமே.''

மாலினி பம்பலப் பிட்டியில் இறங்கிக் கொண்டாள்.

## 57

மறுநாள் நாகரத்தினம் மாலினியை டெலிபோனில் அழைத்தார். இந்திராவிற்கு காய்ச்சல் விடவே யில்லை எனவும் நர்ஸிங்ஹோமில் சேர்த்திருப்பதாகவும் சொன்னார்.

'எப்படி இருக்கிறா?''

''ரொம்ப இளைச்சுப் போய் கிடக்கிறாள். காய்ச்சலும் நின்ற பாடாயில்லை.''

''நீங்க அடிக்கடி போய் பார்க்கிறீங்களா?''

''போகாமலென்ன. நாளுக்கு இரண்டு தடவையாவது போகிறேன் என்னோடு பேசுவதே குறைவு.''

''டொக்டர் என்ன சொல்லுகிறார்?''

''டிங்குதான். கொஞ்சம் இறுக்கிப் பிடித்து விட்டது. வயிற்றில் குழந்தையால் ரிசிஸ்ரிவ்பவர் குறைந்துவிட்டது. சில நாளில் எல்லாம் குணமாகிவிடும் என்றார்.''

''மற்றவர்கள் குறை சொல்லாதபடி பார்த்துக் கொள்ளுங்கோ''

இவ்வேளை தான் போவது நல்லதில்லை என்ற தீர்மானத்துடனேயே மாலினி சொன்னாள்.

''பார்க்காமலென்ன. நீங்க சொல்ல வேண்டுமா? உங்களை எப்பொழுது பார்க்கலாம்?''

''நாலைந்து நாட்களுக்கு நேரமில்லை.''

மாலினி அவரைத் தட்டிக் கழிக்க முயன்றாள். இந்திரா ஆசுபத்திரியில் கிடக்கும்போது தான் அவருடன் சுற்றித் திரிவது அழகல்ல என்று எண்ணிக்கொண்டாள்.

''நீங்களும் தட்டிக்கழிக்கப் பார்க்கிறீர்கள் போலை தெரிகிறது?''

''அப்படியல்ல. உண்மையாகவே வேலையிருக்கிறது.''

''பரவாயில்லை.''

அப்படியே டெலிபோனை வேகமாக வைத்தது மாலினி யின் காதில் ஒலித்தது. அவரின் மனம் நல்ல நிலை யிலில்லை என்பதைக் காட்டிக் கொண்டார்.

இந்திரா அவருடன் பேச மறுப்பது அவருக்கு ஓரளவு கவலையளித்தது. அதனால் அமைதியிழந்து தவித்தார். அதற்கு வஞ்சம் தீர்ப்பதாகவோ, அமைதி பெறுவதற் காகவோ மாலினியை நாடினார். மாலினியின் பேச்சு அவரின் அமைதியின்மையை அதிகரிக்கச் செய்தது. விஸ்கி யில் சரண் புகுந்தார்.

மறுநாட் காலையில் டெலிபோன் செய்துவிட்டு பிய சேனாவையும் அழைத்துக்கொண்டு புதிதாக வாங்கிய காரில் றோசலின் லேனுக்குச் சென்றார். முன்போலவே அங்கு சில கார்கள் மட்டும் நின்றன. அன்று நான்காவது தடவையாக பியசேனாவும் அங்கு வந்திருந்தான். அவன் வழமை போல காரிலேயே காவல் இருந்தான். இன்று எப்படியும் மாடியில் ஏறிவிடுவதாக அவன் முடிவு செய்தான். அவனுக்குச் சாதகமாக மழையும் கொட்டிக் கொண் டிருந்தது.

எவராவது கேட்டால் துரையைத் தேடி வந்ததாகச் சாட்டு ஒன்றைத் தயாராக வைத்திருந்தான்.



அரைமணி நேரம் கழிந்தபின் சுற்றிவரப் பார்த்தபடி அடிமேலடி வைத்து வீட்டின் முன்புறமாக நுழைந்தான். வெளியே மழை கொட்டும் சத்தம் தவிர வேறு ஓசை ஒன்றும் இல்லை. மாடிப்படி வழியே நெஞ்சு படபடவென அடிக்க ஏறினான். கீழ்ப்புற குசினிக்குள் மட்டும் சிறிது சல சலப்புக் கேட்டது. பழைய வீடானபோதும் கவர்ச்சி யாக யன்னல் கதவுத் திரைகளும் கம்பளங்களும் போட்ட வீடாக இருந்தது.

மாடியிலும் எவரும் இல்லை. செவிகளைக் கூர்மை யாக்கினான். அறையில் மட்டும் மெல்லிய சலசலப்பும் சிரிப்பொலியும் கலகலப்பும் மழையின் ஓசையிடையே கேட்டுக் கொண்டிருந்தது. பெண்களின் கலகலப்பையும் சிரிப்பொலியையும் அவனால் பிரித்தறிய முடிந்தது. இடை யிடை கேட்ட பேச்சொலிகள் எதுவுமே புரியவில்லை, குறைந்தது இரண்டு மூன்று ஆண்களும் சில பெண்களு மாவது உள்ளே இருக்கவேண்டும் என ஊகித்துக் கொண்டான்.

கதவின் திரைச்சீலைக்குள் மறைந்து கொண்டான்.

கதவின் திறப்புத் துவாரத்தால் பார்த்தான். உள்ளே சாவி யிருப்பது தெரிந்தது. பழைய கதவு. விரல்களால் அவற்றைச் சிறிது பிரித்து அவற்றின் இடுக்கு வழியே பார்த்தான்.

அவன் நெஞ்சு படபடத்தது. பயத்தால் முகம் பேய றைந்தது போல மாறியது. முகம் வியர்த்து உடலெல்லாம் நடுங்கியது. இவை பேய்களா? மனிதர்களா? வாழ்க்கை யில் அவன் அப்படியான உருவங்களைக் காணவேயில்லை. சீ.... ஆண்களும் பெண்களும் ஒரே அறையில் அம்மண மாக...!

ஒரே ஓட்டமாக கீழே இறங்கி ஓடினான். கீழே இறங்கிய சத்தமும் கதவைத் திறந்த ஓசையும் தன்னைக் காட்டிக் கொடுத்து விடலாம் என்று அவன் சிறிதும்

எண்ணவேயில்லை ஓடிவந்து காரில் உட்கார்ந்தபோதும் மூச்சு இழுத்துக்கொண்டேயிருந்தது. திருடியவன் கண்கள் போல முழிகள் பிதுங்கிப் போயிருந்தன. வடிந்த வியர்வையையும் மழை நீரையும் உடுத்திருந்த சாரத்தால் துடைத்தான். தலையையும் துடைத்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தான்.

மேலும் ஒருமணி நேரம் கழித்து நாகரத்தினம் திரும்பி வந்தார். அவனது உணர்ச்சிகள் ஓரளவு ஆறியிருந்தன. அவன்மேல் எவ்வித கவனமும் செலுத்தாதவர்போல நாகரத்தினம் வேறு சிந்தனையுடன் காரை ஓட்டினார்.

## 58

சில நாட்களில் இந்திராவின் காய்ச்சல் குறைந்து வந்தது. ஆயினும் மிகவும் பலவீனமடைந்திருந்தாள். குமட்டலும் சத்தியும் இருந்தன. எதுவுமே சாப்பிட்டுத் தேறுதலடைய முடியவில்லை. அவளை அருகே இருந்து கவனிப்பதற்காக தனி நர்ஸ் ஒருத்தியை நாகரத்தினம் ஏற்பாடு செய்திருந்தார். அவள் மூலமே இந்திராவின் நிலைமைகளை அவர் கேட்டறிந்தார். அவளுடன் அவர் நெருங்க நின்று பேசுவதையே இந்திரா வெறுப்போடு பார்த்தாள்.

உயர்ந்த இரும்புக் கட்டிலிருந்து இந்திரா தானாகவே மெதுவாக ஏறி இறங்கத் தொடங்கினாள். தானாகவே பாத்றூமுக்கும் போய் வந்தாள். ஒருதடவை கட்டிலில் ஏறும் போது பலவீனமடைந்திருந்த கை சறுக்கிவிட்டது கீழே விழுந்தபோது நர்ஸ் ஓடிச் சென்று பிடித்துக்கொண்டாள். ஆயினும் வயிற்றில் வீழ்ச்சியின் அதிர்ச்சி தாக்கிவிட்டது. கட்டிலிலே கிடந்து பிரசவ வேதனை போலப் புரண்டு வேதனைப்பட்டாள். நர்ஸ்மார் ஓடி வந்தனர். நர்ஸிங் ஹோம் டாக்டர் பார்த்தார். டாக்டர் நிமலசேனாவுக்கு உடனே டெலிபோன் செய்தனர் அவர் வருவதற்கிடை



யில் பிரசவம் ஆகிவிட்டது. குறைப் பிரசவம். இந்திரா அறிவு நினைவின்றி மயங்கிக் கிடந்தாள்; அவனுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சைகளை டாக்டர் கவனித்தார். நாகரத்தினத்திற்கு உடனே வருபடி டெலிபோன் செய்தனர். அவரிடம் நிமலசேனா மன்னிப்புக் கோரி நோயினால் ஏற்பட்ட பலவீனம்தான் காரணம் என்று சொன்னார்.

குறைப்பிரசவம் நாகரத்தினத்தின் இதயத்தை எவ்விதமும் பாதிக்கவில்லை. நன்மை நடந்தாக எண்ணிக்கொண்ட போதும் அடி மனதில் இருந்த அவரின் காயம் முற்றாக ஆறிவிடவில்லை. குறைப் பிரசவமான குழந்தையை அவர் பார்க்கவே விரும்பவில்லை. அதைக் கொண்டுவர இருந்த நர்ஸை நிமலசேனா தடுத்து விட்டார்.

''குழந்தை எத்தனை மாத வளர்ச்சியடைந்தாகச் சொல்லுவீர்கள்.''

நாகரத்தினம் டாக்டரை மறைமுகமாகக் கேட்டார். அவரின் வினாவின் அடிப்படைக் காரணத்தை டாக்டர் உணரவில்லை.

''சரியாகச் சொல்ல முடியாது. சுமார் ஆறுமாதம் தொடக்கம் ஏழுமாதம் வரையான வளர்ச்சி இருக்கலாம்''

டாக்டரின் வார்த்தையைக் கொண்டு எதையுமே நாகரத்தினத்தால் பிரித்தறிய முடியவில்லை.

''நீங்களே விரும்பவில்லை. மனைவியாரும் விரும்பாத கர்ப்பந்தானே. ரேக் இற் ஈசி மிஸ்டர் நாகரத்தினம்''

முதுகிலே தட்டி ஆறுதல் கூறிவிட்டு டாக்டர் வெளியேறினார்.

இந்திரா விரைவில் தேறி வந்தாள். குறைப் பிரசவம் பற்றி அவள் அதிகம் வருந்தவில்லை. தன் அழகும் இளமையும் நோயினாலும் பிரசவத்தினாலும் குறைந்துவிடுமோ

என்று கவலைப்பட்டாள். கர்ப்பத்தால் ஏற்பட்ட கசப்பான சம்பங்வகள் நினைவில் வந்தன. நாகரத்தினத்தின் பழிக்குக தப்ப முடிந்ததிலும் மகிழ்ச்சியே யடைந்தாள்.

இந்திரா ஒரு வாரத்தில் வீட்டுக்குத் திரும்பினாள். டாக்டர் ஒழுங்காக வந்து பார்த்துச் சென்றார். படுக்கையிலிருந்து எழுந்து நடமாடத் தொடங்கினாள்.

## 59

நாகரத்தினம் தன் வழமையான வாழ்க்கையைத் தொடர்ந்து நடாத்தினார். அவர் சுதந்திரக் கட்சியை எதிர்ப்பதை அறிந்ததும் அவரை உயர்த்திய அரசியல் நண்பனான கே. பி. மறைமுகமாகத் தாக்கத் தொடங்கினார் தக்க செக்கூரிட்டி யில்லாது குடிவகை தயாரிக்கும் கம்பெனி ஒன்றிற்கு அரசாங்கக் கண்காணிப்பிலுள்ள உள்நாட்டு வங்கி ஒன்று பல லட்சம் ரூபாய்களைக் கடனாகக் கொடுத்ததை ஒட்டி விசாரணை நடாத்தும்படி பாராளுமன்றத்தில் ஒருவர் பிரச்சனையை எழுப்பினார். அதைத் தொடர்ந்து உள் நாட்டு வங்கிகள் விழிப்பாயிருந்தன. அவ்விழிப்பும் கே. பி. யின் தாக்கமும் நாகரத்தினத்தையும் பாதித்தன.

அன்று மாலை மாலினியைச்சந்தித்தபோது புதிய செய்தி ஒன்றை அவள் சொன்னாள். அது அவருத்க்குக் பெரிய ஆறுதலாக இருந்தது. பத்திரிகைகள் தம் பலம் முழுவதையும் ஒன்று சேர்த்து கூட்டரசாங்கத்தைத் தாக்கின. கூட்டரசாங்கத்திலுள்ள வலது பக்கம் சார்பான ஒரு அமைச்சரையும் பல பாராளுமன்ற உறுப்பினர்களையும் திசைதிருப்பும் அளவிற்கு பத்திரிகைகளும் அவற்றின் நிர்வாகிகளும் இரவு பகலாக உழைத்தனர். அதில் வெற்றி பெறும் சாதகம் ஏற்பட்டிருக்கும் செய்தியை மாலினி நாகரத்தினத்திடம் சொன்னாள். அச்செய்தியை வைத்து பங்கு மார்க்கெட்டில் மறுநாள் தான் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி



நாகரத்தினம் ஆராயத் தொடங்கினார். கூட்டரசாங்கம் வரப் போகும் செய்தியை மாலினி மூலம் முதலில் அறிந்து அன்று ஒரு நாளில் மட்டும் ஐம்பதினாயிரம் ரூபா வரையில் பெருக்கியது அவர் நினைவில் வந்தது. நாளையும் நிச்சயமாக ஏதாவதொரு பெரிய தொகை உழைத்து விடலாம் என்று நம்பிக் கொண்டார்.

''எப்படி உங்களுக்குச் செய்தி வந்தது?''

நாகரத்தினம் கேட்டார்.

''இதற்காக எங்க மனேஜிங் டிரெக்டரே பணத்தை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார். வெளியூர் செல்ல இருந்த அம்மா இதனால்தான் பயணத்தை நிறுத்திவிட்டு எதிர்க் கட்சிக்கு போக இருக்கும் தமது கட்சியினரை வளைக்கப் பார்க்கிறார்.''

''பலப்பரீட்சை எப்பொழுது நடைபெறும்?''

நாகரத்தினம் ஆர்வத்தோடு விஷயங்களைத் தெளிவாக அவள் மூலம் அறிய முயன்றார்.

''பத்திரிகை மசோதாவை அடுத்த ஆண்டு விவாதத்திற்கு எடுந்துக்கொள்ள வேண்டும் என்ற ஸ்பீக்கரின் முடிவையொட்டி பாராளுமன்றத்தின் புதிய தவணையை இப்பொழுது ஆரம்பித்திருக்கிறார்களல்லவா? அரியாசனப் பேச்சை ஒட்டியே விவாதம் இப்பொழுது நடைபெறுகிறது. அதன் வாக்கெடுப்பின்போது முடிவு தெரியும்?''

''அத்தனை விரைவாகவா?''

''ஆமாம். புத்த மகா சங்கமே கூட்டரசாங்கத்தை முழுமூச்சோடு எதிர்க்கத் தொடங்கிவிட்டது. அதன் செல்வாக்கையும் கொண்டுதான் மனேஜிங் டிரெக்டர் யு. என். பி. தலைவர்களெல்லோருடனும் அலுவல் பார்க்கிறாகள்.''

நாகரத்தினம் மாலினியை ஓர் ஆங்கில சினிமாவுக்கு அழைத்து வந்திருத்தார். பொக்ஸ் சீட்டில் இருவரும் அருகருகே உட்கார்ந்திருந்தபடியே உரையாடல் நடைபெற்றது.

சினிமா ஆரம்பித்தபோதும் நாகரத்தினத்தின் சிந்தனை யாவும் மாலினி கூறிய செய்தியிலேயே லயித்திருந்தது

''மாலினி, இந்த அரசாங்கம் விழுவது உங்களுக்கும் விருப்பந்தானே ''

இடைவேளையின்போது நாகரத்தினம் கேட்டார்.

''எனக்கு விருப்பமில்லையே.''

அப்பொழுது நாங்களிருவருமே வேறுபடத் தொடங்கி விட்டோம். உங்கள் தோழருக்கு மட்டுத்தான் விருப்பமிருக்காது என நான் எண்ணியிருந்தேன்.''

அவர் வாங்கிக் கொடுத்த 'ஐஸ் சொக்' கை, மாலினி சுவைத்துச்சாப்பிட்டாள்.

''இந்தக் கூட்டாட்சி நீண்ட காலம் நிலைக்காதுஎன்றே அவர் சொல்லி வந்தார்.'

''அத்தனை ஜோதிடம் தெரிந்தவரா உங்கள் தோழர்.''

''சரித்திரம் தெரிந்தவர். உலகத்தில் இதுவரை தோன்றி நிலைக்காத கூட்டாட்சிகள் எத்தனை என்று கேட்டால் விரலைமடிந்து ஒவ்வொன்றாக எண்ணிச் சொல்லுவார். சரித்திர பாடத்தை ஸ்பெஷலாகச் செய்து முதல் வகுப்பில் சித்தியடைந்தவர்.''

''உங்கள் தோழர் பட்டதாரியா?''

உங்களுக்கு இதுவரை காலமும் தெரியாதா?'' ஆனால் அதை ஒரு பெருமையாகக் கொள்ளமாட்டார்,''



''இத்தனை படித்துவிட்டா இருநூறு ரூபாவுக்கு வேலை செய்கிறான். எங்காவது டீச்சராகப் போனாலும் கூடிய சம்பளம் கிடைக்கலாமே?''

''அதுகூட கிடைத்தால்தானே! செருக்கும் சுதந்திரமும் வேண்டுபவர்களுக்கு முதலாளிகள் எங்கே உயர்ந்த பதவியும் நல்ல சம்பளமும் கொடுக்கப் போகிறார்கள்.''

மாலினி சொன்னாள்.

'நான்தானே வேலை கொடுப்பதாக எத்தனை தடவை சொன்னேன்.''

''அவரைப்பற்றி இவ்வளவு தெரிந்த பிறகுமா கேட்கிறீங்கள்.''

''அவனிடம் வேலை வாங்க எனக்கு வழி தெரியும்.''

''ஒரு தடவை தவறான சந்தர்ப்பத்தில் கேட்டுத் தோல்வியடைந்தேன், ஆனாலும் மற்றொரு முறை கேட்டுப் பார்க்கிறேனே. ஒரே பணக் கஷ்டத்திடையே வாழ்கிறார் படித்த கடன்களே கொடுக்க முடியவில்லை, ஈடு வைத்த வீடு வளவே ஏலம் போகப் போகிறது.''

''உங்களுக்காக நான் இந்த உதவிகூடச் செய்ய மாட்டனா. அவன் கேட்கும் சம்பளம் கொடுப்பேன். உயர்ந்த பதவியே கொடுத்து விடுவேன். ஆனால் வேலைக்கு ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும்.''

''நான் மீண்டும் வற்புறுத்திப் பார்க்கிறேன்.''

''என்னோடு நீங்க வருவதைப் பற்றி உங்க தோழர் ஒன்றும் சொல்ல மாட்டாரா.''

''அவர் மிக முற்போக்கானவர். உங்களுக்குத்தான் நான் அவரோடு பழகுவது பொறாமையாயிருக்கிறது.''

## 60

மாலினி இரண்டு மூன்று நாட்களாக டெலிபோன் செய்த பின்னரே பொன்னையாவோடு பேச முடிந்தது. அவசர அலுவல், பார்த்துப் பேச வேண்டும் என்று வேண்டினாள். ஒவ்வொரு நாளும் மாலையில் தனக்கிருக்கும் வேலைகளைந் தெரிவித்தான்.

"அவசரமானால் இப்பொழுதே டெலிபோனில் சொல்லேன்."

"நேரில்தான் சொல்வேன்."

"நாளை மறுநாள் வரப் பார்க்கிறேன்."

"பார்க்கிறேன் என்ன, கட்டாயம் வர வேண்டும்."

"பார்க்கலாம்."

பொன்னையா வரவேயில்லை.

அன்று மீண்டும் டெலிபோன் செய்தாள்.

"மன்னிக்க வேணும் மாலினி. நான் இந்த அரசியல் நெருக்கடிகளில் மறந்தே விட்டேன்."

"உங்கள் மந்திரிப் பதவி ஒன்றும் போய்விட மாட்டுது தானே."

"என்றாலும் முற்போக்குச் சக்திகளுக்கு ஒரு பெரிய தோல்விதானே."

"இன்று கோல் பேஸ் திடலில் நானும் கூட்டம் பார்க்க வேணும். என்னையும் அழைத்துப் போவீங்களா?"

"சரி, நல்லதே."

"என்ன நேரம்?"



"நாலரைக்கே வந்து விடுகிறேனே."

"ஏமாற்ற மாட்டீர்களே?"

"இல்லை. மாலி."

பொன்னையா செல்லமாகச் சொன்னது அவள் செவிகளில் இனித்தது.

ஒரே ஒரு வாக்கினால் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட கூட்டாட்சியை ஆதரிக்கும் கூட்டத்திற்கு தொழிலாளர்களும் பொதுமக்களும் திரண்டு வந்திருந்தார்கள். கோல்பேஸ் மைதானம் என்றுமே காணாத மிகப் பெரிய கூட்டம். சுலோக அட்டைகளுடனும் கோஷங்களுடனும் தொழிலாளர் அணிவகுத்து வந்து கொண்டிருந்தனர். மாலினி அதைப் பார்த்துத் திகைத்தாள். இன்றே தொழிலாளரின் புரட்சி ஏற்பட்டு விடுமோ என்றே எண்ணினாள்

கூட்டாட்சியில் சேர்ந்திருந்த இடதுசாரிக் கட்சி அமைச்சர்களும் அவர்களைச் சார்ந்த தொழிற்சங்கத் தலைவர்களும் மேடையில் வீற்றிருந்தனர்.

"யு.என்.பி ஒழிக"

"ராஜினாமா வேண்டாம்"

சுலோகங்கள் எதிரொலித்தன.

பிரதமர் சிறமாவோவும் கூட்டத்திற்குத் திடீரென வந்தது பெரியதோர் பரபரப்பை ஏற்படுத்தியது.

"சிறீமாவோவுக்கு ஜே."

"ராஜினாமா வேண்டாம். ராஜினாமா வேண்டாம்."

சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் கோஷம் எழுந்தது; கடலலையோடு எதிரொலித்தது.

"அம்மா ராஜினாமா செய்யாவிட்டால் என்ன நடக்கும்?"

மாலினி பொன்னையாவைக் கேட்டாள்.

"அரியாசனப் பேச்சின்மேலும் அரசாங்கத்தின் மேலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பின் ராஜிநாமா செய்யாவிடின் தற்போதைய பூஷ்வா ஜனநாயகத்தின் மேல் நம்பிக்கையில்லை என்றாகிவிடும். அபபோது அரசியல் சட்டத்திற்கு எதிராகப் போராட நேரும். அதற்கேற்ற பலம் தற்போது அம்மாவிடம் இருக்கிறதா? இந்த ஜனநாயகத்தை மீறத்தக்க துணிச்சலே அம்மாவிடம் கிடையாது. அம்மா ராஜிநாமா செய்தே தீருவார்."

"செய்யாவிட்டால் என்ன நடக்கலாம் என்றல்லவா கேட்கிறேன்."

மாலினி அவனைப் பேச வைக்க விரும்பினாள்.

'அம்மாவின் தலையே போனாலும் போய்விடும். முதலாளித்துவ ஆட்சியை முற்றாக முறியடிக்கத்தக்க பலம் தற்போது எம்மிடமில்லை. அம்மாவே தொழிலாளி வர்க்க உணர்ச்சியேயில்லாத ஒரு பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர் தானே. நாம் இப்போது அம்மாவை நம்பிப் புரட்சியில் இறங்குவதென்பது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாகிவிடும். எம் தலைகளும் போய்விடும். தற்போதைய ஜனநாயகத்தை எதிர்த்துப் புரட்சி செய்கிறோமென்றால் அது நடைமுறையிலுள்ள அரசியல் சட்டத்தை எதிர்க்கும் ராஜத்துரோகமாகக் கருதப்படும். முதலாளிகளின் ஜனநாயகத்தைக் காப்பாற்ற உடனேயே ஆயுதம் தாங்கிய முப்படைகள் வந்துவிடும். நாம் அவர்களை எதிர்த்துப் போராடத் தக்க ஆயுதபலம் வைத்திருக்கிறோமா?"

"அப்போது ஏன் ராஜிநாமா வேண்டாம் என்று கத்துகிறார்கள்?"



"தொழிலாளரின் ஆட்சி ஏற்கெனவே ஏற்பட்டதாக கற்பனை செய்தவர்கள், இதுவரை நாளும் நம்பியிருந்தவர்களின் குரலது. பாவம் அவர்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள்."

"ஏனப்படிச் சொல்லுறீங்கள்?"

பிரதமர் சிறிமாவோ பலத்த கரகோஷங்களிடையே சிங்கள மொழியில் உணர்ச்சிவசமாகப் பேசினார். அதைத் தொடர்ந்து கூட்டாட்சியில் சேர்ந்திருந்த அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியையும் முதலாளித்துவத்தையும் ஒன்று சேர்ந்து முறியடிப்போம் எனப் பேசினர்.

கடல் கொந்தளித்து கரையோடு மோதும் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. சூரியன் மறைந்து செவ்வானம் கடலலைகளின் மேல் மேற்கு வானில் படர்ந்திருந்தது. இதயத்தைத் தொடும் அழகைப்பார்த்து பொன்னையா ஒரு கணம் மெய்மறந்து நின்றான்.

"நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் கடலலையையே பார்த்துக்கொண்டு நிற்கிறீர்களே.'

"என்ன கேட்டாய்?"

'தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாக ஏன் சொல்லுகிறீர்கள்?"

'அந்த செவ்வானத்தைப் பார்; நெஞ்சைத் தொடும் அந்த வர்ணஜாலத்தைப் பார். எத்தனை அழகாகத் தோன்றுகிறது. ஆனால் அது சில நிமிடங்கள் மட்டும் நிலைக்கும் ஒரு பொய்த்தோற்றம். இந்தக் கூட்டரசாங்கமும் அப்படித்தான் தொழிலாளர்களுக்காகப் பரிந்து பேசிய பல இடதுசாரி அரசியல் தலைவர்கள் ஒரு தேசீய பூஷ்வாக்களால் ஆதரிக்கப்பட்ட முதலாளித்துவ அரசாங்கத்துடன் சேர்ந்ததால் இது தொழிலாளர் ஆட்சியாகிவிட மாட்டாது. தொழிலாளி வர்க்கம் பூரணத்துவமாகப் பிரதிபலிக்கும்

ஆட்சியே தொழிலாளர்களின் சர்வாதிகார ஆட்சி. அதை இந்த முதலாளித்துவத்தின் கைப்பொம்மையான பாராளு மன்றத்தின் மூலம் நிலை நாட்டிவிட முடியாது. இதை நான் எத்தனை முறை உனக்குத் திருப்பி ஒப்பித்தேன். உனக்குப் புரிந்தால்தானே.''

''நீங்க முன்னரும் ஒரு தடவை சொன்னது நினைவு வருகிறது.''

''நீயும் உண்மையான வர்க்க உணர்ச்சியுள்ள தொழிலாளியென்றால்தானே உனக்குப் புரியும். நவநாகரிகத்திடையே அமிழ்ந்திப் போயிருக்கும் உனக்கு எங்கே இதெல்லாம் விளங்கப்போகிறது.''

''அத்தனை குறைவாக என்னைப் பேசவேண்டாம்''

''குறைக்கிறேனா? உயர்த்தியெல்லோ பேசுகிறேன். நவ. நாகரிகப் பெண்ணென்றால் உயர்வுதானே''

பொன்னையா ஒரு கடலைக்காரனை அழைத்துப் பத்துச் சதம் கொடுத்து இரண்டு சுருள் கடலை வாங்கினான். ஒன்றை மாலினியிடம் நீட்டினான்.

''நோ. தாங்க்யூ''

'உன்ரை பூஷ்வாகுணம் வந்துவிட்டதே உனக்கு சொக்லெட் வேண்டும், இல்லாவிட்டால் ஐஸ்கிறீம்வேணும். மதிப்பான ஓட்டலுக்கு அழைத்துச் சென்றால் தான் டீ சாப்பிடுவாய். இப்படியான பணக்காரக் குணமெல்லாம் படைத்த ஒரு அழகான படித்த பெண் ஏழைத் தொழிலாளியான என் பின்னே ஏன் சுற்ற வேண்டும்?''

''கடலையைத் தாருங்கோ. நான் சாப்பிடுகிறேனே''

அவள் ஒரு சுருளை அவன் கையிலிருந்து பறித்துக் கொண்டாள்.



''பணக்காரரின் குணங்களெல்லாம் உன் சிந்தனையோடும் இரத்தத்தோடும் ஒட்டிப் போயிருக்கின்றன. அவற்றையெல்லாம் என்னால் மாற்றிவிட முடியாது''

''உங்களைத் தேடிவரும் என்னையே மாற்ற முடியாவிட்டால் மற்றப் பெண்களையெல்லாம் எப்படி மாற்றப் போகிறீர்கள்?''

'தூர இருந்தால் முயன்று பார்க்கலாம். நீ என்னோடு ஒட்டிவரப் பார்க்கிறாய். என்னையே மாற்றி விடுவாயோ என்றே பயப்படுகிறேன்''

''எனக்கு அத்தனை பயமா? நீங்கதானே தொழிலாளி வர்க்கத்தின் முழு உருவமாய் நிற்கிறீர்களே''

'நீ நடுத்தர வகுப்பினரின் முழுவடிவமாக நிற்கிறாய்''

''நானும் ஒரு தொழிலாளிதானே''

''எந்தத் தொழிற் சங்கத்தில் அங்கத்தவராயிருக்கிறாய்?''

''உங்க தொழிற் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளுங்களேன்.''

''நாளைக்கு உன் வேலையே போய்விடும்''

'பரவாயில்லை''

''உனக்கு நாகரத்தினம் வேலை தருவார். இல்லாவிட்டால் வேலையில்லாமலே சம்பளம் தருவார்.''

பொன்னையா கேலியாகச் சொன்னான்.

''உங்களுக்கும் நீங்கள் கேட்கும் சம்பளமும் விரும்பும வேலையுமே தருவதாகச் சொன்னார். அதைக் கூறவே உங்களை வரச் சொன்னேன்?''

''அப்படியா. நான் விஷயத்தைக் கேட்கவே மறந்து விட்டேன்''

பொன்னையா நளினச் சிரிப்போடு சொன்னான். அதை புரியாதவளாக மாலினி வற்புறுத்திக் கேட்டாள்.

''நீங்க என்ன சொல்லுறீங்க?''

''என்னையும் உன் நிலைக்குக் கொண்டுவரப் பார்க்கிறாய்''.

''நல்ல காலம் தேடி வருகிறது. ஓம் என்று சொல்லுங்கோவன்''

''யோசித்துச் சொல்லுகிறேன்''

கூட்டம் கலைந்து கொண்டிருந்தது செவ்வானம் மறைந்து இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. தெருவிளக்குகள் மங்கிய ஒளியைக் கக்கிக் கொண்டிருந்தன. கூட்டத்தின் ஒதுக்குப் புறமாகஇருவரும் நடந்து கொண்டிருந்தனர்

''எப்பொழுது பதில் சொல்லுவீர்கள்?''

''இரண்டு வாரத்தில்''

பஸ் நிலையத்தில் ஒரே கூட்டம். மாலினி பஸ்ஸில் போவது சிரமம் என்று தயங்கினாள்.

''நீ டாக்சியில் போகலாமே. நான் பஸ்ஸில் நெரிபட்டுப் போவேன்.''

''நானும் நெரிபடத் தயார்''

நெருக்கமான பஸ் ஒன்றில் இருவரும் ஏறிக் கொண்டனர்.

## 61

இந்திரா நோயுற்ற பின்னர்மாலினி என்றுமேசென்று அவளைப் பார்த்ததில்லை. தன்னைக் கண்டதும் இந்திரா



எவ்வாறு வரவேற்பாள் என்பதை மாலினியால் சரியாக ஊகிக்க முடியவில்லை நாகரத்தினத்தைக் கேட்டபோதும் அவர் உறுதியான பதில் கூறவில்லை.

''அத்தனை அவசியமில்லை. ஆனாலும் அது உன் விருப்பம்'' என்று மட்டுமே தெரிவித்தார். வீட்டுக்கு வந்து பழகினால் பத்மினியுடனும் சேர்ந்து பேசி அவளின் பிடிவாதத்தை மாற்ற முயலலாம் என நாகரத்தினம் எண்ணினார். சாதுரியமாகப் பேசவல்ல திறமை யாவும் மாலினியிடம் இருப்பதாக அவர் நம்பினார்.

தான் பிறரிடம் பழிகேட்க நேரினும் தன்னால் முடிந்த உதவிகள் யாவும் அவருக்குச் செய்யவேண்டும் என மாலினி விரும்பினாள். முன்னரேயே நர்ஸிங் ஹோமில் சென்று உதவி புரிந்து இந்திராவின் நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கத் தவறியதற்காக வருந்தினாள்.

மேலும் தாமதிக்காது அன்று மாலை செல்வி பவனத்திற்குச் சென்றாள். மேரி முதலில் வரவேற்று, செல்வியை அழைத்தாள் செல்வியுடன் படிப்பு விஷயங்கள் பற்றிப் பேசினாள்.

''உங்கள் பத்திரிகைகளின் பாலர் பகுதிக்கு நான் எழுதினால் பிரசுரிப்பார்களா?''

செல்வி கேட்டாள்.

''கட்டாயம் பிரசுரிப்போம். நீங்கள் எழுத விரும்புவதை எழுதி உங்க போட்டோவுடன் என்னிடம் தந்தால் பத்திரிகையில் போடச் செய்கிறேனே. இல்லாவிட்டால் எனக்கே தபாலில் அனுப்பி விடலாம்''

''அப்பாவுக்கு உங்க விலாசம் தெரியும்தானே''

''ஓம். கட்டாயம் அடுத்தவாரமே ஒன்று எழுதி அனுப்ப வேணும்''

'சரி''

''இந்த அன்ரியை அம்மாவிட்டை அழைத்துப் போங்கோ.''

மேரி செல்வியிடம் சொன்னாள். செல்வி மாலினியின் கையைப் பிடித்து மேலே அழைத்துச் சென்றாள்.

அறையுள் நுழைந்தபோது இந்திரா டிரெஸ்ஸிங் டேபிளின் எதிரே சிறு ஸ்ரூலின்மேல் உட்கார்ந்து, கால்களை மேசையின் முனையில் வைத்துக்கொண்டு குனிந்தபடி கால் நகங்களுக்குக் கியூட்டெக்ஸ் பூசிக்கொண்டிருந்தாள்.

''அம்மா, அன்ரி''

இந்திரா நிமிர்ந்து பார்த்தாள். மலர்ச்சியான புன்னகை அரும்பவில்லை.

''உட்காருங்கோ''

நாற்காலியைக் காட்டிவிட்டுத் தலையைக் குனிந்தபடி வர்ணம் பூசும் வேலையில் ஈடுபட்டாள் முகம் கறுத்துப் போய் நெற்றியில் சிந்தனை மடிப்புகள் விழுந்தன.

''அம்மா நான் பூசுறன். நீங்க அன்ரியோடை கதையுங்கோ''

செல்வி கியூட்டெக்ஸ் புட்டியின் பிரஷ்ஷைத் தாயிடம் வாங்கிப் பூசத் தொடங்கினாள். இந்திரா நிமிர்ந்து மாலினியைப் பார்த்தாள்

இந்திராவின் முகத்தில் முன்னர் இருந்த மலர்ச்சியும் உடற்பொலிவும் இருக்கவில்லை. நோயின் வாட்டம் உடலிலும் முகத்திலும் பிரதிபலித்தது. அதற்கு மேலாக வேறு கவலைக் குறிகள் தென்பட்டன.

தோளோடு வெட்டிய 'பிங்' கலர் ஜாக்கெட்டும் அதே கலரில் புட்டாபோட்ட அஜந்தா வர்ண ஆரணி பட்டுச் சேலையும் கட்டியிருந்தாள். கழுத்து முழுவதும் தெரியத் தக்கதாக மேலே பார்த்த கொண்டை போட்டிருந்தாள்.



''நீங்க சுகயீனமாயிருந்தீங்களென்று அறிந்தும் வர நேரமேயில்லாமல் போய்விட்டது.''

' ம்... ம்...''

இந்திராவின் பார்வை செல்விமேல் இருந்தது.

அதன்மேல் பேச்சைச் தொடங்குவதற்கு விஷயம் வேண்டியிருந்தது. நோய் பற்றிய பேச்சை அவள் விரும்பவில்லை என்பதை மாலினி உணர்ந்து கொண்டாள்.

அறையுள் கியூட்டெக்ஸின் வாசனை வீசிக்கொண்டிருந்தது

''முந்திய 'கேட்'டினிலும் பார்க்க இவை ரொம்ப நல்லாயிருக்கிறது. என்ன மட்டீரியல், எங்கே வாங்கினீர்கள்?''

சொல்லியபடியே மாலினி எழுந்து சென்று அவற்றைத் தொட்டுப் பார்த்தாள்.

''பிளாஸ்டிக் வாஷபிள். வொண்டர்புல்! இங்கே இது மருந்துக்கும் கிடைக்காதே.''

மாலினி தொடர்ந்து பாராட்டிப் பேசினாள். இந்திராவின் முகம் சிறிது மலர்வதைக் கண்டாள்.

''வுமன் அன் ஹோம் மகசீனிலை விளம்பரம் பார்த்து அதை வெட்டி நாதனுக்கு லண்டனுக்கு அனுப்பினேன். அவன் வாங்கி அனுப்பிவிட்டான்''

''ஏதாவது புதுமையாய் பார்க்க வேணுமெண்டால் உங்க வீட்டுக்குத்தான் வரவேண்டும். எங்க பத்திரிகையிலே அடுத்தவாரம் ஹோம் டெக்கரேஷனைப் பற்றி ஒரு சப்பிளிமென்ட் போடப்போறாங்கள். உங்கவீட்டு டெக்கரேஷனைத் தான் மொடலாகப் பார்த்து எழுதும்படி சொல்ல இருக்கிறேன். நீங்களும் கொஞ்சம் ஹெல்ப் பண்ணுவீங்க தானே''

''அதிலே என்ன? என்னால்முடிந்ததைச் செய்கிறேனே நீங்க என்ன சாப்பிடுவீங்க''

''என்ன தந்தாலும் சரிதான்''

''நெஸ் கபே''

''சரி. நெஸ் கபே குடித்து ரொம்ப நாளாய் போச்சு''

''மேரி''

இந்திரா குரல் கொடுத்தாள்.

'நானே போய் கொண்டு வாறனம்மா'

செல்வி பிரஷ்ஷைத் தாயிடம் கொடுத்துவிட்டு தானே கீழே ஓடினாள்.

றிச் கேக் துண்டுகள் கொண்ட ஒரு தட்டை செல்வி கொண்டுவந்து நீட்டினாள். மாலினி ஒருதுண்டை எடுத்துச் சுவைத்தாள்.

''ரொம்ப நல்லாயிருக்கே. இப்படி வெளியே வாங்க முடியாது!''

''ஹோம் மேட்''

''அதுதானே. உங்க கை படுவதெல்லாம் அழகாகவும் சுவையாயுமிருக்கிறது. பிரண்டி கூட விட்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது''

''கொஞ்சம் விட்டேன். அது விட்டால்தான் றிச் கேக்கின் மணமும் ருசியும் நல்லாயிருக்கும்''

இந்திரா மாலினியின் சாதுரியமான பேச்சில் ஓரளவு மயங்கவே செய்தாள். ஆயினும் இதயத்தின் அடிப்பாகம் கொதித்துக்கொண்டேயிருந்தது.

தன் வருகை ஓரளவு வெற்றி பெற்றதாக மாலினி உள்ளூற எண்ணி மகிழ்ந்தாள். நெஸ் கபேயைக் குடித்து முடிந்ததும் எழுந்தாள்.



''நான் வரப்போகிறேன்,''

''சரி.''

''மிஸ்டர் நாகரத்தினம் இல்லையா. சொல்லிவிட்டுப் போகலாம்.''

''அவர் எங்கே இருப்பார் என்பதைப் பற்றி உங்களுக்குத்தானே கூடத் தெரியவேணும்.''

இந்திரா போட்ட வெடிகுண்டு மாலினியை அதிர்ச்சியடையச் செய்தது. எதுவுமே பேச முடியாது திக்குமுக்காடினாள்.

'ஏனப்படித் தவறாய் சொல்லுறீங்க''

''தவறாய் என்ன? எல்லாருமே அப்பிடித்தான் சொல்லுறாங்க.''

''பொறாமை பிடித்தவங்க சொல்லுவாங்க அதையெல்லாம் கேட்டு நம்பாதீங்க. உங்களைப் போன்ற கெட்டித்தனமும் சுறுசுறுப்பும் அழகும் கொண்ட மனைவி கிடைத்ததற்காக அவர் பெருமைப்படவல்லவா வேண்டும்.''

மாலினியின் இந்தப் பாராட்டு இந்திராவின் கொதிப்பை அவித்தது. இந்திரா மௌனமாக ஒருகணம் நின்றாள்.

''நான் போகிறேன்''

மேலும் பதிலை எதிர் பார்க்காதவளாக அறையைவிட்டு வெளியேறி கீழே இறங்கி நடந்தாள்.

பத்மினியுடன் பேசவேண்டும் என்ற எண்ணத்துடன் வந்த மாலினி ஏமாற்றத்துடன் திரும்பினாள். மேரியும் செல்வியும் வாசல்வரை வந்து வழியனுப்பினர். செல்வியின் கன்னத்தைத் தன் கன்னத்தோடு அணைத்து 'குட் பை' சொல்லிக்கொண்டே மாலினி வெளியேறினாள். அவள்

மனதின் அமைதி குலைந்தது. சிந்தனை வலுத்து, தெருவெல்லாம் வெறிச் சோடித் தெரிந்தது. யந்திரப் பாவை போல தெருவழியே நடந்தாள்.

## 62

நாகரத்தினம் நேரம் கழித்தே வீடு திரும்பினார். மணி ஒன்பதரைக்கு மேலாகியிருந்தது. மாலினி வந்து சென்ற தன் தாக்கத்தையும் ஓரளவு அறிய விரும்பினார். சாப்பாட்டை முடித்துக்கொண்டு மேலே வந்தவர் இந்திராவின் அறையில் லைட் எரித்துகொண்டிருப்பதைப் பார்த்தார். கதவைத் திறந்து கொண்டே உள்ளே நுழைந்தார், இந்திரா ஒரு ஆங்கில மாதர் சஞ்சிகையிலிருந்து எதையோ வெட்டிக் கொண்டிருந்தாள்.

"ஏன் இன்னும் தூங்கேல்லையா? மருந்து சாப்பிட்டியா?"

அன்று மட்டும் விசித்திரமாக நுழைந்து பரிவாக விசாரிப்பது எரிந்து கொண்டிருந்த நெஞ்சில் எண்ணெயைக் கொட்டியது போலிருந்தது, அவளுக்கு.

"ஏது இன்றைக்கு மட்டும் இந்தப் பரிவு. அந்த ஆட்டக்காரியோடை இவ்வளவு நேரமும் எங்கே சுற்றிவிட்டு வாறீங்க"

"ஆரைச் சொல்லுறாய்."

"என்ன, ஒன்றுமே தெரியாத மாதிரி நடிக்கிறீங்களே. அந்த மாலினிதான். அவளை ஏன் இந்த வீட்டுக்கு வர விட்டியள்?"

'நான் வரவிட்டேனா?"

"உங்களுக்குத் தெரியாமலா அவள் வந்திருப்பாள். நல்ல நாடகந்தான். அவள்கூட எத்தனை அழகாய் நடிக்கப் பழகியிருக்கிறாள்."



"உன்னைப் பார்க்க ஆரேன் வந்தால் அதுக்கு நானா பொறுப்பாளி.'

"மரியாதைக்காக நானும் உள்ளே நுழையவிட்டு நடித்தேன், இல்லாவிட்டால் காலடித்து முறித்திருப்பன். நான் இல்லாதவேளையிலை இந்த வீட்டுக்கே ஆடவாறாள். எத்தனை துணிச்சல். நல்லவேளை நான் உயிர் தப்பிப் பிழைச்சன். இல்லாவிட்டால் அவள் ஆட்சி நடத்த இந்த வீட்டுக்கையே நுழைந்திருப்பாள்."

"நீ அளவுக்குமீறி வாய் காட்டாதை உன்ரை ஆட்டங்களையெல்லாம் மறந்து போனேன், மன்னிச்சு விட்டன் என்று நினைக்காதை. உன்னை இப்பவே பிடிச்சு வெளியாலை விடுவன்."

"அந்த நாயைக் கொண்டுவந்து ராணியாக்க இன்னும் எண்ணமோ."

"அவள் நன்றியுள்ள நாயாயாவது இருப்பாள். நீ நன்றிகெட்ட நாய்."

"நீங்க உதைச்சாலும் காலை நக்குவேன் என்று நினைக்காதையுங்கோ. நான் இந்த வீட்டில் அவ்வளவு அடிமையாய் இருக்க வரேல்லை."

"ராணியாய் இருக்க வந்தியா?"

"ஓம் ராணியாய்தான் இருக்க வந்தன். என்றைக்கும் இருப்பன்."

"எவ்வளவு காலம் இருக்கப் போகிறாய் எண்டுதான் பார்ப்பமே."

"உங்க கதையைப் பார்த்தா நஞ்சும் போட்டும் கொன்றிடுவீங்க போலை கிடக்கு. பிள்ளையோடை நானும செத்திருந்தால் சந்தோஷப் பட்டிருப்பியள். உங்க துரதிஷ்டம். நான் தப்பிப் பிழைச்சன்,"

''உன்னை நான் ஏன் கொல்ல வேண்டும். எனக்குப் பிடிக்கேல்லை யெண்டால் பிடிச்சுத் தெருவிலை விடுவன். உன்ரை ஆட்டங்களாலை நீ வளர்த்த பிள்ளைகளே உன்னை ஒரு காசுக்கும் மதிக்குதுகளில்லையே.''

''உங்கடை ஆட்டத்தாலைதான் மதிக்கேல்லை என்று சொல்லுங்கோ. என்னைச் சும்மா பிடித்து வெளியை விட முடியுமா? பிடிச்சுவிட்டாலும் சும்மா போறதுக்கு நான் அத்தனை மடைச்சியல்ல. உங்களுக்கு என்னோடு வாழ விருப்பமில்லாவிட்டால் என்ரை பங்கைக் குடுங்கோ நான் வெளியேறுகிறேன்.''

''என்னடி பங்கு.'

''தேச வழமைச் சட்டம் எனக்கு தெரியாதெண்டு நினைக்க வேண்டாம். கல்யாணத்தின் பின்னர்தானே இந்தப் பணம். சொத்தெல்லாம் சேர்ந்தது சட்டப்படி அதல் பாதி எனக்குரியது. அதைத் தனியே தந்தால் உடனே டைவோசுக்கே கையெழுத்து வைத்து விடுகிறேனே ''

இந்திராவின் துணிச்சலான பேச்சு நாகரத்தினத்திற்கு அதிர்ச்சியளித்தது. அவ்வளவுக்கு இந்திரா பேசமுனைவாள் என அவர் எதிர்பார்க்கவில்லை. தமது தோல்வியைக் காட்ட விரும்பாதவராகக் கோபத்தோடு கேட்டார்.

''நான் கஷ்டப்பட்டு உழைச்ச காசையும் கொண்டு, எந்தக் கள்ளப் புருஷனோடு ஓடப் போறாய்''

இந்திராவிற்கு ஆத்திரம் வந்தபோதும் எதிர் வார்த்தைகள் வர மறுத்தன.

''ஏன் அப்பிடியெல்லாம் பேசிறீங்கள். நான் உங்களுக்கு இனியும் துரோகம் செய்வனா?''

பேச்சிலே திடீரென தோல்வி தெரிந்தது. அப்படியே ஏற்றுக்கொள்வதற்கு நாகரத்தினம் தயாராக இல்லை.



''உன் துரோகத்தை மன்னிக்க மாட்டேன். நீ அழகும் கெட்டு கிழவியாய்ப் போனாய். ஆரேன் எனக்குத் தெரிந்த அழகான இளம் பெண்களைக் கண்டால் உன்னால் தாங்க முடியாமல் இருக்கு. நீ தூங்கு. இனிமேல் மட்டும் மாலினியைப் பற்றியோ வேறு எந்தப் பெண்களைப் பற்றியோ இழிவாகப் பேசாதை.''

நாகரத்தினம் கூறிக்கொண்டே கதவைச் சாத்திக் கொண்டு தமது அறையுள் நுழைந்தார். இந்திராவின் வாயை இறுதியில் அடக்கியபோதும் அவளிடமிருந்து பாய்ந்த புதிய சொல்லம்பின் தாக்கத்தையும் அதனால் ஏற்பட்ட ரண காயத்தையும் அவரால் ஆற்ற முடியவில்லை. டைவோஸ் மிரட்டல்; தேசவழமை சட்டம்; உழைத்த வற்றில் பாதிப் பங்கு; இவ்வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவரின் நெஞ்சை வட்டமிட்டன. பல்வேறு சிந்தனைகளை எழுப்பி தூக்கத்தை கலைத்தது.

மாலினி—இந்திரா தன் இன்பமான வாழ்வு—குடும்பம் காதல் கட்டி எழுப்பிய தொழில் ஏகாதிபத்தியத்தில் பாதி. இவ்வாறு இதயத்தையும் சிந்தனையையும் இருமுனைகளாக்கி மீண்டும் மீண்டும் எடை போட்டுப் பார்த்தார். குடும்பப் பிரிவால் ஏற்படக் கூடிய நம்பிக்கையின்மை, பிஸ்னெஸ்ஸை பாதிக்கப்படக் கூடிய எல்லை யாவையும் ஆராய்ந்து பார்த்தார்.

நான் தீர்மானித்தாலும் மாலினி எவ்வாறு இதை எடுத்துக் கொள்வாள். அவள் எதற்காக என்மேல் இத்தனை பரிவு காட்டுகிறாள் அவள் உண்மையாகவே என்னைக்காதலிக்கிறாளா? அல்லது என் பணத்திற்காக நாடகம் நடிக்கிறாளா? அத்தனை இளமையும் அழகும் கொண்ட பெண் என்னைக் காதலிப்பதற்கு பணம் தவிர என்னிடம் என்ன சிறப்பு இருக்கிறது? அவள் காட்டும் பாசம், பரிவு யாவும் பால் உணர்ச்சியில் எழும் பொய்மைத் தோற்றமா? அவள் கூறிய செவ்வானம் போன்ற அழகு மயக்கமா?

மாலினிக்கும் பொன்னையாவுக்குமுள்ள தொடர்பு என்ன? அவள் அந்தக் கம்யூனிஸ்டின்மேல் வைத்திருக்கும் மதிப்பைத் தெய்வத்தில்கூட வைத்திருப்பதாகத் தெரிய வில்லை. அவனைத்தான் உண்மையாகக் காதலிக்கிறாளா? அப்படியானால் என்னோடும் இப்படியெல்லாம்...!

அவரது சிந்தனை விட்டத்துள் அகப்பட்ட வினாக்கள் யாவும் தெளிவான பதிலின்றி மீண்டும் மீண்டும் சுற்றிக் கொண்டேயிருந்தன. மனதிற்கு என்ன சமாதானம் கூறிய போதும் பால் உணர்ச்சிக்கும் மேலான சக்தியொன்று மாலினி பால் தன் இதயத்தை ஈர்த்துக் கொண்டிருப்பதாக எண்ணினார். போலிக் குடும்ப வாழ்க்கையில் சாகும்வரை நிம்மதியும் பூரணத்துவமுமின்றி அழுந்துவதிலும் பார்க்க மாலினிக்காக யாவையுமே தியாகம் செய்துவிடலாம் எனவும் இடையிடை சிந்தனை படர்ந்தது. புயலில் அகப்பட்ட கார்மேகம் போல் சிந்தனை குழம்பிக் கொண்டேயிருந்தது. தூக்கம் வரவே மறுத்தது, அமைதியின்மையால் தலைவலி எழுந்தது. எழுந்து தூக்க மாத்திரைகள் சிலவற்றை வாயில் போட்டுக்கொண்டு படுத்தார். கண்கள் இடுக்கும்போதும் மாலினியின் மங்கலான உருவமே நெஞ்சோடு ஒட்டிக் கொண்டிருந்தது.

## 63

காலையில் நாகரத்தினம் கண்விழித்தபோது பத்மினிக் கும் இந்திராவுக்குமிடையில் வழமையான வாய்ச்சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. நாகரத்தினம் பத்மினியின் காதல் நாடகத்தை விரும்பாதபோதும் அந்த விஷயத்தில் இன்னும் தலையிடவில்லை. பத்மினி இப்படியாக இத்தனை விரைவில் மாறுவாள் என அவர் என்றுமே எதிர்பார்த்த தில்லை. தான் நுழைந்தாலும் தன்னுடனும் மரியாதை யின்றிப் பேசிவிடுவாள் என்பதை உணர்ந்து ஒதுங்கியிருந் தார்.



பத்மினியின் காதல் உணர்ச்சிகளை அவரால் ஓரளவு உணர்ந்து பார்க்க முடிந்தது. இத்தனைப் பிரச்சனைகள் ஏற்படக்கூடிய மாலினியையே, இதயத்திலிருந்து முற்றாக எடுத்துவிட முடியாது தவிதவிக்கும்போது வாலிப வயதுப் பெண்ணை எப்படி மாற்றிவிட முடியும் என எண்ணிக் கொண்டார்

காலையில் அலுவலகம் சென்றதும் முதல் வேலையாக மாலினிக்கு டெலிபோன் செய்தார். அவள் லீவு போட்டிருப்ப தாகச் செய்தி கிடைத்தது. மாலையில் அவள் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று கதவில் தட்டினார். மாலினி கிமோனா உடையோடு வந்து கதவைத் திறந்தாள். அவளோடு பழக்க மேற்பட்ட பின்னர் மூன்றாவது தடவையாக அவர் அவளின் அறைக்கு வந்திருந்தார். ஆயினும் முதல் தடவையாக கிமோனா உடையோடு அன்றே அவளைப் பார்த்தார். தோளோடு கை வெட்டிய கிமோனா. தூய வெள்ளை நிறத் தில் பெரிய செந்நிற ரோஜாக்கள் உடலெல்லாம் படர்ந் திருந்தது. அவளது இளமையையும் முழு உடலின் கவர்ச்சி யையும் பார்த்து ஒரு கணம் மயங்கி நின்றார். மாலினி அவரை நாற்காலியில் உட்காரச் செய்து தான் கட்டிலிலே அமர்ந்து ஒரு தலையணையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டிருந்தாள்.

''இன்று என்ன நடந்தது டாலிங்?''

'சும்மா தலையிடி. லீவு போட்டுவிட்டுப் படுத்திருந் தேன்.''

''நான் ஏதோ எல்லாம் கற்பனை செய்து பயந்து விட்டேன்.''

அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த உணர்ச்சி மயக்கத்தில் என்ன பேசுவதென்றே தெரிய வில்லை. தலை குனிந்தபடி மாலினி வெட்கத்தினால் மௌனமாக இருந்தாள். அவர் மீண்டும் பேசினார்:

''நேற்று மாலை இந்திராவோடு அசம்பாவிதமாக ஏதாவது நடந்துவிட்டதா என்றுதான் பயந்தேன். ஏதாவது பேசினாளா?''

''இல்லையே.''

''இந்திராவுக்கு உங்கள் மேல் என்றுமே பொறாமை. பொறாமை ஏற்பட்டால் அவளால் நாகரிகமாக அடக்கிக் காட்டக்கூடத் தெரியாது. நேரடியாகவே எவரையும் பொச் சரித்துவிடுவாள்.''

''அப்படி எதுவுமே என்னோடு பேசிவிடவில்லை.''

மாலினி நிலத்தைப் பார்த்தபடி மழுப்பினாள்.

''ஏதாவது சுகயீனமென்றால் புறப்படு மாலினி. டொக்டரிடம் அழைத்துப் போகிறேனே.''

''ஒன்றுமேயில்லை. எதற்கு டொக்டரிடம்.''

''அப்படியெண்டால் புறப்படேன். எங்காவது உலாவி வரலாம்.''

''இன்றைக்கு வேண்டாம். கொஞ்சம் றெஸ்ட் எடுக் கலாமெண்டு பார்க்கிறேன்.''

என்ன பேசியபோதும் அவளின் முகத்தில் ஒருவித சோர்வு படர்ந்திருப்பதைக் கண்டார். வழமையாக இருக் கும் கலகலப்பேயில்லை. பகல் நித்திரையால் ஏற்பட்ட சோர்வா, அந்த உடையோடு அவர் முன்னே இருப்பதால் ஏற்பட்ட வெட்கமா, திடீர் மனமாற்றத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியா என்பதை அவரால் பிரித்தறிய முடியவில்லை. அவளை அதிகம் தொல்லைப்படுத்த விரும்பாதவராக விடை பெற்றார்.

''இப்படி நெருக்கமான காற்றோட்டம் குறைந்த இடங் களில் ஏன் இருக்கவேண்டும்? எங்க ஏரியாவில் நல்ல இட மாக ஒன்று இனிமேலாவது பார்த்துத் தருகிறேனே.''



சொல்லியபடியே கீழே பார்த்தபடி படிக்கட்டு வழியே இறங்கினார்.

''இல்லை. நான் இப்படியான ஒதுக்கமான இடத்தில் இனிமேல் ஒதுங்கி வாழவே விரும்புகிறேன்.''

காதில் விழுந்த அவளின் பதிலைச் சாதாரணமாகவே எடுத்துக்கொண்டார். காரில் ஏறிப் புறப்பட்டபோது அப்பதி லினுள்ளே புதுவித அர்த்தம் தொனித்ததை உணர்ந்தார். கார் ஓடிக்கொண்டிருந்தது. முதல் நாள் மாலைச் சம்பவங் களை மாலினி மறைத்தாளா? அறையிலே பேசிய சோர் வான பேச்சுகள், இறங்கும்போது கூறிய வார்த்தைகள் யாவையும் மீண்டும் மீண்டும் அசைபோட்டுப் பார்த்தார். 'ஒதுங்கி வாழவே விரும்புகிறேன்' என்ற வார்த்தை மீண்டும் மீண்டும் அவரின் செவிகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

## 64

மாலினி பொன்னையாவை டெலிபோன் செய்தபோது அவன் அங்கு இல்லை. அவள் விட்ட செய்தியை அறிந்ததும் பொன்னையா டெலிபோன் செய்தான்.

''நான் இன்று கட்டாயம் டெலிபோன் செய்யவே யிருந்தேன். அதற்கிடையில் நீயே முந்திவிட்டாய்.''

நல்ல சாட்டுத்தான்.''

''நான் சொன்னாலும் நீ நம்பமாட்டாயென்றே எனக் குத் தெரியுமே''

''இன்றுதான் என் நினைவு வந்ததோ.''

''அப்படியில்லை. உன்னைப்பற்றி எந்த நாளுமே நினைக்கிறேனே. இன்று காலையில் டெலிபோன் பண்ணவேயிருந்தேன்.''

"நல்ல செய்தி ஏதாவது வைத்திருக்கிறீர்களா? எதற்காக டெலிபோன் செய்ய இருந்தீங்க என்று சொல்லுங்கோ.",

'நாளைக்குச் சினிமாவுக்கு வருகிறாயா?"

"எந்த ஷோவுக்கு."

' சனிக்கிழமை அரைநாள்தானே. மெட்னிக்கே போயிடலாம். பிறகு உன்னோடு ரொம்பப் பேச வேண்டியிருக்கிறது."

"என்ன படமோ?"

"வேஜெஸ் ஓய் ஃபியர்,"

"நல்ல படமா?"

"அப்படித்தான் அறிந்தேன். பார்த்தே அறிவோமே.'

"கூடாததென்றாலும் பரவாயில்லை. தியேட்டரிலேயே பேசிக்கொண்டிருக்கலாம். என்ன ரைம் வருவீங்க."

"இரண்டே முக்கால்."

மறுநாள் சரியான நேரத்திற்கு பொன்னையா வந்து சேர்ந்தான். இருவரும் பஸ்ஸிலே சவோய் படமாளிகைக்குச் சென்றனர்.

"என்ன ஆச்சரியம். ரொம்ப சிம்பிளாய், கொட்டன் சாரி."

பொன்னையா அவளை ஏற இறங்கப் பார்த்துச் சொன்னான்.

"ஏன், இது எனக்கு அழகாயில்லையா?"

"ஆர் சொன்னது. இதுவும் உனக்கு அழகாய்த்தானிருக்கு."

"உங்களுக்காகத்தான் உடுத்து வந்தேன்."



"வெளியே உடுத்துவிட்டால் மட்டும் பூஷ்வா மனோபாவம் மாறிவிடாது. விரதம் இருப்பவன் சாப்பிடப் போகும் அறுசுவை உண்டியை நினைப்பது போலத்தான். நான் உன்னை ஆடம்பரமாகவே பார்க்க விருப்புகிறேன்."

"ஏனப்படிச் சொல்லுறீங்க"

"அதுதான் உன் உண்மையான மனோபாவ உருவமாயிருக்கும்"

"உங்களிடம் தப்பவே முடியாது, எப்படியிருந்தாலும் குறை பிடிப்பீங்க. நான் இன்றைக்கு ஒரு ரூபா டிக்கெட்டுக்கே வரத்தயார். நீங்கபோகும் ஓட்டலிலேயே டீ குடிப்பேன்.'

'ரொம்பத் துணிச்சல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கே ஆச்சரியந்தான். ஒரு ரூபா டிக்கெட்டிலேயே உன்னை இரண்டு ரூபா சீட்டில் உட்கார விடுவாங்களே. இது மெட்னிஷோ."

"நானும் உங்களோடு ஒரு ரூபா சீட்டிலேயே உட்காருவேன்."

"அத்தனை புரட்சி இன்று வேண்டாம். இன்றைக்காவது நான் உன் அந்தஸ்துக்கு வருகிறேன்."

தனக்கு இரண்டு ரூபா டிக்கெட்டும் அவளுக்கு ஒருரூபா டிக்கெட்டும் வாங்கிக்கொண்டான். தியேட்டரில் கூட்டம் மிகக்குறைவு.

"நல்ல படமென்று அழைத்து வந்தீங்க.கூட்டத்தையே காணவில்லையே,"

"ஏன் கலரிப்பக்கம் கூட்டமிருக்கு பார். ஹோலிவூட் ஆடம்பரமும் காதலும் செக்ஸும் இல்லாமலிருக்கும். அதுதான் பின்பக்கத்தில் கூட்டமேயில்லை. முன்பக்கமிருக்கும் ஏழைகளும் தொழிலாளர்களும் அக்ஷன் படங்களையே

மெய் மறந்து ரசிப்பார்கள். அது அவர்களின் இயல்பான சுபாவமும்கூட. பின்பக்கமிருக்கும் மத்தியதர. செல்வர்கள் காதல், செக்ஸ் நிரம்பிய காட்சிகளையே பார்த்து ரசிப்பார்கள். மயக்கத்தில் வாழவிரும்புபவர்கள் அவர்களே ''

''காதல் படங்களைக் கலரிப் பக்கமிருப்போர் விரும்ப மாட்டார்களென்று சொல்லுகிறீர்களா?''

''காதல் படங்களை விரும்பலாம். காதல் என்ற பெயரில் காட்டப்படும் செக்ஸ் காட்சிகளைத்தான் விருப்பமாட்டார்கள். அப்படியான காட்சிகளைப் பார்த்து அருவருப் படைவார்கள் என்றுதான் சொல்லுகிறேன்.''

இடைவேளையின்போது மாலினிக்கு ஐஸ்சொக் வாங்கி வந்து கொடுத்தான்.

''கடலையே வாங்கி வந்திருக்கலாமே.''

''அது இங்கே கிடையாது. கலரிப்பக்கம் போனால் அந்தப் பூட்டிய கதவுக்கிடையே வாங்கலாம். விருந்தாளியைக் கொண்டுவந்தால் அவர்களுக்குப் பிடித்ததைத்தான் கொடுக்கவேண்டும்.''

மாலினி சுவைத்துச் சாப்பிட்டாள்.

''அதுதான் சிவபெருமானுக்குப் பிள்ளைக்கறி கொடுத்தாரோ சிவத்தொண்டர்.''

''நான் மாலினிக்கு ஒரு ஐஸ்சொக் கொடுக்கப்படாதோ. சேலையில் ஐஸ் தண்ணி கொட்டலாம். இதை மடியில் வைத்துக்கொள்.''

மடித்திருந்த பத்திரிகைக் கட்டை வைத்தான்.

''இது என்னவோ.''

''பத்திரிகை.''

''இத்தனை பத்திரிகைகள் எதற்கு.''



''விற்பனைக்கு''

''கட்சிப் பத்திரிகையா. அடுத்த தேர்தலுக்கு நீங்களும் ஆயத்தமா. உங்களுக்குத்தான் தேர்தலிலேயே நம்பிக்கை கிடையாதே.''

''பாராளுமன்றம் மூலம் தொழிலாளரின் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தலாம் என்பதில்தான் எமக்கு நம்பிக்கையில்லை. அதற்காக தேர்தல் வரும்போது நாம் தூங்கிவிடப் போவதில்லை.''

''தேர்தலில் மீண்டும் இடதுசாரிக் கூட்டாட்சி வெற்றி பெறுமா?''

''சுதந்திர கட்சிக்கு முன்னர் தேசீய முதலாளிகளின் ஆதரவும் இருந்தது. இப்போது அவர்களெல்லோரும் யு.என்.பி யோடு சேர்ந்துவிட்டார்கள். உங்க பத்திரிகைகளெல்லாம் அடிபட்ட நாகம்போலச் சீறத் தொடங்கிவிட்டன பொய்ப் பிரசார விஷத்தைக் கக்கிக்கொண்டேயிருப்பார்கள். ஏழைமக்கள் ஏமாந்து போகலாம்.''

## 65

இடைவேளையின் பின்னரே படம் ஆரம்பமாகியது. மாலினியும் ஆர்வத்தோடு பார்த்தாள். பொற்றோலியம் தயாரிப்பதற்குத் தேவைப்படும் சோடியம் நைற்றேற்றுத் திராவகத்தை ஏற்றிய லொறிகளை கரடுமுரடான ஒடுக்கமான பாதையில் சில தொழிலாளர்கள் ஓட்டிச் செல்லுகிறார்கள். அத்திராவகம் எவ்வேளையும் வெடித்துவிடக் கூடியது. கூலிக்காக உயிரையே திரணமாக மதித்து லொறிகளை மலைகளையும் குன்றுகளையும் கடந்து ஓட்டும் தொழிலாளர்கள் பற்றிய கதை அது. லொறிகள் கரடுமுரடான பாறைகள் மேல்ஏறி இறங்குகின்றன. சில்லுகள் சிக்குகின்றன. லொறிகளைத் திருப்ப முடியாது சில குன்றுகளிடை

அவர்கள் சிரமப்படுகிறார்கள். ஒரு லொறியின் திராவகம் வெடித்துத் தீப்பிடிக்கிறது; அடுத்தது எந்த நேரமும் தீப் பிடித்துக் கொள்ளலாம்.

பிரபலமான சினிமாக்களையே பார்த்து மயங்கித் திரிந்த மாலினிக்கு அப்படம் புதுமையாகவும் புல்லரிப்பூட்டுவதாக வும் இழிந்தது.

நேரம் போனதே தெரியவில்லை.

சினிமா முடிந்து வெளியே வந்தபோதும் மாலினியின் இதயம் அடித்துக் கொண்டேயிருந்தது.

''நல்ல படம், பயங்கரமான படம்''

''உண்மைகள் எப்பொழுதும் பயங்கரமாகவே இருக் கும் முதலாளிகள் பணத்தைக் கொடுத்துத் தொழிலாளர் களின் உழைப்பை மட்டுமல்ல, உயிரையே எப்படி வாங்கு கிறார்கள் பார்த்தாயா?''

பொன்னையா விளக்கம் கூறினான்.

தியேட்டரோடு இருந்த ஓட்டலில் இருவரும் தேநீர் அருந்தினர்.

''நீங்கள் சொல்லவேண்டியவற்றை யெல்லாம் சொல் லுங்களேன்''

மாலினி நினைவூட்டினாள்.

''கடற்கரை வழியே பம்பலப்பிட்டிவரை நடந்து செல் வோமே. அப்போது நீ கேட்பவை யெல்லாவற்றையும் கேட்டுக்கொள்?''

களங்கமற்ற பெரிய சந்திரனது உருவம் போல சூரி யனின் கதிர்களற்ற வடிவம் கடலலைகளிடையே மறைந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டே இருவரும் அடிமேலடி வைத்து நடந்துகொண்டிருந்தனர்.



''இந்த ரெயில்வேப் பாலத்தைக் கடப்பியா? சிலிப்பர் கட்டை மேல்தான் நடக்கவேண்டும். கீழே கனால்''

''உங்கள் கரத்தைப் பிடித்துக்கொண்டு எந்தப் பாலத் தையும் கடப்பேன்.''

அவனது கையைப் பிடித்துக் கொண்டே ஒவ்வொரு சிலிப்பர் கட்டையாக நின்று நின்று பாலத்தைக் கடந்தாள்.

''பெண்கள் எப்போதும் துணிச்சல் குறைந்தவர்கள், கற்பனையிலேயே வாழ் வர்கள்.''

''ஏனப்படிச் சொல்லுறீங்க?''

''தனியே வாழ்வதற்குத் துணிச்சலற்று துணை தேடித் திரிகிறார்கள்.''

''ஆண்கள் மட்டும் தேடுவதில்லையோ?''

''ஆண்கள் அவர்களைப் போகப் பொருள்களாகவும் வீட்டு வேலைகள் செய்யும் அடிமைகளாகவும் இனவிருத்தி யந்திரங்களாகவுமே பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். சீத னம்கூட பெண்களுக்குச் சுதந்திரமளிக்கவில்லை. குடும்பத் தைப் பொருளுறவாக்கிவிடுகிறது.''

''அந்தக் காலமெல்லாம் மலையேறிவிட்டது. எமக்கும் வோட்டுரிமை இருக்கிறது நாமே உழைத்து வாழ்கிறோம். இந்த நாட்டின் பிரதமரே ஒரு பெண் தானே.''

மாலினி பெருமையோடு பதில் சொன்னாள்.

''ஒரு கோழி கூவி விடிந்துவிடுவதில்லை. ஆண்கள் உழைத்து பெண்களுக்கு பட்டும் நகைகளும் ஆடம்பர அழகு சாதனப் பொருட்களும் வாங்கிக் கொடுத்து அழகு பார்க்கும் நிலையிலேயே இன்றும் பெண்கள் உள்ளனர். பெண்களே இவற்றை விரும்பிப்பெறுகிறார்களே. இது ஒன்றே அவர்கள் அடிமைகள் என்பதைக் காட்டமாட்டாதா? பெண் இன்னும் ஒரு போகப் பொருளாகவே பணக்கா

யிடையே கருதப்படுகிறாள். நாகரத்தினம் உனக்கு எதுவுமே வாங்கித் தரவில்லையா?''

''ஏனிப்பிடி நீங்கள்கூட சந்தேகத்தோடு பேசுறீங்கள்?''

''மன்னிக்கவும். பணக்காரரின் மனோபாவங்களைப் பற்றிச் சொல்ல வந்தேன்.''

அவன் பேச்சில் நளினமும் கலந்திருந்தது.

மாலை வானத்தையும் கடலையும் பார்த்தபடி மணல் மேல் கால்களை வைத்துக்கொண்டே இருவரும் கடல் அரிப்பைத் தடுப்பதற்காகப் போட்டிருந்த கருங்கல்லின் மேல் உட்கார்ந்தனர்.

'உன்னால் தனியாக வாழ முடியுமா?''

''முடியுமே.''

''அப்போது, என் பின்னே ஏன் சுற்றித் திரிகிறாய்?''

''இது என்ன கேள்வி?''

''நான் என் வேலையையே ராஜிநாமச் செய்துவிட்டேன்.''

''நல்லதுதானே. அப்ப மிஸ்டர் நாகரத்தினத்திடம் வேலையை ஒப்புக்கொள்வீர்கள்தானே?''

பொன்னையாவின் முகப் பக்கமாகத் திரும்பியபடியே மாலினி ஆர்வத்தோடு கேட்டாள். அவனது முகத்திலே ஆழ்ந்த சிந்தனையும் திடமனமும் பிரதிபலித்தன. அவளின் முகத்தையே பாராது கண்ணுக்கெட்டிய தூரத்தில் இடையிடையே மின்னிக் கொண்டிருந்த கரும் புகாரைப் பார்த்தபடியே சொன்னான்.

''முடியாது?'

உதாரமான குரல் ஒலித்தது. அதன் உறுதி அவளின் இதயத்தைத் தாக்கியது



''முடியாதா. அப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்?''

''நாளை தொடக்கம் கட்சியின் முழுநேர ஊழியனாகச் சேர்கிறேன்.''

மனதில் ஏற்பட்ட ஏமாற்றத்தை அவள் மறைத்துக் கொண்டே சொன்னாள் :

''கொழும்பிலேதானே இருப்பீர்கள்?''

''பெரும்பாலும் மலை நாட்டிலேயே இருப்பேன். கட்சியின் தோட்டத் தொழிலாளர் சங்கங்களைச் சீரமைக்கும் வேலையை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.''

கொழும்பைவிட்டுப் பொன்னையா வெளியேறுவதென்பதும் மாலினிக்கு ஓரளவு ஏமாற்றத்தைக் கொடுத்தது. அதைக் சமாளித்துக்கொண்டே சொன்னாள் :

''அவர்களில் பெரும் பகுதியினரைத்தானே நாடு கடத்துவதற்கு அம்மா இந்தியப் பிரதமர் சாஸ்திரியோடு ஒப்பந்தம் எழுதிவிட்டு வந்திருக்கிறா.''

''அது வெறும் அரசியல் வேடிக்கைக் கூத்து. வேலையில்லாது தவிக்கும் சிங்கள மக்களை ஏமாற்றுவதற்கு தேசிய முதலாளிகள் கையாளும் தந்திரம். 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று எமது போலிக் கூட்டரசாங்க இடதுசாரிகளே கோஷமிட்டுவிட்டு இந்நாட்டின் முதுகெலும்பான தொழிலாளர்களை நாடு கடத்தவும் அனுமதிக்கிறார்கள். இதைவிட வேடிக்கையான ஏமாற்றுக் கிடையாது.''

''நீங்கள் போய் நாடு கடத்துவதையே தடைசெய்து விடப் போகிறீர்களோ?''

''அல்ல. தொழிலாளர்களிடையே வர்க்க உணர்ச்சியைப் பரப்பி இலங்கையின் ஏனைய தொழிலாளர்களுடன் ஒன்றுபடுத்தப் போகிறோம்.''

''தற்போதுள்ள மற்றச் சங்கங்கள்...''

''அரசியல் உணர்ச்சியோ வர்க்க உணர்வோ அற்ற தொழிலாளர் சங்கங்கள். இந்த நாட்டின் செல்வத்திற்காக உழைக்கும் ஒரே மக்கள் நவீன அடிமைகளாக இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதை அதே யூனியன்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றன.''

'உங்கள் கட்சிகளெல்லாம் இதுவரை நாளும் தூங்கிக் கொண்டிருந்தனவா?''

''கொழும்பிலேயுள்ள மத்திய தர தொழிலாளர்களைப் புரட்சிக்காக நம்பிக்கொண்டிருந்தனர். இந்த நாட்டு விவசாயிகளையோ தோட்டத் தொழிலாளர்களையோ அரசியலில் ஒன்று திரட்டும் வேலையைச் செய்யவில்லை. இந்த நாட்டின் பொருளாதார ஆமைப்பை நன்கு கற்று மார்க்ஸிஸ லெனிசக் கோட்பாடுகளை இந்நாட்டுக்கொப்ப கடைப் பிடிக்காதது நாம் விட்ட பெரிய தவறு. 1956 இல் நாட்டின் விவசாயிகளையே அரசியலில் பங்குபற்றச் செய்தவர் பண்டாரநாயகா ஒருவரே. மேல்நாடுகளைப்போல் சரியான கைத்தொழில் வளம் பெருகாத நாடு இது இங்குள்ள சக்தி வாய்ந்த தொழிலாளர்களைப் பிரித்தறிந்து ஒன்று திரட்டத் தவறிவிட்டோம். மலைநாட்டுத் தொழிலாளர்கள் மாபெரும் சக்திவாய்ந்தவர்கள். அவர்கள் வேலை செய்யும் இடத்தை விட்டு எங்குமே செல்லமுடியாத சூழ்நிலையில் உள்ளவர்கள். லாயத்திலேயே கிடந்து ஒன்றாகச் சேர்ந்து சாகும் வரை போராட வல்லவர்கள்.''

'அவர்களுக்குத்தானே வோட்டுக்கூடக் கிடையாதே.''

''உண்மைதான். வோட்டை நம்பிய போலி இடதுசாரிகள் அதனாலேயே மலைநாட்டுத் தொழிலாளர்களைக் கைவிட்டனர். பூஷ்வா ஜனநாயகத்தில் எமக்கு நம்பிக்கையிருந்தாலல்லவா நாமும் வோட்டுக்காக அவர்களைத் திரட்டுவோம் தொழிலாளரின் ஆட்சியை புரட்சி மூலம் ஏற்படுத்துவதல்லவா எமது குறிக்கோள். அதற்காக நாட்டின் உற்பத்திச் சாதனங்களைத் தாங்கி நிற்கும் தொழிலாளரை ஒன்று திரட்டினாலே எம்மால் புரட்சியை ஏற்படுத்தி விட முடியும்.''



பொன்னையாவின் முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை மாலினி பார்த்து அஞ்சினாள்.

## 66

செக்கர் வானம் மங்கிக்கொண்டு வந்தது. அடிவானத்தில் தோன்றிய சிறு கருப்புகார் பெரிதாகி அசைந்துகொண்டிருந்தது.

''பொன், பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் பிரச்சினையைப் பற்றிப் பார்க்கிறீர்கள். உங்களையே நம்பியிருக்கும் என் பிரச்சினையையும் கொஞ்சம் பாருங்கோவன்.''

மாலினி பொன்னையாவின் கரத்தைப் பற்றிக் கொண்டே வாஞ்சையோடு சொன்னாள்.

''உனக்கு என்ன குறை அழகு இருக்கிறது. இளமையும், கவர்ச்சியும் இருக்கின்றன, நல்ல இடத்தில் பாதுகாப்பான வேலையிருக்கிறது. நல்ல சம்பளம் கிடைக்கிறது.''

''இவை மட்டும் போதுமா?''

''இத்தனை தகுதிகளுக்காக உன்னைக் கட்டிக் கொள்ள எந்தனைபேர் போட்டி போட்டுக்கொண்டு வருவாங்கள். நல்ல பணக்காரனாக ஒருவனைப் பார்த்துப் பிடித்து கொள்ளேன்.''

'என்ன, இன்னமும் நீங்க கேலி பேசுறீங்களே. என் இதயத்தை இன்னும் புரிந்துகொள்ளவில்லையா? நான்

உங்களை மட்டுந்தானே காதலிக்கிறேன், இது இன்று நேற்றைய காதலல்ல. நீங்க எங்க பத்திரிகைக் கம்பெனியில் சேர்ந்த காலந்தொட்டுக் காதலிப்பதை நீங்க அறிவீர்களே. அன்று உங்க வேலை போய்விட்டபோதும் என் காதல்போய் விடவில்லை. அன்று காதலித்தேன். இன்றும் சாதாரண தொழிலாளி என்று சொன்னபோதும் காதலிக்கிறேன், என்றும் காதலிப்பேன். என் காதல் அழியாதது. நிரந்தரமானது.''

அவன் கரத்தை எடுத்துத் தன் மார்போடு அழுத்திக் கொண்டே சொன்னாள்.

பொன்னையா சிரித்தான். அந்தச் சிரிப்பில் நம்பிக்கை தெரியவில்லை. அவனது நாவினால் மறுப்பைக் கேட்க விரும்பாத மாலினி மீண்டும் தொடர்ந்து மன்றாடினாள்.

''பொன், என் இதயம் அடிப்பதைக் கேட்டுப் பாருங்கள். அது ஒவ்வொரு விநாடியும் உங்களுக்காகவே அடிக்கிறது. அன்றொருநாள் என் காதலை உதாசீனம் செய்தீர்கள். நான்பட்ட வேதனையை நீங்கள் அறியமாட்டீர்கள். உணவும் உறக்கமுமில்லாது புழுப்போலத் துடிதுடித்தேன். அவ்வேளைதான் மிஸ்டர் நாகரத்தினத்தின் ஆறுதல் கிடைத்தது. அவ்வேளை நான் எதுவும் செய்யத் தயாராயிருந்தேன். என் உயிர் ஒரு துரும்பாகத் தெரிந்தது. உங்களுக்காகக் காப்பாற்றிய கற்பு, ஒழுக்கம் நீதி,நேர்மை யாவற்றையும் சிதைந்து விடக்கூடத் துணிந்தேன். மீண்டும் ஒரு தடவை அந்தக் கொடுமையை எனக்குத் தந்து விடாதீங்க! அதைத் தாங்கத்தக்க இதயம் இப்போது இல்லை. என் காதலை ஏற்றுக் கொள்ளாவிடில் இந்தக் கடலிலையே தள்ளிவிட்டுச் செல்லுங்கள்.''

மாலினியின் கண்களில் நீர் அரும்பி வடிந்து மார்பின் மேலிருந்த அவன் கரத்தின் மேல் பட்டது. அவன் சிறிது நேரம் பேசாது இருந்தான். கடலலை ஓசை தவிர ஒரே மௌனம். அவள் அவனின் கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டாள்.



''மாலினி, நான் உனக்காக மிகவும் வருத்தப்படுகிறேன். என்மேல் நீ கொண்டிருக்கும் உணர்ச்சிகளை மதிக்கிறேன். ஆனால் நான் முன்னர் சொன்ன அதே கருத்தையே மீண்டும் சொல்லுகிறேன். உன் காதல், நான் காட்டிய செவ்வானம் போன்றதே. அந்த அழகான உணர்ச்சியில் மெய் மறந்து அதுவே வாழ்க்கை என்று நம்பிப் பேதலிக்கிறாய். அது இனிமையான உணர்ச்சி; மனிதரின் மெல்லிய உணர்ச்சிகளையே தட்டி நாதம் எழுப்பி இன்பமூட்டத்தக்க சக்திவாய்ந்த உணர்ச்சி. அதனாலேயே அதில் கட்டுண்டு பெரும்பான்மையோர் அதை நிரந்தரமானது, சாசுவதமானது என்று நம்பி விடுகிறார்கள். உண்மையில் அது ஒரு அழகான பொய்த்தோற்றம். ஆனால் நீ மட்டுமல்ல பலர் இக்கருத்தை ஏற்க மறுக்கிறார்கள். இவ்வியப்பான அழகுணர்ச்சி உன்மேல் எனக்கும் ஏற்படவில்லை என்று எண்ணாதே.'

''அப்படியானால் நீங்களும் என்னைக் காதலிக்கிறீர்களா?''

மாலினி அவன் தோளில் சாய்ந்தபடி ஆர்வத்தோடு கேட்டாள். அவள் உடலெல்லாம் புல்லரித்தது. புதுமை படர்ந்தது.

''தூர இருந்து பார்க்கும்போது தான் அதன் அழகு தெரியும். நீ நம்பும் காதலுக்காக நான் உன்னைத்திருமணம் செய்து கொண்டால் அந்த அழகுணர்ச்சி சில மாதங்களிலேயே மறைந்துவிடலாம். அதன்பின்னர் வெறும்பாலுணர்வால் ஏற்படும் கவர்ச்சியே நீடிக்கும். அதுவும் நெருங்கி வாழ்பவரிடையே சில காலத்தில் குறைவாகி விடலாம்; மறைந்தும் விடலாம். இன்றைய சமூகத்தில் குடும்ப வாழ்விடையே நிலவும் உறவு, நீலவானம் போன்ற நிலையான உறவு, பொருளால் ஏற்படும் ஒரே உறவுதான்.

மற்றவையாவும் இடையில் தோன்றி போலி உணர்வு காட்டி மறையும் பொய்மைகள். இக்கருத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவன் நான். என் நிலையான இக்கருத்தை மாற்ற முடிந்தால்தான் நீ நம்பும் காதலில் வெற்றிபெற முடியும்''

பொன்னையா அழுத்தமாகச் சொன்னான்.

''மனித உணர்வே உங்களுக்குக் கிடையாதா? ஒரு பெண்ணின் இதய தாபத்தையே உணர முடியாத ஆண் மகனா நீங்கள்?''

மாலினி கேட்டாள். அவனுடைய மார்பிலே சாய்ந்திருந்தாள். அவளின் விரல்கள் அவனது முதுகிலும் பிடரியிலும் வருடிக்கொண்டிருந்தன. அவனது வார்த்தைகள் அவனது ஆண்மையையே பரிசோதிப்பதாயிருந்தன.

''அப்படி எண்ணாதே நானும் மனிதன்தான். எனக்கும் ஆண்மை உணர்ச்சிகள் உள்ளன. அவற்றைக் கட்டுப் படுத்தவே முயல்கிறேன். இப்போது உன்னை முத்த மிடவே என் உதடுகள் துடிதுடிக்கின்றன.''

'இருள் தவிர இங்கே சுற்ற வர எவருமேயில்லையே''

அவள் சுற்றிவரப் பார்த்தாள்.

''நான் முத்த மிடுவதை வைத்துக்கொண்டு உன்னைத் திருமணம் செய்து குடும்ப வாழ்வும் நடத்த நான் தயார் என்று தவறாக எண்ணிவிடாதே. குடும்ப வாழ்வு வேண்டு மானால் எங்கள் சமுதாயத்திலே, முக்கியமாகப் பெண்கள் பால் உணர்வை அடக்கும் ஒழுக்கத்தையாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இதய பூர்வமான அழகுணர்ச்சியுடன் நான் முத்தமிட்டாலும் சமுதாயத்தில் அது தவறானதாகக் கருதப்படும் ஒழுக்கமாக நடத்தாலும் வீட்டைவிட்டுத் தனியே வேலைக்கோ, மார்க்கெட்டுக்கோ வெளியேறுவதே தவறாகக் கருதும் சமுதாயமிது. ஆகவேதான் நீயும் திருமணம் வரை விழிப்பாக இருப்பது நல்லதென்று சொல்லுகிறேன்.''



''என் இதய பூர்வமான அழகுணர்ச்சிகளை அடக்குவது தான் ஒழுக்கமென்றால் அந்த ஒழுக்கமே அழிந்து போகட்டும். நான் உங்களை என் உயிருக்கு மேலாகக் காதலிக்கிறேன். என்னை முத்தமிடுங்கள்''

## 67

ரெயில் வண்டியின் சலசலப்பு அவர்களின் பேச்சையும் உணர்ச்சிகளையும் சில கணங்கள் தடுத்தன. கருமுகில் பூதம்போன்ற பரந்த உருவெடுத்து மேலே ஏறிக் கொண்டிருந்தது. மீன்பிடி வள்ளங்களின் விளக்கொளிகள் மின்மினிப் பூச்சி பறப்பதுபோலக் கடற்பரப்பின் மேல் தெரிந்தன.

மாலினி மீண்டும் கேட்டாள்.

''ஏன் இந்தத் தியாக உணர்வில் உங்களுக்கு நம்பிக்கையில்லையென்றால் வேறு எந்த மனித உணர்ச்சியில்தான் உங்களுக்கு நம்பிக்கையுண்டோ தெரியவில்லை.''

''வர்க்க உணர்ச்சி ஒன்றில் மட்டுமே எனக்கு நம்பிக்கையுண்டு. நீலக்கடல்போன்று நிலையானது அது ஒன்றே தான். மக்களிடையே வர்க்க உணர்வால் ஏற்படக்கூடிய ஒற்றுமையும் நெருக்கமும் நீ நம்பும் காதல் உணர்வால் ஏற்பட்டுவிடாது. அதனால்தான் உனக்கும் எனக்கும் நிலையான பந்தம் ஏற்படுவதற்கு இடமேயில்லை. நீ நம்பும் காதல் உணர்ச்சியைக் காட்டித் தொழிலாளியாகவே வாழ விரும்பும் என் வர்க்க உணர்ச்சியை அழிக்கப் பார்க்கிறாய். அது இந்த யுகத்தில் நடவாதது. உன் இரத்தத்தோடு ஒட்டிய பூஷ்வா உணர்வுகளையும் என்னால் அத்தனை விரைவில் களைந்துவிட முடியாது.''

''அப்படியானால் எனக்கு என்ன முடிவு கூறுகிறீங்கள்?''

''திருமணம் என்றால் சமுதாய உறவை ஏற்படுத்திக் கொள்வது. நீ நம்பும் காதல் திருமணத்தில் பூரணத்துவ

மடைய வேண்டுமாயின் உன்னைக் காதலிக்கும் நாகரத்தி னத்திடம் போ. அவரும் உன்னைக் காதலிக்கிறார்தானே.''

கேலியாகப் பொன்னையா சொன்னான்.

''என்ன, அவர் என்னைக் காதலிக்கிறாரா?''

வியப்போடு மாலினி கேட்டாள்.

''நீ கூட அவரையும் காதலிக்கிறாய். நான் முற்றாக நம்புகிறேன். நீ தன்னைக் காதலிப்பதாக அவரும் நம்பிக் கொண்டிருக்கிறார். மனைவி நோயில் செத்திருந்தால் மகிழ்ச்சியோடு உன்னையே அந்த வீட்டுக்கு எஜமானியாக்கி யிருப்பார். இப்போதும் தொல்லை எற்படாத விதமாக மனைவியைக் கொல்ல முடிந்தால் கொன்றுவிட்டு உன்னை அவர் தன் வீட்டுக்கு அழைத்திருப்பார். தன் மனைவியோடு ஏற்பட்டிருக்கும் பொருளுறவுச் சிக்கலால் அல்லவா தன் பொருள் உடைமைகளை இழக்க விரும்பாதவராக மனைவியை டைவோஸ் செய்யும் எண்ணத்தையும் விட்டு விட்டார். இனிமேல் தன் காதல் நிரந்தரமாக நிலைக்க உனக்கு என்ன ஏற்பாடு செய்வாரோ தெரியவில்லை..''

''இந்தச் செய்திகளெல்லாம் உங்களுக்கு ஆர் சொன்னது? நான் சம்மதிக்கவல்லவா வேண்டும். நான் அவரைக் காதலிக்கவில்லை.''

''பெரிய வீட்டுச் செய்திகள் தாமே பரவுவதுண்டு. மேரியின் சொந்த வீடு இரத்மலானையில் நான் தங்கும் வீட்டின் அயல்வீடுதானே.''

''அவள் இப்படியெல்லாம் கதை பரப்புகிறாளா?''

தன்னைப்பற்றியும் ஏதாவது பரப்பியிருப்பாளோ என மாலினி ஏங்கினாள்.

''நீ மறுத்தாலும் அவை உண்மையே. நாகரத்தினம் நீ நம்பும் அதே காதலை முற்றாக நம்புகிறார். பணத்தைக் கொடுத்ததும் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு நிர்வாணப்



படங்கள் எடுப்பதற்குப் போஸ் கொடுப்பதற்குத் தயாராகும் கவர்ச்சியான பெண்கள் கிடைக்கும் இந்த நகரத்திலேயா, பணம் கொடுத்து அறைகளிலே இன்பத்தை வாங்க அவரால் முடியாது. அப்போதும் அவர் ஏன் உன் பின்னே சுற்று கிறார்? அவர் காதலை நம்புகிறார்; நீயும் அதை நம்பிப் போனால் அவர் சில வருடங்களில் மற்றொரு பெண்ணைக் காதலித்துவிட்டு உன் இடத்தில் அப் புதுக்காதலியை வைக்கப் பார்ப்பார். அதனால்தான் காதல் என்ற இந்தப் பொய்த் தோற்றத்தை நம்ப வேண்டாம் என்று சொல்லு கிறேன். நாகரத்தினம் இந்திராவையும் காதலித்தே திரு மணம் செய்தவர் என்பது உனக்குத் தெரியுமா?''

''அப்படியா?''

''உண்மையாக.''

''உங்கள் பேச்செல்லாம் எனக்குக் குழப்பமாக இருக் கிறது. நீங்கள் லவ்வையும் செக்ஸையும் ஒன்றாக்கப் பார்க்கிறீங்க.''

''இரண்டும் செவ்வானமும் அதன் கவர்ச்சியும் போன் றவை ஒன்றையொன்று பிரித்தறிய முடியாது. ஆனால் குடும்பம் என்பது பொருளுறவால் இணைக்கப்படுவது. நாகரத்தினத்தையும் மனைவியையும் தற்போது இணைத்து வைத்திருப்பது அதுதான். அவர்களின் காதல் திருமணத் தோடு போய்விட்டது. தற்போது நீ சம்மதித்தாலும் நாகரத்தினம் சட்டப்படி உன்னைத் திருமணம் செய்ய மாட்டார்.''

''மழை தூறத் தொடங்கியது. இருவரும் எழுந்து பம்பலப்பிட்டி புகையிரத நிலையத்தை நோக்கி நடந்தனர். உணர்ச்சிகள் யாவும் அடங்கியிருந்தன. ஆயினும் மாலினி அவனது விரல்களைப் பிடித்தபடியே நடந்தாள். அவளின் கண் முன்னே யாவும் பொய்மையாக தோன்றியது

''நீ தனிய வீட்டிற்குப் போவாய்தானே. நான் ரெயிலி லேயே போய்விடுவேன். அதோ வண்டி வருகிறது.''

''உங்களை இனி எப்பொழுது பார்க்கலாம்?''

ஆர்வத்தோடு மாலினி கேட்டாள்

''நான் நாளைக்கே பதுளைக்குப் போகிறேன். எப்பொழுது பார்க்க முடியுமோ தெரியாது. உன்னைப் பிரிவதற்கே நான் உண்மையாகவே மிகவும் வருந்துகிறேன். உனக்கும் சில நாட்கள் கஷ்டமாக இருக்கும் ஆனால் தைரியமாக இரு.''

வண்டி மேடையின் அருகே அசைந்து வந்து கொண்டிருந்தது.

''எனக்கு முடிவாக இப்பொழுது என்ன சொல்லுகிறீங்க?''

அவள் நெஞ்சு அடைத்துக் கண்கள் துளிர்த்தன

''நான் உன்னை நேசிக்கிறேன். அது பசுமையாக என்றும் இருக்கட்டும். ஆனால் குடும்பம் என்ற பொருள் உறவில் உனக்குத் துணை புரியத்தக்க வருவாய் எனக்கு இப்போதைக்கு வரப்போவதில்லை. நீ உன் இளமையும் அழகும் மறையுமுன் உன் பூஷ்வா உணர்ச்சிகளைத் திருப்திப்படுத்தத் தக்க புணக்காரன் ஒருவனைப் பார்த்துக் கட்டிக்கொண்டு உல்லாசமாய் வாழப்பார்.''

''உங்களை அடைவதில் மட்டுமே என் காதல் வெற்றி பெற முடியும். தவறினால் இத்தோல்வியை என்னால் தாங்க முடியாது.''

''நீ நம்பும் காதல், வாழ்க்கையின் ஒரு சிறு அம்சம். நீ காதலே வாழ்க்கை என்ற மயக்க நிலையில் நின்று தவறான கருத்தில் கட்டிய அழகான மனக்கோட்டை உடைவதாக வானத்தைப் பார்த்துக் கலங்குகிறாய். நிஜ வாழ்க்கையைக் கலியாணத்தின் பின்தான் உன்னால் புரிந்துகொள்ள முடியும்.'

வண்டி நின்றது. அவன் ஏறி யன்னலருகே ஓரமாக உட்கார்ந்தான். அவனது கரத்தைப் பிடித்தபடி உணர்ச்சி வசப்பட்டு அவள் நின்றாள். அவளது பார்வை அவனைக் கெஞ்சின. அவன் உதாரமான குரலில் சொன்னான்:



''அதோ வண்டியால் இறங்கிப் போகும் தொழிலாளர்களைப் பார். அவர்களோடு பழகினாலல்லவா உனக்கு நிஜ வாழ்க்கையைப் பற்றித் தெரியவரும். வாழ்க்கை என்பது நீ நினைப்பதுபோல் செவ்வானமல்ல.''

வண்டி புறப்பட்டது கலங்கிய கண்களோடு அவன் உருவம் இருளில் மறைவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள். நெஞ்சு எரிந்தது. யாவும் சூனியமாகச் சில கணங்கள் தோன்றின. நெஞ்சு பொருமிப் பாரமானது. மெதுவாக கூட்டத்தோடு நடந்து படிக்கட்டுகளில் ஏறினாள்.

எதிர்ப் பக்கத்திலிருந்தும் ஒரு வண்டி வந்து நின்றது.

மாலினி தொழிலாளர்களின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டாள்.

'ரைம் என்னம்மா.''

யாரோ ஒரு தொழிலாளியின் குரல். அவள் கையை உயர்த்த அவனே நேரத்தைக் கூர்ந்து பார்த்தான்; வியர்வை நெடி வீசியது; உடையெல்லாம் அழுக்கு.

''எட்டரை. காலையிலை ஏழரைக்கு வெளிக்கிடேக்கை சின்னவனுக்கு காச்சல். என்ன நடந்துதோ.''

பக்கத்தில் நின்றவனுக்கோ அவளுக்கோ தெரியவில்லை. தானாகவே சொல்லிக்கொண்டே அவசர அவசரமாகக் கூட்டத்தை நெரித்துக்கொண்டு முன்னேறினான்.

''இண்டைக்குத்தான் ஓவர்டைம் கிடைச்சுது. இந்தக் கிழமை இன்னும் கூப்பனரிசியே வாங்கேல்லை.''

''யு என் பி பிறகும் வந்திடும்.''

''வரவிடப்படாது.''

''வீட்டை போனதும் அவள் பொக்கெற்றைத்தான் பார்ப்பாள்.''

''மழை தூறுது. வீட்டிலை கிடந்த ஒரு குடை. அதுவும் முறிஞ்சு போச்சு.''

''இருபத்தஞ்சு சதமிருந்தால் கடன்குடு. ராத்திரிக்கு ஒரு றாத்தல் பாணாதல் வாங்கிக்கொண்டு போகவேணும்.

''காலையிலை என்னோடை வந்தானே வீரக்கோன், மெஷினுக்கை கையைக் குடுத்திட்டான். பெண்சாதி குமரும் குஞ்சுமாய் ஆறு பிள்ளைகள். எப்பிடி வாழப் போகுதுகளோ.''

மாலினியின் நெஞ்சம் ஒரு கணம் சிலிர்த்தது. தொழிலாளரிடையே நெரிந்துகொண்டே ஒடுங்கிய பாலத்தின் மேல் அசைந்து கொண்டிருந்தாள். காதலின் தோல்வியால் ஏற்பட்ட நெஞ்சப் பொருமலை, காதில் விழுந்த அவர்களின் துன்பப் பேச்சுகளும் சலசலப்பும் வியர்வையின் நாற்றமும் கரைத்துக் கொண்டிருந்தன

பாலத்தால் இறங்கியதும் வெளியே மழை தூறிக் கொண்டிருந்தது. வெளியே டாக்சி எதுவுமேயில்லை. சுற்றி வரப் பார்த்துவிட்டு மழைத்துமியைப் பொருட்படுத்தாது நடைபாதை வழியே நடந்தாள்.

''நோனா, குடையுக்கை வாருங்கோ. காலி ரோட்டில் டாக்சி கிடைக்கும்.''

கூட்டத்தோடு வந்த ஒரு தொழிலாளி குடையை அவளின் தலை மேலும் உயர்த்தியபடியே அவளோடு நடந்தான். அவனது உடையிலிருந்து வியர்வை நாற்றம் வீசியது. அவள் அருவருப்புக் காட்டவில்லை. மனநிலை மீண்டும் நனவுலகில் வர காலி ரோட்டை நோக்கி அவன் பிடித்த குடையுள்ளே நடந்தாள். காதல், திருமணம், குடும்பம், வர்க்க பாசம் ஆகியவை பற்றியெல்லாம் பொன்னையா கூறிய கருத்துக்களை சிந்தனை அசை போட்டுக் கொண்டிருந்தது.

★

செவ்வானம் 1964-65 கூட்டரசாங்க ஆட்சிப் பகைப் புலத்தில் கொழும்பு நகரைக் களமாகக் கொண்டு எழுதப்பட்டது. ஈழத்தில நடுத்தர வர்க்கம் முதலாளி வர்க்கத்தினால் ஈர்க்கப்படுவதையும் ஈற்றில் அது தொழிலாளி வர்க்கத்தைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதையும் விளக்கும் வகையில் முறையே வர்க்கப் பிரதிநிதிகளான மாலினி, நாகரத்தினம், பொன்னையா ஆகிய பாத்திரங்களை இயங்கவைத்து எழுதப்பட்ட இந்நாவலின் கதை கூட்டரசாங்கத்தை விமர்சிக்கும் நோக்கில் அமைகின்றது...

காதலையும் அரசியலையும் இணைத்து எழுதப்பட்ட இந்நாவலின் தலைப்பான செவ்வானம் என்ற சொல்லாட்சி இரண்டையும் உருவகப்படுத்துவதாக அமைகிறது. காதல் ஒரு செவ்வானம் என்றும் அதன் அழகுத் தோற்றம் நிலையற்றதென்றும் மாலினிக்கு பொன்னையா உணர்த்துகிறான். தேசிய முதலாளிகளுடன் இடதுசாரிகள் இணைந்து அமைத்த கூட்டாட்சியும் தற்காலிக அழகு காட்டும் செவ்வானமே என்பது கதையில் உணர்த்தப்படுகிறது...

இன்று வரையும் ஈழத்தில் வெளிவந்த நாவல்களிலே தரமான பத்து நாவல்களைத் தெரிவு செய்வதானால் மண்ணும் மக்களும் தவிர்த்த இவரது ஐந்து நாவல்களும் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை. நீண்ட பயணமும் செவ்வானமும் இவற்றிலே தலையாய படைப்புகள். கணேசலிங்கனுக்குப் பின் ஈழத்து எழுத்தாளர் எவரும் இத்தகைய படைப்புகளைத் தர முயலவில்லை என்பது அவதானிக்கத்தக்கது.

'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்' நூலிலிருந்து

**நா. சுப்பிரமணியன்** எம். ஏ.
பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

# ஆசிரியரின் பிற நூல்கள்

## நாவல்கள்

'நீ ஒரு பெண்'; நகரமும் சொர்க்கமும்
வன்முறை வடுக்கள்; ஈனத்தொழில்
ஒரு குடும்பத்தின் கதை; ஒரு மண்ணின் கதை
இரண்டாவது சாதி; மரணத்தின் நிழலில்...
உலகச் சந்தையில் ஒரு பெண்; ஓர் அரசியலின் கதை
ஒரு பெண்ணின் கதை; புதிய சந்தையில்
விலங்கில்லா அடிமைகள்
சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை
பொய்மையின் நிழலில்...
அயலவர்கள்
இளமையின் கீதம்
அந்நிய மனிதர்கள்
வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க்கோலம்
தரையும் தாரகையும்
சடங்கு
நீண்ட பயணம்

## சிறுகதைத் தொகுப்புகள்

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்
கொடுமைகள் தாமே அழிவதில்லை
சங்கமம்
ஒரே இனம்
நல்லவன்; சிறுகதைகள்

## கட்டுரைகள்

அறிவுக் கடிதங்கள்
பெண்ணடிமை தீர
கலையும் சமுதாயமும்
குந்தவிக்குக் கடிதங்கள்
குமரனுக்குக் கடிதங்கள்
மான்விழிக்குக் கடிதங்கள்

**பாரி நிலையம்**
184, பிராட்வே, சென்னை-108.

# செவ்வானம்

அரசியல், பொருளாதார, சமூகப் பின்னணியிலேயே நாவல் விரிகிறது. இப்பின்னணியை வரலாற்று நூல்களிலின்றி நாவலிலிருந்து பெற முடிந்தமை ஒன்றே நூலின் வளத்திற்குப் போதிய சான்றாகும்.

தொழிலாளர் வர்க்கத்தின் நீண்ட பயணம் எதிர்கால வரலாற்றுடன் சங்கமமாக விருப்பது. அச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெரு மாற்றங்களை யதார்த்தமாக சித்தரிக்க நூற்றுக்கணக்கான நாவலாசிரியர் தேவைப்படுவர். அவர்கள் படிக்கும் நாவல்களில் நிச்சயமாக செவ்வானம் ஒன்றாகவிருக்கும்.

கலாநிதி க. கைலாசபதி
முன்னுரையிலிருந்து

இன்று வரையும் ஈழத்தில் வெளிவந்த நாவல்களிலே தரமான பத்து நாவல்களை தெரிவு செய்வதானால் இவரது ஐந்து நாவல்கள் இத்தெரிவில் இடம்பெறும் என்பதற்கு ஐயமில்லை. நீண்ட பயணமும் செவ்வானமும் இவற்றிலே தலைபாய படைப்புகள். கணேசலிங்கனுக்குப் பின் ஈழத்து எழுத்தாளர் எவரும் இத்தகைய படைப்புகளைத் தர முடியவில்லை என்பது அவதானிக்கத் தக்கது.

கலாநிதி நா. சுப்பிரமணியன்
'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்'
என்ற நூலிலிருந்து